"சபை": தேவனுடைய நோக்கத்திற்கான மக்கள்

எடி குளோயர்

“சபை”: தேவனுடைய
நோக்கத்திற்கான மக்கள்

பொருளடக்கம்

முன்னுரை

1. தேவனுடைய நோக்கத்திற்கான மக்கள்
2. சபை என்புத எதுவாகியிருப்பதில்லை
3. இராஜ்யங்களின் இராஜ்யம்
4. ஊலகளாவிய சகோதரத்துவம்
5. புதிய ஒப்பந்தம்
6. “கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்”
7. “பரலோக இராஜ்யம் சமீபத்திருக்கிறது”
8. இயேசு பூமிக்கு வந்தது எதற்காக?
9. “இதுவே அதுவாக உள்ளது!”
10. “தேவனுடைய சபை”
11. “கிறிஸ்துவத்தின் சபையார்”
12. மிக உயர்ந்த கனமுள்ள சபை
13. “பரிசுத்தவான்களுடைய சபைகள்”

பின்னுரை

பிற்சேர்க்கை

நூல் அட்டவணை

முன்னுரை

சிலுவையும் சபையும்

"ஆகையால் உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தி னாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28).

"கிறிஸ்து இல்லாத சிலுவை பாவிகளை மீட்பதற்கு பெலனற்றிருப் பதைப் போலவே சிலுவையில்லாத கிறிஸ்துவும் பெலனற்றவராகக் கூடும்" என்பதை கிறிஸ்து நமது பாவங்களுக்குக் கிரயம் செலுத்தினார் என்ற புதிய ஏற்பாட்டுக் கொள்கையை அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடும். இருப்பினும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரும், தேவத்துவத்தில் இரண்டாம் நபராக உள்ளவருமானவர், தமது ஜீவனை நமது பாவங்களுக் காக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் (1 கொரி. 15:3) என்பதே சுவிசேஷத் தின் நற்செய்தியாகும். சிலுவையில்லாதவராக கிறிஸ்து காணப்படவில்லை. சிலுவையும் கிறிஸ்து இல்லாமல் காணப்படவில்லை - எனவே, பாவியாகிய மனிதர் நம்பிக்கையற்றவனாய் இல்லை.

தேவனுடைய குமாரன் மனிதர்களுக்காக சிலுவையில் செய்த தியாகமே வேதாகம வரலாற்றின் மையக்கருவாக உள்ளது. புதிய ஏற்பாட்டின் வண்ணத் திரைச் சீலையானது, கல்வாரியின் இரத்தத்தினால் சிவப்புச் சாயமேற்றப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன பக்கங்களிலும், வரலாற்று உண்மையைக் கூறும் புதிய ஏற்பாட்டின் பக்கங்களிலும் இயேசுவின் இரத்தம் சிந்தப்படுகிறது. நான்கு சுவிசேஷங்களிலும், ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கில் இயேசுவின் வாழ்க்கையில் கடைசி மூன்று நாட்களில் நடந்தவை காணப்படுவதாக ஹென்றி சி. தீயிஸ்ஸென் என்பவர் கணக்கிட்டுள்ளார். இயேசுவின் மரணத்தை விளக்கியுள்ளது போலவே, அவருடைய மூன்றரை ஆண்டு கால ஊழிய வாழ்க்கையை விளக்கிக் கூறியிருந்தால், சுவிசேஷப் புத்தகங்கள் மட்டும் 8,400 பக்கங்கள் உடையதாயிருந்திருக்கும்.[1] புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு 53 வசனங்களிலும் 1 வசனம் கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிக் குறிப்பதாக ஆர். ஏ. டோரி மதிப்பிட்டுள்ளார்.[2]

உலகத்தைக் கழிக்கின்ற யாவருக்கும் சிலுவை கூட்டல் குறியாக விளங்குகிறது. வேத வசனங்களிலிருந்து சிலுவையை எடுத்துவிட்டால், வேதமானது அடர்ந்த காட்டிற்குள் போட்ட ஒரு வெறும் கட்டையைப் போலாகிவிடும். பாவங்களுக்கான ஒரு தெய்வீகப் பலியையும், மரித்தோரி லிருந்து அந்தப் பலியானவர் உயிர்த்தெழுந்ததையும் கொண்டுள்ள ஒரே மார்க்கம் இந்த உலகத்தில் கிறிஸ்துவ மார்க்கம் மட்டுமே.

பாவமும், பாவிகளும், குற்றமும், தேவனற்ற நிலையும், பிரிவும், துன்பமும், உள்ள இந்த உலகத்தில் சிலுவையே, இரட்சிப்புக்கான தேவ பெலனாக உள்ளது. உலகத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் எல்லா வற்றிற்கும் சிலுவை ஒரு தெய்வீகத் தீர்வாக உள்ளது. அவரே நமது பாவங் களுக்கான கிருபாதார பலியாவார் - அதாவது நாம் செய்த தவறுகளுக்கு அவர் கிரயம் செலுத்தி நமக்கு எல்லாவற்றையும் சரி செய்தவராக இருக்கிறார். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர் களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1 கொரி. 1:18) என்று எழுதப்பட்டுள்ளது. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1 யோவா. 2:2).

தேவனிடத்திலிருந்து பிரிதல் மற்றும் தேவனுடைய ஐக்கியத்தை விட்டு விலகுதல் போன்ற நமது ஆவிக்குரிய முரண்பாடான நிலையில் சமாதானத் திற்கும், ஒப்புரவாகுதலுக்குமுரிய தேவனுடைய கருவியாக சிலுவை உள்ளது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் ..." (கொலோ. 1:20) என்று பவுல் எழுதினார். எபேசியருக்கு எழுதின நிருபத்தில் 2:14-16ல் "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச் சுவரைத் தகர்த்து ... பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இரு திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று கூறுகிறது.

ஆவிக்குரிய பசியும், ஏழ்மையும் எங்கு தீவிரமாயுள்ளதோ அங்கு நீதியின் ஐசுவரியங்களாகிய தேவனுடைய மீட்பின் வழங்குதல்கள் சிலுவையின் அடிவாரத்தில் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. பவுல், "நாங்களோ, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், ..." (1 கொரி. 1:23) என்றார். மேலும் அவர், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து, "தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி. 1:30) என்றும் கூறினார்.

வேதத்தின் மையச் செய்தியாக, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து வையே மையப் பொருளாக பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் போட்டுக் காட்டுவது கேள்விக்கப்பாற்பட்டதாயுள்ளது.

மீட்புக்குரிய மற்ற எல்லா சத்தியங்களுடனும் சிலுவையானது பின்னப்பட்டிருப்பதால் ஊற்றிலிருந்து ஒரு நீரோடை கிளம்பிச் செல்வது

போல், சூரியனிலிருந்து சுகமளிக்கும் கதிர்கள் கிளம்பிச் செல்வது போல் சபையானது சிலுவையிலிருந்து புறப்பட்டு வரக் கூடியதாயுள்ளதென்று ஒருவர் எதிர்பார்க்கலாம். புதிய ஏற்பாட்டைக் கவனித்துப் படித்தால் இது உண்மை என்பது உறுதியாகும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமோ, சபையில்லாத கிறிஸ்தவமோ இருக்க முடியாது: உடலில்லாத தலையோ, தலையில்லாத உடலோ உயிர் வாழ முடியாது என்பதை தர்க்கரீதியான சிந்தனை நமக்குக் கூறுகிறது. சிலுவையும், சபையும் ஒன்றாக இணைந்துள்ளன, ஒரு திட்டத்தில் இணைந்துள்ளன; இழந்து போன மனித குலத்திற்கு தேவனுடைய கிருபையின் ஈவாக இது உள்ளது என்ற செய்தியே புதிய ஏற்பாட்டின் முக்கியமான அம்சமாகும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளில் இருந்தும், தேவன் சிலுவையின் மூலமாக ஒரு புதிய குடும்பமாவதற்கு - கிறிஸ்துவில் ஒரே சரீரமாவதற்கு - அவருடைய தெரிந்து கொண்ட ஜனங்களாயிருப்பதற்கு அழைப்பு விடுக்கிறார்.

இந்தச் சிந்தனையை இன்னும் ஆழமாய் சீர்தூக்கிப் பார்ப்போம்: சபை எவ்விதம் சிலுவையுடன் இணைக்கப்படுகிறது? சிலுவையும் சபையும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு என்ன? சிலுவையானது சபைக்கு என்ன செய்கிறது?

அதினால் உண்டாக்கப்பட்டது

முதலாவது, சிலுவை சபையை உண்டாக்குகிறது. பாவிகளின் மீட்பின் மூலமாகவே சபை வெளித் தோன்றுகிறது. சிலுவையில்லையேல், சபை இருக்க முடியாது.

கிறிஸ்துவைத் தனது இரட்சகராகவும், தேவனுடைய குமாரனாகவும், ஒருவர் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறபோது, கிறிஸ்துவின் இரத்தத்தில் அவர் பாவங்களறக் கழுவப்படுகிறார். (அப்போஸ்தலர் 22:16). இந்தக் கழுவுதலின் மூலம் அவர் மீட்கப்பட்ட கூட்டமாகிய, “சபை” என்று புதிய ஏற்பாடு அழைக்கின்ற இரட்சிக்கப்பட்ட சமுதாயத்தில் சேர்க்கப்படுகிறார். இந்தக் காரணத்தினாலேயே, இயேசு தமது இரத்தத்தை விலையாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று பவுல் பேச முடிந்தது. எபேசுவின் மூப்பர்களுக்கு அவர், “உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்” (அப். 20:28) என்று கூறினார். சபைக்காகவே இயேசு, சிலுவையில் மரித்தார் என்பது தெளிவு. பவுல், “... அப்படியே, கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மையே அதற்காக ஒப்புக் கொடுத்தார்” (எபே. 5:25-27) என்று சொன்னார். இயேசுவின் மரணத்தின் முக்கிய நோக்கமாவது: “வெளியே - அழைக்கப்பட்ட” ஜனக் கூட்டத்திற்கு இவ்வுலகத்திலேயே கிறிஸ்துவுடனான ஐக்கிய வாழ்வைக் கொடுப்பதற்கும், அவர்கள் தங்களையே அவருடைய ஆவிக்குரிய ஊழியத்திற்கு அர்ப்பணிப்பதற்குமேயாகும். பவுல், தீத்துவுக்கு, “அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி

வைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்." (தீத்து 2:14) என்று கூறினார்.

தெற்கு அர்க்கன்சாஸ் பகுதியில் ஒரு இரவில் சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் நான் செய்தியளித்து முடித்தபோது, வித்தியாசப்பட்ட, மனதைத் தொடும் ஒரு கதையுடன் ஒரு பெண்மணி என்னிடம் வந்தார். டெக்ஸாஸில் உள்ள டல்லாஸ் என்ற இடத்தில் அவர்கள் நான்கு வயதான சிறுபிள்ளையாயிருந்த போது நேர்ந்த விஷயத்தை அவர் என்னிடம் சொன்னார். அச்சமயம், அவர்கள் குடும்பம் போக்குவரத்து நிறைந்திருந்த ஒரு சாலையினருகே வாழ்ந்தது. அவர்கள் வீட்டில் இருந்த திறந்த வெளியானது குழந்தைகள் வெளியே விளையாட ஒரு சிறு இடமளித்தது. ஒரு நாள் மாலை, அப்பெண்ணும், அருகிலிருந்த அநேக குழந்தைகளும் திறந்த வெளியில் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தப் பந்து குதித்து வெளியேறி சாலையில் சென்று விழுந்து விட்டதாக அப்பெண் கூறினார். ஒரு சிறிதும் சிந்தியாமல், அப்பெண் அதைத் தொடர்ந்து ஓடியிருக்கிறாள். அதை அடைந்த போது, குனிந்து பந்தை எடுத்து நிமிர்ந்து பார்க்கிறாள் ... ஒரு பெரிய வாகனமானது அந்தச் சாலையில் வேகமாக வருவதைப் பார்த்துப் பயத்தில் உறைந்து போகிறாள். அச்சமயத்தில் அவளுடைய ஒன்பது வயதான அண்ணன் அவளைப் பார்த்துவிட்டு, சாலையில் ஓடி வருகிறான். அவனும் அந்த வாகனத்தைப் பார்த்து விட்டான். மின்னல்போல் அவன், அவள் பிறகே ஓடி, அவளைப் பத்திரமாய்க் கொண்டு வர நம்பிக்கையாயிருந்தான். அந்த வாகனத்தின் முன்பாக அவன் ஓடி, அவளை சாலையிருந்து புறம்பே தள்ளி விட்டான், தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து அவளை மரணத்திலிருந்து காத்தான். அந்தச் சுருக்கமான நேரம், அவனுடைய தங்கையைப் பாதுகாக்கப் போதுமானதாயிருந்தது, ஆனால் அவன் தன்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. அவ்வாகன மானது அவன்மேல் ஏறி நசுக்கி உடனே அவனைக் கொன்று விட்டது.

அந்தத் துன்பகரமான சம்பவத்தின் எல்லா விஷயங்களையும் தன்னால் நினைவுகூர முடியவில்லை என்றும், ஆனால், தன்னுடைய சகோதரனின் உயிரற்ற உடல் தெருவிலிருந்து எப்படி தூக்கப்பட்டு, அவர்கள் வீட்டின் முற்றத்தில் ஒரு மருத்துவ வண்டி வரும் வரையில் கிடத்தப்பட்டிருந்தது என்பதைத் தன்னால் மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவர முடிவதாக அந்தப் பெண் கூறினார். "எனது சகோதரன் எனக்காக மரித்தான்" என்று ஆழமான பொருளுடன், விசேஷித்த நன்றியுள்ள வார்த்தைகளை அப்பெண் கூறினார். அப்பெண்மணி ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவளாகி இருக்கிறார். ஆனால் சபையில் அவரது வாழ்வு, மற்றும் இன்றைய நாட்களில் அவரது ஊழியம் ஆகியவை, அநேக வருடங்களுக்கு முன் அவருடைய சகோதரனின் தியாகத்தின் மூலம் உண்டாக்கப்பட்டதாயிருக்கிறது.

இதே போன்று, இன்னும் சற்று ஆழமான விதத்திலே இயேசுவின் தியாகத்தினால் சபை உயிர் பெற்றுள்ளது. அவருடைய மரணமானது, நமக்கு ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை மட்டுமின்றி, தொடர்ந்து அதில் நிலைத்திருக்க ஆதாரமாகவும் உள்ளது. அவருடைய மரணமானது

நமது கிருபாதார பலியானது, நமது கடந்த காலப் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கும் வழியானது. இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். தேவ மனிதராக நம்மிடையே நடந்தார், அவருடைய மரணத்தினால் நம்மை "அவருக்குச் சொந்தமான ஜனமாக" (1 பேது. 2:9) வாங்கினார். செங்கல் மற்றும் சிமெண்ட் கலவையால் சபை உண்டாக்கப்படவில்லை; அது இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட ஜனங்களால் ஆனது.

கிறிஸ்துவின் தியாகத்திற்கு நாம் மூன்று வழிகளில் பதிலளிக்கிறோம்: முதலாவது, கிறிஸ்து நமக்காக செய்த கிரியையைப் *பாராட்டுவதன் மூலம்* சிலுவையை அணைத்துக் கொள்கிறோம். மீட்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் கிருபையின்மேல் நன்றியுள்ளவர்களாய், மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர்! கிறிஸ்து பரலோக ஐசுவரியம் நிறைந்தவராயிருந்தார்; இருப்பினும் நமக்காக அவர் ஏழையாகி, பரலோகத்தை விட்டு, மனிதனாக வந்தார். அவரது தரித்திரத்தின் மூலம் நாம் ஆவிக்குரிய ஐசுவரியவான்களாகும்படி அவர் அப்படியானார் (2 கொரி. 8:9). இரண்டாவது, அவருடைய மரணத்தின் பலன்களை ஏற்கின்ற பதில்செயல் நாம் செய்ய வேண்டும். உண்மையான பாராட்டுதல் என்பது சரியான முறையில் ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வழி நடத்துகிறது. கிறிஸ்துவின்மேல் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இவைகளினால், அவருடைய மரணத்தின் பலன்களை நமது வாழ்க்கையில் பெற்றுக் கொள்கிறோம் (ரோமர் 6:1-4). அவர் எல்லாருக்காகவும் மரித்தார் (எபி. 2:9). ஆனால் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே, அவருடைய மரணத்தின் பலன்களைப் பெறுகின்றனர் (எபி. 5:8, 9). மூன்றாவது, அவருடைய தியாகத்திற்கு நாம், நமது *அளவற்ற ஊழியத்தினால்* (1 கொரி. 15:58) பதில் அளிக்க வேண்டும். நமது நாவிலிருந்து, பாதம் வரை நாம் கிறிஸ்துவினுடையவர்கள் - சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி (1 கொரி. 6:19, 20) அனைத்தும் அவருடையது. எனவே அவர் வடிவமைத்து, இயக்கி, மகிழும் வகையில் ஊழியத்தைச் செய்வதே இவ்வுலகத்தில் இப்பொழுது நம்முடைய வேலையாய் இருக்க வேண்டும்.

அதினால் கழுவப்படுகிறது

இரண்டாவது, சிலுவையானது சபையைத் தொடர்ந்து கழுவுகிற தாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்களிடத்திற்கும், அவர்கள் மூலமாகவும் அதனுடைய சுத்திகரிக்கும் வல்லமை தினமும் பாய்ந்தோடுகிறது. நமது உடலில் இரத்தம் தொடர்ந்து ஓடி, நம்மைத் தாங்கி, சுத்தப்படுத்துவது போலவே, இயேசுவின் விலை மதிப்பற்ற இரத்தம் அவருடைய ஜனங்களுக்குள்ளாக ஜீவனை நிலைநிறுத்தி பெலப்படுத்தும்படியாக பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

நாம் *இரட்சிக்கப்பட* வேண்டியது மாத்திரமல்ல, ஆனால் *இரட்சிக்கப் பட்ட நிலையிலேயே* வைக்கப்பட்டிருக்க வேண்டும். பாவியான ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய இரத்தத்தில் கழுவப்பட்டு, தேவ கிருபையினால் கிறிஸ்துவுக்குள்ளாகும் ஒவ்வொரு சமயமும், சபை உண்டாக்கப்படுகிறது. கிறிஸ்தவர் தினமும் வெளிச்சத்தில்

நடக்கின்றபோது, தொடர்ந்து அந்த இரத்தத்தினாலே கழுவப்படுகிறார். யோவான், "அவர் ஒளியிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவா. 1:7) என்று எழுதினார். யோவான் இங்கு பயன்படுத்தும் "சுத்திகரிக்கும்" என்ற நிகழ்கால செய்வினைச் சொல்லானது கிரேக்க மொழியில் நிலையாக, தொடர்ந்து, நிகழ் காலத்தில் நடக்கின்ற செயலைக் குறிப்பதாகும்.

சிலுவை இல்லையென்றிருந்தால், சபை இருக்க முடியாது.

பாவம் செய்வதைக் குறைக்க முயற்சித்து, ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் வளருவதை நாடினாலும், ஒரு கிறிஸ்தவர் பூரணமான மனிதரல்ல. அவர் பிழையற்றவரென்பதல்ல. ஆனால், அவர் குற்றமற்றவராயிருக்க வேண்டும். பாவியினுடைய வாழ்க்கையில் உள்ள பாவம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் அவர் இரட்சிப்படைய வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் உள்ள பாவம், அவர் அல்லது அவள் தொடர்ந்து கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. இந்த உலகத்தில் பாவமன்னிப்பிற்கான நமது தேவையை எப்பொழுதுமே நாம் முற்றிலும் ஒழித்து விட இயலாது.

நமது குழந்தைகள் சிறுவர்களாக இருக்கும்போது, அவர்கள் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதைக் கவனித்தல் நன்றாக இருக்கும். இந்தப் புதிய திறமையை பெறுவதில் அவர்கள் இரண்டு அடிப்படைப் பிரச்சனைகளைக் சந்திக்கின்றனர்: சைக்கிளை நேராக வைப்பது மற்றும் தொடர்ந்து அதை நேராக வைத்துக் கொள்வது. ஒரு குழந்தை கூறுகிறபடி, "தொடர்ந்து பெடல் செய்து கொண்டிருந்தால் சைக்கிள் வேகமாய் செல்லும் இல்லையெனில் கீழே விழுந்து விடுவோம்." இதில் முதல் செயல் அவர்களுக்குச் சுலபமானது, இருக்கையில் ஏறி அமர்ந்து, ஒரு காலை ஒரு பெடலின் மீது வைத்து, உந்து விசை பெற ஒரு மிதி மிதித்தால் போதும். ஆனால் இரண்டாவது செயல்தான் பயம் தரக்கூடியதாகும். அவர்கள் சைக்கிளை நேராக வைத்துக் கொள்ளப் போதுமான வேகத்துடன் ஓட்ட வேண்டும். இந்த இரண்டாவது செயலில் தோல்வியடைந்தால் எங்கேனும் சென்று மோதி விழுந்து, ஓட்டுபவர் காயப்பட வேண்டியதுதான்.

சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதில் உள்ளதைப் போன்றே இரட்சிப்பும் இரண்டு படிகளையுடையதாக நோக்கப்படலாம்: பாவியான ஒருவர் முதலாவது, தேவனுடன் நேராக வேண்டும்; பிறகு அவர் தேவனுடன் நேராக தொடர்ந்து இருக்க வேண்டும். நேராகுதல் என்பது அவசியமானதே என்றாலும் அது வெறும் தொடக்கம் தான். தொடர்ந்து அவர் கழுவப்படவில்லையென்றால், முதலாவது அவரைப் பாவியென்று

தீர்ப்பிட்ட - அவருடைய வாழ்வின் பாவக்கறைகள் - கிறிஸ்தவரான பின்பு அவரைத் தீர்ப்பிடக் கூடிய பிரச்சனை உண்டு, (அப். 8:22) கிறிஸ்தவராவதற்கு முன்பு ஒருவர் தமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டிய தேவை இருந்ததென்றால், கிறிஸ்தவரான பின்பு ஏதேனும், பாவம் செய்தால், அதை நரகம் தனக்கேற்றதாய் ஆக்காமல் இருக்க, அப்பாவத்திலிருந்தும் அவர் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியமல்லவா?

கிறிஸ்தவர் "ஒளியில் நடக்கின்ற வரையிலும்" இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார். அப்போஸ்தலராகிய யோவான் எழுதியபடி, ஒளியில் நடப்பது என்பது ஆவிக்குரிய இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளதாகும். இரட்சிப்புக்கு இயேசுவில் நம்பிக்கை கொள்வதுடன் அது தொடங்குகின்றது: "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்'' (1 யோவா. 2:2). நாமே நமது இரட்சிப்பை சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பது தெளிவு (எபே. 2:8, 9). விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதலினால் நாம் இயேசுவுக்கு பதில்செயல் செய்தால் அவர் நம்மை இரட்சிப்பதாகக் கூறுகின்றார். அவர் கூறியதை அவர் செய்வார் என்று அவர் அதைச் செய்ய அவரை நாம் நம்ப வேண்டும். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கின்றோம் (2 கொரி. 5:6).

ஒளியில் நடப்பது என்பதற்கு அவருடைய சித்தத்தை நேர்மையுடன் செய்வதும் தேவைப்படுகின்றது. யோவான், ''நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தின் அன்புகூருவதாம் ...'' (1 யோவா. 5:3) என்று எழுதினார்; "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" (1 யோவா. 2:4, 5அ). நமது பாவம் நிறைந்த நிலையை ஒப்புக் கொள்வது என்பதே ஒளியில் நடப்பதின் அர்த்தமாகும் (1 யோவா. 1:8, 10), நமது பாவங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொள்ள வேண்டும் (1 யோவா. 1:9), மற்றும் நமது திறமைக்கு ஒத்திசைவுள்ள வகையில் நமது பாவங்களை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் (1 யோவா. 2:29). அவர் நடந்தது போலவே நாமும் நடப்பதும் (1 யோவா. 2:6) மற்றும் தேவனிடத்திலிருந்து வந்த ஏவப்பட்ட வெளிப்பாடுகளான வேதவசனங்களைப் பின்பற்றுவதும் என்பதே இதன் அர்த்தமாகும் (2 தீமோ. 3:16).

அதினால் வற்புறுத்தப்படுகிறது

மூன்றாவதாக, சிலுவையானது சபையை வற்புறுத்துகின்றது மற்றும் அதை செயல்படும்படி தூண்டுகின்றது. சபையாரின் இருதயங்களில் கிறிஸ்து விரும்புகிறபடி இருக்கும் எண்ணத்தையும், கிறிஸ்து செய்யும்படி கூறுகின்ற ஊழியத்தைச் செய்யும் எண்ணத்தையும், ஆவிக்குரிய உற்சாகத்துடன் அது விதைக்கின்றது.

தொடர்ந்து சுத்தப்படுத்தப்படுதல் மாத்திரமல்ல, உள்ளான

அருளப்படுதலும் சொந்த வல்லமையும் கிறிஸ்தவர்களுக்குத் தேவை. கிறிஸ்தவமானது அநேக மாண்புமிக்க உத்வேகங்களைத் தருகின்றது; தேவனுடைய கிருபையானது மிக உயர்ந்ததாகவும், நிலையானதாகவும் இருக்கின்றது. சிலுவையானது கிறிஸ்தவர்களின் வாழ்வை நிலைப்படுத்தி கட்டுப்படுத்துகின்றது. இயேசு, ''நான் பூமியிலிருந்து உயர்த்தப் பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளு வேன்" (யோவா. 12:32) என்று கூறினார். பவுல், "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக் கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரி. 5:14, 15) என்று எழுதினார்.

நாம் தேவன் மேலும், ஒருவர் மற்றொருவர் மீதும் மாபெரும் அன்பு கொள்ளும்படி சிலுவை நம்மை ஏவுகின்றது. யோவான், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவா. 4:19) என்று எழுதினார். நம்மேல் அவர் செலுத்தும் அன்பை அன்றாடம் நாம் தியானிக்கும் போது அவரில் இன்னும் ஆழமாய் அன்பு கொள்ளும்படி ஈர்க்கப்படுகின்றோம். மேலும், யோவான், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்'' (1 யோவா. 3:16) என்றும் எழுதினார். இயேசுவின் வாழ்வு பற்றிய எந்த ஒரு மறு கண்ணோட்டமும், அவருடைய அன்பின் ஆழம் மற்றும் உறுதித்தன்மை ஆகியவை பற்றிய புதிய மற்றும் ஊக்கமான சித்தரிப்புகளை உண்டாக்குகின்றது. இந்த சித்தரிப்புகளைப் பற்றி எண்ணும் நமக்குள் இயேசுவின் மேலும், ஒருவரொருவர் மேலும் அதே போல அன்பைப் பெறுகின்றோம்: "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து, மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18).

பாவத்தின்மேல் ஒரு ஆழ்ந்த வெறுப்பையும், புறக்கணிப்பையும் சிலுவையானது நமக்குள் பதியச் செய்கின்றது. துன்மார்க்கம் மற்றும் பாவத்தினால் ஏற்படும் பேரழிவு ஆகியவற்றிற்கு கல்வாரிச் சிலுவையும் நித்திய அழிவின் அடிகாணாப் படுகுழியும் இரண்டு வல்லமையுள்ள சாட்சியங்களாக இருக்கின்றன. சிலுவையின் காரணத்தையும், நரகத்தின் அவசியத்தையும் புரிந்து கொண்டவர் எவரும் பாவம் செய்வது தகுதியானது என்று வாதம் செய்ய முடியாது. தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற எவரும், எருசலேமுக்குப் புறம்பே ஒரு சிலுவையில் தேவனுடைய குமாரன் பெற்ற பாடுள்ள மரணத்தினாலே தனது மீட்பு விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதை மறக்க முடியாது. தமது குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுத்ததின் மூலமாக மட்டுமே எல்லாம் வல்ல தேவன் பாவத்தை ஈடு செய்ய முடிந்தது. இந்த விலையேறப் பெற்ற நிகழ்ச்சியானது உணர்வுள்ள ஒவ்வொருவரையும் பாவத்தை அருவருத்துப் புறக்கணிக்கச் செய்ய வேண்டும்.

நாம் முழுமையாக கிறிஸ்துவின் ஊழியத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்படி சிலுவையானது பலவந்தம் பண்ணுகிறது. அயராது ஊழியம் செய்ய உள்ளான பெலத்தையும், தூண்டுதலையும், ஏவுதலையும் இது அளிக்கிறது. பவுல், "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" (ரோமர் 1:14) என்று எழுதினார். மேலும் அவர், "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (1 கொரி. 15:10) என்று கூறினார். சிலுவையில் தேவன் தனக்குச் செய்ததை நேர்மையாகப் புரிந்து, பாராட்டாத வரையிலும் கிறிஸ்தவர் எவரும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய முழுவதும் உந்தப்படுவது இயலாது.

இருதயமற்ற ஒரு மனிதனைத் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிய பழைய கதை ஒன்று உண்டு. திருமணத்தின்போது அவள் செய்த வாக்குறுதியினால், அவள், தனது கணவன் அவளைக் குறித்துக் கவலையற்றிருந்தாலும், தான் ஒரு நல்ல மனைவியாக இருக்கத் தீர்மானித்தாள். அவள் அவனுக்கு உணவு தயாரித்து, அவனுடைய உடைகளைத் துவைத்து, அவனுடைய வீட்டைச் சுத்தம் செய்து வைத்தாள். ஒரு மனைவி செய்ய வேண்டியதென்று எதிர்பார்க்கும் அனைத்தையும் அவள் செய்தும், அவைகளினால் அவள் மகிழ்ச்சிடையவில்லை. அவளைப் பொறுத்தமட்டில் வாழ்க்கை கடினமாயும், பாராட்டுதல் எதுவுமே இல்லாததாயும் மற்றும் சிறிதளவே சந்தோஷம் உள்ளதாயுமிருந்தது. முடிவாக அவள் கணவன் இறந்து போனான், காலப் போக்கில் அவள் மறுமணம் முடித்தாள். அவளது இரண்டாவது கணவன், அவளுடைய முதலாவது கணவனுக்கு எதிர்மாறான குணங்களுடையவனாயிருந்தான். அவன் அன்பு காட்டி, பாராட்டி, ஊக்கம் அளிப்பவனாயிருந்தான். அவள் இறந்து போன கணவனுடன் இருந்தது போலவே இவனுடனும் வாழ்ந்தாள் - ஆனால் ஒரு பெரிய வேறுபாடு - அவள் தனது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் நேசித்தாள். அவள் தனது முதல் திருமண வாழ்க்கையில் கடமைக்காக நல்ல மனைவியாயிருந்தாள், ஆனால் தனது இரண்டாவது திருமண வாழ்க்கையில் சந்தோஷத்தினால் நல்ல மனைவியாக வாழ்ந்தாள். ஆஹா, அன்பு எவ்வளவு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது!

கிறிஸ்துவின் சபையானது தனது கர்த்தரின் கட்டளைகளைக் கருத்தாய்க் கைக்கொள்கிறது. அவருடைய விருப்பத்தையே செய்து, அவருடைய திட்டத்தையே நிறைவேற்றுகிறது. ஆனாலும் அவருடைய கிருபையினால் ஏற்படும் உள்ளான உற்சாகம் மற்றும் தொடர்ந்து அவர் காண்பிக்கும் பெலத்த அன்பு இவைகளினால், இந்த கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை ஒரு சுமையாகத் தெரிவதில்லை, "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவா. 5:3).

கிறிஸ்து நமக்கு செய்துள்ளதை மனதில் வைப்போம். அவர் நமக்காகச் செய்த தியாகத்தை தினந்தோறும் நினைத்துப் பார்ப்போம். அவருடைய இரட்சிப்பின் ஈவை நாம் ஜாக்கிரதையாய் நினைக்கும்போது, அது நாளுக்கு நாள் நம்மை அவருடைய சாயலாக்கி, அவரது கிருபையின் இராஜ்யத் திற்குள் நம்மை அன்பின் ஊழியம் செய்யும்படித் தூண்டக் கூடும்.

முடிவுரை

தேவனுடைய அமைப்பினால் சிலுவையும் சபையும் ஒன்றாகக் கட்டியிணைக்கப்பட்டுள்ளன. சபையானது சிலுவையினால் உண்டாக்கப் பட்டு, கழுவப்பட்டு, வற்புறுத்தப்படுகின்றது.

இயேசு சிலுவையிலே பாடுகள்பட்ட வேளையில், அந்தச் சிலுவையின் கீழ் நின்றிருந்த ஒழுக்கமற்ற கூட்டத்திடமிருந்து வந்த இரண்டு ஏளனமான கேள்விகள் அவரைச் சுற்றிச் சுழன்றன: "இவன் ஏன் தன்னை இரட்சித்துக் கொள்ள முடியவில்லை'' மற்றும், ''தேவன் ஏன் இவனை இரட்சிக்கவில்லை?'' (மத். 27:39-43ஐக் காணவும்). தேவனுடைய ஊழியத்தின் அஸ்திபாரத்தையே தாங்கள் தாக்குவதை அந்தக் கூட்டத்தார் சற்றும் உணரவில்லை. இயேசு தம்மையே இரட்சித்துக் கொண்டிருந் தாலோ அல்லது சிலுவை மரணத்திலிருந்து தேவன் அவரை விடுவித்திருந் தாலோ சபை பிழைத்திருப்பது என்பது முடியாததாகியிருக்கும்; ஏனென்றால் கடந்த காலப் பாவங்கள் சிலுவையினாலே மன்னிக்கப்பட்டு, அன்றாடம் சிலுவையினாலே சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகின்ற மக்களாலேயே சபை ஏற்பட்டிருக்கின்றது. மேலும், சிலுவையில்லை யென்றால், சபை தனது அன்றாட வாழ்விற்கான உந்து சக்தியைப் பெற்றிருக்க முடியாது, ஏனென்றால் தேவனுடைய மக்களாயிருந்து, தேவனுடைய ஊழியத்தைத் தேவனுடைய வழியிலேயே செய்கின்ற சபையானது சிலுவையினால்தான் வற்புறுத்தப்படுகின்றது.

நீங்கள் கிறிஸ்துவின் சபைக்குப் புறம்பே இருந்தால், அதற்குள் பிரவேசிக்க விரையுங்கள், ஏனென்றால் சபைக்குள் பிரவேசிப்பதினால் நீங்கள் சிலுவையின் எல்லாப் பயன்களையும் பெறுகின்றீர்கள். சபை என்பது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக வாழும் சரீரமே தவிர வேறல்ல.

தேவனுடைய தாராளமான வரங்களால் சூழப்பட்டவராகவே இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நபரும் இருக்கின்றார். அவர் நமக்கு சுவாசிக்கக் காற்றையும், குடிக்கத் தண்ணீரையும், வாழ்வதற்கு பூமியையும், மகிழ்ச்சியடைய குடும்ப உறவுகளையும், மற்றும் எண்ணற்ற நலன்களையும் கொடுத்துள்ளார். தேவனுடைய இந்த தயவுகள் முழுவதையும் எண்ணிப் பார்க்காத ஒருவர் நஷ்டமடைவார். கிறிஸ்துவின் மூலமாக அவர் நமக்குக் கொடுத்துள்ள இரட்சிப்புத்தான் அவரது கிருபையின் மேன்மையான வெளிப்பாடாக இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அது தேவன் செலுத்திய மிகப் பெரிய விலைக் கிரயமாகும். அதைப் பெறும் பாவிகள் அதன் உயர்ந்த பலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

அநேகர் தங்களின் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களில் அவர் அவர்களுக்குக் கொடுத்துள்ள தேவனுடைய கிருபையுள்ள கரத்தைப் பார்த்திருக்கின்றார்கள், ஆனால் அவரது உன்னதமான, பெறத் தகுதியற்ற அன்பளிப்பான இரட்சிப்பை அவர்கள் பெற்றிருப்பதில்லை. உங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையா? கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தினாலும் (ரோமர் 10:10), பாவத்திலிருந்து மனந்திரும்புவதாலும் (அப். 11:18), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதாலும் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுத்தப்படுவதாலும் (கலா. 3:27) நீங்கள் கிருபையின் இடமாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் (1 கொரி. 12:13) பிரவேசித்து, அவருடைய நித்திய ஜீவனைப் பெறலாம். பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிக் கிறீர்களா?" (ரோமர் 6:3) என்று கூறினார்; "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் ... எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்" (எபே. 1:7, 8அ).

இயேசு, தமது சபையாகிய சரீரத்தில் உண்டாக்கியுள்ள பாவமன்னிப்பு மற்றும் ஜீவனுக்கென்று சிலுவையின் மூலமாக உங்களை அழைக்கின்றார். அவரது அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

குறிப்புகள்

[1]ஹென்றி சி. தீயிஸ்ஸென், *முறையான இறையியல் விளக்கவுரைகள்* (கிராண்ட் ரேப்பிட்ஸ், மிச்சிகன், டபிள்யூ எம். பி. எட்மேன்ஸ் பப்ளிஷிங் கம்பெனி, 1949), 313. [2]ஆர். ஏ. டோரி, வேதாகமம் போதிப்பது என்ன? (நியூயார்க்: பிளெமிங் ஹெச் ரெவெல், கோ. 1898), 144.

1

தேவனுடைய நோக்கத்திற்கான மக்கள்

''தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ...'' (எபே. 3:9, 10).

வேத வசனங்களில் ஒரு சுருக்கமான விளக்கமானது அநேக வேளைகளில் ஒரு மிகவும் வல்லமையுள்ள அர்த்தத்தைக் கொண்டு வருவதாயிருக்கும். எடுத்துக்காட்டாக, இது "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே'' (எபே. 1:7) என்ற மூன்று வார்த்தைகளைப் பொறுத்தமட்டில் உண்மையாய் உள்ளது. இந்தச் சொற்றொடரானது பவுல் எழுதிக் கொண்டிருந்த பாவமன்னிப்பைத் தகுதிப்படுத்துகின்றது. இது, தேவன் கிருபையில் ஏழ்மையுள்ளவராயிருந்தால், அவரிடத்திலிருந்து நாம், நமது பாவங்களை ''புறம்பே அனுப்பும்'' விஷயத்தில் அதிகமாய் எதிர்பார்க்க முடிந்திராது என்று நமக்குக் கூறுகின்றது. இருப்பினும், அவர் கிருபையில் ஐசுவரியமுள்ளவராயிருந்தால், பவுல் உறுதிப்படுத்துவது போல, நமது எல்லா மீறுதல்களையும் மூடுவதற்கும் மேலான ஏராளமான மன்னிப்பை நாம் எதிர்பார்க்க முடியும். ஒரு ஏழை மனிதர் தம்முடைய உடமைகளி"லிருந்து" அல்லது தம்முடைய உடமைகளின்"படி" நமக்கு ஒரு வெகுமதி அளித்தால், நாம் ஒரு அற்பமான வெகுமதியையே பெறுவோம், ஏனெனில் அந்த ஏழை மனிதர் சிறிதளவே வைத்திருப்பவராய், அதிலிருந்து நமக்கு எடுத்துக் கொடுப்பவராய் இருப்பார். இருப்பினும், ஒரு பணக்கார மனிதர் அவருடைய ஐசுவரியங்களில் ''இருந்து'' அல்லது அவருடைய ஐசுவரியங்களின் "படி" நமக்குக் கொடுப்பாரென்றால், நாம் மிகப் பெரிய மற்றும் மட்டுமீறிய தொகையொன்றை, அவருடைய கொடுக்கும் திறனுக்கு தகுந்த விகிதத்திலான தொகையொன்றைப் பெறுவோம். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே" என்பது தேவனுடைய மன்னிப்பை வெளிப்படுத்துகையில் இதுவே பவுலின் வலியுறுத்தமாய் இருந்தது. தேவன் கிருபையில் ஐசுவரியமுள்ளவராய் இருப்பதால், அவரை விசுவாசிப்பவர்களுக்கு அவரது மன்னிப்பானது வரையறையற்றதாகவும்,

மட்டுமீறியதாகவும் உள்ளதென்று அவருடைய (பவுலினுடைய) வார்த்தைகள் நமக்கு உத்தரவாதம் அளிக்கின்றன.

வேதாகமத்தில் உள்ள ஒரு சிறு வாக்கியம் அல்லது வாக்கியத்தின் ஒரு பகுதியாக உள்ள இந்த நினைவுபடுத்துதலானது நமக்கு முன்பாக இந்த சத்தியத்தைப் பற்றிய மிகப் பெரிய அர்த்தம் ஒன்றைக் கொண்டு வர முடியும்: நாம் எபேசியர் 3:9ல் உள்ள "அநாதி தீர்மானம்" என்ற இரண்டு வார்த்தைகளை, சபையைப் பற்றி நாம் சிந்திக்கையில் நமது கருத்தைத் தப்பிச் செல்லும்படி அனுமதித்து விடலாகாது. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், ஒரு திறவுகோல் வாக்கியத்தில் தேவனுடைய நோக்கமானது ஒரு தலைமை இடத்தைப் பெற்றுள்ளது:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, … அவரைப் பற்றும் விசுவாசத்தால் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது (எபே. 3:9, 10, 12).

தேவனுடைய மிக மேன்மையான திட்டத்துடன் தொடர்புடைய எந்த சிந்தனையும் நிச்சயமாகவே, கவனம் நிறைந்த மற்றும் சிந்தனை நிறைந்த ஆய்வு செய்யும்படி அழைக்கின்றது. ஒருவேளை வேதாகமத்தில் உள்ள வேறு எந்த இரு வார்த்தைகளும் இவைகளின் தனிச் சிறப்பைக் காட்டிலும் அதிகம் சிறப்புடையதாக இல்லாது இருக்கலாம்.

பவுல் கூறியபடி, சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றமாயிருக்குமென்றால், சபையின் முக்கியத்துவம் அரிதாகவே மிக அதிகமாய் வலியுறுத்தப்படுவதாகக் கூடும். சபையின் மூலமாகவே தேவனுடைய அநாதி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது என்று பவுல் விவரித்த பொழுது, சபையைப்பற்றி அவர், மறக்கவியலாத, ஒப்புமையற்ற ஒரு கண்ணோட்டத்தைக் கொடுத்தார்.

இந்தச் சொற்றொடரைப் பற்றி ஜெபத்துடனும், பகுப்பாய்வுடனும் சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றமாக சபை அடையாளப்படுத்தப்படுதல் என்பது சபையின் இயல்பைப் பற்றி நமக்குக் கூறுவதென்ன?

இது வடிவமைப்பை அறிவிக்கின்றது

''அநாதி தீர்மானம்'' என்ற சொற்றொடரானது சபைக்கான ஒரு தெய்வீகத்துவ வடிவமைப்பை, ஒரு பரிசுத்த விருப்பத்தை மறைவாய் உணர்த்துகின்றது. ''சபையின் நோக்கம் என்ன?'' என்ற விசாரிப்புக்கு, சபையானது தேவனுடைய தெய்வீக நோக்கத்தின் செயல்பாடாக உள்ளது என்று நாம் பதில் அளிக்க வேண்டும்.

பாவம் நிறைந்த மனுக்குலத்தின் மீட்புக்காக இயேசுவின் மரணம்

என்பது உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே முன்னறியப்பட்டதாக, முன் நியமிக்கப்பட்டதாக, முன் திட்டமிடப்பட்டதாக இருந்தது. பேதுரு, "... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்பட்டாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து ..." (1 பேது. 1:18-20) என்றெழுதினார். தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட காலத்தில், இயேசு நம்மை தேவனுடைய புத்திரர்களாக்குவதற்காகத் தம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் ஒப்புக் கொடுத்தார்: "நாம் புத்திர சுவிகாரத்தை அடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:4, 5). நாம் கிறிஸ்துவின் சரீரமாக, சபையாக ஆகுகையில், புத்திரர்கள் என்ற இந்த சுவிகரித்தல் நடைபெறுகின்றது. பவுல், "தமக்கு (தேவனுக்கு) முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, ... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே. 1:4, 6) என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்துவுக்குள் வந்து இந்த சரீரத்தில் (சபையில்) உண்மை நிறைவுடன் குடி கொள்ளும் யாவரையும் தமது பிள்ளைகளாக சுவிகரிக்கவும், நித்தியத்திற்கும் இரட்சிக்கவும் தேவன் தாம் காலத்தைப் படைக்கும் முன்னரே தேர்ந்து கொண்டார். சபையானது இவ்விதமாகக் கண்ணோக்கப்படுகையில், அது தேவனுடைய திட்டமாக, உலகத்திற்கான அவருடைய கிருபையுள்ள வடிவமைப்பாக மட்டுமே புரிந்து கொள்ளப்பட முடியும்.

வேதாகமத்தின் புகழ் மிக்க ஆசிரியரான R.C. பெல் அவர்கள் தமது "*எபேசியர் நிருபத்தின் பாடங்கள்*" என்ற நூலில், "இரட்சிப்பின் இயல்பை உண்மையாகப் புரிந்து கொண்டுள்ள எவரும் சபையின் இன்றியமையாமையைத் தள்ளி விடுதல் என்பது மிகவும் கடினமானதாயிருக்கும்"[1] என்று எழுதினார். சபையானது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு முன்புள்ளதாகவோ அல்லது அதைத் தொடர்ந்து வருவதாகவோ வேதாகமத்தில் முன்னிறுத்தப் படுவதில்லை; இது இரட்சிப்புக்கான தேவனுடைய உண்மைத் திட்டத்தில் இருப்பதாக காண்பிக்கப்படுகின்றது, ஏனெனில் கிறிஸ்துவின் சரீரத்தில் - அவருடைய இரத்தத்தின் மூலமாகவே - நாம் தேவனுடைய மீட்கப்பட்ட பிள்ளைகளாக அவருக்கு முன்பாக நிற்கின்றோம். நாம் அவருடைய பிள்ளைகளானால், அவருடைய சபையாய் இருக்கின்றோம். நாம் அவருடைய சபையாயிராமல், அவருடைய பிள்ளைகளாக முடியாது, மற்றும் நாம் அவருடைய பிள்ளைகளாய் இராமல், அவருடைய சபையாக முடியாது. சபையானது தேவனுடைய நித்திய நோக்கத்துடன் இணைக்கப்பட்டதாயிருப்பதில்லை;

அதுவே (சபையே) தேவனுடைய நித்திய நோக்கமாய்/அநாதி தீர்மானமாய் உள்ளது.

ஒருவேளை, நீங்கள் உங்கள் நண்பர்களில் ஒருவரைச் சந்திக்கின்ற தாகவும், அவர் தமது இருதயத்திற்கு மிக விருப்பமுள்ளதென்று நீங்கள் அறிந்துள்ள தமது பண்ணையில் ஒரு உலாச் செல்வதற்காக உங்களை அழைத்துச் செல்லுகிறார் என்றும் வைத்துக் கொள்வோம். மனதிற்கினிய பசும் புல்வெளியில் நீங்கள் நடக்கையில், அவர் உங்களிடம், தான் தனது குழந்தைப் பருவத்திலிருந்தே தனக்கென்று ஒரு பண்ணையைச் சொந்த மாகப் பெற்றிருக்க வேண்டும் என்று கனவு கண்டதாகக் கூறுகின்றார். இன்னும் அவர், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த நிலத்தை வாங்கி, அதை ஒரு அழகு நிறைந்த, உற்பத்தித் திறனுள்ள கால் நடை மேய்ச்சல் நிலமாக மாற்றிய பொழுது, தனது கனவை நிறைவேற்ற/நனவாக்கத் தொடங்கியதாகக் கூறுகின்றார். அவர் தமது பணியின் அதிகபட்சம் பயன் அடையும்படியாக யுக்தியான இடங்களில் தாம் கட்டிடங்கள் கட்டியதைப் பற்றிக் கூறுகையில் நீங்கள் அவரது முகத்தில் ஒளியையும், அவரது குரலில் பெருமையையும் கண்டு கேட்கின்றீர்கள். அவர் தாம் கவனமாகத் தேர்ந்தெடுத்துள்ள, மேம்படுத்தியுள்ள மற்றும் பெரிய மந்தையாக ஆக்கியுள்ள தமது கால் நடைகளை உங்களுக்குக் காண்பிக்கின்றார். நலம் காணும் மற்றும் மனவெழுச்சிமிக்க உணர்வுடன் அவர் தமது பண்ணைக் கான தமது எதிர்காலத் திட்டங்களை உங்களுக்கு விவரிக்கின்றார்.

இந்த உரையாடலுக்குப் பிறகு, இந்த மனிதர் தமது வாழ்வில் செய்துள்ளவைகள் பற்றி நீங்கள் வியப்படையத் தேவை இருக்காது. அவர் கூறியுள்ள மற்றும் செய்துள்ள ஒவ்வொன்றும், அவரது பண்ணையானது அவரின் பிரயாசமும் அன்புமாக உள்ளது என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றது. அது அவரது வாழ்வின் பணியாக இருந்துள்ளது மற்றும் இருக்கின்றது. அவர் செலவு செய்த சக்தி, அவர் செலவிட்ட பணம் மற்றும் தனது பேரவாவின் மையப் பகுதியாக இந்தப் பண்ணை இருக்கும்படியாக அவர் எதிர்காலத்திற்காகச் செய்த திட்டங்கள் ஆகிய எல்லாவற்றிலும் இது தெளிவாக உள்ளது. உரையாடலின் ஒவ்வொரு பாகமும், இந்தப் பண்ணை யானது அவருடைய இருதயம் போன்று முக்கியமானதாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தேவனைப் பற்றியும் இதே விதமான உற்று நோக்கல் ஏற்படுத்தப்பட வேண்டும். காலத்தின் தொடக்கத்திலிருந்தே சபையானது தேவனுடைய திட்டமாயிருந்தது என்ற உண்மையும், இரட்சிப்பின் வரலாற்றின் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் போது இது (சபை) தீர்க்கதரிசனங்களின் குவிமையமாக/சுட்டிக்காட்டுதலாக இருந்தது என்பதும், மற்றும் இது (சபை) நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியம் மற்றும் சிலுவை மரணம் ஆகியவற்றினால் விளைந்த உயிர்ப்பொருளாக உள்ளது என்பதும், கிறிஸ்துவும் அவரது சபையாருமே உலகத்தின் இரட்சிப்புக்கான தேவனு டைய மிக மேன்மையான திட்டம் என்பதைத் தவறற்ற வகையில் நிரூபிக்கின்றது. சபையை நிலவச் செய்வதை தேவன் தம்முடைய தயைமிக்க விருப்பமாக மனிதகுல வரலாற்றுக்கு முன்னதாகவே தம் சிந்தையில்

கொண்டிருந்தார்; இப்பொழுது, அவர் அந்த விருப்பத்தை ஒரு உண்மை நிலையாக்கி, சபையின் பரவுகை மற்றும் வளர்ச்சியைத் தமது தொடர்ந்து நடக்கும் ஊழியமாக இவ்வுலகில் இருக்கச் செய்துள்ளார்.

"தேவன் செல்லுகின்ற வழி எது என்பதைக் கண்டறிந்து, நாமும் அதே திசையில் செல்வது என்பதைத் தவிர வாழ்வில் அதிகமான வேலை ஒன்றும் இல்லை" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். தேவனுடைய நோக்கத்தை - அது என்னவாக உள்ளது மற்றும் அவர் அதை எவ்விதம் நிறைவேற்று கின்றார் என்பதை - நாம் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தால், தேவன் செல்லுகின்ற வழியை நாம் சிந்தையில் கொண்டு அவர் நம்மிலும் இந்த உலகத்திலும் நிறைவேற்ற நாடுபவற்றை நம் மனதில் கொண்டவர்களாய் இருப்போம். சபை என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தின் (அநாதி தீர்மானத்தின்) நிறைவேற்றமாக உள்ளதென்றும், அது நமக்கு அவரைப் பிரியப்படுத்துவதற்குத் தவறற்ற ஒரு ஓட்டத்தைக் கொடுத்தது என்றும் எபேசியர் 3:10, 11ல் பவுல் விளக்கப்படுத்தினார். நாம் அவரது சபையாராகி, அவரது சபையாராக உண்மையுடன் நிலைநின்று, அவரது சபையாராக அவரை மகிமைப்படுத்துவதே தேவனுடைய சித்தத்தின்படி நாம் செயல்படுகிறோம் என்பதை உத்தரவாதப்படுத்துகின்ற ஒரே வழியாகும்.

இது தனிச் சிறப்பைத் தெரிவிக்கின்றது

இத்துடன் கூடுதலாக, தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியான சபை என்ற கருத்தமைவானது சபையின் பரிசுத்தமான தனிச் சிறப்பை நமக்குக் காண்பிக்கின்றது. சபை என்பது தேவனுடைய தெய்வீக வடிவமைப்பின் வெளிப்பாடாக இருந்தால், தேவனுக்குச் சபையின் மதிப்பு என்னவாக இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்!

கிறிஸ்துவின் சிலுவையை விலக்கி வைத்து விட்டு சபையின் இருத்த லானது புரிந்து கொள்ளப்படவோ மதிக்கப்படவோ முடியாது.[2] தேவனு டைய குமாரனான இயேசுவின் மரணமானது சபை அமைந்துள்ள அஸ்திபாரமாகவும் மற்றும் அதன் வளர்ச்சியின் காரணமாகவும் உள்ளது. இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் சிலுவையின் மூலம் சபையை உண்டாக்கவும் (எபே. 2:4, 5), சபையை நிலைநிறுத்தவும் (1 யோவா. 1:7) மற்றும் சபைக்கு ஊழியத்தை நியமிக்கவும் (2 கொரி. 5:18, 19) திட்டமிட்டார். ஆகையால் நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே (ரோமர் 6:3) கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசிக்கின்றோம்; மற்றும் அந்த சரீரத்தின் உண்மையான உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் தொடர்ந்து ஒளியில் நடக்கையில் அவருடைய இரத்தத்தின் மூலமாகப் பாவத்திலிருந்து நாம் தொடர்ந்து கழுவப் படுகின்றோம். இவ்விதமாக புதிய ஏற்பாட்டின் சபையானது (ஒரு உள்ளூர்க் கருத்தளவில்) கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அவருடைய ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசித்து, அதன்படி நடந்து, ஊழியம் செய்து, அந்த சரீரமாக ஆராதிப்பவர்களாய் இருக்கின்றோம், நாம் தேவனுடைய ஆவியாலும் கிறிஸ்துவின் வல்லமையாலும் ஆதரிக்கப்பட்டு,

பலப்படுத்தப்பட்டவர்களாய் இவைகளைச் செய்கின்றோம். இதுவே உலகத்தின் மீட்புக்காகத் தேவனுடைய திட்டமாக உள்ளது.

புதிய ஏற்பாட்டின் சபைக்குப் புறம்பேயுள்ள எவரும் தேவனுடைய நித்திய நோக்கத்திற்குப் புறம்பே உள்ளவராகின்றார், தேவனுடைய நித்திய நோக்கத்திற்குப் புறம்பேயுள்ள எவரும் தேவனுடைய மீட்பின் பணிக்குப் புறம்பே உள்ளவராகின்றார். சபையைப் பற்றிய இந்த சத்தியமானது இரண்டு திறவுகோல் சத்தியங்களை முன் குறிக்கிறது: (1) மனிதரின் இரட்சிப்பைக் கொண்டு வருவதற்கு நாடுகின்ற தேவன் இவ்வுலகத்தில் செயல் படுகின்றவராய் இருக்கின்றார். அவர் தமது இரட்சிப்பின் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றார், இந்த திட்டமானது உலகத் தோற்றத்திற்கு முன்பே அவருடைய சித்தத்தில் இருந்ததாகவும், உலகத்தின் இருப்பு முழுவதிலும் அவரால் வளப்படுத்தப்பட்டு, வழி நடத்தப்பட்டு மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் இருந்தது. இது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியமாக, மனிதன் மீது அவர் கொண்ட மாபெரும் அன்பிலிருந்து உதயமானதாக உள்ளது, மற்றும் இது பவுலினால், “அவருடைய அநாதி தீர்மானம்” (எபே. 3:9) என்று விவரிக்கப்பட்டது. (2) புதிய ஏற்பாட்டின் சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின் வழிமுறையாக, உருவாக்கமாக மற்றும் உண்மை நிலையாக உள்ளது.

சபையை இருக்கச் செய்தல் என்பது மனித குல வரலாற்றுக்கு முன்பு தேவனுடைய நோக்கமாக இருந்தது; இப்பொழுது ... சபையின் பரவுகை மற்றும் வளர்ச்சி என்பது உலகத்தில் தொடரும் அவருடைய ஊழியமாக உள்ளது.

இரட்சிப்புக்கான தேவனுடைய வழியானது திருமணத்துடன் ஒப்பிடப்படலாம். இல்லத்திற்கும் இனப்பெருக்கத்திற்கும் தேவன் ஒரு திட்டம் கொண்டுள்ளார். அந்தத் திட்டம் என்ன? நாம் அனைவரும் இதற்கான பதிலை அறிந்துள்ளோம்: அது திருமணமேயாகும். வேத வசனங்களின் எளிமையான போதனைகளின் அடிப்படையில், நாம் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கான தேவனுடைய அந்த நோக்கமானது ஒரு ஆணும் பெண்ணும் அவருடைய சட்டங்களின் கீழ் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கானது என்று கூறமுடியும். தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்த வேளையில் திருமணத்திற்கும் இவ்வுலகிற்குப் பிள்ளைகளைக் கொண்டு வருவதற்குமான தம்முடைய திட்டத்தை அறியச் செய்தார். சட்டத்திற்குப் புறம்பான திருமணத்தின் மூலமாக இந்த உலகத்திற்குப் பிள்ளைகளைக் கொண்டு வர முடியுமா? முடியும். சட்டப்படியான திருமணத்திற்குப் புறம்பே மகிழ்வையும் ஆறுதலையும் மக்கள் நாடுகின்றனரா? ஆம். இருப்பினும் இது நடக்கும் போது இந்த மகிழ்வில் தேவனுடைய சித்தமானது குறுக்கே கடக்கப்பட்டு விடுகின்றது, மற்றும் இனப்பெருக்கத்திற்கும் குடும்ப மகிழ்வுக்குமான அவரது

நோக்கமானது தோல்வியடையச் செய்யப்படுகின்றது. தேவனால் கட்டளையிடப்பட்டுள்ள திருமணத்திற்குப் புறம்பே உள்ள இல்லத்தில் ஒரு குழந்தை வாழ்வது என்பது அக்குழந்தைக்கோ அல்லது அதன் பெற்றொருக்கோ மிகச் சிறந்த விஷயமாய் இருக்குமா? இல்லை, ஏன்? அவர்கள் சமூகம் மற்றும் தனிப்பட்ட மகிழ்ச்சிக்கான தேவனுடைய திட்டத்தைத் தவற விடுகின்றனர்!

புதிய ஏற்பாட்டின் சபை என்பது உலகத்தின் மீட்புக்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. இதுவே அவருடைய ஒரே ஒரு திட்டமாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சபையைப் புறக்கணித்தால் நமக்கு என்ன நேரிடும்? உண்மையான சபையாய் இராத மத அமைப்பு ஒன்றில் நாம் மத நடவடிக்கையைக் கொண்டிருக்க முடியுமா? ஆம். சபைக்குப் புறம்பே, தனிப்பட்ட மக்களாக இருந்து கொண்டு நாம் நல்ல நோக்கங்களுடைய குழுவாக இரக்கம் நிறைந்த ஆச்சரியமான செயல்களைச் செய்ய முடியுமா? ஆம். இருப்பினும் பின்வருவதுதான் முக்கியமான கேள்வியாக உள்ளது: "நாம் தேவனுடைய நித்திய தீர்மானத்தை நிறைவேற்றுகின்றோமா?" இதற்கு "இல்லை" என்பதே வேத வசனங்களின்படியான பதிலாக உள்ளது. தேவனுடைய அநாதி தீர்மானத்திற்குப் புறம்பே இருந்து கொண்டு நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியுமா? மீண்டும் "இல்லை, முடியாது" என்பதே பதிலாக உள்ளது.

நாம் புதிய ஏற்பாட்டின் சபையாகிய கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கும் பொழுது மட்டுமே தேவனுடைய "நித்திய தீர்மானத்தின்" நிறைவேற்றத்தை அனுபவிக்கின்றோம் என்பது உண்மையாக இருப்பதால், எவரொருவரும் தாம் அந்த சபையாராக வாழாத வரையில் திருப்தியடையக் கூடாது என்ற கருத்து தொடருகின்றது. ஒருவர் கர்த்தருடைய சபையாராகும் பொழுது, அவர் இந்த உலகத்தைத் தேவனுக்குள் ஒப்புரவாக்குகின்ற தேவனுடைய கிருபையுள்ள வடிவமைப்புக்குள் இருக்கின்றார்.

இது நிலைப்புத் தன்மையை அறிவிக்கின்றது

மற்றும், சபையானது தேவனுடைய "அநாதி தீர்மானமாக" உள்ளதென்ற உண்மையானது சபையின் தொன்மை வாய்ந்த நிலைப்புத் தன்மையை அறிவிக்கின்றது. சபை என்பது, மனிதனுடைய தேவைக்கு இன்னும் அதிகமாக ஏற்புடையதொன்று கொடுக்கப்படும் வரைக்கும் ஒரு தற்காலிகப் பதிலீடு என்ற வகையில் உள்ளது அல்ல. இது குறிப்பிட்ட திட்டமானது கொண்டு வரப்படும் வரைக்கும் அமைக்கப்பட்ட ஒரு திட்டம் அல்ல.

சபை என்பது கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. பவுல், "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே. 3:21) என்று கூறினார். தேவனுடைய ராஜ்யம் என்ற வகையில் (தானி. 2:44; மத். 16:18) நிலைநாட்டப்பட்ட சபையானது பரலோக

ராஜ்யத்தின் பூமிக்குரிய விளக்கமாக உள்ளது, இதில் நாம் இப்பொழுது அவருடைய குடும்பமாய் இருப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம், மற்றும் மகிமையில் பிரவேசிக்கும் பொழுது இதை முழுமையான கருத்தில் இன்னும் அதிக மகிழ்வுடன் அனுபவிப்போம் (2 பேது. 1:11).

சபை என்ற வடிவத்தில் தேவன் தம்முடைய ஆவிக்குரிய இராஜ்யத்தை இவ்வுலகத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்பு பல ஆண்டுகள் தயாரிப்பானது தேவையாய் இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவைக் குறித்த முதல் குறிப்பானது ஆதி. 3:15ல் காணப்படுகின்றது, இங்கு சாத்தான்மேல் கொள்ளப்படும் வெற்றியானது மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டப்பட்டு, தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. பிற்பாடு, பிதாக்களின் யுகத்தில், மேசியாவைப் பற்றி ஆபிரகாமுக்குத் தனிச் சிறப்பான ஒரு வாக்குத்தத்தம் அருளப்பட்டது: “பூமியிலுள்ள வம்சங்க ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” (ஆதி. 12:3; இ.வ. 13:15; கலா. 3:16). தேவன் ஆபிரகாமுக்கு ஏற்படுத்திய (இந்த) வாக்குத்தத்தத்திற்கும், அந்த வாக்குத்தத்தத்தை அவர் இயேசுவுக்குள் நிறைவேற்றுவதற்கும் இடையில் மோசேயின் பிரமாணமானது இடைச் செருகப்பட்டது (கலா. 3:19). ஆகையால், பிதாக்களின் யுகமும் மோசேயின் யுகமும், வரவிருந்த மேசியாவுக்கும் அவரது இராஜ்யத்தின் நிலைநாட்டுதலுக்கும் அவசியமான தயாரிப்புப் பணியை அளித்தன. இயேசு தம்முடைய சொந்த ஊழியத்தின் போது தம்முடைய போதனைகள், பன்னிரு அப்போஸ்தலர்களுக்குத் தம்முடைய பயிற்சி, தம்முடைய முன்மாதிரி, தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின் தந்த தம்முடைய தரிசனங்கள் ஆகியவற்றின் மூலம் அந்த இராஜ்யத்திற்கு அஸ்திபாரம் இட்டார்.

அப். 2ன்படி பெந்தெகொஸ்தே நாளன்று இராஜ்யம் பெலத்துடன் வந்தது (மாற். 9:1; அப். 1:8ஐக் காணவும்), அன்று சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களைக் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய உறுப்புக்களாகக் காணும் பொழுது அவர்களை சபையார் என்று நாம் அடையாளம் கண்டு கொள்கின்றோம்; கிறிஸ்தவர்களை தேவனுடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுத்துள்ள மக்களாகக் காணும் பொழுது நாம் தேவனுடைய இராஜ்யத்தை அவர்களில் காண்கின்றோம். கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபையானது, தேவன் ஆதாமைப் படைக்கும் முன்பாகவே அவர் தம் சிந்தையில் திட்டமிட்டிருந்த பரிசுத்த திட்டமாக உள்ளது.

பவுலின் கூற்றுப்படி, இப்பொழுது - சபையின் மூலமாக - மட்டுமே பல ஆண்டுகளாக வடிவமைப்பட்ட தேவஞானமானது நிறைவேறுவதைத் தூதர்கள் காண முடியும். பவுல், “உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக” என்று எழுதினார் (எபே. 3:10). “உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்” என்பது தூதர்களைக் குறிப்பதாய் இருக்க வேண்டும். அவர்கள் எங்கிருந்து வந்தாலும், சபையாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தை அவர்கள்

கண்ணோக்கி, ''நாங்கள் இப்பொழுது காண்கின்றோம். நாங்கள் இப்பொழுது புரிந்து கொள்ளுகின்றோம். பல ஆண்டுகளாகத் தேவன் தாம் நிறைவேற்றச் செயல்பட்டிருந்தது இப்பொழுது தெளிவாக உள்ளது. கடைசியாக நாங்கள், அவருடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றத்தைக் காண்கின்றோம்'' என்று கூறுகின்றனர். மீட்பு என்றால் என்னவென்று தூதர்கள் அறிய மாட்டார்கள், ஏனென்றால் அவர்கள் மீட்பை அனுபவித்ததில்லை (1 பேது. 2:4). ஒருவேளை இதுவே பேதுருவுக்கு ஏவப்பட்ட கூற்றின் அர்த்தமாக இருக்கலாம்: "தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப் பார்க்கத் தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேது. 1:12).

ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் உள்ள எனது மாணவர்களிடம், அவர்கள் தூதர்களால் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று நான் அடிக்கடி அவர்களுக்கு நினைவூட்டுவதுண்டு. அவர்களிடத்தில் நான், "கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் நமது வளாகத்தைக் கடந்து சென்று கிறிஸ்துவுக்காக இப்பூமியில் அவருடைய ஆவிக்குரிய சரீரமாக வாழுகையில், உங்களைக் கவனித்துப் பார்க்கும் தூதர்கள், 'ஆ! கிறிஸ்தவராயிருப்பதன் அர்த்தம் என்னவென்று நாங்கள் இப்பொழுது அறிகின்றோம். தேவனுடைய திட்டம் என்ன என்பதை இப்பொழுது நாங்கள் காண முடிகிறது' என்பார்கள்'' என்று கூறுவதுண்டு. இந்தப் பூமியில் உள்ள கிறிஸ்தவரல்லாத மக்களும் கூட நம்மை நோக்கிப் பார்த்து, "இதோ இங்கு தேவனுடைய வசனம் உருவாக்குகின்ற வாழ்க்கை உள்ளது. நான் அவ்விதமான வாழ்வை விரும்பினால், அதைப் பெறுவதற்கு நான் என்னைத் தேவனுடைய மீட்பின் வழிக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்'' என்று கூறலாம்.

கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக நாம் தேவனுடைய அநாதி தீர்மானத்துக்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம், இந்தத் திட்டமானது உலகத்தின் மீட்புக்கான தேவனுடைய நிறைவான நோக்கமாய் உள்ளது, மற்றும் இது நித்தியத்தில் பரலோகத்தின் நித்திய இராஜ்யத்திற்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்படும்போது தனது கடைசியான நிறைவேற்றத்தைக் காணும் (2 பேது. 1:10, 11). அவருடைய சபையானது இரு உலகங்களில் பங்கேற்கின்றது: அது தற்பொழுது பூமிக்குரிய வகையிலான ஒரு இராஜ்யமாய் உள்ளது (கொலோ. 1:13) மற்றும் இது வரவிருக்கும் பரலோக இராஜ்யமாகவும் உள்ளது (2 தீமோ. 4:1). இந்த இராஜ்யத்தை எபிரெயருக்கு நிருபம் எழுதியவர் ''அசைவில்லாத இராஜ்யம்'' (எபி. 12:27) என்று அழைத்ததில் வியப்பேதும் இல்லை.

முடிவுரை

எனவே, வேத வசனங்களின்படியாக, சபை என்பது தேவனுடைய

நோக்கத்திற்கான மக்களாக உள்ளது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் மூலமாக இரட்சிப்பை அருளுதல் என்பது தேவனுடைய பெருந்தன்மை மிக்க திட்டமாக இருந்தது. அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று சபை நிலைநாட்டப்பட்டதில் அவருடைய பரிசுத்த நோக்க மானது உண்மை நிலையாக ஆனது.

"அநாதி தீர்மானம்" என்ற சொற்றொடரானது சபையே உலகத்தின் இரட்சிப்புக்கான தேவனுடைய வடிவமைப்பாகவும் முடிவாகவும் உள்ளது என்பதை மறைமுகமாய் எடுத்துரைக்கின்றது. தேவனுடைய அநாதி தீர்மானமாயிருப்பதில் இது தனிச்சிறப்பையும் நிலைத்த தன்மையையும் கொண்டுள்ளது.

இந்த அண்டத்தையும் மனிதரையும் படைத்தவர் என்ற வகையில் தேவன் எல்லா உண்மை நிலைகளிலும் மாபெரும் உண்மை நிலையாக உள்ளார். இருக்கின்ற ஒவ்வொன்றும் தேவன் அல்லது தேவனற்றது என்று வகைப்படுத்தப்பட முடியும்: தேவன் இருக்கின்றார், எனவே பொருள்களும் உயிர்களும் தேவனாலேயே படைக்கப்படுகின்றன. அந்த இரு வகைகளும் இருக்கின்ற எல்லாவற்றையும் தமக்குள் அடக்குகின்றன. இந்த இரு குழுக்களையும் பற்றிச் சிந்தித்தலானது தேவன் படைத்த உலகில் நமது இடத்தைக் காணவும், அண்டத்தில் தேவனுடைய வல்லமை மற்றும் புலன் கடந்த நிலை ஆகியவற்றைக் காணவும் நமக்கு உதவுகின்றது. நாம் படைக்கப்பட்ட உயிர்களாய் இருக்கின்றோம், மற்றும் தேவன் சர்வ வல்லவராக, சகலமும் அறிந்தவராக, எங்கும் இருக்கின்றவராக, மற்றும் நித்தியமானவராக இருக்கின்றார். அவருடன் ஒத்துப் போகாமல் ஜீவிப்பதென்பது, மனிதன் செய்யக் கூடிய பெரும் தவறாயிருக்கின்றது. இதன் எதிரிடையும் உண்மையானதாக உள்ளது: அவருடைய சித்தத்துடன் ஒன்றாயிருத்தல் என்பது அவருடன் இசைவாயிருத்தல் என்றும் தெய்வீக நம்பிக்கை மற்றும் நித்திய வாக்குத்தத்தத்தினால் நிறையப்படுதல் என்றும் ஆகின்றது.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குப் புறம்பே உள்ள எவரும் அவருடைய நித்திய தீர்மானத்திற்குப் புறம்பே உள்ளவராகின்றார். ஆகையால், தனது வாழ்வு மற்றும் அடைவிடம் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் எவரொருவருக்கும் கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் என்பது அடிப்படைக் கவனத்திற்கு உரியதாக இருக்க வேண்டும்.

இயேசுவின் வார்த்தைகளை நாம் கேட்போம்: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5).

ஆவியானவருடைய அழைப்பை நாம் கவனிப்போம்: "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி. 22:17).

எனவே, கிறிஸ்துவின் சபையாராய் ஆன பிறகு, நாம் நமது எஞ்சியுள்ள வாழ்வுக்குப் பவுலின் பின்வரும் வார்த்தைகளில் நமது இருதயங்களைச்

செலுத்துவோம்: "... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், ... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25-27).

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியாக ஒருவர் இவ்வுலகத்தில் வாழாத வரைக்கும் அந்நபர் தாம் வாழ்வதற்கான உண்மையான நோக்கத்தைக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் அவருடைய தீர்மானத்தின் படி வாழ்பவர்களில் ஒருவராக இருக்கின்றீர்களா?

குறிப்புகள்

[1]R.C. Bell, *Studies in Ephesians* (Austin, Tex.: Firm Foundation Publishing Co., 1971), 16. [2]ஜேம்ஸ் D. பேல்ஸ் *அவர்கள் இந்தச் சத்தியத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.* ஜேம்ஸ் D. பேல்ஸ் *அவர்களின் சிலுவையும் சபையும்* (Shreveport, La.: Lambert Book House, n.d.) *என்ற நூலில் காணவும். மற்றும்* J.D. *தாமஸ்*, ed., *அவர்களின் God's Eternal Purpose*, Abilene Christian College Lectures (Abilene, Tex.: Abilene Christian College Book Store, 1969) *என்ற நூலில் காணவும்.*

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. "அவருடைய கிருபையின் ஐசுவரியங்களின்படியே" என்ற சொற்றொடரை விளக்கப்படுத்தவும். எபே. 1:7ஐக் காண்க.
2. "தேவனுடைய அநாதி தீர்மானம்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தைக் கலந்துரையாடி அறியவும். எபே. 3:11ஐ வாசிக்கவும்.
3. தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே இயேசுவின் மரணத்தை முன் குறித்திருந்தாரா? அப்படியென்றால் ஏன்?
4. ''காலம் நிறைவேறின பொழுது'' என்ற சொற்றொடர் உணர்த்தும் கருத்து என்ன?
5. சபை என்பது தேவனுடைய திட்டத்துடன் கூட்டப் பட்டதாக உள்ளதா அல்லது சபை என்பது திட்டமாகவே உள்ளதா? விளக்கப்படுத்தவும்.
6. சபையானது தேவனுடைய பிள்ளைகளால் ஆனதென்றால், தேவனுடைய சபையாயிராமல் ஒருவர் தேவனுடைய பிள்ளையாய் இருக்க முடியுமா?
7. சபையானது சிலுவையினால் உண்டாக்கப்பட்டதெப்படி என்று விளக்கவும்.
8. ஒருவர் சபைக்குப் புறம்பே இருந்தால், அவர் தேவனுடைய

அநாதி தீர்மானத்திற்குப் புறம்பேயும் இருக்கின்றாரா?

9. *சபையானது தேவனுடைய அநாதி தீர்மானமாக உள்ளது என்ற கருத்தினால் முன் குறித்த இரண்டு சத்தியங்கள் யாவை?*
10. *சபைக்குப் புறம்பே ஒருவர் மதச் செயல்பாட்டில் ஈடுபட முடியுமா? அவ்வாறு அவர் செய்கின்றாரென்றால், அவர் தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பாகமாய் இருக்கின்றாரா?*
11. *சபையின் மூலமாக நாம் தேவனுக்கு எவ்விதத்தில் மகிமையைக் கொண்டு வருகின்றோம்? எபே. 3:20ஐக் காணவும்.*
12. *கர்த்தருடைய நித்திய திட்டத்தின் முழுமையான முக்கியத்துவத்தைத் தூதர்கள் எவ்விதம் புரிந்து கொண்டனர்? எபே. 3:10, 11ஐக் காணவும்.*
13. *சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருவர் பிரவேசிப்பது எவ்விதம்?*

2

சபை என்பது எதுவாயிருப்பதில்லை

"இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறை வானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். ஆதி காலங்களுக்கும் தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்த வான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துவதற்கு, உங்கள் பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக் குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷருக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் " (கொலோ. 1:24-28).

கொஞ்சம் குறைய ஆறு வருடங்களுக்கு முன்பாக, எனது அன்பார்ந்த நண்பர் ஒருவர் கிறிஸ்தவரானார். மனமாற்றம் அடைந்த ஒரு இளைஞ ராயிருந்து, கிறிஸ்தவக் குடும்பத்தில் வளரக் கூடிய பயன்களையும் மற்றும் தனது இளம் வயதில் கிறிஸ்தவ நண்பர்களிடமிருந்து உற்சாக மூட்டுதல் களையும் அவர் பெற்றிருந்ததில்லை. அவர் தமது முப்பது(வயது)களின் பிற்பகுதியில் கிறிஸ்தவராகியிருந்ததால், இழந்துபோன காலத்தைச் சரி செய்ய வேண்டும் என்று அவர் அறிந்திருந்தார். நான் அறிந்துள்ள எந்த ஒரு மனிதரைக் காட்டிலும் இவர் ஆவிக்குரிய வகையில் மிகவும் வேகமாக வளர்ந்துள்ளார். அது அவர் தேவனுடைய இராஜ்யத்தில் குழந்தையாக அல்ல ஆனால் நம்மைப் போல "முழு வளர்ச்சி" பெற்றவராகப் பிறந்ததாகவே காணப்பட்டது. ஆவிக்குரிய கேள்விகளில் அவருடைய உட்கண்ணோட்டங்கள், எப்பொழுதுமே உதவி நிறைந்ததாகவும் நடைமுறை ஞானத்தை விளக்கப்படுத்துவதாகவும் உள்ளன. நாங்கள் நடத்தியிருந்த ஒரு உரையாடலில், அவர் சபையைப் பற்றிக் கொடுத்த ஒரு விளக்கமானது என்னிடத்தில் எப்பொழுதுமே தங்கியுள்ளது. கிறிஸ்தவரல்லாதவர்களுக்குச்

சபையைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் என்ன கூற வேண்டும் என்று நான் அவரைக் கேட்டேன். அதற்கு அவர், "சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதைப் பற்றி அவர்களுக்குக் கூறுங்கள். சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதைக் கண்ணோக்கியதே புதிய ஏற்பாட்டின் சபை பற்றி நான் அறிந்து கொள்ள உதவியது" என்று கூறினார். இந்த சகோதரர் திடமான ஒரு அறிவுரை கொடுத்துள்ளார் என்றே நான் நம்புகின்றேன்.

ஒரு பாடக் கருத்தை ஆராயவும் அதுன் மீது செயல்படவும் ஒப்பிட்டுப் பார்த்தல் மற்றும் ஒப்புவமை காட்டுதல் ஆகியவை மேன்மையான வழிமுறைகளாய் உள்ளன. தேவனுடைய சத்தியமானது தவறுடன் ஒன்றாக வைக்கப்பட்டு அதனுடன் ஒப்பிடப்படும்பொழுது அடிக்கடி மிகத் தெளிவானதாகக் காணப்படுகின்றது. மத்தேயு 23ல் இயேசு தம்முடைய சீஷர்கள் என்ன செய்யக்கூடாது என்பதை வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் உதாரணங்களைச் சுட்டிக்காட்டுகையில் இந்த போதனை நுணுக்கத்தைப் பயன்படுத்தினார். அவர், "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யா திருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யா திருக்கிறார்கள்" (மத். 23:2, 3) என்று கூறினார்.

சபை என்பது என்ன என்பது பற்றிப் புதிய ஏற்பாடானது திட்டவட்டமாய் உள்ளது.[1] அது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிந்துள்ள மக்களால் ஆன ஆவிக்குரிய ஒரு சரீரமாக உள்ளது, இதன் மூலம் அவர்கள் அவருடைய மக்களாகி, ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் அவருடைய மக்கள் என்ற வகையில் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்கின்றனர் என்று அர்த்தமாகின்றது. அவர்கள் கிறிஸ்துவின் பெயரை அணிந்து கொண்டு அவரைத் தங்களுடைய ஆண்டவராகக் கண்ணோக்கு கின்றனர். அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் தங்களுக்குள் வாழப் பெற்றுள்ள ஒரு உயிர்ப் பொருளாக உள்ளனர். இந்த சரீரத்தில் உள்ளவர்கள் அவருடைய வசனத்தின் மூலமாக தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் நெருக்கமான தொடர்ந்திருக்கும் ஒரு ஐக்கியத்தை நிலைநாட்டுகின்றனர்.

சபை என்றால் என்ன என்ற இந்தக் கருத்துப் பின்னணிக்கு எதிராக, சபை என்றால் எதுவல்ல என்பதை நாம் எச்சரிக்கையாகக் கவனிக்க வேண்டும். இதன் மூலம், புதிய ஏற்பாட்டு சபையானது எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டார் என்பதை நாம் இன்னும் மிகச் சரியாகக் காணலாம் என்று நம்பிக்கை கொள்ளலாம் என்பது அர்த்தமாகின்றது.

பொருட்களால் ஆன ஒரு கட்டிட அமைப்பு அல்ல

முதலாவதாக, சபை என்பது பொருட்களால் ஆன ஒரு கட்டிட

அமைப்பு அல்ல. சபை கூடிவரும் கட்டிடத்தைக் கடந்து செல்லும் பொழுது ஒருவர், "அதோ சபை!" என்று வியக்கின்றார், இருந்தாலும் அவர் கூறுவது தவறாகவே உள்ளது. சபை என்பது செங்கற்கள், சிமென்ட் போன்ற பொருட்களால் ஆன கட்டிடம் அல்ல. ஜீவனுள்ள கற்களாகிய கிறிஸ்தவர்களே, சபை என்று அழைக்கப்படும் சரீரத்தில் உள்ளனர் (1 கொரி. 12:27; 1 பேது. 2:5).

சபையானது கூடி வந்து ஆராதிக்க ஒரு கட்டிடத்தைப் பயன் படுத்தலாம்; ஆனால் சபையென்பது மரம், உலோகம், கல் மற்றும் கண்ணாடி போன்ற பொருள்களாய் இருப்பதில்லை. சபை என்பது உயிருள்ள ஒரு பொருளாகும். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:22) என்று கூறினார். பேதுரு, "நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ... கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1 பேது. 2:4, 5) என்று கூறினார்.

சபையில் உள்ளவர்களின் மனித சரீரங்கள் என்ற ஆவியானவர் வாசம் பண்ணும் அவர்களுடைய உடல்கள் மட்டுமே சபையின் பொருளாலான அம்சமாக உள்ளது. ஒரு மனிதர் என்பவர், இயல்பான உடலில் மனிதரின் ஆவி வாழும் அமைப்பாக உள்ளார். அந்த மனிதர் கிறிஸ்தவராகும் பொழுது, அவர் சபையாகின்றார். சபை என்ற வகையில் அவர் நடந்து கொண்டு, ஆராதித்து, சித்தங்கொள்கின்றார் மற்றும் தனது இயல்பான உடலினால் பணி புரிகின்றார். அது ஒன்றுதான் சபையின் தொட்டறியக் கூடிய பண்பாக உள்ளது.

சிலவேளைகளில் ஒரு நபர், "நான் சபைக்குச் செல்லுகின்றேன்" என்று கூறலாம். புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அவர், ''நான் சபை கூடுதலுக்குச் செல்லுகின்றேன்'' என்று அர்த்தப்படுத்துகின்றார். புதிய ஏற்பாட்டில் ''சபை'' என்ற வார்த்தையானது கூடி வருதலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது (1 கொரி. 11:18); ஆனால் புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தையின் இன்னும் வெகுவான பயன்பாட்டைப் பற்றி - கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்கான ஒரு பெயர் பற்றி - சிந்தித்துப் பார்த்தால், "நான் சபைக்குச் செல்லுகின்றேன்" என்று கூறுவது சரியற்றதாக இருக்கும். நாம் சபைக்குச் செல்ல முடியாது, ஏனென்றால் நாமே சபையாக இருக்கின்றோம்! சபையார் அல்லது கிறிஸ்தவர்கள் ஆராதனை மற்றும் வேதபாடம் ஆகியவற்றிற்காக ஒரு இடத்தில் ஒன்றுகூட முடியும், ஆனால் கிறிஸ்தவர் ஒருவர் ஆராதிப்பதற்காக சபைக்குச் சென்று அதன் ஒரு பாகமாக முடியாது, பின்பு ஒருவர் ஒரு வீட்டை விட்டு வெளிச் செல்வது போல கிறிஸ்துவின் சரீரத்தை விட்டு வெளியேற முடியாது.

சபையானது பொருட்களால் ஆன ஒரு கட்டிடமாய் இருப்பதில்லை என்பதால் நாம் மகிழ்வடைவதில்லையா? அது அவ்விதமானதாய் இருந்திருந்தால், அது ஒரு இடத்திற்குரியதாகி, வரையறைப்படுத்தப்பட்டு, ஜீவனற்றதாகி, மற்றும் அன்பில்லாததாகி விடும். பேராலயத்தில் மட்டுமே ஆராதனை நடத்தப் பெற முடியும் என்றால், ஆராதனையானது ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே நடத்தப்படுவதாய் இருந்து விடும்.

இதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்கள் என்ற வகையில் சபையானது உலகத்தின் அனைத்து மக்களிடத்திலும் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் செல்வாக்கைப் பரவச் செய்கின்றதாக உள்ளது. இது பரலோகத்தில் இருக்கின்ற தங்கள் பிதாவை கிறிஸ்தவர்கள் தாங்கள் முடிவு செய்யும் எந்த இடத்திலும், எந்த வேளையிலும் ஆராதிக்கக் கூடியவர்களாக்குகின்றது. சபை என்பது கிறிஸ்தவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் செல்லுகின்றது, ஏனெனில் அது கிறிஸ்தவர்களாகவே இருக்கின்றது.

நாம் கூறுபவற்றிலும் செய்பவற்றிலும் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் கிறிஸ்துவின் சபையார் என்ற வகையிலேயே நாம் பேசி, செயல்படுகின்றோம். நாம் ஆராதனைக்குக் கூடிவரும் போது மாத்திரம் அவருடைய சபையாராய் இருக்கிறோம் என்று ஆகாது; நாம் எங்கிருப்பினும் அவருடைய சபையாராகவே இருக்கின்றோம். அவர் தம்முடைய இரத்தத்தினால் நம்மை “அவருக்குச் சொந்தமான மக்களாய்” இருக்கும்படியாக அழைத்து, பிரித்தெடுத்து, பரிசுத்தப்படுத்தியுள்ளார். தேவன், ஒரு இறந்து போன சரீரத்தை, துடிப்பற்ற பொருளைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவர் மன்னிக்கப்பட்டு, தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களால் ஆன ஜீவனுள்ள ஒரு குடும்பத்தைப் பெற்றுள்ளார். அவருடைய சபையானது ஆவிக்குரிய நாடாக, பரிசுத்த ஆசாரியத்துவமாக, அவருடைய ஐக்கியத்திற்கான ஒரு சமூகமாக உள்ளது (1 பேது. 2:9).

ஒரு நட்புறவுச் சமூகமல்ல

இரண்டாவதாக, சபை என்பது ஒரு சமூகக் கழகம் அல்ல. இது மற்றவர்களுடன் நட்புறவையும் மகிழ்வான தொடர்புகளையும் தூண்டி விடுவதைக் காட்டிலும் மேலானதாக உள்ளது.

ஐக்கியம் என்பது சபையின் உடனடியான பலனாக உள்ளது, ஆனால் சபையானது ஐக்கியத்தைக் காட்டிலும் அதிகம் மேலானதாக உள்ளது. மனமாற்றத்தில் ஒருவர் ஆவிக்குரிய மரணத்தினின்று தூக்கி விடப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களுடன் வைக்கப்படுவதின் மூலம் உயிரூட்டப்படுகின்றார். பவுல் பின்வருமாறு எழுதினார்:

> தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களா யிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபை யினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் ... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார் (எபே. 2:4-7).

நம்மில், தேவன் தம்முடைய குமாரனின் பலியினால் மீட்கப்பட்டவர்கள் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டுள்ளோம், மற்றும் அவர், “அப்பா! பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாக ... தமது குமாரனுடைய

ஆவியை (நமது) இருதயங்களில்" (கலா. 4:6) அன்புடன் அனுப்பினார். தேவனுடைய குடும்பம் என்ற வகையில் சபையானது, ஆழமான தனிப்பட்ட உள் உறவுகளினால் பண்பு படுத்தப்படுகின்றது, ஆனால் தேவனுடனான நமது குடும்பப் பிணைப்புகளினால் இந்த ஐக்கியமானது வளர்ந்தேறுகின்றது. அப்போஸ்தலரான யோவான், "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்" (1 யோவா. 5:1) என்று எழுதினார்.

தேவன், ஒரு இறந்து போன சரீரத்தை, துடிப்பற்ற பொருளைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவர் மன்னிக்கப்பட்டு, தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களால் ஆன ஜீவனுள்ள ஒரு குடும்பத்தைப் பெற்றுள்ளார்.

ஒருவேளை, நீங்கள் ஒரு குழந்தையாய் இருந்த பொழுது உங்கள் பெற்றோர் இறந்து போனதால், அவசியத்தின் காரணமாக நீங்கள் ஒரு அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் "இல்லமற்றவர்" என்ற வார்த்தையினால் விவரிக்கப்படுகின்ற இக்கட்டு நிறைந்த தனிமையையும், வெறுமையையும் மற்றும் பிரிவுத் துயரத்தையும் அனுபவித்தீர்கள். ஆண்டுகள் கடந்தன, உங்கள் சொந்தக் குடும்பத்தைக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்பது உங்களால் நினைவுகூர முடியாததாகி விட்டது. ஒருநாள், நீங்கள் ஒரு அற்புதமான குடும்பத்தினால் தத்து எடுத்துக் கொள்ளப்படுகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அன்பும் அடையாளப்படுத்துதலும் கொண்ட ஒரு உலகத்தினுள் கடந்து செல்லுகின்றீர்கள். உடனடியாக உங்களில் அன்பு காட்டவும், உங்களைக் கவனித்துக் கொள்ளவும் பூமிக்குரிய ஒரு தகப்பனை நீங்கள் பெற்றீர்கள், ஒரு தாயன்பின் மென்மையான பராமரிப்பை நீங்கள் பெற்றீர்கள், ஆதரவிலும் குடும்பப் பாசத்திலும் உங்களுடன் இணைக்கப் பட்ட சகோதர சகோதரிகளை நீங்கள் பெற்றீர்கள். குடும்பம் ஒன்று கூடியிருக்கும் அழகு நிறைந்த நாட்கள் உங்களுடையவைகளாய் இருந்தன, மற்றும் நீங்கள் அந்தக் குடும்பத்தால் உருவாக்கப்பட்டு ஏவுதல் பெற்ற ஒரு எதிர்காலத்தைப் பெற்றிருந்தீர்கள். காலங்கள் செல்லச் செல்ல நீங்கள் ஆழமான குடும்ப அன்பை அறிய வந்தீர்கள். இவை எல்லாவற்றையும் கொண்டு வந்தது எது? ஒரு சமூகக் கழகத்தில் இருந்த நட்புறவு மற்றும் தொடர்பு ஆகியவற்றினால் மட்டும் நீங்கள் (அக்குடும்பத்துடன்) ஒன்றாகும்படி கவரப்பட்டீர்களா? இல்லை. நீங்கள் இந்தக் குடும்பத்திற்குள் சுவிகரிக்கப்பட்டீர்கள். நீங்கள் இந்தக் குடும்பத்தின் உள்ளார்ந்த ஒரு அங்கமானீர்கள், மற்றும் நீங்கள் இந்தக் குடும்பத்துடன் ஒன்றானதைத் தொடர்ந்து, ஐக்கியமும் ஆசீர்வாதங்களும் உண்டாயின.

இப்பொழுது, புதிய கிறிஸ்தவருக்கு இதே வகையான ஒரு மாற்றம்

நடைபெறுகின்றது. அவர் ஒரு புதிய குடும்பத்தில், தேவனுடைய குடும்பத்தில் இடம் பெறுகின்றார். இந்தச் செயல்முறையை விவரிப்பதற்கு “சுவிகாரம்” என்ற வார்த்தையையும்கூடப் பவுல் பயன்படுத்துகின்றார் (எபே. 1:6).

ஒரு நபர் ஒருபொழுதும் தனது வாழ்வு முறைகளை மாற்றிக் கொள்ளாமலேயே ஒரு சமூகக் கழகத்தில் சேர முடியும். ஒரு சமூகக் கழகம் என்பது வாழ்வின் பணிகளில் “கூடுதலாக” இணைப்பு பெற்றதாக மட்டும் உள்ளது. அது நமக்குப் பயன்படாவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் அதை நாம் நீக்கிப் போட்டு விடலாம். அது நமது பொழுது போக்கிற்காகவும் சந்தோஷத்திற்காகவும் இருக்கின்றது. குடும்பம் ஒன்றில் பிரவேசித்தல் என்பது முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. நீங்கள் குடும்பத்தினுள் பிரவேசிக்கின்றீர்கள், மற்றும் குடும்பம் உங்களுக்குள் பிரவேசிக்கின்றது. இது உங்கள் வாழ்வுக்கு ஒரு “கூடுதலான ஆசீர்வாதமாக” மட்டும் இருப்பதில்லை; நீங்கள் அந்தக் குடும்பமாக ஆகி விடுகின்றீர்கள். நீங்கள் அதன் பெயரை எடுத்துக் கொள்கின்றீர்கள்; அதன் உறுப்பினர்கள் யாவரும் உங்களுடையவர்களாகின்றனர், நீங்கள் அவர்களுடையவர்களாகின்றீர்கள். வாழ்வின் வேறு எந்த உறவைக் காட்டிலும் அதிகம் முழுமையாக நீங்கள் ஒன்றாகப் பிணைக்கப்படுகின்றீர்கள்.

தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிக்கும் யாவரும் அச்செயலைப் புதிய பிறப்பொன்றினால் செய்கின்றனர் (யோவா. 3:5). நீங்கள் அதில் “சேர” முடியாது; நீங்கள் அதற்குள் பிறந்தவராக இருக்கின்றீர்கள், அல்லது அதற்குள் தத்து எடுக்கப்படுகின்றீர்கள். எவரொருவரும் மாற்றம் இல்லாமல் அவருடைய குடும்பத்திற்குள் பிரவேசிக்க முடியாது. நாம் கிறிஸ்துவினுடையவர்களாகும் பொழுது, நாம் கிறிஸ்துவின் பெயரை எடுத்துக் கொள்ளுகின்றோம், மற்றும் ‘‘கிறிஸ்த-வர்கள்’’ என்று அழைக்கப் படுகின்றோம். நாம் நமது உறவுமுறைமைகளில், நமது நடக்கையில், மற்றும் நமது ஆழ்ந்த விருப்பங்களில் மாறுபட்டவர்களாகின்றோம். நாம் தேவனால் வழிநடத்தி போஷிக்கப்பட்டு, வளப்படுத்தி நலப்படுத்தப்பட்டு, அளித்துப் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரே குடும்பத்தார் ஆகின்றோம். நாம் இயேசுவின் இரத்தத்தினால் ஒன்றுகூட்டிக் கட்டப்பட்டுள்ள பிள்ளைகள் என்ற வகையில் வாழ்ந்து, ஆராதித்து, ஊழியம் செய்து தொடர்ந்து நிலைத்துள்ள ஐக்கியத்தைப் பெறுகின்றோம்.

ஒரு மனித ஆலோசனையல்ல

மூன்றாவதாக, சபை என்பது வெறுமனே ஒரு மனித ஆலோசனையாக இருப்பதில்லை. இது மனிதரால் சிந்திக்கப்படவுமில்லை அல்லது மனிதரால் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. இது மனிதரால் கட்டுப்படுத்தப் படுவதுமில்லை அல்லது மனிதரால் நிலைநிறுத்தப்படுவதும் இல்லை.

சபையானது, தேவனுடைய கருத்தாகவும் தேவனுடைய படைப்பாகவும் உள்ளது. அவர் உலகத்தை இருக்கச் செய்யும்படி உரைப்பதற்கு முன்பே, மனிதரின் இரட்சிப்புக்காக அவர் சிலுவையையும் சபையையும் திட்டமிட்டிருந்தார். முதல் பாவத்திற்கு முன்பாகவே அவர் மன்னிப்பைப்

பற்றி எண்ணியிருந்தார். நித்தியத்தின் கடந்த காலத்தில் தேவன் முதல் விண்மீன் அல்லது புல்லின் இதழைப் படைக்கும் முன்பாகவே, முதல் பட்டாம் பூச்சி அல்லது மனிதப் பிறவியைப் படைக்கும் முன்பாகவே, தேவன், கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கப் போகின்றவர்களை இரட்சிக்க வேண்டும் என்பதைத் தேர்ந்து கொண்டார். ஆகையால், கிறிஸ்தவர்கள், ''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே'' கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தேர்ந்து கொள்ளப் பட்டவர்களாய் இருக்கின்றோம் (1 பேது. 1:2). ஆட்டுக்குட்டியான வருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களான தேவனுடைய பரிசுத்தவான்கள் உலகத்தோற்ற முதல் ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்பட்டவர்களென்று வெளி. 13:8ல் விவரிக்கப்படுகின்றனர். சிலுவையின் மூலம் மீட்கப்படுவதைத் தேர்ந்து கொள்பவர்களைத் தேவன் - தனித்தனியாக அல்ல, ஆனால் ஒரு குழுவாக - இரட்சிக்கத் தேர்ந்து கொண்டார். சபை என்பது கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் விளைவாக இருந்தது மற்றும் இருக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் ஒரு இராஜ்யமாக்கப்பட்டார்கள் என்பதாக யோவான் கூறினார் (வெளி. 1:5, 6).

இந்தச் சிந்தனை வரிசையானது நமது சிந்தைகளில் மிகவும் இன்றியமையாத ஒரு சத்தியத்தைப் பற்றியெரியச் செய்கின்றது: கிறிஸ்துவின் பலியானது உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவனுடைய சித்தத்தில் இருந்தது என்றால், சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாக்கப்பட்டது என்றால், சபையானது தேவனுடைய அநாதி தீர்மானமாகும் என்ற கருத்து தொடருகின்றது. ஆகையால் இந்த சத்தியத்தைப் பவுல் எபேசியர் 3:9, 10ல் குறிப்பிடுவதை நாம் காணும் பொழுது வியப்படையக் கூடாது:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக.

கலாத்தியாவில் ஒரு சிறுபான்மையினர் கிறிஸ்துவின் அப்போஸ்தலர் என்ற வகையில் பவுலின் அதிகாரத்தை புறக்கணித்திருந்தனர், மற்றும் இதன் காரணமாக அவரின் செய்தியை அவர்கள், தேவனால் ஏவப்பட்டதென்று ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள். அவர் தமது அப்போஸ்தலத்துவத்திற் கெதிரான அவர்களது குற்றச்சாட்டிற்குத் தாம் அவர்களுக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்தில் பதில் அளித்தார்: "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்," (கலா. 1:1). சுருக்கமாய்ச் சொல்வதென்றால், பவுலின் அப்போஸ்தலத்துவமானது மனிதரால் தொடக்கி வைக்கப்படவில்லை, அது

மனிதரால் செயல்படுத்தப்படவும் இல்லை என்பதே அவரது கருத்தாக இருந்தது, ‘‘எனது அப்போஸ்தலத்துவமானது இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பரலோகத்திலிருந்து நேரடியாக வந்தது’’ என்று அவர் கூறினார்.

பவுல் தமது அப்போஸ்தலத்துவத்தைப் பற்றிக் கூறிய விஷயம் எதுவோ, அது சபையைப் பற்றியும் கூட கூறப்பட முடியும்: சபையானது மனிதர்களிடத்திலிருந்து வரவில்லை. இது தெய்வீகமானதாக உள்ளது. இது பரலோகத்தில் திட்டமிடப்பட்டு, பரலோகத்தினால் அறிவிக்கப்பட்டு, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக உள்ளது. இதன் கருத்துப் பொருளானது தேவனுடைய சிந்தையில் தோன்றப் பெற்றது. இதற்கான திட்டமானது சிலுவையில் இயேசு அடைந்த மரணத்தினாலும், பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்டதினாலும் செயல்படுத்தப்பட்டது. கர்த்தருடைய வசனத்தினாலும், உள்ளாக வாசம் பண்ணும் ஆவியானவராலும் மக்கள் சபைக்குள் பிரவேசித்து அதற்குள் நிலைநிறுத்தப்படுகின்றனர். இது கிறிஸ்துவினுடையதாக உள்ளது; எனவே இதன் மாபெரும் தன்மையானது மனித அறிவினாலோ அல்லது செயல்களினாலோ மேம்படுத்தப்பட முடியாது மற்றும் இதன் மகிமையுடன் மனித சிந்தை அல்லது பலத்தினால் வேறு மகிமை எதையும் கூட்ட முடியாது.

ஒருவர் சபைக்குள் பிரவேசிக்கின்ற பொழுது, அவர் மனித நிறுவனம் ஒன்றிலோ அல்லது பெயர்க்குழு ஒன்றிலோ பிரவேசிப்பதில்லை. உலக ஞானம், சக்தி, யுக்திகள் அல்லது பலம் ஆகியவற்றின் மீது நாம் நமது நித்திய நம்பிக்கையை வைக்கும்படி தேவன் நம்மைக் கேட்டிருக்கவில்லை. தேவ ஞானத்தைத் தனக்கு முன்னும் தனக்குள்ளும் கொண்டுள்ளதான, தெய்வீகத்துவமாக உருவாக்கப்பட்டதான கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசிக்கும்படி அவர் நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார், இது அவருடைய வல்லமையினால் கட்டுவிக்கப்பட்டு அவருடைய கிருபை மற்றும் வழி நடத்துதலால் நித்தியத்திற்கும் பாதுகாக்கப்படுகின்ற ஆவிக்குரிய ஒரு சரீரமாக உள்ளது.

வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏவுதல் பெற்ற சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது ஒன்றுதான் இந்த சபைக்குள் பிரவேசிக்கக் கூடிய ஒரே வழியாக உள்ளது (2 தெச. 1:7-9). வேத வசனத்தில் கிறிஸ்தவ வாழ்வுக்கென்று காணப்படும் முன்மாதிரியைத் தினந்தோறும் பின்பற்றுதல் என்பதே ஒருவர் தொடர்ந்து கிறிஸ்துவின் சபையாராக இருப்பதற்கான ஒரே வழியாகும் (1 யோவா. 5:2, 3). இந்த சபைக்கு வேத வசனங்களைத் தவிர சட்ட நூல் வேறெதுவும் இல்லை, கிறிஸ்துவைத்தவிர வேறு தலைவரும் இல்லை.

ஒரு தெய்வீகப் பதிலீடு அல்ல

நான்காவதாக, சபை என்பது தோல்வியுற்ற ஒரு திட்டத்திற்கான பதிலீடு அல்ல. இது கர்த்தர் தம்முடைய சிந்தையில் கொண்டிருந்தும், உலகத்தின் பாவம் நிறைந்த தன்மையினால் ஏற்படுத்த முடியாது போய் விட்ட மிக

உயர்ந்த அமைப்புக்குப் பதிலாக வைக்கப்பட்ட ஒரு பதிலீடு அல்ல.

சபை யுகம் என்பது காலத்தின் தொடக்கம் முதலாகவே அதை (சபை யுகத்தை) நோக்கியே தேவன் பணி செய்ததாகவும் அதை நோக்கியே அவர் கடந்து சென்றதாகவும் உள்ளது. முறைப்படி இராஜ்யம் வரப் போவதைத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர். “காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்” (மாற். 1:15) என்று அறிவித்ததின் மூலமாகவே இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தைத் தொடங்கினார். சிலுவை நெருங்கி வருகையில், இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குப் பின்வருமாறு கூறினார்:

> மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத். 16:18, 19).

இயேசுவின் இராஜ்யமானது நிலைநாட்டப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாக அவர், “நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்” (அப். 1:4) என்று அவர்களிடம் கூறினார். பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார், மற்றும் அவர்கள் ஆவியானவரின் வல்லமை யினாலும் செல்வாக்கினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப். 2:11-15ல் பேதுரு, இந்த அற்புத நிகழ்ச்சியை யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக (யோவேல் 2:28-31) அடையாளப்படுத்தினார், அது தேவனுடைய இராஜ்யத்தின் யுகமான சபை யுகத்தின் தொடக்கமானது “கடைசி நாட்களில்” இருக்கும் என்று முன்னுரைத்திருந்தது. இவ்விதமாக, தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய வடிவமான சபையானது தேவனு டைய கால அட்டவணையின்படி தேவனுடைய வழிமுறையில் நிலைநாட்டப்பட்டது.

ஆயிரமாண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கை என்பது பெரும் பாலானவர்களால் இல்லாவிட்டாலும் பல பெயர்க் குழுக்களால் ஆதரிக்கப்படும் புகழ் பெற்ற ஒரு மார்க்கரீதியான தவறாக உள்ளது. வெளி. 20:1-4ன் உருவக மொழியின் அடிப்படையை முற்றிலும் சார்ந்த வகையில், “முன்” என்பது “முன்னதாக” என்றும் “ஆயிரமாண்டு” என்பது “ஒரு ஆயிரம் ஆண்டுகள்” என்றும் அர்த்தப்படுகின்றது. வேத வசனங்களின்படியல்லாத இந்த போதனையானது காலங்களின் முடிவில் கிறிஸ்து தம்முடைய இராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக வருவார் என்று உறுதிப்படுத்துகின்றது. இது இந்தப் பூமியில் இயேசு ஒரு ஆயிரம் ஆண்டுகள் காலத்திற்கு எருசலேமில் தாவீதின் அரியணையில் இருந்து ஒரு அரசராக ஆளுகை செய்வார் என்று போதிப்பதில் மனநிறைவடைகின்றது. இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டுள்ளவர்கள், இஸ்ரவேல் இனமானது

இந்தக் காலத்தின் போது பலஸ்தீன் நாட்டின் மீளக்கட்டப்பட்டு பூமியின் இனங்கள் மீது ஆளுகை செய்யும் என்று எதிர்பார்க்கின்றனர். இவர்கள், கி.பி. 70ல் தீத்து ராயனால் அழிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் தேவாலயமானது மீண்டும் கட்டப்படும் என்றும், பழங்கால லேவி கோத்திரத்தின் பலி முறைமைகள் மீண்டும் ஒருமுறை செயல்படுத்தப்படும் என்றும் நம்புகின்றனர். இயேசு தம்முடைய இராஜ்யத்தை நிலை நாட்டுவதற்காக முதல்முறை வந்தார், ஆனால் அவரது முயற்சியானது புறக்கணிக்கப்பட்டதால் அவர் தம்முடைய இராஜ்யத்திற்குப் பதில் சபையை நிலைநாட்டினார் என்று ஆயிரமாண்டு முன் அராட்சிக் கொள்கையானது முடிவு செய்கின்றது. ஆகையால் ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் சபையை உண்மையாகக் கொண்டு வந்திருக்கப்படவேண்டிய இராஜ்யத்திற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட தென்று காண்கின்றனர்.

சபை மற்றும் இராஜ்யத்தைப் பற்றிய சிந்தனையின் விவேகமற்ற இந்த வலைப்பின்னல் வேலையில் ஒரு விஷயம் மட்டும் தவறாக உள்ளது: இது உண்மையல்ல. இது தேவனுடைய வசனத்தின்படியல்ல ஆனால் மனிதருடைய கவர்ச்சிகரமான கோட்பாடுகளினால் வளர்ந்தேறியுள்ளது. ஒவ்வொரு விஷயமாக மறுப்பதற்குப் பதிலாக நாம், எபேசியர் 3:11ல் சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியானது என்ற பவுலின் அறிவிப்பின் பக்கம் நம் கவனத்தைத் திருப்ப வேண்டியது மட்டுமே அவசியமானதாக உள்ளது. இந்தத் தவறான போதனையை ஒரே வாக்கியத்தைக் கொண்டு அவர் முறியடிக்கின்றார். இந்த விஷயத்தில் ஒரு நூறு கிராம் சத்தியமானது டன் கணக்கான தவறை அழிக்கின்றது. பரிசுத்த ஆவியானவருடைய கூற்றின்படி, சபையானது தேவனுடைய திட்டத்திற்கு இணைப்பாக, “கூட்டப்பட்டதாக” இல்லாமல் சபையே தேவனுடைய திட்டமாக உள்ளது.

பதிலீடு என்பது எப்பொழுதுமே இரண்டாந்தரமான, மிகச் சிறந்த ஒன்றிற்குப் பதிலாக இருப்பதாகும். ராகேலின் மீது கொண்ட அன்பினால் யாக்கோபு அவளைத் தனக்கு மணம் முடித்து வைக்கும்படிக் கேட்ட பொழுது அவருக்கு லேயாளை வஞ்சனையாய் மணம் முடித்து வைத்ததைக் கேட்கின்ற பொழுது உங்கள் இருதயம் இற்றுப் போவது இல்லையா (ஆதி. 29:16-25)? உங்கள் திருமண நாளில் நீங்கள் மிகவும் நேசித்த உங்கள் மணப் பெண்ணுக்குப் பதில் இன்னொரு பெண் கொடுக்கப்பட்டால் எப்படி யிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

எவரொருவரும் ஒரு போலியில், ஒரு பதிலீட்டில் உண்மையாக நிறைவடைவதில்லை என்று நாம் அறிந்துள்ளதால், யாக்கோபைக் குறித்து நாம் பரிதாபப்படுகின்றோம். உண்மையான பொருளானது அதன் பதிலீட்டைக் காட்டிலும் எப்பொழுதுமே அதிகமாய் விரும்பப்படக் கூடியதாக உள்ளது. சபையானது ஒரு பதிலீடு அல்ல ஆனால் அது அதிகாரப் பூர்வமானதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் உள்ள சபையானது இராஜ்யம் பற்றிய தீர்க்க தரிசனங்களின் மகிமை பொருந்திய நிறைவேற்றமாக உள்ளது என்று

கூறுவதன் மூலம் தேவன் சபையின் அழகையும் தனிச்சிறப்பையும் நமக்குக் காண்பிக்கின்றார். இயேசு சபையை, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலான வைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:26, 27) என்று பவுல் கூறினார்.

சபை என்பது மிகச் சிறந்த ஒன்றிற்கான பின்பலமாய் இராமல், அதுவே தேவனுடைய முதல் தெரிவாக உள்ளது என்பதில் நீங்கள் என்னுடன் சேர்ந்து அகம் மகிழ மாட்டீர்களா? நாம் சபையின் பாகமாக ஆவதில், பாவம் நிறைந்த மனிதருக்கான தேவனுடைய ஞானமான திட்டம் மற்றும் இரக்கம் நிறைந்த செயல்பாடு ஆகியவற்றின் கனிகளில் பாகம் ஆகின்றோம். சபை என்பது வெறுமனே ஒரு நிரப்பியாக இராமல் நமது மீட்புக்கான தேவனு டைய நித்திய தீர்மானமாக உள்ளது என்பதை இந்த கணத்திலேயே நீங்கள் ஆழ்ந்து சிந்தித்து நன்றி செலுத்தும் ஜெபத்தில் தேவனைத் துதியுங்கள்.

முடிவுரை

புதிய ஏற்பாட்டு சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதை நாம் கவனிப்பதன் மூலம் அதை (சபையை) நாம் காண்கின்றதில்லையா? சபை என்பது பொருட்களால் ஆன ஒரு கட்டிட அமைப்பல்ல; அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் உள்ளது. அது ஒரு சமூகக் கழகம் அல்ல; அது தேவனு டைய ஆவிக்குரிய குடும்பமாக உள்ளது, புதிய பிறப்பினால் அதில் பிரவேசிக்கக் கூடியதாக உள்ளது. அது ஒரு மனிதரின் ஆலோசனையாக இருப்பதில்லை; அது சிலுவையின் மூலமாகத் தேவனுடைய வடிவமைப் பாகவும் விருப்பமாகவும் உள்ளது. அது தேவனுடைய உண்மையான நோக்கத்திற்கு ஒரு பதிலீடாக இருப்பதில்லை; அது இராஜ்யத்தின் தீர்க்க தரிசனங்கள் மற்றும் தேவனுடைய அநாதி தீர்மானம் ஆகியவற்றின் நிறைவேற்றமாக உள்ளது. ஒருவர் சபையில் பிரவேசிக்கும் பொழுது, நித்திய காலமாக தேவனுடைய மிக மேன்மையான திட்டமாய் இருந்த ஒன்றில் பிரவேசிக்கின்றார்.

ஒரு சிறு பையன் அவனது வீட்டிற்கு வந்த விருந்தினர்களால் தனது பெயர் என்ன என்று கேட்கப்பட்டான். அவன் "வெளியே போ என்பது எனது பெயராகும்" என்று பதில் அளித்தான். சந்தேகமடைந்த விருந்தினர் கள், "உன் பெயர் வெளியே போ என்பதை எப்படி நீ அறிந்துள்ளாய்?" என்று கேட்டனர். அவர்களை நோக்கிக் கூடப் பார்க்காமல் அச்சிறுவன், "மக்கள் என்னைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவர்கள் 'வெளியே போ' என்றே கூறுகின்றனர்!" என்றான். அந்தச் சிறு பையனின் மனதில் அந்த அளவுக்கு எதிர்மறைக் குணம் இருந்தது அல்லது குறைந்தபட்சம் அவன் எதிர்மறையாளனாக இருந்தான். அவனது பெயர் வெளியே போ என்பதாக ஆயிற்று.

சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதை நாம் படிக்கையில் இதே போன்ற ஒரு அபாயமானது நம் அருகில் அசைவாடலாம். இப்படிப்பட்ட

தொரு படிப்பானது சபை என்பது “இல்லைகளின்” ஒரு கட்டு மட்டுமே என்று நாம் காணும்படி வழிநடத்த நாம் அனுமதிக்கக் கூடாது. கிறிஸ்தவர் என்பவர் இரு கால்களாலும் “எதிர்ப்பாக” மட்டுமே நடக்கின்றவரல்ல, அவர் எதிர்ப்பாக உள்ளார் என்று மட்டும் அறியப்படுவதில்லை. எதிர் மறைகள் என்பவை நேர்மறைகளைப் புலப்படச் செய்வதற்காகவே உள்ளன. சபை என்பது எதுவாய் இருப்பதில்லை என்று காண்பதானது சபை எதுவாக உள்ளது என்பதை நாம் முடிவு செய்யவும் நாம் சபையாராக ஆவதற்கும் உதவும் வகையில் பணி செய்கிறது.

சபை என்ற வகையில், நாம் சீஷர்களாக, ஊழியர்களாக மற்றும் பின்பற்றாளர்களாகக் கிறிஸ்துவுக்கு உரியவர்களாகின்றோம். அவருடைய சித்தத்திற்கு நம்மை நாம் உண்மையாக ஒப்புக் கொடுத்தலின் மூலம் அவருடைய கர்த்தத்துவத்தின் கீழ் நாம் வாழ்கின்றோம். நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருக்கு நமது அன்றாட பதில்செயலாக்குகின்றோம். நாம் சபையை தேவனுடைய ராஜ்யம், கிறிஸ்துவின் சரீரம் அல்லது தேவனு டைய குடும்பம் என்ற எந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினாலும் கிறிஸ்தவர்களின் பதில்செயலானது எப்பொழுதுமே கீழ்ப்படிகின்ற விசவாசமாகவே உள்ளது. ஒவ்வொரு பாவியும் தைரியமான நம்பிக்கை யுடன் சபையில் பிரவேசித்து கிறிஸ்து நம்மை இல்லத்திற்கு அழைக்கும் வரையிலும் அல்லது நம்மை அழைத்துச் செல்ல அவர் வரும் வரையிலும் அவருக்கு முன்பாக விசுவாசத்தில் நடந்து கொள்ளுதல் என்பது மாபெரும் தேவையாக உள்ளது என்பதை அவரது வசனத்தின் சாட்சியம் மூலமாகவும் வாழ்வின் சாட்சியம் மூலமாகவும் நாம் காண்கின்றோம்.

ராகேலை நீங்கள் மணம் செய்து கொள்ள முடிவதாய் இருக்கும் பொழுது, லேயாளுடன் குடியமர்ந்து விட வேண்டாம்! நீங்கள் இயேசு ஸ்தாபித்த உண்மையான சபையாராய் இருக்க முடியும்!

குறிப்பு

[1]“சபை” என்கிற தொடர்பாடத்தில் இது மூன்றாவது நூலாகும். “சபை” என்றால் என்ன? மற்றும் “சபைக்கு” தேவனுடைய வடிவமைப்பு என்பவை மற்ற இரு நூல்களாகும். இவை ஆசிரியரால் ஸர்ஸி அர்க்கன்ஸாஸில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய அதிகமான விளக்கங்களுக்கு இவை உதவும்.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்று காண்பது உதவி நிறைந்ததாக உள்ளது ஏன்?
2. வேத வசனங்களில் முன் வைக்கப்பட்டபடி சபையின் சுருக்கமான விவரிப்பைத் தரவும்.
3. சபையானது ஆராதிக்கக் கூடும் இடத்துடன் கொண்டுள்ள/ நிலைநிறுத்துகின்ற உறவு என்ன?
4. சபையானது கூடிவரும் கட்டிடம் அல்ல என்பதில் நீங்கள் காண்கின்ற அனுகூலங்கள் யாவை?
5. சபையானது மற்றவர்களுடனான ஐக்கியத்தைக் காட்டிலும் மேலானதாக உள்ளது எவ்விதம்?
6. ஆவிக்குரிய குடும்பத்தின் பாகமாய் இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன?
7. தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிப்பது எவ்விதம்?
8. சபை என்பது மனிதருடையதல்ல ஆனால் தேவனுடைய கருத்தேயாகும் என்பதை வேத வசனங்களின் துணை கொண்டு நிரூபிக்கவும்.
9. சபை என்பது பதிலீடு அல்ல ஆனால் தொடக்கத்திலிருந்தே தேவனுடைய திட்டமாகும் என்பதை வேத வசனங்களில் இருந்து நிரூபிக்கவும்.
10. சபை என்பது தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகும் என்று சுட்டிக்காட்டுகின்ற வேத வசனப் பகுதிகளை குறிப்பிடவும்.
11. கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் என்றால் என்ன?
12. சுவிசேஷத்திற்கான நமது அன்றாட கீழ்ப்படிதல் எப்படி இருக்க வேண்டும்?

3

இராஜ்யங்களின் இராஜ்யம்

"அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ... அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் " (தானி. 2:44).

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" (கொலோ. 1:13).

நாளை நடக்கப் போவது என்ன என்பது பற்றிய அறிய நீங்கள் உண்மையாகவே விரும்புவீர்களா? அநேகமாய் விரும்ப மாட்டீர்கள். இன்றைய நாளின் கடமைகளையும் எதிர்காலத்தின் ஏக்கங்களையும் ஒரே வேளையில் சுமக்க நமது தோள்கள் போதிய அளவுக்கு அகலமாய் இருப்பதில்லை! கிறிஸ்துவும் பொது அறிவும் நமக்கு "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34) என்று போதிக்கின்றன(ர்). ஒருவேளை இதனால்தான் தேவன் ஒரு சில மக்களுக்கு மட்டும் காலத்தின் திரையைப் பின்னிழுத்துவிட்டு வரப்போகிற நிகழ்ச்சிகளின் குறிப்புகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். தேவன் அவ்விதம் செய்த பொழுது, அதை அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் செய்தார், மற்றும் அவர் அதை மனிதருடைய வேலையற்ற ஆர்வத்திற்காகவோ, தனிப்பட்ட ஆதாயத்திற்காகவோ அல்லது வீணான புலன் உணர்வுகளுக்காகவோ அல்ல, மாறாக தம்முடைய தெய்வீக நோக்கங்களுக்காகவே செய்தார்.

தேவன் தம்முடைய ஊழியர்களில் ஒருவருக்கு எதிர்காலத்தைத் திரைவிலக்கிக் காட்டும் வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றுதான் தானியேல் 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகாரமானது "வரப் போகிறதாயிருந்த நித்திய இராஜ்யத்தின் முன்னுரைத்தல்" என்று தலைப்பிடப்பட முடியும்.

பாபிலோனின் மாபெரும் அரசரான நேபுகாத்நேச்சார் கண்டிருந்த கனவொன்று அவரை மிகவும் கலக்கம் கொள்ளச் செய்திருந்தது. இந்தக் கனவானது அசாதாரணமான தனிச் சிறப்பு வாய்ந்தது என்பதை உணர்ந்து அறிந்திருந்த அந்த அரசர் தமது அரசவையில் இருந்த ஞானமுள்ள

மனிதர்களை அழைத்து அதன் (கனவின்) விளக்கத்தைத் தரும்படி அவர்களிடத்தில் கேட்டார். அவர்களின் விளக்கத்தினுடைய மிகச் சரியான தன்மையைச் சோதிக்கும் ஒரு வழிமுறையாக, அந்த அரசர் தாம் கண்ட கனவை அவர்கள் முதலில் கூறும்படியும் அதன் பிறகு அக்கனவின் விளக்கத்தைக் கூறும்படியும் அவர்களை வற்புறுத்தினார். அவர்கள், "ஓ அரசரே, உங்கள் கனவிற்கு விளக்கம் தர நாங்கள் ஆவலும் மகிழ்வும் உள்ளவர்களாய் இருக்கின்றோம், ஆனால் நீர் முதலில் அந்தக் கனவை எங்களுக்குக் கூறவேண்டும்" என்றனர். அந்த அரசரோ, "இல்லை, நீங்கள் அந்தக் கனவைக் கூறி அதன் விளக்கத்தையும் தர வேண்டும். நீங்கள் எனக்கு அந்தக் கனவையும் அதன் விளக்கத்தையும் கூற முடியாவிட்டால், நீங்கள் மரணத்திற்குள்ளாவீர்கள், ஆனால் உங்களால் அந்தக் கனவையும் அதன் அர்த்தத்தையும் கூற முடிந்தால் நீங்கள் பரிசுகளையும், வெகுமதிகளையும் மற்றும் மாபெரும் கனத்தையும் பெறுவீர்கள்" என்று பிடிவாதமாகக் கூறினார். அரசருடைய அதிகார வேண்டுகோளானது அவரிடத்தில் இருந்த ஞானமுள்ள மனிதர்களை அவதிக்குள்ளாக்கிற்று. அவர்கள் அந்தக் கனவை வெளிப்படுத்தி அதை விளக்கப்படுத்தியாக வேண்டும் அல்லது அதைச் செய்யத் தங்களுடைய இயலாமையை ஒப்புக் கொண்டாக வேண்டும். அவர்களுடைய புறதெய்வ மந்திரவாதம் மற்றும் பில்லி சூனியம் போன்றவைகளின் முக்கியமான தேவை ஏற்பட்ட அச்சமயத்தில் அவை தவறி விட்டன. ஞானமுள்ள மனிதர்கள் தங்கள் வார்த்தைகள் திணற, சங்கடப்பட்டு, தாழ்மைப்பட்டு, அரசரிடத்தில் "நாங்கள் அதைச் செய்ய முடியாது. முடியாத ஒரு விஷயத்தை நீர் எங்களிடம் கேட்டுள்ளீர்" என்று அறிக்கையிட்டார்கள். அவர்களுடைய பதிலினால் கோபமூட்டப்பட்ட நேபுகாத்நேச்சார், பாபிலோனில் இருந்த ஞானமுள்ள மனிதர்கள் யாவரும் கொலை செய்யப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்.

ஆரியோகு என்பவரால் வழி நடத்தப்பட்ட (அரசரின்) மெய்க் காப்பாளர்கள் இம்மரணக் கட்டளையை நிறைவேற்றும்படிக்குப் பாபிலோன் நாடு முழுவதும் சென்றார்கள். அவர்கள் தானியேல் என்ற ஒரு எபிரெயரிடத்திலும் வந்தார்கள், இவர் கி.மு. 606ல் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு வந்திருந்தவரும் மிக உன்னதமான தேவனை ஆராதித்து அவருக்குப் பயபக்தி செலுத்தும் மனிதரும் மற்றும் நேபுகாத்நேச்சாரின் மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான ஞானமுள்ள மனிதர்களில் ஒருவராக எண்ணப்பட்டு அரசருக்கு ஆலோசனையாளராகவும் இருந்தார். கொலைத் தண்டனைக்கான காரணத்தை தானியேல் அறிந்த பொழுது, அவர் உண்மையான தேவனான யெகோவாவின் வல்லமையின்மூலம் தான் அக்கனவையும் அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்தும்படியாக அரசரிடத்தில் தன்னை அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். அந்தக் கனவையும் அதன் அர்த்தத்தை உறுதிப்படுத்தும் ஞானத்தையும் தனக்களிக்கும்படி தேவனிடம் ஜெபிப்பதற்குத் தானியேலுக்கு ஒரு சுருக்கமான கால அளவு அனுமதிக்கப்பட்டது. அவர், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று நமக்கு நன்கு அறியப்பட்டவர்களான தமது தேவ

பக்தியுள்ள நண்பர்களான அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோரிடத்தில் விரைவாய்ச் சென்று, கனவையும் அதன் தனிச் சிறப்பையும் தமக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று தாம் தேவனிடத்தில் ஜெபிக்கும் ஜெபத்தில் தம்முடன் அவர்கள் இணைந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். தேவன் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் அளித்தார்; இரவு வேளையின் போது, புதிரான அந்தக் கனவிற்கான விளக்கமானது தானியேலுக்குத் தரப்பட்டது. தேவனுக்கு நன்றியும் துதிகளும் செலுத்தப் பட்டன, மற்றும் அவரை (தானியேலை) நேபுகாத்நேச்சார் முன்னிலையில் அழைத்துச் செல்லும்படி ஆரியோகு கேட்டுக் கொள்ளப்பட்டார். புதிரைப் பின்னால் அவிழ்ப்பதற்கு முன்னதாக, தானியேல் அந்தக் கனவை எடுத்துரைக்கவும் அதன் அர்த்தத்தைக் கொடுக்கவும் தனக்குப் பரலோகத்தின் தேவனிடத்திலிருந்தே வல்லமை வந்ததாக உறுதிப்படுத்தினார்.

அரசரை இடறலடையச் செய்து கலக்கப்படுத்திய அந்தக் கனவு என்ன? அரசருடைய கனவானது “கடைசி நாட்களுடன்” தொடர்புடையது என்று தானியேல் கூறினார் (தானி. 2:28). அது எதிர்காலத்தை முன்னுரைத்த ஒரு கனவாக இருந்தது. நேபுகாத்நேச்சார் தம் கனவில் ஒரு பெரிய சிலையைக் கண்டார், அது உயர்வில் வியக்கத்தக்கதாகவும், தோற்றத்தில் பயங்கரமாகவும் இருந்தது. அந்தச் சிலையின் தலை பசும் பொன்னாலும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியினாலும், அதன் வயிறும் தொடையும் வெண்கலத்தினாலும், அதின் கால்கள் இரும்பினாலும் அதின் பாதங்கள் பாதி இரும்பினாலும் பாதி களிமண்ணினாலும் ஆகியிருந்தது என்று தானியேல் நேபுகாத்நேச்சாரிடத்தில் கூறினார். மேலும் மனிதருடைய கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்லைப் பற்றியும் அரசர் கனவில் கண்டதாகத் தானியேல் கூறினார். அந்தக் கல்லானது அந்தச் சிலையின் இரும்பும் களிமண்ணுமான பாதங்களில் உருண்டு வந்து மோதி, அந்தச் சிலையின் பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் களிமண் ஆகியவற்றைக் கோடைக் காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாகும்படி முற்றிலுமாக நொறுக்கியது. அந்தச் சிலையின் அடையாளம் தெரியாதபடிக்கு அதன் எச்சங்கள் காற்றினாலும் அடித்துச் செல்லப்பட்டன. இருப்பினும் அந்தக் கல்லானது வளர்ந்து ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று (தானி. 2:31-35).

இந்தக் கனவின் அர்த்தம் என்னவாயிருந்தது? அந்தச் சிலையின் பொன்னால் ஆன தலை நேபுகாத்நேச்சார் அரசரே என்று தானியேல் கூறினார் (தானி. 2:38). மற்றும் அவர், பாபிலோனுக்குப் பிறகு வல்லமையான மற்ற மூன்று அரசுகள் எழும்பும் என்றும் கூறினார்: அவற்றில் ஒன்று வெள்ளியினாலும், ஒன்று வெண்கலத்தினாலும், மற்றும் ஒன்று களிமண்ணுடன் கலந்த இரும்பினாலும் குறிக்கப்பட்டது.

அம்மாபெரும் சிலையினால் குறிக்கப்பட்ட அரசர்களின் நாட்களில் பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை அமைப்பார் என்று தானியேல் விளக்கப்படுத்தினார். அது எல்லா இராஜ்யங்களுக்கும் மேலாக உயர்ந்து, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் (தானி. 2:44). நேபுகாத்நேச்சாருடைய கனவானது தானியேலின்

காலத்திலிருந்து முடிவுக் காலம் வரைக்குமான வரலாற்றின் புறக்குறிப்பு ஒன்றைத் தருவதில்லை; இருப்பினும் அது தானியேலின் நாட்களில் இருந்து, உலகின் இராஜ்யங்கள் எல்லாவற்றிற்கும் மேலானதாக உள்ள நித்திய ராஜ்யமாகிய தேவனுடைய இராஜ்யத்தை அவர் (தேவன்) நிலை நாட்டவிருந்த காலம் வரைக்குமான வரலாற்றின் புறக்குறிப்பொன்றைத் தருகின்றது.

நேபுகாத்நேச்சார் கண்டிருந்ததும் தானியேல் விளக்கம் தந்ததுமான இந்தக் கனவானது வரவிருந்த தேவனுடைய நித்திய இராஜ்யத்தைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் தீர்க்கதரிசனங்களில் ஒன்றாக உள்ளது. பரலோக இராஜ்யத்தைப் பற்றிய குறிப்பிடத் தக்க உண்மைகள் இதில் காணப்படுகின்றன. சபையைப் பற்றிய எந்த ஒரு பாடத்திலும் இந்தக் கனவைப் பற்றிய மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட ஒரு படிப்பானது உள்ளடங்க வேண்டும். இது தேவனுடைய இராஜ்யத்தின் இயல்பினுடைய அம்சங்களை வெளிப்படுத்துவதோடு மட்டும் இன்றி, அவருடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படும் காலத்தைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கின்றது.

இதன் தொடக்கத்தில் உள்ள தெய்வீகம்

தேவனுடைய இராஜ்யத்தின் தெய்வீகத்தொடக்கம் பற்றி தீர்க்க தரிசனம் அறிவிக்கின்றது. ''அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்'' என்று தானியேல் கூறினார் (தானி. 2:44). இராஜ்யமானது பரலோகத்திலிருந்து வரவேண்டியதாகவும் தேவனாலேயே ஸ்தாபிக்கப்படுவதாகவும் இருந்தது.

"கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு" வந்த கல் (தானி. 2:34) என்பது, அந்த இராஜ்யமானது மனிதக் கரங்களால் அல்ல, மாறாக தெய்வீகத்துவத்தினால் நிலைநாட்டப்படும் என்பதைக் குறிப்பிட்டது. அது பூமிக்குரியதல்ல, ஆனால் பரலோகத்திற்குரிய இராஜ்யமாய் இருக்கும். அது மனிதரின் பிரசங்கித்தல், திட்டங்கள் அல்லது உணர்வுகள் ஆகியவற்றினால் உண்டாக்கப்படாது; ஆனால் அது எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வேளையில் ஒரு அற்புத நிகழ்ச்சியின் மூலமாக நிலைநாட்டப்படுவதாக இருந்தது.

வரவிருந்த இராஜ்யத்தைப் பற்றிய இந்த சத்தியமானது இயல்பான வல்லமையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. தேவனுடைய வல்லமை யானது அதனைப் பண்பு படுத்தும்.

இதனுடைய பரிசுத்தமான தொடக்கமானது நம்பக்கூடிய அமைப்பைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கின்றது. உலகின் மாபெரும் இராஜ்யங்கள் தவறக் கூடிய மேதைத்தனம் மற்றும் புத்திக் கூர்மையினால் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன; ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யமானது இயற்கைக்கு மேலான தேவனுடைய செயல்பாட்டினால் உருவாக்கப் பட்டு, அழிவற்ற பண்புகளை உடையதாக இருக்கும்.

அது போலவே, இராஜ்யத்தின் தெய்வீக இயல்பானது அதன் *நிரந்தரமான வெற்றியை* உத்தரவாதப் படுத்துகின்றது. தேவன் தமது முதல் முயற்சி தோற்று விட்டதால் தம்முடைய படைப்புகளை மீண்டும் செய்ய அல்லது மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை அவருக்கு ஒருநாளும் ஏற்பட்டதில்லை.

அவர் கிரியை செய்யும் (அவரது) கரங்கள்
ஒருக்காலும் தவறுவதில்லை;
அவர் பேசும் (அவரது) நாவானது
ஒருக்காலும் பிறழுவதில்லை;
அவர் எழுதும் (அவரது) எழுதுகோலானது
ஒருக்காலும் கறைப்படுத்துவதில்லை.
அவர் கூறுவது எதுவாயிருப்பினும்,
இன்னும் சிறப்பாய் அதை (மீண்டும்) கூற முடியாது;
அவர் செய்வது எதுவாயிருப்பினும்,
இன்னும் சிறப்பாய் அதை (மீண்டும்) செய்ய முடியாது.

தானியேல் முன்னுரைத்த ராஜ்யமானது மேலிருந்து அனுப்பப் படுவதாயிருந்தது. அது தேவனுடைய ஆணையொன்றினால் இயக்கம் பெறச் செய்யப்பட்டு, தனது சிருஷ்டிகரின் ஞானம் மற்றும் நித்தியத்துவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

இதன் ஸ்தாபிதம் தீர்க்கதரிசனத்தின்படியாயிருந்தது

இராஜ்யத்தின் நிலைநாட்டத்தினுடைய காலத்தின் தெய்வீகத் தேர்ந்தெடுப்பு பற்றியும் இந்தத் தீர்க்கதரிசனமானது குறிப்பிடுகின்றது. தானியேல், *"அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்"* (தானி. 2:44) என்று கூறினார். தேவனுடைய இராஜ்யத்தை அந்தச் சிலையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இராஜாக்களின் நாட்களில் தேவன் நிலைநாட்டுவார் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டது, மற்றும் அந்த நான்காவது இராஜ்யத்தின் நாட்களில்தான் அதை நிலை நாட்டுவார் என்பது மறைமுகமாக ஆனால் இன்னும் அதிக திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டது.

நேபுகாத்நேச்சாரின் கனவில் உலகத்திற்குரிய நான்கு அரசுகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. முதலாவது நேபுகாத்நேச்சாரின் அரசாக இருந்தது (தானி. 2:37), அவருக்குப் பிறகு ஒன்று வர வேண்டியதாயிருந்தது (தானி. 2:39), மூன்றாவதானது இரண்டாவதைத் தொடர்ந்து வர வேண்டிய தாயிருந்தது (தானி. 2:39), மற்றும் அதன் பிறகு நான்காவது அரசு வரவேண்டியதாயிருந்தது (தானி. 2:40-43).

பாபிலோன் பேரரசைத் தொடர்ந்து மூன்று உலக அரசுகள் ஏற்பட்டிருந்ததை உலகப் பிரகாரமான வரலாறு உறுதிப்படுத்துகின்றது. அவைகள் மேதிய - பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோமப் பேரரசுகள் ஆகும்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் அரசுகளான மேதிய - பெர்சியாவும், கிரேக்கமும் தானியேல் 8:20, 21ல் பதிவு செய்யப்பட்டுள்ள தானியேலின் தரிசனத்தில் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

தானியேல் நான்காவது இராஜ்யத்தைப் பெயரிட்டு அழைக்கவில்லை, ஆனால் அது இரும்பும் களிமண்ணும் கலந்ததாக, அதாவது பலமும் பலவீனமும் கலந்ததாக இருக்கும் என்று கூறியதன் மூலம் அதன் பண்பை அவர் விளக்கப்படுத்தினார். பாதங்களும் விரல்களும் இரும்பு மற்றும் களிமண் ஆகியவற்றால் ஆனதாக இருந்தது, ஆனாலும் இரும்பும் களிமண்ணும் வேறுபட்ட அரசுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை; மாறாக, அந்தக் கலவையானது பேரரசில் இருந்த பிரிவினையையும் ஒருமைப்பாட்டுக் குறைபாட்டினையும் அடையாளப்படுத்திற்று. அந்த இராஜ்யமானது உள்ளான ஒருமைத்தன்மையோ அல்லது ஒட்டியிருக்கும் தன்மையோ பெற்றதாயிருக்காது. அது ரோம அரசுதான் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருந்தது, ஏனெனில், அது கிரேக்க அரசைத் தொடர்ந்து வந்த உலகின் அடுத்த பேரரசாகவும் கலவையால் ஆன அரசு போலவும் இருந்தது. முதலில் அது இரும்பைப் போன்று பலமாக இருந்து மற்ற நாடுகளை இரக்கமின்றி நொறுக்கிப்போடும், ஆனால் அது கடைசியில் உள்ளான பிளவுத் தன்மையுடையதாகி, வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் கலகக்காரர்களும் கிளர்ச்சிகளும் எழும்பியுள்ளதாகும்.

கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்த கல் அந்தச் சிலைக்கு எதிராக அதன் பாதத்தில் வந்து மோதிற்று. சிலையின் பாதங்கள் என்பது நான்காவது இராஜ்யத்தின் பாகமாய் இருந்தபடியால், நித்திய இராஜ்யமானது நான்காவது இராஜ்யத்தின் காலத்தில் வந்தது என்ற கருத்துத் தொடருகின்றது. ரோமப் பேரரசு உலகை ஆண்ட காலத்தின் பொழுதுதான் கிறிஸ்துவின் ஊழியமும் சபை நிலைநாட்டப்படுதலும் நடந்தேறின. ரோமப் பேரரசு கி.பி. 476ல் அழிக்கப்பட்டது - இது கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் சபை நிலைநாட்டுதல் ஆகியவற்றிற்குப் பின்புதான் நடைபெற்றது, இவைகளுக்கு முன்பு அது நடைபெறவில்லை. ஆகையால் தேவன் தம்முடைய அரசை எப்பொழுது நிலைநாட்டுவார் என்ற காலத்தைப் பற்றித் தானியேலின் தீர்க்கதரிசன மானது திட்டவட்டமாகக் குறிப்பிட்டது: அதை அவர் ரோமப் பேரரசின் நாட்களில் நிலைநாட்டுவார்; ரோமப் பேரரசும் வீழ்ந்து, கடந்து சென்றாலும் தேவனுடைய இராஜ்யமானது என்றென்றைக்கும் தொடர்ந்து இருக்கும்.

நான் அர்க்கன்சாஸில் உள்ள ஸர்ஸியில் வாழ்கின்றேன். இதன் அளவுள்ள (மக்கள் தொகை: 18,000) பெரும்பாலான சிறு நகரங்களைப் போலவே இதுவும் துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாரிடமாவது நான் ஸர்ஸியின் குளோவர்டேல் துணைப் பிரிவில் நாங்கள் வசிக்கின்றோம் என்று கூறும் பொழுது, நான் எங்கு வாழ்கின்றேன் என்பதை குறைந்த பட்சம் அவர் தம் சிந்தையில் குறிப்பாக உணர முடியும். அவர், எனது வீடு அமைந்துள்ள ஸர்ஸி நகரின் குறிப்பிட்ட பகுதியை அறிகின்றார்.

தேவனுடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படும் நாளை தானியேல்

கொடுக்கவில்லை, ஆனால் - "அந்த இராஜாக்களின் நாட்களிலே" என்று - காலத்தின் வேளையை அவர் கொடுத்தார். அக்குறிப்பு இதை குறுகலாக்குகின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் நிலைநாட்டப்படுதலினுடைய காலத்தின் அடைப்புக் குறியை நாம் இதில் கண்ணோக்குகின்றோம்.

இதன் வளர்ச்சியில் உள்ள உலகளாவிய தன்மை

தேவனுடைய இராஜ்யத்தின் வியக்கத்தக்க வளர்ச்சி பற்றி சில விஷயங்களைத் தானியேலின் தீர்க்கதரிசனமானது சுட்டிக்காட்டுகின்றது. தானியேல், "சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று" (தானி. 2:35) என்று கூறினார்.

இராஜ்யமானது சிறிய தொடக்கத்தைப் பெற்றிருக்க வேண்டியதாயிருந்தது, ஆனால் அது விரைவிலேயே உலகளாவிய இராஜ்யமாக வளர்ந்தேறுவதாயிருக்கும். மனித உதவியெதுவுமின்றி மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்த கல்லானது உலகம் முழுவதிலும் விளைவுண்டாக்கும் வகையில் ஒரு மாபெரும் மலையாகப் பெருக்கமடையும்.

இயேசு தம்முடைய உவமைகள் ஒன்றில், பரலோக இராஜ்யத்தின் வளர்ச்சியைக் கடுகு விதையொன்றின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டார். அவர், "அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும் வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத் தக்க மரமாகும் என்றார்" (மத். 13:32).

தேவனுடைய இராஜ்யமானது உலகக் காட்சியில் திடீரென்று உடனடியாக மாபெரும், உலக முழுவதும் பரந்துபட்ட நிலையில் வெடிக்கும் என்று தானியேலால் தீர்க்கதரிசனம் கூறப்படவுமில்லை, அவ்வாறு இயேசுவால் பிரசங்கிக்கப்படவுமில்லை. இருப்பினும் காலம் செல்லச் செல்ல இந்த இராஜ்யமானது நம்ப முடியாத அளவுக்குச் செல்வாக்குள்ளதாக வளரும் என்று தானியேலும் இயேசுவும் முன்னுரைத்தனர். அது சிறியதாகத் தொடங்கி தான் உலகளாவிய அளவீடுகளைப் பெறுமளவும் பெரிதாக வளரும். தேவனுடைய இராஜ்யமானது பெரிதாக மற்றும் மென்னொலியுடன் தொடங்குவதாக இருக்காது, ஆனால் அது சிறியதாக உதித்து, பூமியெங்கும் மேலாகவும் வெளியாகவும் விரிவடையும்.

சாம் வால்ட்டன் என்பவர் தனது பல கோடி ரூபாய் மதிப்புள்ள விற்பனை நிலையங்களை அர்க்கன்ஸாஸில் உள்ள பென்ட்டன்வில் என்ற இடத்தில் ஒரு சிறிய ஐந்து மற்றும் பத்துப் பைசாக் கடையுடன் தான் தொடங்கினார். அவர் தம் முதல் கடையைத் தொடங்குவதற்குக் கடனாகப் பணம் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. அது ஒரு சிறு தொடக்கமாகவே இருந்தது, ஆனால் அவருடைய வியாபாரமானது சிறியதாக இருந்து விடவில்லை. இப்பொழுது இந்த நிறுவனமானது நான்கு மற்றும் ஐந்து இலட்சங்களுக்கிடையிலான எண்ணிக்கையில் வேலையாட்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளது. சாம் வால்ட்டன் தாம் இறப்பதற்கு முன்பு உலகின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவராக ஆகியிருந்தார். இருப்பினும் அவருடைய விற்பனைப் பேரரசின் குறிப்பிடத்தக்க

வளர்ச்சியானது தேவனுடைய இராஜ்யத்தின் வளர்ச்சி விரிவாக்கத்தின் ஒரு சத விகிதத்தினுடைய மிகச் சிறிய துணுக்களவு கூட இருக்காது (வெளி. 7ஐக் காணவும்). தானியேலின் கூற்றுப்படி, தேவனுடைய இராஜ்யமானது ஒரு சிறு கல் என்ற அளவிலிருந்து ஒரு மலையளவுக்கு, ஒரு (சிறு) நிகழ்விலிருந்து மாபெரும் இயக்கம் அளவிற்கு வளரும்.

இதன் இயல்பில் உள்ள நித்திய தன்மை

வரவிருந்த இராஜ்யத்தின் தெய்வீக பலம் மற்றும் நித்தியமான இயல்பு ஆகியவை பற்றி தானியேல் தீர்க்கதரிசனம் வலியுறுத்துகின்றது. அவர், “அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ... அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்” (தானி. 2:44) என்று கூறினார். அந்த இராஜ்யமானது மற்ற எல்லா இராஜ்யங்களையும் விடப் பலம் பொருந்தியதாக, நிலைத்து நிற்பதாக இருக்கும்.

ஆவிக்குரிய கரத்தினால் மலையிலிருந்து பெயர்க்கப்பட்டு உருண்டு வந்த அந்தக் கல்லானது சிலையின் பாதத்தில் மோதியதாகத் தானியேல் கூறினார். அந்தச் சிலையானது இடித்து அழிக்கப்பட்டது; அதன் பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இரும்பும் மற்றும் களிமண்ணும் கோதுமைப் பதரைப் போல் ஆகி, காற்றினால் பறக்கப்பட்டன.

இக்காட்சியானது பழங்கால அன்மைக் கிழக்கு நாடுகளில் தானியங்களைப் போரடிக்கும் காட்சிக்கு ஒத்ததாக உள்ளது. அடிக்கப்பட்ட தானியங்கள், அவற்றில் உள்ள மதிப்பற்ற பதரானது மாலைக் காற்றில் அடித்துச் செல்லப்படும்படியாக காற்றில் தூற்றப்படுவதுண்டு. தேவனுடைய இராஜ்யத்துடன் ஒப்பிடப்படும் பொழுது கனவில் கண்ட அந்த நான்கு இராஜ்யங்களும் தானியத்தின் வெளிப்புறத்திலுள்ள உமியைப் போலவே மதிப்பற்றவைகளாய் இருக்கும்.

தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாயிருத்தல் என்பது, வெற்றி கொள்ளப்பட முடியாத ஒரு படையில் இருப்பதைப் போன்றதாக உள்ளது

கடந்த கால, நிகழ் கால, மற்றும் எதிர்காலங்களின் மனிதர்களுடைய இராஜ்யங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் தேவனுடைய இராஜ்யமானது அதிக வல்லமை நிறைந்ததாக உள்ளது. அது ஒருபொழுதும் மனித இராஜ்யம் ஒன்றினாலோ அல்லது உலகத்தில் இணைவுபட்ட இராஜ்யங்களினாலோ வெற்றி கொள்ளப்படாது; தானியேல் 2:44ன்படி அது ஒரு பொழுதும் “வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை.”

தானியேல், “பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு

விடப்படுவதில்லை; ... அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44) என்று கூறினார். தானியேல் பயன்படுத்திய மூன்று விளக்கங்கள் ஒரு நித்தியமான இயல்பை மறைமுகமாய் உணர்த்துகின்றன: "என்றென்றைக்கும் அழியாத," "வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை" மற்றும் "தானோ என்றென்றைக் கும் நிற்கும்." ஒருமுறை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இந்த இராஜ்யமானது என்றென்றைக்கும் வாழ வேண்டியதாயிருந்தது.

நாம் யாவரும் நமக்குள் ஆழத்தில், "நாளைய தினம் எதைக் கொண்டு வரும்?"; "நமது எதிர்கால உலகம் எப்படிப்பட்டதாக இருக்கும்?"; "இன்றிலிருந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நான் எங்கிருப்பேன்?" என்று கேட்கின்றவர்களாகவே இருக்கின்றோம். தானியேலின் புத்தகமானது, நாம் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தின் அங்கமாக முடியும் என்ற பிடிப்பான செய்தியை நமக்குக் கொண்டு வருகின்றது.

தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாயிருத்தல் என்பது எதிர் கொள்ளப்பட வேண்டிய எதிரியின் அளவு அல்லது பலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாத, வெற்றி கொள்ளப்பட முடியாத ஒரு படையில் இருப்பதைப் போன்றதாக உள்ளது. தேவனுடைய இராஜ்யத்தில் உள்ள குடிமக்களின் சிந்தைகளில் தோல்வியைப் பற்றிய எந்தச் சிந்தனையும் ஒருபோதும் உட்புகக் கூடாது. காணப்படாத நாளைய தினமோ அல்லது அறியப்படாத விரோதியோ ஒருக்காலும் நம்மைப் பயப்படுத்தக் கூடாது.

புகழ் பெற்ற விலங்குகளை வேட்டையாடுபவர் ஒருவர் தனது வெற்றிச் சின்னங்களின் அறையைத் தன் நண்பருக்குக் காண்பித்ததைப் பற்றிய கதையொன்று கூறப்படுவதுண்டு. உலகம் முழுவதிலும் அவர் சென்ற வேட்டைப் பயணங்களில் கொல்லப்பட்ட காட்டு விலங்குகளின் தலைகள் அந்த அறையின் சுவர்களில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. பிறகு அந்த நண்பர், சுவரின் மத்திய பகுதியில் கவனத்தைக் கவரும் இடத்தில் சிங்கத்திடமிருந்து வெட்டப்பட்ட வால் ஒன்று தொங்கவிடப்பட்டிருந் ததைக் கண்டார். அந்த நண்பர், "நீங்கள் ஏன் சிங்கத்தின் வாலைத் துண்டித்துக் கொண்டு வந்தீர்கள்? சிங்கத்தின் தலையானது மிகச் சிறந்த காட்சிப் பொருளாயிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். அதற்கு அந்த மாபெரும் விலங்கு வேட்டைக்காரர், "நான் அந்த சிங்கத்தைப் பார்த்த பொழுது, எவரோ ஒருவர் ஏற்கனவே அதன் தலையைத் துண்டித்துக் கொண்டு போய் விட்டிருந்தார்" என்று அமைதியாகப் பதில் அளித்தார். ஏற்கனவே ஒருவர் சிங்கத்தின் தலையைத் துண்டித்திருந்தா ரென்றால், அதன் வாலைத் துண்டிப்பதென்பது சுலபமாக உள்ளது!

அது போலவே, வெற்றியானது ஏற்கனவே பெறப்பட்டாயிற்று என்பதை நாம் அறிந்தால், வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. பரலோகத்தின் இராஜ்யமானது ஒரு போதும் தோல்வியை அநுபவிப்பதில்லை. இராஜ்யம் நிலைநாட்டப் படுவதற்கு முன்பு கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் உலகின் மீது அதனுடைய வீரத்தையும் முழுமையான வெற்றியையும் முன்னுரைத்தன. ஆகையால்,

கிறிஸ்தவர் வெற்றியை நோக்கி ஊழியம் செய்யாமல், வெற்றியிலிருந்து ஊழியம் செய்கின்றார். அவர் உறுதிப்பாட்டுடன் வாழ்கின்றார், ஏனென்றால் தோல்வி என்ற சிங்கத்தினுடைய தலையானது ஏற்கனவே வெட்டப்பட்டு விட்டது என்பதை அவர் அறிகின்றார். நாம் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் படித்துள்ளோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு, மனித வரலாற்றின் கதையானது மீட்பின் நித்திய கொண்டாட்டத்தில் தேவனுடைய அரியணைச் சுற்றிலும் முடிவடையும்.

முடிவுரை

புதிய ஏற்பாட்டில் தானியேலின் தீர்க்கதரிசனத்தினுடைய நிறைவேற்றத்தை நாம் காண்கின்றோமா? இதற்குப் பதில் பெற நாம் அப். 2ஐ நோக்குவோம்.

வரவிருந்த இராஜ்யமானது கர்த்தரால் நிலைநாட்டப்படும், மற்றும் இவ்விதமாக அது தெய்வீகத் தொடக்கம் கொண்டிருக்கும் என்று தானியேல் கூறினார். அப். 2ல் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மேல் அற்புத விதமாக ஊற்றப்பட்டார், மற்றும் சுவிசேஷ யுகமானது சபையின் தொடக்கத்துடன் இயற்கைக்கு மேலான வகையில் நடத்தி வைக்கப்பட்டது. அப்போஸ்தலர்களின் மீது பரிசுத்த ஆவியானவரின் அற்புதப் பொழிதலின் வல்லமையுடன் இராஜ்யம் வரும் என்று இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சுட்டிக்காட்டியிருந்தார் (மாற். 9:1; லூக். 24:46-49).

வருவதாயிருந்த இராஜ்யமானது ரோமப் பேரரசின் நாட்களின் போது அமைக்கப்படும் என்று இந்தத் தீர்க்கதரிசனம் மறைமுகமாய் உணர்த்திற்று. இந்தக் கால வேளைக்கு அப். 2ன் நிகழ்ச்சியானது மிகத் தெளிவாகப் பொருந்துகின்றது, ஏனெனில் அப். 2ன் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் ரோமப் பேரரசு உலகை ஆண்டது.

தானியேலின் கூற்றுப்படி, வருவதாயிருந்த இராஜ்யமானது சிறியதாகத் தொடங்கி ஒரு உலக(ளாவிய) வல்லமையாக இருக்கும்படி வளரும். சபையானது அப். 2ல் மனமாற்றமடைந்த மூவாயிரம் பேருடன் தொடங்கியது, மற்றும் அது விரைவிலேயே உலகத்தை (நன்முறையில்) பாதிக்கத் தக்க வகையில் வளரத் தொடங்கிற்று.

வருவதாயிருந்த இராஜ்யமானது உலகின் இராஜ்யங்களை விடப் பலமுள்ளதாக இருக்கும் என்று தானியேல் கூறினார். இயேசு தம்முடைய சபை நிலைநாட்டப்படுதலைப் பற்றி, "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18) என்று கூறினார்.

வருவதாயிருந்த இராஜ்யமானது என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று கர்த்தர் தானியேலுக்கு வெளிப்படுத்தினார். அப். 2ல் சபை நிலைநாட்டப்பட்ட பிறகு, புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள பகுதிகள் அதன் வளர்ச்சியையும் நீடித்த ஆயுளையும் பற்றிக் கூறுகின்றன.

தானியேலின் தீர்க்கதரிசனமானது அப். 2ல் சபை நிலைநாட்டப் படுதலில் நிறைவேற்றப்பட்டது என்பதில் சந்தேகம் ஏதாவது இருக்க முடியுமா?

சபையே தேவன் அமைத்து வைத்துள்ள நித்திய இராஜ்யமாக உள்ளது.

நித்திய இராஜ்யமான கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராயிருத்தலின் அனுகூலங்கள் மிகத் தெளிவாகக் காணப்பட்டுள்ளன. தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்கள் தேவன் உலகத்தில் செய்யும் செயலின் பாகமாய் உள்ளனர். இந்தக் குடிமக்கள் வெற்றியில் வாழ்கின்றனர், ஏனென்றால் மனிதர்களின் இராஜ்யங்களைக் காட்டிலும் தேவனுடைய இராஜ்யம் அதிக பலமுள்ளதாக இருக்கின்றது, அது மரணத்தைக் காட்டிலும் கூட அதிக பலமுள்ளதாக இருக்கின்றது. தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட இந்த இராஜ்யத்தின் குடிமக்கள் தேவனுடனான ஒரு நித்தியமான எதிர் காலத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் வாழ்கையில், அவர்கள் தைரியமாக வும், நிச்சயத் தன்மையோடும் உள்ளனர் மற்றும் காலம் கடந்து செல்லும் போது மங்கிப் போகாத அல்லது தேய்ந்து போகாத ஒரு ஜீவனுள்ள ஊழியத்தில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

சரிக்குச் சரியாகப் பொருந்தி வரும் குழுக்கள் இரண்டின் விளையாட்டுப் போட்டியைக் கவனித்தலில் இருந்து நாம் நித்திய இராஜ்யத்தில் இருப்பதின் மதிப்பைக் கற்றுக் கொள்ள முடியும். விளையாட்டு நடக்கையில், நாம் உற்சாகப்படுத்துகின்ற குழுவானது வெற்றி பெறும் என்று நாம் கூற முடியாத நிலையில் இருப்பதால் நாம் பதட்டமாய் இருக்கின்றோம். அந்த விளையாட்டு முழுவதையும் நாம் நமது இருக்கையின் முனையில் அமர்ந்து கொண்டு உன்னிப்பாகக் கவனிக் கின்றோம், ஏனென்றால் அந்த விளையாட்டு எவ்விதமாய் முடியும் என்பதை நாம் அறியாதிருக்கின்றோம். “அதுதான் விளையாட்டை எழுச்சிக்குரியதாக்குகின்றது. அது எவ்விதமாய் மாற்றம் அடையும் என்று நீங்கள் அறிவதில்லை” என்று நீங்கள் கூறலாம். ஒரு விளையாட்டைப் பொறுத்தமட்டில் அது உண்மையாக உள்ளது, ஆனால் வாழ்வைப் பொறுத்தமட்டில் அது உண்மையாக இருப்பதில்லை. வாழ்க்கை எவ்விதமாய் மாற்றம் அடையும் என்று அறியாத நபர் பரிதாபத்திற்கு உரியவராவார். வாழ்வில் தாம் வெற்றியடையும் குழுவில் இருக்கின்றோமா அல்லவா என்பதை அறியாத நிலையில் அவர் வாழ்க்கையினூடாகச் செல்ல வேண்டுமென்றால், சுவிசேஷத்தைத் தவிர வேறு எதனாலும் நீக்கப்பட முடியாத ஆழ்ந்தமர்ந்த ஒரு கடுந்துன்பத்தை அவர் கொண்டிருப்பார். தமது வாழ்வு எவ்விதமாய் முடியும் என்பதை கிறிஸ்தவர் அறிகின்றார்: நித்திய இராஜ்யத்தின் அங்கம் என்ற வகையில் அவர் பரலோகத்தில் தேவனுடன் என்றென்றைக்கும் வாழ்வார்.

இந்த வெளிச்சத்தில், நாம் தேவனுடைய நித்திய இராஜ்யத்தின் அங்கமாய் இருந்தால் நாம் எதை இழக்கின்றோம் என்பது எந்த வித்தியா சத்தையும் ஏற்படுத்துவதில்லை; மற்றும் நாம் தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாய் இராதிருந்தால் நாம் எதை ஆதாயப் படுத்திக் கொள்ளுகிறோம் என்பதும் எந்த ஒரு வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. அழியக் கூடியது நித்தியமானதாகின்றது, மற்றும் அழிகின்றவர்கள் தேவனுடைய என்றென்றைக்கும் உள்ள இராஜ்யத்தில் பிரவேசிக்கும் பொழுது அழியாமையைத் தரித்துக் கொள்கின்றனர். இயேசு, “நானே உயிர்த்

தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்று கூறினார் (யோவா. 11:25). தேவனுடைய இராஜ்யத்தில், உடல்ரீதியான மரணமும் கூட நம்மை புண்படுத்துவதில்லை. பவுல், “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்” (பிலி. 1:21) என்று கூறினார். கிறிஸ்தவருக்கு மரணம் என்பது கிரயம் தரும் முன்மொழிதலாக உள்ளது. பரிசுத்தவானுக்கு மரணம் என்பது வேதனையல்ல ஆனால் அது ஆதாயமாக உள்ளது - அது அழிவாக இன்றி, ஆசீர்வாதமாக உள்ளது.

நீங்கள் இந்த உலகிற்காக மட்டும் வாழ்ந்தால், நீங்கள் இந்த உலகத்தையும், இனி வரப் போகும் உலகத்தையும் தவற விட்டவர்களாவீர்கள் - நீங்கள் அவையிரண்டையுமே இழந்து போவீர்கள். நீங்கள் இனி வரப்போகும் உலகிற்காக மட்டும் வாழ்ந்தால், நீங்கள் இந்த உலகத்தையும் இனி வரப் போகும் உலகத்தையும் பெற்றுக் கொள்வீர்கள் - நீங்கள் இவையிரண்டையுமே ஆதாயப்படுத்திக் கொள்வீர்கள்.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. நேபுகாத்நேச்சாரிடத்தில் இருந்த ஞானமுள்ள மனிதர்கள் அரசனின் கனவுக்கு விளக்கம் கூற முடியாமற் போனது ஏன்?
2. தேவன் கனவின் விளக்கத்தைத் தானியேலுக்குக் கொடுத்த பொழுது, தானியேல் என்ன செய்து கொண்டிருந்தார்?
3. நேபுகாத்நேச்சார் தனது கனவில் கண்ட சிலையைப் பற்றி விவரிக்கவும்.
4. சிலையின் ஒவ்வொரு பாகத்திற்கும் தானியேல் கொடுத்த விளக்கம் என்ன?
5. இந்தக் கனவு கூறும் வரலாற்றுப் பகுதி எது?
6. இந்த நித்திய இராஜ்யத்தை ஸ்தாபிக்கயிருந்தது யார்? கனவில் இந்த ஸ்தாபிக்கப்படுதலானது எவ்விதம் உருவக நடையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது?
7. நித்திய இராஜ்யமானது எப்பொழுது ஸ்தாபிக்கப் படுவதாயிருந்தது?
8. ரோமப் பேரரசானது எவ்வகைப்பட்ட அரசாய் இருந்தது? கனவில் அது எவ்விதத்தில் சித்தரிக்கப்பட்டது?
9. தேவனுடைய இராஜ்யத்தின் விரிவடைதலை பின்வரும் கூற்றுக்களில் எது மிகச் சிறந்த வகையில் விவரிக்கின்றதாய் இருக்கும்?
   (அ) சிறியதில் இருந்து உலகளாவிய நிலைக்கு
   (ஆ) உலகளாவிய நிலையில் இருந்து சிறியதற்கு
   (இ) உலகளாவிய நிலையில் இருந்து உலகளாவிய நிலைக்கு.

10. தேவனுடைய இராஜ்யத்தின் பலமானது கனவில் எவ்விதம் சுட்டிக்காட்டப்பட்டது?
11. தேவனுடைய இராஜ்யத்தின் நித்திய தன்மையைத் தெரிவிக்க தானியேல் 2ல் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்விளக்கங்கள் யாவை?
12. தானியேல் முன்னுரைத்த இராஜ்யமும் மற்றும் சபையும் ஒன்றே என்பதைக் காரண அறிவிலிருந்தும் மற்றும் வேத வசனங்களில் இருந்தும் நிரூபிக்கவும்.
13. நித்திய இராஜ்யத்தின் குடிமகனாய் இருப்பதின் அனுகூலங்களை அட்டவணைப்படுத்தவும்.

4

உலகளாவிய சகோதரத்துவம்

“அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு ... இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத் தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது” (அப். 15:15-18).

எட்டு வயதான பையன்கள் இருவர் பொது இடத்தில் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளத் தொடங்கினர். அதனால் சிறுமைப்பட்ட அவர்களின் தாய்மார்கள் அவர்கள் இருவரையும் பிரித்து விட்டு, “சரி சரி! சண்டையைத் தொடங்கியது யார்?” என்று கேட்டார்கள். அந்தப் பையன்களில் ஒருவன் சிணுங்கல்களுக்கிடையே, “அவன் என்னைப் பதிலுக்கு அடித்த பொழுதுதான் இது எல்லாம் தொடங்கிற்று!” என்று விளக்கப்படுத்தினான். இது ஒரு எட்டு வயதுச் சிறுவனின் செயல்பாடாகத் தோன்றுகின்றது அல்லவா?

இருப்பினும், ஒரு சண்டையை/மோதலை யார் தொடங்கினார் என்பதல்ல ஆனால் அது நீடித்திருக்கும் குறைபாடு எதுவுமின்றி தீர்க்கப்பட முடியுமா அல்லவா என்பதே அதன் உண்மைப் பிரச்சனையாக உள்ளது. ஒரு மோதலானது மோசமாகக் கையாளப்பட்டால் அல்லது கண்டு கொள்ளாது விடப்பட்டால், அது நெருங்கிய நண்பர்களுக்கிடையே நீடித்த பிளவை விளைவிக்கக்கூடும் என்பதை நாம் அறிகின்றோம்.

அப். 15ன்படியாக, தொடக்க காலத்தின் சபையானது போதித்தலில் ஒரு மோதலை அனுபவித்திருந்தது, இது ஐக்கியத்தில் ஒரு இடர்பாடாக மாறியது. யூதேயாவிலிருந்து வந்திருந்த சில மனிதர்கள், மோசேயின் முறைமைப்படிப் புறஜாதியார் விருத்தசேதனம் பெறவில்லையென்றால் அவர்கள் உண்மை நிலையில் கிறிஸ்தவர்களாக மாட்டார்கள் என்றும் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாது என்றும் போதித்துக் கொண்டிருந்தனர் (வ. 1). புறஜாதியாரின் இரட்சிப்புக்கான திட்டத்தில் இந்த யூத மார்க்கப் போதகர்கள் இன்னுமொரு படியைக் கூட்டியிருந்தனர்: விருத்தசேதனம். கிறிஸ்தவம் பற்றிய அவர்களின் கண்ணோட்டமானது பவுலும் பர்னபாவும்

தங்களின் ஊழியத்தில் பிரசங்கித்திருந்த ஏவப்பட்ட செய்திக்கு நேர் எதிரானதாக இருந்தது. இந்தக் காரணத்தினால், பவுலும், பர்னபாவும் யூதேயாவிலிருந்து வந்திருந்த இந்தத் தவறாக வழி நடத்தப்பட்ட, போதகர்களுக்கு எதிர்த்து நின்று நீடிய கலந்துரையாடலையும் விவாதத்தையும் அவர்களுடன் மேற்கொண்டனர் (வ. 2).

போதனையில் இருந்த கருத்து வேறுபாடு தீர்த்து வைக்கப் படாதிருந்தது, மற்றும் எதிர்காலக் கிறிஸ்தவத்தைப் பாதித்திருக்கக்கூடிய ஒரு பிரிவினை அங்கு எழுந்தது. இடர்ப்பாட்டினால் எச்சரிப்புப் பெற்ற அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள், உபதேசத்தின் இந்தக் கருத்துப் பற்றி அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களிடம் கலந்து ஆலோசிப் பதற்காகப் பவுலையும் பர்னபாவையும் மற்றும் பிற சகோதரர்களையும் எருசலேமுக்கு அனுப்பத் தீர்மானித்தனர்.

ஏவப்பட்ட அப்போஸ்தலராயிருந்த பவுல், புறஜாதியாரின் இரட்சிப்பு பற்றிய தேவனுடைய சத்தியத்தைப் பெற்று அதைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். இருப்பினும் சபையின் ஒருமைப்பாட்டைக் காப்பதற் காக இந்த விஷயத்தைக் குறித்துத் தேவன் வெளிப்படுத்தியிருந்தது என்ன என்பதைக் காண்பிக்கும் நோக்கத்திற்காக ஏவப்பட்ட மனிதர்களை ஒன்று கூடச் செய்வதற்கு அவர் எருசலேமுக்குச் சென்றார். எருசலேமில் ஒரு விசேஷக் கூட்டம் நடைபெற்றது, அதில் இந்தக் கேள்வியானது அப்போஸ்தலர்களாலும் சபையின் மூப்பர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் பேதுரு எழுந்து நின்று தேவன் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்று உறுதிப்படுத்தினார். கொர்நேலியுவின் வீட்டார்மேல் பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்ட நிகழ்ச்சியானது (அப். 10:44-48), தேவன் யூதர்களை இரட்சித்த அதே வழிமுறையிலேயே புறஜாதியாரையும் இரட்சிப்பார் (அப். 15:7-11) என்பதைப் பேதுருவுக்குப் போதித்திருந்தது. பவுலும் பர்னபாவும் கூட, யூதருக்குப் பிரசங்கிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தைக் கொண்டு தேவன் புறஜாதியாரைத் தங்கள் பிரசங்க ஊழியத்தில் எவ்விதம் இரட்சித்திருந்தார் என்பதை எடுத்துரைத்தனர் (அப். 15:12). கொடுக்கப்பட்டிருந்த உரைகள் யாவற்றையும் யாக்கோபு கடைசியில் தொகுத்துக்கூறி, இந்தக் கேள்விக்கு ஏவுதல் பெற்ற வெவ்வேறு மனிதர்களுக்குத் தேவன் எதை வெளிப்படுத்தியிருந்தார் என்பதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முடிவினைக் கொண்டு வந்தார் (அப். 15:13-21). அவருடைய முடிவு பின்வருமாறு இருந்தது: தேவன் யூதரையும் புறஜாதியாரையும் ஒரே திட்டத்தின் மூலமாக இரட்சித்தபடியால் தேவனு டைய இராஜ்யத்தினுள் பிரவேசிக்கும் கதவை அவர் யூதர்களுடன் சமானமான அளவிலிருக்கும்படிப் புறஜாதியாருக்கும் திறந்து விட்டிருந்தார்.

சபையின் உலகளாவிய சகோதரத்துவம் பற்றி யாக்கோபு தமது கருத்தை நிரூபிக்கையில், புறஜாதியாரைக் கொண்டு வருவதற்கான தேவனு டைய நோக்கம் பற்றிய ஒரு தீர்க்கதரிசன முன்னுரைத்தலான ஆமோஸ் 9:11, 12ஐ மேற்கோள் காண்பித்தார்:

எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு திரும்பி வந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளை யெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (அப். 15:16-18).

அவர்களின் மத்தியில் பேதுருவால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கு முற்றிலும் ஒத்திருந்ததாகக் கூறிய யாக்கோபு பிறகு, புறஜாதியாரைக் குறிப்பிட்டிருந்த ஆமோஸின் இந்தத் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார். சபை நிலைநாட்டப்பட்ட நாளான வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளல் பற்றிச் சுட்டிக்காட்டியிருந்த பேதுரு, ''தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது'' (அப். 2:16) என்று கூறினார். யாக்கோபு, ''அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது'' (அப். 15:15) என்று கூறினார். ஏவப்பட்ட ஒரு மனிதர் தம்முன் உள்ள ஒரு நிகழ்ச்சி, சூழ்நிலை அல்லது செயல்பாட்டைப் பார்த்து, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் ஒன்றை பின்னோக்கித் திரும்பிச் சுட்டிக்காட்டி ''தீர்க்கதரிசிகள் இதைத் தான் முன்னுரைத்தனர்'' என்று கூறும் பொழுது, தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை நாம் தவறின்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆமோஸின் தீர்க்கதரிசனமானது சபையின் உலகளாவிய சகோதரத் துவத்தை முன்னுரைத்தது. அது, கிறிஸ்துவின் சரீரத்தினுள் யூதரும் புறஜாதியாரும் பிரவேசித்து கறைகளற்ற மற்றும் சமாதானம் நிறைந்த ஐக்கியத்தில் அவர்கள் ஒன்றாக வாசம் பண்ணுவதைச் சித்தரித்தது. கொர்நேலியுவின் குடும்பத்தாருக்குப் பேதுருவும், மற்ற புறஜாதியாருக்குப் பவுலும் பிரசங்கிக்கையில் இந்தத் தீர்க்கதரிசனமானது உண்மை நிலையாயிற்று. சுவிசேஷத்தின் மூலமாக(வே) புறஜாதியார் தேவனுடைய இராஜ்யத்தின் குடும்பத்தினுள் வந்துகொண்டிருந்தார்கள். யூதர் மற்றும் புறஜாதியார் என்ற இரண்டு இனங்கள் சபை என்ற ஆவிக்குரிய ஒரே இனமாகிக் கொண்டிருந்தன. புறஜாதியார் யூதராக்கப்படவில்லை, மற்றும் யூதர்கள் புறஜாதியாராக்கப்படவில்லை; யூதரும் மற்றும் புறஜாதியாரும் தேவனுடைய ''பரிசுத்த ஆசாரியக் கூட்டமான'' (1 பேது. 2:5) கிறிஸ்தவர் களாகிக் கொண்டிருந்தனர். யூதர்களும் புறஜாதியாரும் ஒரே வழியின் - கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே - மூலமாகவே இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்; மற்றும் அவர்கள் - தேவனுடைய பிள்ளைகள் என்ற - ஒரே வகையான மக்களாகவே ஆகியிருந்தனர். கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் எந்த ஒரு படிநிலைத் தன்மையும் (உயர்வு தாழ்வு என்ற நிலை) அடையாளமாய்க் காணப்பட வில்லை. எவர் ஒருவரும் அவரது நாட்டுரிமை, வயது அல்லது கலாச்சாரம் போன்றவை எப்படிப்பட்டதாக இருப்பினும் மற்ற எவரைக்காட்டிலும்

பெரியவராக இருந்ததில்லை; எவரொருவரும் மற்ற எவரைக்காட்டிலும் தாழ்வானவராகவும் இருந்ததில்லை.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தில் கிறிஸ்தவ ஐக்கியத்தின் அளவீடுகளைச் சுட்டிக்காட்டும் மறைவான கருத்துக்களைப் பற்றி நாம் கவனிப்போம். இந்த ஐக்கியத்தின் பண்புகள் யாவை? இது எவ்விதத்தில் அர்த்தம் நிறைந்ததாக உள்ளது? இது எவ்விதத்தில் சூழ்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது?

எல்லா பாவத்திற்காக கீழ் நோக்கியது

முதலில் நாம் சபையின் ஐக்கியத்தில் ஆழமான இயக்கத்தைக் காண்கின் றோம். இது எல்லா பாவத்திற்காகவும் கீழே வந்தடைந்த விலையேறப் பெற்ற இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே வந்திருக்கக் கூடிய ஒருமைப் படுத்துதலாக உள்ளது. தேவனுடைய கிருபைக்குத் தம் வாழ்வைத் திறந்து வைத்தால், எந்தப் பாவியும் இதனால் (இந்த இரத்தத்தினால்) அடையக் கூடிய தூரத்திற்கும் அப்பால் இருப்பதில்லை.

இந்த ஒப்புரவாக்குதலானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாக்கப் பட்டுள்ளதால், அந்த இரத்தத்தின் வல்லமையினால் ஏற்புடையதாகின்ற ஒரு ஆழத்தை இது கொண்டுள்ளது. பாவத்தின் இயல்பு எப்படி யிருப்பினும் அதை, மற்றும் பாவங்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருப்பினும் அவைகளை அவருடைய இரத்தமானது முற்றிலுமாக என்றென்றைக்குமாகச் சுத்திகரிக்க முடியும். ஆகையால், இந்த ஐக்கியத் திலிருந்து நம்மை விலக்கி வைக்கக் கூடிய ஒரே தடையாக இருப்பது மனஸ்தாபமின்மை மட்டுமே ஆகும். சகரியா “அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்” (சக. 13:1) என்று முன்னு ரைத்த பொழுது சுத்திகரிக்கும் ஒரு ஊற்று என்ற உருவத்தில் இயேசுவின் இரத்தத்தினுடைய சுத்திகரிக்கும் வல்லமை பற்றி அவர் முன்னுரைத்தார்.

பவுல், வேசி மார்க்கத்தார், விக்கிரகாராதனைக்காரர், விபசாரக்காரர், சுயபுணர்ச்சிக்காரர், ஆண்புணர்ச்சிக்காரர், திருடர், பொருளாசைக்காரர், வெறியர், உதாசினர் மற்றும் கொள்ளைக்காரர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்ட பிறகு, “உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான் களாக்கப்பட்டீர்கள்” (1 கொரி. 6:9-11) என்று கூறுவதன் மூலம் கொரிந்தியர் களை அவர் உற்சாகப்படுத்தினார். இந்த வசனமானது சுவிசேஷத்தின் பெரிய சத்தியமான வியக்கத்தக்க சத்தியத்தைக் கொண்டுள்ளது: பாவிகள் கிறிஸ்துவிடம் வரும்பொழுது, அவர்கள் கழுவப்படுகின்றனர் (சுத்திகரிக்கப் படுதல்), பரிசுத்தப்படுத்தப்படுகின்றனர் (பரிசுத்த பயன்பாட்டிற்காகப் பிரித்து வைக்கப்படுதல்), மற்றும் நீதிமான்களாக்கப்படுகின்றனர் (குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுதல்)!

பவுலின் அட்டவணையை மீண்டும் நோக்குங்கள், மற்றும் வெறுக்கத்

தக்க இந்தப் பாவங்கள் கொரிந்துவில் மனம் மாறியவர்களை சபையின் ஐக்கியத்தில் இருந்து நீக்கிப் போடவில்லை என்பதைச் சிறப்பாகக் கவனியுங்கள். அவர்கள் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் தேவனிடம் வருகையில், அவர் தம்முடைய குமாரனுடைய இரத்தத்தின் மூலமாக அவர்களை அந்தப் பாவங்களினின்று கழுவி, அவர்களை நீதிமான்களாக்கி, கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக அவர்களைக் கொண்டு வந்து, அந்த சரீரத்தினுள் இருந்த மற்ற யாவரோடும் அவர்களைச் சமமாக்கினார். சில பாவங்கள் மற்ற பாவங்களைக் காட்டிலும் பரவலானதொரு (தீய) செல்வாக்குள்ளவை என்பது உண்மையாகவே இருக்கின்றது, ஆனால் உண்மையான மனந்திரும்புதலுடன் ஒருவர் தேவனுக்கு பதில்செயல் செய்கின்றபொழுது எந்தப் பாவமும் மற்றும் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட முடியும்.

விபசாரக்காரர் ஒருவர் இனியும் விபசாரக்காரராக இல்லை, திருடர் ஒருவர் இனியும் திருடராக இல்லை என்னப்படும் காலம் ஒன்றுள்ளது. “எப்பொழுது?” என்று நீங்கள் கேட்பீர்கள். தேவனுடைய மன்னிப்பில் அவ்வாறு இருக்க முடியும். பவுல், “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின” (2 கொரி. 5:17) என்று எழுதினார். அவருக்கு நமது பதில்செயலின் மீது, அவர் நமது பாவம் நிறைந்த பழைய வாழ்வை நீக்கிப்போட்டு, புதிய வாழ்வைக் கொண்டு நம்மை உடுத்துவித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் தெய்வீகத் தோழமையும் உள்ள பரலோகத் திற்குரிய வட்டாரத்தில் நம்மைக் கொண்டு வந்து சேர்க்கும் அளவுக்கு சுவிசேஷத்தின் கிறிஸ்து மிகவும் மகிமையுள்ளவராக இருக்கின்றார்.

இயேசுவுக்குள் ஒரு புதிய நபராக ஆவதைக் காட்டிலும் பெரிய விஷயம் வேறெதுவும் இருக்க முடியாது. ஒரு நபர் எங்கிருந்துள்ளார், அவர் என்ன செய்து கொண்டுள்ளார், அவர் என்ன கூறியுள்ளார், அல்லது அவர் எவ்விதம் சிந்தித்துள்ளார் என்பதை எதையும் தேவன் பொருட்படுத்தாமல், பலியான ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே அவரைக் கழுவி, கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபமாக்கும் பணியைத் தொடங்கி வைத்து, கிறிஸ்துவுக்குள் அவருக்கு ஒரு புதிய வாழ்வைக் கொடுக்கின்றார். இவ்விதமாக, ‘‘மீண்டும் தொடங்குதல்’’ என்பது இயேசு கிறிஸ்துவில் மட்டுமே அதிகாரப் பூர்வமான இடமாக உள்ளது.

சபையின் ஜீவனுடைய ஆழத்தை நாம் நினைவு கொள்ளுவோம். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக கிறிஸ்துவிடம் வந்து அவருடைய இரத்தத்தினால் கழுவப்படும்பொழுது அவர் அல்லது அவள் கிறிஸ்துவுக்குள் உண்மை நிறைவுடன் தங்கியுள்ள மற்ற யாவருக்கும் சகோதரராக அல்லது சகோதரியாக ஆகின்றார்/ ஆகின்றாள். ஒருவர் கழுவப்படும் பொழுது கறைகள் எதுவும் எஞ்சி நிற்பதில்லை; தேவனுடைய கிருபையினால் ஒரு முழுமையான சுத்தி கரித்தலானது மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகின்றது. எவரொருவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அரைகுறையான வழியிலோ அல்லது ஒரு பகுதி மட்டுமான வழி வகையிலோ பிரவேசிப்பதில்லை. அவர் கிறிஸ்துவினு

டையவராக இருக்கின்றார் அல்லது கிறிஸ்துவைச் சேராதவராக மட்டுமே இருக்கின்றார். எவரொருவரும் சிறு பகுதி ஐக்கியத்திற்குட்பட்ட வராகவோ, ஐந்தில் ஒரு பகுதி சுத்திகரிக்கப்பட்டவராகவோ அல்லது ஒருவேளையில் ஒரு பகுதி மட்டுமே கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்பட்ட வராகவோ இருப்பதில்லை. எவரொருவரும் படிப்படியாக இரட்சிக்கப் படுவதில்லை. படிப்படியாக அவர் போதிக்கப்படலாம் ஆனால் அவர் கிறிஸ்துவுக்குள் ஒரே படியில்தான் - கிறிஸ்துவுக்குள்ளாக அவரது ஞானஸ் நானத்தினால் - பிரவேசிக்கின்றார் (கலா. 3:27). ஒரு நபர் கிறிஸ்துவின் சரீரத்தினுள் முழுமையாகப் பிரவேசிக்கின்றார் மற்றும் அவர் கிறிஸ்துவின் சரீரத்தினுள் இருக்கும் மற்ற யாவரும் உள்ள அதே நிலையில் - முற்றிலும் நீதிமான்களாக்கப்பட்டு, முழுமையாக இரட்சிக்கப்பட்டுள்ள நிலையில் தான் - நிலைநிற்கின்றார். ஆகையால், கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை உணர்ந்தறிந்து கொள்ளவேண்டும், மற்றும் அவர்கள் ஒருவருக்கொருவர் தேவனுடைய குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக நடந்துக் கொள்ள வேண்டும்.

எல்லா மக்களுக்குமாக சென்றடையத்தக்க

அடுத்து நாம் சபையின் ஆச்சரியம் நிறைந்த அகலத்தைக் காண்கின்றோம். தேவனுடைய குடும்பமானது மனித குடும்பத்தைப் போலவே வலிவார்ந்த வகையில் அகன்று விரிந்ததாக உள்ளது. இனம், பின்னணி அல்லது கலாச்சாரம் இவற்றினிமித்தமாக எவரொருவரும் இந்தக் குடும்பத்தில் பிரவேசிப்பதிலிருந்து தடை செய்யப்படுவதில்லை. அப். 15:16-18ல் யாக்கோபு, யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு சாராருக்கும் இரட்சிப்பை அளிப்பதற்கானதாக தேவனுடைய திட்டம் உள்ளது என்பதை நிரூபிக்க ஆமோஸ் 9:10, 11ஐ மேற்கோள் காட்டினார். இது தீர்க்க தரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டதாகவும் மற்றும் அப்போஸ்தலர்களின் பிரசங்கித்தலில் நிறைவேற்றப்பட்டதாகவும் உள்ளது.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் உலகில் அடிப்படையாக இரண்டு இனங்கள் மட்டுமே இருந்தன: யூதர்கள் மற்றும் புறஜாதியார். ஒருவர் யூதராக இல்லாதிருந்தால், அவர் புறஜாதியாராக இருந்தார். ஆகையால், தேவனுடைய இராஜ்யத்திற்கான கதவை தேவன் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் திறந்திருந்தார் என்பதற்கு நிரூபணம் தரப்பட்ட பொழுது, தேவன் அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முழு உலகத்திற்கும் - எல்லா இனங்களுக்கும் - வாய்ப்பைக் கொடுத்திருந்தார் என்பதற்கே நிரூபணம் உண்மையாகக் கொடுக்கப்பட்டிருந்தது.

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலமாக இரட்சிப்பின் வழியை வெளிப்படுத்திய வகையில், ஆவியானவர் என்ன கூறும்படித் தம்மை (பேதுருவை) வழிநடத்தினார் என்பதை பேதுரு முழுமையாகப் புரிந்து கொண்டிராதவராய் இருந்த நிலையில் கூட, அவர் (ஆவியானவர்/தேவன்) சுவிசேஷமானது, (பின்) ஒரு நாளில் எல்லா

இனங்களுக்கும் அளிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்தினார். அவர், “வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்தில் உள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது” (அப். 2:39) என்று கூறினார். “தூரத்தில் உள்ள யாவருக்கும்” என்ற சொற்றொடரானது மிகவும் உறுதியான வகையில் புறஜாதியாரின் உலகையே குறிப்பிடுகின்றது. இருப்பினும், பிற்பாடு கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்று புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் தேவன் பேதுருவினிடத்தில் குறைந்தது ஐந்து அதிகார அறிவிப்புகளை அளித்து அவரை இயக்குவது அவசியமாய் இருந்தது: (1) அவர் கொர்நேலியுவுக்கு ஒரு தரிசனம் கொடுத்தார் (அப். 10:3-6); (2) அவர் பேதுருவுக்கு ஒரு தரிசனம் கொடுத்தார் (அப். 10:9-16); (3) அவர், பேதுருவை அழைக்க வந்தவர்களுடன் பேதுரு செல்லும்படி ஆவியானவர் மூலம் பேதுருவை அறிவுறுத்தினார் (அப். 10:19, 20); (4) கொர்நேலியு தாம் கண்ட தரிசனத்தைப் பற்றிப் பேதுருவுக்கு விவரித்தார் (அப். 10:30-33); மற்றும் (5) தேவன் பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்திருந்தது போலவே கொர்நேலியுவின் மீதும் அவரது குடும்பத்தார் மேலும் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தார் (அப். 10:44, 45). கொர்நேலியுவின் மீதும் அவரது குடும்பத்தார் மேலும் பரிசுத்த ஆவியானவரைப் பொழிதல் என்ற கடைசிக் குறிப்பானது பேதுருவுக்கு முடிவு செய்யும் காரணியாக இருந்தது. அவரது உடனடியான பதில்செயலானது நேர்மறையாகவும் தீர்மானமானதாகவும் இருந்தது:

> நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா? (அப். 10:47).

யூதர்கள் இரட்சிக்கப்பட்டிருந்த அதே நிபந்தனைகளின் அடிப்படையில் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட வேண்டி அவர்களுக்கு வாய்ப்பளிக்கப் படுவதற்கான நாள் வந்தது என்பது பேதுருவுக்குத் தெளிவாயிற்று.

பேதுரு இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்ட நாளில் இயேசு பேதுருவுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியிருந்தார்: “பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்” (மத். 16:19). இந்த வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்ளும் விதத்தில், பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்களுக்கு இராஜ்யத்தினுள் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளை அறிவிக்கும் நற்பேறு பேதுருவுக்கு வழங்கப்பட்டது (அப். 2:37-39), மற்றும் கொர்நேலியுவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இரட்சிப்பின் வழியை அறிவிப்பதற்கும் அதே நற்பேறு அவருக்கு வழங்கப்பட்டது (அப். 10:34-43).

எனது வேதாகம வகுப்புகளில் நான் அப். 10க்குக் கடந்து வரும்

பொழுது, பெரும்பாலும் நான் வகுப்பில் யூத இனத்தைச் சேர்ந்தவர் யாராவது உள்ளாரா என்று கேட்பதுண்டு. வழக்கமாகக் கையெதுவும் உயர்த்தப்படாது. நான் தொடர்ந்து, அப். 10க்காக நாம் நன்றி நிறைந் தவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் சுவிசேஷத்தின் எந்த நிபந்தனை யின் கீழ் யூதர்கள் இரட்சிக்கப்பட்டனரோ, அதே நிபந்தனையின் கீழ் நாமும் இரட்சிக்கப்பட உரிமை பெற்றுள்ளோம் என்று புறஜாதியாரான நமக்கு அந்த அதிகாரம் எடுத்துரைக்கின்றது என்று அவர்களுக்குக் கூறுவதுண்டு. பிறகு நாங்கள் யாவரும் இணைந்து அப். 10க்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம்.

சபையின் உறுப்பினர்த்துவத்தின் ஆச்சரியம் நிறைந்த அகலம் பற்றி சிந்தித்துப் பாருங்கள். உலகின் நாடுகள் மற்றும் இனங்கள் பற்றிய காட்சியைப் பெறுங்கள். வித்தியாசப்பட்ட மொழிகள், பழக்க வழக்கங்கள், மற்றும் கலாச்சாரங்களை நினைத்துப் பாருங்கள். பூமியின் மக்கள் யாவரும் எங்கு வாழ்கின்றனர், அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஆண்களை - இளைஞராகவும் பலமுள்ளவராகவும் உள்ளவர்களையும் மற்றும் முதியவராகவும் ஊனமுற்றவராகவும் உள்ளவர் களையும் - மனதில் சித்தரித்துப் பாருங்கள்; பெண்களை - கன்னிப் பெண்களையும், திருமணம் முடித்துள்ள இளம் பெண்களையும், நடுத்தர வயதுடையவர்களையும் மற்றும் முதிர் வயதானவர்களையும் - மனதில் சித்தரித்துப் பாருங்கள். பிறகு, சுவிசேஷமானது எல்லாருக்கும் - எல்லா நாட்டவருக்கும், எல்லா இனங்களுக்கும், எல்லா இனக் குழுக்களுக்கும், எல்லா ஜாதிகளுக்கும், எல்லாக் குடும்பங்களுக்கும், மற்றும் கணக் கொப்புவிக்க வேண்டிய எல்லா வயதினருக்கும் உரியதாய் இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்! எவரொருவரும் தவிர்க்கப்படவில்லை. பவுல் கூறியது போல, "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமை யென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' (கலா. 3:28).

ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்குமாக மேல் நோக்கியது

மூன்றாவதாக நாம், சபையின் சகோதரத்துவத்தினுடைய வானளாவிய உயரத்தைக் காண்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினுடைய சென்றடையும் தன்மையின் காரணத்தினால், கிறிஸ்தவர்கள் பரலோக செல்வங்களின் சகல தாராளத் தன்மைக்கும் திறந்த கதவு ஒன்றைப் பெற்றுள்ளனர். சபை என்று அழைக்கப்படுகின்ற கிறிஸ்தவ இனமானது (அதில் உள்ள) ஒரு சிலர் மற்ற எல்லாரையும் விட மேலாக ஆசீர்வதிக்கப் பட்டுள்ள நிலையில் ஒரு சிலர் மட்டும் நற்பேறு பெற்றுள்ளதான விஷயம் எதையும் கொண்டிருப்பதில்லை. தேவனுடைய இராஜ்யமானது சம வாய்ப்புள்ள ஒரு இடமாக உள்ளது. மேல்வர்க்கம், நடுத்தரவர்க்கம் மற்றும் கீழ்வர்க்கம் என்ற பிரிவுகள் சபையில் அறியப்படாதவைகளாகும். இராஜரீக

ஆசாரியத்துவமானது இரண்டாந்தரக் குடிமக்களையோ அல்லது விளிம்புக் கோட்டின் ஆசாரியர்களையோ கொண்டிருப்பதில்லை. ஒருவர் கிறிஸ்துவுக்குள் வர மறுக்க முடியும், மற்றும் அதனால் அவர் இழந்து போகப்பட முடியும் (எபே. 2:11, 12); ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும் மற்றும் அவர் கிறிஸ்துவுக்கு விசுவாசமற்றவராகி இழந்து போகப்பட முடியும் (2 பேது. 2:21, 22); ஆனால் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து அவருக்குள் உண்மை நிறைவுடன் வாசம் பண்ணுகின்ற எவரொருவரும் எல்லாவற்றையும் பெற்றுள்ளார், அந்த நபரைப் பற்றி நாம், "பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங் களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரி. 3:22, 23) என்று கூறமுடியும்.

கிறிஸ்துவுக்குள் உள்ள எவரொருவரும் தனிப்பட்ட மதிப்புடன் பவுலின் (பின்வரும்) போதனையை கூற முடியும்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே. 1:3). நாம் பவுலுடன் இணைந்து, கிறிஸ்துவுக்குள் நாம் "பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறோம்" (கொலோ. 2:10) என்றும் கூற முடியும். கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களுக்கு, "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகல வித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவரா யிருக்கிறார்" (2 கொரி. 9:8) என்று கூறப்பட முடியும்.

கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் சமமானவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் ஒருவருக்கொருவர் தேவனுடைய குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக நடந்துகொள்ள வேண்டும்.

''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும்'' (2 பேது. 1:3) வேண்டிய ஒவ்வொன்றும் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாம் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு" (எபி. 10:22) தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும், ஏனெனில் கிறிஸ்துவின் மூலமாக நாம் "ஒரே ஆவியினாலே பிதாவினிடத்திலே" (எபே. 2:18) சேருவதற்குச் சுயாதீனமான வழியைப் பெற்றுள்ளோம். நாம், "நிலையும் உறுதியும்" (எபி. 6:19) கொண்டதொரு நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். நாம் இயேசுவுக்குரியவர்களாய் இருக்கின்றோம், மற்றும் இயேசு - தம்முடைய சகல மகிமையிலும் கிருபை யிலும் - நமக்குரியவராய் இருக்கின்றார். கிறிஸ்து எங்கிருக்கின்றாரோ அங்கேயே நாம் இருக்கின்றோம், கிறிஸ்து கொண்டிருக்கின்ற யாவும்

நம்முடையதாக உள்ளன, ஏனெனில் நாம் கிறிஸ்துவுடன் கூட உடன் சுதந்தரராக இருக்கின்றோம் (ரோமர் 8:17).

இது ஒரு நாட்டின் அதிபராகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ இருப்பதைப் போன்றதாக உள்ளது. நாட்டில் உங்களுடைய தனிச்சிறப்பினிமித்தமாக உங்களுக்கு மிகச் சிறந்த உணவும், மிகவும் தகுதி வாய்ந்த உடைகளும், பாதுகாப்பிற்கு ஒரு மெய்க்காவலனும் மற்றும் உங்கள் வசிப்பிடத்திற்கு ஒரு அரண்மனையையும் நீங்கள் கிடைக்கப் பெறுகின்றீர்கள். ஒரு கருத்தில், நாட்டின் மூல ஆதாரங்கள் யாவற்றையும் நீங்கள் உங்களுடைய ஆணையின் கீழ் வைத்துள்ளீர்கள். நீங்கள் வாழ்கின்ற நகருக்குப் பாதுகாப்புத் தேவையென்றால் நீங்கள் நாட்டின் முழு இராணுவத்தையும் உடனே அழைப்பிக்க முடியும். உங்கள் பதவியினிமித்தமாக, நீங்கள் சாதாரணக் குடிமகன் பெற்றிராத நற்பேறுகள் மற்றும் அளிப்புகளுக்கு உயர்தரமான நுழைவைப் பெற்றுள்ளீர்கள்.

இது போலவே, தேவனுடைய பிள்ளைக்குரிய சகல ஐசுவரியங்கள், உரிமைகள் மற்றும் மூல ஆதாரங்கள் ஆகியவற்றிற்குச் சென்றடையும் வழியைக் கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுள்ளோம். நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கையில் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கியுள்ள எல்லாம் நமது பிடிக்குள்ளாக உள்ளது.

ஆசீர்வதிக்கப்படுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பது ஒரு விஷயம், ஆனால் அந்த வாய்ப்பின் அனுகூலத்தை முற்றிலுமாய்ப் பயன்படுத்துதல்/ மேற்கொள்ளுதல் என்பது வேறொரு விஷயமாய் உள்ளது. இராஜ்யத்தில் இருப்பதன் பயன்கள் யாவற்றையும் சென்றடையும் வழியை கிறிஸ்துவுக்குள் நாம் பெறுகின்றோம், ஆனால் (புறக்கணித்தல் அல்லது அறியாமையின் காரணமாக) நாம் ஆவிக்குரிய இந்த ஐசுவரியங்களைப் பெறத் தவறி விடலாம். இருப்பினும் ஒரு அற்புதமான சத்தியத்தை தவற விடக் கூடாது: *தேவன் நெருங்கிய உறவுள்ளவராயிருக்கிறார் ஆனால் சலுகை காட்டுபவராய் இருப்பதில்லை.* கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒரு மனிதர் மீட்கப்பட்டவர்களுக்குரிய ஏராளமான ஆசீர்வாதங்களின்றி வாழ்கின்றார் என்றால், அது அவருடைய தேர்ந்து கொள்ளுதலின் காரணமாயிருக்குமேயன்றி, ஒரு வாய்ப்பு அவருக்கு இழந்து போகப்பட்டதின் காரணமாய் இருக்காது. கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களுக்கு தேவன் கொடுத்துள்ள வழி வாய்ப்புகளைப் பயன்படுத்தாதவர் மட்டுமே கிறிஸ்துவுக்குள் இருந்தும் அவர் ஆவிக்குரிய ஏழ்மையில் வாழ்கின்றவராய் இருக்கின்றார்.

சபையினுடைய சமுதாயத்தின் வானளாவிய உயரத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். பூமியில் தேவன் வாய்ப்புக்களின் உண்மையான சமத்துவத்தை அளிக்கும் ஒரே இடம் இதுதான். கிறிஸ்துவுக்குள்ளான மற்றவர்களுடன் நாம் கொண்டுள்ள உறவுமுறையில் இந்தச் சத்தியத்தைப் பிரதிபலித்து வாழக் கடவோம். ஏழ்மை, தோற்றம், கல்வி, அல்லது இனம்/ நாடு ஆகியவற்றின் காரணமாக நாம் மற்ற கிறிஸ்தவர்களை ஒருபோதும் தாழ்வாகக் கண்ணோக்கக் கூடாது. மற்ற கிறிஸ்தவரை அவரது/அவளது பதவி, அதிகாரம், நற்பேறுகள் அல்லது உடல் தோற்றம் ஆகியவற்றின் காரணமாக, நாம் ஒருபோதும் மேன்மைப்படுத்தவும் கூடாது. நாம்

யாவரும் ஒன்றாகவே இருக்கின்றோம்; நாம் மற்றவர் ஒவ்வொரு வருடனும், மற்றவர்கள் ஒவ்வொருக்காகவும் வாழக் கடவோம் (1 கொரி. 12:27).

முடிவுரை

கிறிஸ்துவின் சரீரம் என்பது ஒரு அகிலத்தின் சகோதரத்துவமாக உள்ளது. அப். 15ல் யாக்கோபின் கூற்றுப்படியாக, இந்த வகையான ஐக்கியமானது ஆமோஸ் 9:10, 11ல் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்டது. இதன் நிறைவேற்றத்தைப் புறஜாதியாருக்கு அப்போஸ்தலிக்கப் பிரசங்கத்தில் நாம் காண்கின்றோம். இது ஒவ்வொரு பாவத்தையும் அழிப்பதற்காக கீழே வந்தடையுமளவுக்கு இயங்குகின்ற ஆழமுடையதாக இருக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினுடைய வல்லமையின் காரணமாக எந்த ஒரு பாவியும் இதிலிருந்து விலக்கப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் போகின்றது. இது எல்லா நாடுகளையும் மக்களையும் சென்றடையத் தக்கதான ஆச்சரியம் நிறைந்த அகலத்தை/பரப்பைக் கொண்டுள்ளது. இயேசு ஒவ்வொரு நபருக்காகவும் மரணத்தை ருசி பார்த்து, ஒவ்வொரு வருக்கும் இரட்சிப்பின் வாய்ப்பைக் கொடுத்துள்ளார் (எபி. 2:9). தேவனு டனும் ஒருவர் மற்றவருடனும் கொண்டுள்ள இந்த உறவுமுறையானது கிறிஸ்துவிலுள்ள கிருபையின் ஒவ்வொரு வளமான பண்பையும் அடையுமளவுக்கு வானளாவிய உயரம் கொண்டுள்ளது. கிறிஸ்துவுக்குள் வந்து, கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மிகுந்திருக்கின்றன!

சமத்துவம் மற்றும் வளமையின் இந்த வட்டாரத்தைக் காட்டிலும் அதிகமான வசீகரமுடைய வேறு எதையாவது நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா? உலகமானது சமாதானத்தைப் பற்றி நீளமாகப் பேசுகின்றது, ஆனால் நாம் உலகில் சிறிதளவே உண்மையான சமாதானத்தைக் காண்கின்றோம். ஏன்? ஏனென்றால் உண்மைச் சமாதானம் எங்குள்ளது என்பதையும் மற்றும் உண்மைச் சமாதானம் எவ்வகையில் கொண்டு வரப்பட முடியும் என்பதையும் புரிந்து கொள்ளத் தவறியதினால் அல்லவா? உண்மைச் சமாதானம் - தேவனுடன் சமாதானம், மற்றவர்களுடன் சமாதானம் மற்றும் நமக்குள்ளேயே சமாதானம் - என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளாக மட்டுமே அனுபவிக்கப்படவும் காட்சிப் படுத்தப்படவும் முடியும். வரவிருந்த சமாதானத்தின் இராஜ்யத்தைப் பற்றிக் கிறிஸ்துவுக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயா தீர்க்கதரிசனமாய்க் கூறியிருந்தார்:

> அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும்; கன்றுக் குட்டியும், பால சிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங் குழந்தை

விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசா. 11:6-9).

கிறிஸ்துவின் சரீரத்தில் மட்டுமே அறியப்படப் போவதாக இருந்த மகிமையான ஒருமைப்பாட்டை ஏசாயா, உயர்வான உருவக மொழி நடையில் சித்தரித்தார். ஏசாயாவுக்கு அது கிறிஸ்து வந்து தம்முடைய இராஜ்யத்தை நிலைநாட்டும் பொழுது நிறைவேறுவதாயிருந்த ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது, ஆனால் நமக்கு அது கிறிஸ்துவுக்குள்ளான அன்றாடப் பயணத்தில் நாம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றவைகளின் ஒரு பகுதியாக இருக்கின்றது. ஓனாய் போன்ற பண்புகள் கிறிஸ்துவின் மூலமாக புறாவைப் போலத் துன்பம் தராததாக ஆவதை நாம் தொடர்ந்து காண்கின்றோம் மற்றும் நாம் ஆட்டுக்குட்டி போன்ற ஆளுமைத் தன்மையுடையவருடன் பக்கம் பக்கமாய் நடந்து ஊழியம் செய்கின்றோம்.

கிறிஸ்துவுக்குள் நாம் ''ஒரே புதிய மனிதனாக'' இருக்கின்றோம், ஏனெனில் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்; மற்றும் ஒளியில் நம்முடைய அன்றாட நடக்கையினால் இந்த சமாதானத்தில் நாம் நிலைநிறுத்தப் பட்டுள்ளோம் (எபே. 2:15-18; 1 யோவா. 1:7).

நீங்கள் கிறிஸ்துவினுடைய சகோதரத்துவத்தின் அங்கமாய் இருக்கின் றீர்களா? அவ்வாறு இல்லையென்றால் நீங்கள் தவற விடுகின்ற கிருபை, உறவுமுறைகள் மற்றும் பெருந்தன்மையான வரங்கள்/கொடைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். "நாம் யூதராயினும், கிரேக்க ராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவி யினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1 கொரி. 12:13).

மனிதரின் சகோதரத்துவத்தினுடைய அங்கமாயிருத்தல் மட்டும் போதுமானதாயிருப்பதில்லை. நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கமாய் இருக்க வேண்டும்.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. அப். 15ன் பின்னணியில் இருந்த நெருக்கடி என்ன?
2. இரட்சிப்பின் திட்டத்துடன் சில யூதக் கிறிஸ்தவர்கள் சேர்ந்திருந்த படி எது?
3. எருசலேமில் நடந்த மாநாட்டில் பேசியது யார்? அவர்கள் என்ன கூறினார்கள்?

4. எருசலேம் மாநாட்டில் தரப்பட்டிருந்த உரைகளை யாக்கோபு எவ்விதம் தொகுத்துரைத்தார்?
5. எருசலேம் மாநாட்டின் நோக்கம் என்னவாக இருந்தது?
6. சுவிசேஷ அழைப்பிலிருந்து விலக்கப்படுகின்றவர்கள் யார்? மற்றும் அவர்கள் ஏன் விலக்கப்படுகின்றனர் என்பவைகளை விவரிக்கவும்.
7. 1 கொரி. 6:9-11 பற்றிக் கலந்துரையாடவும், சுவிசேஷத்தின் நோக்கம்/பரப்பெல்லை பற்றி இந்த வசனப் பகுதி நமக்குக் கூறுவது என்ன?
8. நாம் கிறிஸ்துவுக்குள் வருகின்ற பொழுது தேவன் நமக்குத் தருகின்ற புதிய வாழ்வைப் பற்றி விவரிக்கவும்.
9. சபையில் ஒருவர் அரைகுறையாகப் பிரவேசிக்க முடியாது என்பது உண்மையா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
10. சுவிசேஷம் - யூதர் மற்றும் புறஜாதியார் என்ற - எல்லா மக்களுக்குமானது என்பதை வேத வசனங்களிலிருந்து நிரூபிக்கவும்.
11. கலாத்தியர் 3:28ஐ விளக்கப்படுத்தவும்.
12. ‘‘ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்கும் சுயாதீனமாகச் சென்றடையும் வழி’’ என்பது எதனை அர்த்தப் படுத்துகின்றது?
13. எபேசியர் 1:3ஐ விளக்கப்படுத்தவும்.
14. ‘‘ஒருவர் புத்தகங்களைக் கொண்டிருக்கவும் அவைகளை உடையவராய் இல்லாதிருக்கவும் முடியும்’’ என்ற சொற்றொடரைப் பற்றிக் கலந்துரையாடவும். இந்தக் கருத்தைக் கிறிஸ்தவ ஆசீர்வாதங்களுக்கு எவ்விதத்தில் பயன்படுத்த முடியும்?
15. சமாதானத்தின் உண்மையான பாதையை விவரிக்கவும்.

5

புதிய ஒப்பந்தம்

“இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்” (எரே. 31:31).

“இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன் படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது” (எபி. 8:8).

கிறிஸ்தவர்கள், நாட்டின் மிகச் சிறந்த குடிமக்களாக இருக்க வேண்டும் (ரோமர் 13:1). அவர்கள் அமுல் படுத்துவதற்குப் புதிய மற்றும் மேன்மையான சட்டங்களை எதிர்பார்க்கின்றனர், மற்றும் அவை வருகின்ற பொழுது அவற்றை மதிக்கின்றனர். அந்த முன்னேற்றங்கள் வருவதில் தாமதப்பட்டால், அவர்கள் பொறுமையாகக் காத்திருந்து, தேவையான திருத்துதல்களுக்கு ஏற்புடைய வழிகளில் செயல்படுகின்றனர். எளிமையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்ற பொழுது, அவர்கள் நன்றி நிறைந்த, சட்டத்திற்குக் கீழ்ப்படியும் குடிமக்களாய் வாழ்கின்ற அதே வேளையில், தமது அமைதி நிறைந்த மறுப்புக்களைப் பதிவு செய்து, அதிகம் பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதில் தமது உதவியை அளிப்பார்கள்.

அது போலவே, தேவன் மனிதனுடனான தமது செயல்களில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களைக் கிறிஸ்தவர் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு, அவருடைய மாற்றங்கள் முழு நிறைவானவைகளாய் உள்ளன என்பதையும், அவைகள் தேவனுடைய ஆவிக்குரிய பொருளாதாரத்திற்கும் உலகத்திற்கும் நல்லவைகளாய் இருக்கின்றன என்பதையும் நினைவு படுத்திக் கொள்ளுவார்.

இந்தக் காரணத்தினால், தேவன் நமக்குக் கொண்டு வந்துள்ள புதிய உடன்படிக்கையை நாம் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் தமது பிரமாணத்தை அல்லது உடன்படிக்கையை மாற்றினார். இந்த மாற்றமானது பெந்தெகொஸ்தே அன்று சுவிசேஷம் அதன் முழுமையுடன் பிரசங்கிக்கப் பட்ட பொழுது அறிவிக்கப்பட்டது.

தேவனுடைய புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருதலானது திட்டமிடப்பட்டு, தீர்க்கதரிசனமாகவும் உரைக்கப்பட்டது. இது தேவன் மனிதனுடனான தமது உறவுமுறையை மேம்படுத்துவதற்காக அவருடைய முயற்சித்தல் - மற்றும் - தவறுதல் என்பதன் பிரயாசங்களின் விளைவாக இருந்ததில்லை; இது உலகத்தின் இரட்சிப்புக்கான அவருடைய

பரிவிரக்கமுள்ள திட்டத்தின் பாகமாய் இருந்தது. இஸ்ரவேலுடனான பழைய உடன்படிக்கையானது தனது இடத்தில் அமைத்து வைக்கப்பட்டு, ஏற்ற காலம் வரும் வரையில் அவருடைய பரிசுத்த நோக்கத்திற்கானதாக இருந்தது. காலம் நிறைவேறிய பொழுது, ஒரு புதிய உடன்படிக்கையானது தனது வடிவமைப்பினால் - இயேசுவின் இரத்தத்தின் மூலம் விலைக் கிரயம் கொள்ளப்பட்டு அதை (பழைய உடன்படிக்கையை) இடம் மாற்றியது (எபி. 8:7, 13).

இந்தப் புதிய உடன்படிக்கையின் வருகையை எரேமியா முன்னு ரைத்தார். எல்லா நம்பிக்கையும் இழந்து போகப்பட்டதாய்க் காணப்பட்ட ஒரு காலத்தில் தேவன் யூதாவுக்கு, தம் மக்களுடன் அவர் ஏற்படுத்தவிருந்த மேன்மையான உடன்படிக்கையின் மூலம் ஆசீர்வாதம் மற்றும் நம்பிக்கை ஆகியவை ஏற்படும் ஒரு நாளைப் பற்றிய தரிசனத்தைக் கொடுத்தார். எருசலேமின் சீரழிவான வீழ்ச்சி மற்றும் பாபிலோனிய அடிமைத்தனம் ஆகியவை பற்றி எரேமியா எடுத்துரைக்கையில், தேவன் புதிய உடன் படிக்கையின் நிபந்தனைகளில் தம் மக்களுக்கு ஏற்பாடு செய்திருந்த எதிர்காலத்தைப் பற்றி அத்தீர்க்கதரிசி எழுதினார்:

> *இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப் போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரே. 31:31-34).*

எரேமியாவின் தீர்க்கதரிசனத்தை அடிப்படையாகப் பயன்படுத்தி, பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கிடையே ஒரு மாறுபாட்டை எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கொண்டு வந்தார். எபிரெயருக்கு நிருபமானது துன்புறுத்தப்படுதலின் நாளில், பலவீனமான கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்திற்கான தங்களின் உறுதிப்பாட்டைத் தூக்கியெறிந்து விட்டு யூத மார்க்கத்திற்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்டபோது எழுதப்பட்டது. இதன் எழுத்தாளர், இருதயத்தில் பலவீனப்பட்ட, ஒழுக்கப் பண்பு குலைக்கப்பட்ட, மற்றும் உற்சாகம் இழக்கப்படும்படியாக்கப்பட்ட

கிறிஸ்தவர்களுக்கு, தேவன் தம் மக்களுடன் நிலைநாட்டியிருந்த புதிய மற்றும் மேன்மையான உடன்படிக்கைக்கான புதுப்பிக்கப்பட்ட மதிப்பைக் கொடுப்பதன் மூலம் அவர்களை உற்சாகப்படுத்த நாடினார் (எபி. 8:8-12).

தேவன் ஏற்படுத்திய இந்தப் புதிய உடன்படிக்கையின் விளைவாக சபை உண்டாயிற்று. ஆகையால், எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் தரப்பட்டதான இந்த உடன்படிக்கையை நோக்குவதானது நமக்கு சபையின் இயல்பைப் பற்றிய இன்னொரு கண்ணோட்டத்தைத் தரும்.

ஒரு புதிய விசுவாசத் தன்மை

எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின்படி, தேவனுடைய திட்டத்தில் இருதயத்தின் இடம் என்பது பழைய மற்றும் புதிய உடன்படிக்கை களுக்கிடையே உள்ள பிரதானமான வேறுபாடாக உள்ளது. தேவன், "... என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன் ... அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எபி. 8:10ஆ) என்று உரைத்தார். தேவன் தம்முடைய புதிய உடன்படிக்கையில், ஒவ்வொரு கிறிஸ்தவருக்குள்ளாகவும் ஒரு புதிய விசுவாசத் தன்மையை ஏவுதல் செய்கின்றார். சபை என்பது தேவனுடைய "புதிய இருதயங்கொண்ட" மக்களாக உள்ளது.

ஒருவர் தமது உடல் ரீதியான பிறப்பினால் பழைய உடன்படிக்கையில் பிரவேசித்தார். அவர் ஆவிக்குரிய தீர்மானத்தின்படியில்லாமல், குடும்ப வழிமுறையினாலேயே இஸ்ரவேலராய் இருந்தார். இதன் விளைவாக, ஒவ்வொரு யூதக் குழந்தைக்கும் தேவனுடனான அவனது/அவளது உறவைப் பற்றிப் போதிக்க வேண்டியது அவசியமானதாயிருந்தது. யூதக் குழந்தையானது பிறப்பின் பொழுது தேவனுடன் ஒரு புதிய உடன் படிக்கையில் பிரவேசித்திருக்கையில், அவன் தனது பெற்றோரால் அதைப் பற்றி ஏற்ற வகையில் போதிக்கப்பட்டிராத வரையிலும் அதை அறிவதோ அல்லது புரிந்து கொள்ளுவதோ கிடையாது. பிள்ளைகளுக்கு அவர்கள் யாராய் இருக்கின்றனர் என்று போதிக்கப்பட்டது மட்டுமின்றி, இஸ்ர வேலர்கள் யாவரும் அவர்களைத் தம் சொந்த ஜனமாகத் தேர்ந்தெடுத் திருந்த எகோவா தேவனுக்குத் தங்கள் கடமைகளையும் மற்றும் தங்கள் அடையாளத்துவத்தையும் நினைவூட்டுவதற்காக ஒரு தொடர்ந்த போதனைத் திட்டமானது பராமரிக்கப்பட்டது.

இருப்பினும், புதிய உடன்படிக்கையானது, தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொண்டு அவருக்கு கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் பதில் அளிப்பதை உள்ளடக்கிய ஆவிக்குரிய பிறப்பினால் பிரவேசிக்கப் படுகின்றது. தேவனைப் பற்றிய அறிவும், அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தினுள் (யோவா. 6:44, 45) பிரவேசிப்பதற்கான உணர்வுப் பூர்வமான முடிவும் இல்லாமல் இந்த புதிய பிறப்பு நடைபெற முடியாது. தேவனுடைய இராஜ்யத்தில் உள்ள ஒவ்வொருவரும் இரட்சிப்பின் செய்தியைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 10:17), அந்தச் செய்தியைப் பெற்றுக் கொண்டு மற்றும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்

(அப். 2:41), மற்றும் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் அந்த செய்திக்குச் செயல்படுவதைத் தேர்ந்து கொண்டுள்ளனர் (அப். 2:40).

ஒரு சட்டமானது இருதயத்தில் எழுதப்பட்டிருத்தல் என்பதன் அர்த்தம் என்ன என்று புரிந்து கொள்வதற்கு, மழலையர் பள்ளியில் படிக்கும் குழந்தை ஒன்றின் தாயைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். மிகவும் சுறுசுறுப்பான ஒரு நகரினூடே அவள் தன் காரை ஓட்டிச் செல்லுகையில், தனது குழந்தையின் பள்ளி முன்பாக அவள் - "மெதுவாக செல்லவும் - குழந்தைகள் விளையாடுகின்றனர்" என்று எழுதப்பட்டுள்ள - ஒரு அறிவிப்பைக் காண்கின்றாள். இந்தத் தாய் என்ன செய்வாள்? அவள் அந்த அறிவிப்புப் பலகையைப் புறக்கணித்து விட்டு கட்டுக்கடங்காத வேகத்தில் தனது காரை ஓட்டிச் செல்லுவாளா? அவள் அந்த விளம்பரப் பலகை தனக்குச் சங்கடம் உண்டாக்குகிறது என்று முறையிடுவாளா? இல்லை. அவள் தனது காரைக் கவனமாக வரையறைக்குப்பட்ட வேகத்தில் மெதுவாக ஓட்டி செல்லுவாள். அந்தத் தாய் தனது இதயத்திற்கு மிகவும் அன்பான தனது குழந்தை அந்தப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் விளையாடுகின்றதை அறிகிறாள் மற்றும் அந்தச் சட்டமானது தன்னுடைய பிள்ளைகளையும் அதைப் போன்ற மற்ற பிள்ளைகளையும் பாதுகாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அறிகின்றாள். உண்மையில், தனது காரை மெதுவாக ஓட்டிச் செல்லுமாறு கூறச் சட்டம் ஒன்றுகூட அவளுக்குத் தேவையில்லை. அவள் தனது பிள்ளைக்கும் மற்ற பிள்ளைகளுக்கும் மிகச் சிறந்தவற்றையே விரும்புகின்றாள். அவள் தனது பிள்ளை தனக்கு எவ்வளவு அருமையானது என்பதையும், மற்ற பிள்ளை களும் அதைப் போன்றே தங்கள் தங்கள் பெற்றோருக்கு அருமையான வைகள் என்பதையும் அறிகின்றாள். உண்மையில் இந்தத் தாய், அந்த அறிவிப்பு போக்குவரத்தை மெதுவாக்குகின்றதற்காக மிகவும் நன்றி யுள்ளவளாய் இருக்கின்றாள். பள்ளியின் அருகில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தும் அறிவிப்பு ஒன்று இல்லாதிருந்தால், அப்படிப்பட்ட ஒன்றை உடனடியாக வைக்கும்படி வலியுறுத்தும் முகாம் ஒன்றை அவள் வழி நடத்துவாள். "மெதுவாகச் செல்லவும் - குழந்தைகள் விளையாடுகின்றனர்" என்ற சட்டமானது அவளுடைய குழந்தையின் மீது அவள் கொண்ட அன்பினாலும், அவனுடைய அல்லது அவளுடைய பாதுகாப்பிற்கான அவளுடைய ஒப்புக் கொடுத்தலினாலும் அந்தத் தாயின் இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது.

தேவனுடைய பிரமாணங்கள் கிறிஸ்தவர்களின் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளன. விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றினுடைய வல்லமையின் காரணத்தினால் அவரது சித்தத்தைச் செய்யும்படி நாம் தூண்டப்படுகின்றோம் (1 யோவா. 5:3). அவருடைய செய்தியானது தொடக்கத்தில் நம்பிக்கையையும் கீழ்ப்படிதலையும் நமது இருதயங்களில் உருவாக்கிற்று; அந்தச் செய்திக்கு விசுவாசத்தின் பதில்செயலாக நாம் அவருடைய பிள்ளைகளானோம். அவருடைய வசனத்தைத் தொடர்ந்து புசிப்பதாலும், அவருடைய அன்பு மற்றும் கிருபையைத் தியானிப்பதாலும், அவருடைய சித்தத்திற்கு நமது இருதயங்களைத் திறந்து வைப்பதினாலும்,

அன்றாடம் அவருடன் நடப்பதினாலும் நாம் நமது புதிய இருதயங்களைப் பராமரிக்கின்றோம்.

ஒரு புதிய மன்னிப்பு

தேவன் கொடுக்கின்ற மன்னிப்பில் இரு உடன்படிக்கைகளுக்கும் இடையில் உள்ள இன்னொரு வேறுபாடு காணப்படுகின்றது. தேவனுடைய புதிய உடன்படிக்கையில் பிரவேசிக்கின்றவர்களிடத்தில் அவர், "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" (எபி. 8:12) என்று உரைத்துள்ளார். புதிய உடன்படிக்கையின் இந்த அம்சத்தை நாம் ''ஒரு புதிய மன்னிப்பு'' என்று அழைக்கலாம். சபை என்பது தேவனிடத்திலிருந்து பாவத்திற்கு உண்மையான சுத்திகரிப்பைப் பெற்றுக் கொண்டுள்ள மக்களைக் கொண்டதாக உள்ளது.

தேவன் பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த தம்முடைய மக்களுக்கு வருங்காலத்தில் வரும் வழியாக பாவங்களுக்கு (மன்னிப்பை) வழங்கியிருந்தார். மோசேயின் பிரமாணத்தின் கீழ் பாவமானது ஒவ்வொரு ஆண்டிலும் ஒப்புரவாக்குதலின் மகா நாளில் செலுத்தப்பட்ட மிருக பலியின் மூலமாக (லேவி. 16) முன்னோக்கித் தள்ளப்பட்டது. கிறிஸ்து வந்து ஒரே தரமாகப் பாவத்திற்காக மரித்த வரையிலும் (எபி. 9:15), மோசேயின் பிரமாணத்தினால் விதிக்கப்பட்டது போதுமானதாக இருந்தது. இயேசு சிலுவையில் மரித்து, முழுமையான மன்னிப்பைக் கொண்டு வரும் வரையிலும் உண்மையான ஒப்புரவாக்குதல் என்பது (வரும் காலத்தில் உண்டாகும் என்பதைத் தவிர) அவர்களுடையதாக இருந்ததில்லை.

புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனுடனான நமது உறவானது, பழைய உடன்படிக்கை கொடுத்ததைக் காட்டிலும் அதிகம் நெருக்கமானதாக, தனிப்பட்டதாக உள்ளது.

இப்பொழுது, புதிய உடன்படிக்கையின் கீழ், மன்னிப்பு முழுமையாகக் கிடைக்கின்றது. பாவத்திற்கு பூரணமான பலியானது இயேசுவால் ஏற்படுத்தப்பட்டது. அவர் நம்முடைய பிரதான ஆசாரியராகப் பரலோகத்தில் பிரவேசித்து தேவனுடைய வலது புறத்தில், நமது பாவங்களுக்கு நாம் மன்னிப்புக் கேட்கும் பொழுது நமக்காகப் பரிந்து பேசுவதற்காக அவ்விடத்தில் அமர்ந்துள்ளார் (1 யோவா. 2:1). மன்னிப்பு என்பது எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாளில் செலுத்தப்படும் ஒப்புரவாக்குதலின் பலியின் மூலம் வருங்காலத்தில் கொடுக்கப்படுவதாயிராமல், நிகழ் கால உண்மை நிலையாகக் கொடுக்கப்படுகின்றது. கிறிஸ்துவுக்குள் நாம் இலவசமாய், "அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்(றோம்)" (ரோமர் 3:24).

ஒருவேளை நீங்கள் அளவற்ற கடனுக்குள்ளாகினீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்கள் கடன் மிகவும் அதிகமாகி, உங்களால் செய்யக் கூடியதெல்லாம் வாழ்நாள் முழுவதும் அதற்கான வட்டி மட்டுமே உங்களால் செலுத்த முடியும் என்று வைத்துக் கொள்வோம். கடைசியில் நீங்கள் இறக்கும் பொழுது, உங்கள் கடனின் பெரும்பகுதி அடைக்கப்படாதபடியால் உங்களுக்கு கடன் கொடுத்தவர்களிடம் தயை பெறாத நிலையிலேயே நீங்கள் மரிப்பீர்கள். இந்த கடனானது உங்கள் ஆகாயத்திலிருந்து சூரிய ஒளியை எடுத்துப் போடுகின்றது; வாழ்க்கை என்பது அழகுமிக்க ஒரு கனவாக இருப்பதற்குப் பதிலாக, தாங்க முடியாத அச்சுறுத்தும் கனவாகி விடுகின்றது.

பிறகு, ஒருவேளை உங்களை மீட்பதற்காக வந்த ஒரு கோடீஸ்வரர், "உங்களுக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு உரிய வட்டியை நான் உங்களுக்காகச் செலுத்தி, உங்களை அவர்களுடன் நல்நிலையில் இருக்கச் செய்கிறேன். மேலும் நீங்கள் இறக்கும் பொழுது நான் அசலையும் (திருப்பிச்) செலுத்தி விடுவேன்" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். அது ஒரு நற்செய்தியாக உள்ளது, ஆனால் இன்னமும் நீங்கள் உங்கள் வாழ்வின் எஞ்சிய பகுதியைக் கடனாளியாகவே நிலைத்திருந்து வாழ வேண்டியவராக இருக்கின்றீர்கள். உங்கள் மரணம் வரையிலும் நீங்கள் கடனில் இருந்து விடுதலையாக மாட்டீர்கள்.

இப்பொழுது, ஒருவேளை இன்னொரு கோடீஸ்வரர் வந்து, உங்கள் கடன் முழுவதையும் தாம் செலுத்தித் தீர்ப்பதாகக் கூறுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர், "நீங்கள் இந்த நாள் முதல் இனி என்றென்றும் கடனில் இருந்து விடுதலையாகியிருக்கும்படி உங்கள் கடன் முழுவதையும் நான் திரும்பச் செலுத்தி விடுவேன்" என்று கூறுகின்றார். இது எல்லாவற்றிலும் மிகச் சிறந்த செய்தியாய் இருப்பதில்லையா? முதலாவது வந்த உதவியாளர் வருங்காலத்தில் மன்னிப்பை அளித்தார், ஆனால் இரண்டாவதாக வந்தவரோ உண்மை நிலையில் மன்னிப்பை வழங்குகிறார்; இவர் ஒரு புது வாழ்வை, இன்றிலிருந்து தொடங்குகின்ற ஒரு புது வாழ்வை அளிக்கின்றார்.

நாம் நீதிமான்களாக்கப்பட்ட மக்களாக கிறிஸ்துவின் சரீரத்தினுள் வாழ்கின்றோம். நாம் கடந்த காலப் பாவங்கள் எல்லாவற்றிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 3:24), மற்றும் நாள்தோறும் நாம் செய்கின்ற பாவங்களில் இருந்தும் நாம் தொடர்ந்து சுத்திகரிக்கப் படுகின்றோம் (1 யோவா. 1:7). புதிய உடன்படிக்கையின் மன்னிப்பின் மூலமாக நாம் முற்றிலும் கடனிலிருந்து விடுதலையாக்கப்படுகின்றோம். இந்த ஆசீர்வாதம் மட்டுமே நமது இருதயங்களில் மகிழ்வின் தொடர் பாடல் ஒன்றை வைக்க வேண்டும்! நமது நன்றியுடமையானது நமது மீட்பருக்கு ஓயாத ஊழியம் செய்யும்படி நம்மைத் தூண்ட வேண்டும்.

ஒரு புதிய ஐக்கியம்

புதிய உறவு, அதாவது புதிய உடன்படிக்கையில் பிரவேசிப்பவர்களுக்கு அளிக்கப்படும் தேவனுடனான புதிய உறவு என்பது இரு உடன்படிக்கை

களுக்கும் இடையிலுள்ள மூன்றாவது வேறுபாடாக உள்ளது. தேவன், “அப்பொழுது, சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்து கொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை” (எபி. 8:11) என்று தேவன் உரைத்தார்.

புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனுடனான நமது உறவானது, பழைய உடன்படிக்கை கொடுத்ததைக் காட்டிலும் அதிகம் நெருக்க மானதாக, தனிப்பட்டதாக உள்ளது. சபை என்பது தேவன் தங்கும் இடமாக உள்ளது.

புதிய பிறப்பானது நம்மைப் புதியதொரு ஐக்கியத்தினுள் கொண்டு வருகின்றது. புதிய உடன்படிக்கையினுள் இருக்கின்ற ஒவ்வொருவரும் தேவனுடைய குடும்பத்தினுள் ஆவிக்குரிய பிறப்பினால் புதிய உடன் படிக்கையில் பிரவேசிக்கத் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளனர் (யோவா. 3:5). இவ்விதமாக, புதிய உடன்படிக்கையினுள் இருக்கின்ற ஒவ்வொரு நபரும் தேவனுடன் ஒரு தந்தை/பிள்ளை உறவை நிலைநிறுத்திக் கொள்கின்றார் (கலா. 4:6, 7). இந்தப் புதிய உடன்படிக்கைக்கு அஸ்திபாரம் இட்டவர் என்ற வகையில் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, “பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே” என்று ஜெபிக்குமாறு போதித்தார் (மத். 6:9). புதிய உடன் படிக்கையானது எல்லா உடன்படிக்கைகளையும் போலவே சட்டங்களைக் கொண்டுள்ளது, ஆனால் இது தேவனுடனான நெருங்கிய, தனிப்பட்ட உறவைத் தனது மையமாகக் கொண்டுள்ளது.

ஒரு பெண்மணி ஒரு புத்தகத்தை வாசித்து அது சலிப்பூட்டுவதாகக் கண்டறிகிறாள் - அது தனது நேரத்தை வீணடித்ததாகக் கருதுகின்றாள். பிற்பாடு, அவள் அந்தப் புத்தகத்தை எழுதியவரின் பெயர் கொண்ட ஒரு மனிதரைச் சந்தித்தாள். முதலில் அவள் பெயர்களில் உள்ள ஒற்றுமையைக் கவனிக்கவில்லை; ஆனால் அவர்கள் நெருங்கிப் பழகிய பிறகு, மற்றும் காதல் கொண்ட பிறகு, கடைசியில் அவள், “உங்கள் பெயர் கொண்ட ஒரு மனிதர் எழுதிய புத்தகம் ஒன்றை நான் ஒருமுறை வாசித்தேன். நீங்கள் அந்த எழுத்தாளருக்கு உறவினரா?” என்று கேட்டாள். அதற்கு அவர், “ஆம், நானே அந்த மனிதன். அந்தப் புத்தகத்தை நான்தான் எழுதினேன்” என்று பதில் அளித்தார். அவள் தன்னால் முடிந்த அளவு விரைவில் அவரது புத்தகத்தை மீண்டும் வாசித்தாள்; இந்த முறை, அவள் தான் படித்த வற்றிலேயே அந்தப் புத்தகம் மிகவும் ஆர்வமூட்டுவதாக இருப்பதாய்க் கண்டாள்! அந்தப் புத்தகத்தின் இரண்டு வாசித்தல்களிலும் வித்தியாசத்தை ஏற்படுத்தியது எது? ‘‘உறவு’’ என்ற வார்த்தையில் இதற்கான பதில் காணப்படுகின்றது. முதல் வாசிப்பில், அவள் அந்தப் புத்தகத்துடன் மட்டுமே பழக்கம் கொண்டிருந்தாள்; இரண்டாவது வாசிப்பிலோ அவள் அந்தப் புத்தகத்தை எழுதியவருடன் பழக்கம் கொண்டிருந்தாள். அந்த எழுத்தாளருடன் அவள் கொண்டிருந்த பழக்கமானது அவளுடைய நோக்கத்தையும் மற்றும் அவளுடைய ஆர்வத்தின் அளவையும் மாற்றியிருந்தது!

பழைய உடன்படிக்கை என்பது அந்தப் புத்தகத்தை முதலாவது

வாசித்தது போலிருக்கையில், புதிய உடன்படிக்கை என்பது இரண்டாவது வாசித்தது போல் இருக்கிறது. புதிய உடன்படிக்கையின் கீழ், நாம் தேவனுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளோம். அவர் நமது பரலோக தந்தையாக உள்ளார், நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கின்றோம் (ரோமர் 8:17). தேவனும் அவருடைய குமாரனும் நமது அன்றாடத் துணையாளர்களாய் இருக்கின்றனர் (1 யோவா. 1:3). பரிசுத்த ஆவியானவரும் நமக்குள்ளாக வாழ்கின்றார் (1 கொரி. 6:19). நாம் தேவனிடம் ஜெபித்து, அவரது வசனத்தைப் பின்பற்றி, தேவன், குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் நமது உறவின் முழு மகிழ்ச்சியினால் அவருடைய ஊழியத்தைச் செய்கின்றோம்.

முடிவுரை

சபையானது, புதிய உடன்படிக்கையினால் உண்டாக்கப்பட்டது. எனவே புரிந்து கொள்ளக் கூடிய வகையில், சபையானது புதிய இருதயங்கொண்ட, புதிய உண்மைத் தன்மை நிறைந்த, புதிய மன்னிப்புப் பெற்ற, மற்றும் தேவனுடன் ஒரு புதிய உறவும் ஐக்கியமும் கொண்டுள்ள மக்களின் அமைப்பாகக் கண்ணோக்கப்பட வேண்டும். தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்குரிய வகையில் பிறந்துள்ளவர்கள் என்ற அளவில் அவருடைய பிரமாணங்களை நாம் நமது இருதயங்களில் எழுதப் பெற்றுள்ளோம். நாம் அன்பினால் செயல்படும் விசுவாசத்தின் மூலம் அவருடைய சித்தத்தை நாடுகின்றோம் (கலா. 5:6). நாம் உண்மையான மன்னிப்பைப் பெற்றுள்ள, நமது பாவக் கடன் “முற்றிலும் செலுத்தித் தீர்க்கப்பட்ட” மக்களாய் இருக்கின்றோம். தேவன் நமது பரலோக பிதாவாக இருக்கின்றார், மற்றும் இயேசு நமது மூத்த சகோதரர் ஆகியிருக்கின்றார். ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளே வாழ்கின்றார் (கலா. 4:6).

புதிய உடன்படிக்கையானது உலகளாவிய பயன்பாட்டைக் கொண்டுள்ளது, ஏனெனில் இயேசு, “நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்” (மாற். 16:15, 16) என்றுரைத்தார். இரட்சிப்பிற்கான தேவனுடைய செய்தியை ஏற்றுக் கொண்டு, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுடன் அதற்குப் பதில்செயல் செய்கின்ற எவரொருவரும் இந்தப் புதிய உடன்படிக்கையில் பிரவேசித்து, தேவனுடனும் கிறிஸ்துவுடனும் அவருடைய குடும்பமாக அல்லது சபையாக வாழ்கின்றார். அவர் இந்த உடன்படிக்கையின் பாகமாகி இதன் ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் பெறுகின்றார்.

தேவனுடனான இந்த ஒப்பந்தமானது எந்த ஒரு மனிதரும் எப்பொழுதும் ஏற்படுத்தும் வேறு எந்த ஒப்பந்தத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாக உள்ளது என்ற கருத்து தொடருகின்றது. இது ஒரு நபர் தனது சிந்தையில் பயன்படுத்தக் கூடிய மிக உயர்ந்த மற்றும் மேன்மையான

பயன்பாடாக உள்ளது. அவர், தனிப்பட்ட சம்மதத்தினால், சுயாதீனமான ஒழுக்கத் தேர்வினால், என்றென்றும் வாழும் தேவனுடனான ஒருக்காலும் முடிவுறாத உடன்படிக்கையினுள் பிரவேசிக்கின்றார். நம்முடைய பெரும்பாலான ஒப்பந்தங்கள் தற்காலிகமானவைகளாக, தங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றும் வரை மட்டுமே இருப்பவைகளாக உள்ளன; தேவனுடனான இந்த ஒப்பந்தமானது வாழ்வை மாற்று வதாகவும், காலப் பொழுதில் நித்தியமானதாகவும் உள்ளது.

தேவனுடைய உடன்படிக்கையைப் புரிந்து கொள்ளுதலும், இந்தப் புதிய உடன்படிக்கையினுள் வருவதும், மற்றும் இந்தப் பூமியில் நாம் சஞ்சரிக்கும் காலம் முடியும் வரை அந்த உடன்படிக்கையில் உள்ள நமது பங்கை நிறைவேற்றுவதுமே நமது வாழ்வின் பணியாக உள்ளது. தேவனு டைய புதிய உடன்படிக்கையினுள் பிரவேசிக்க நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றீர்களா?

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. கிறிஸ்தவரின் பதில்செயல் என்பது நீடிக்காததாயிருக்க வேண்டுமா அல்லது குறிப்பிட்ட நோக்குடையதாயிருக்க வேண்டுமா?
2. கிறிஸ்தவர் தாம் எந்த அரசின் கீழ் வாழ்கின்றாரோ, அந்த அரசுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகள்/கடமைகள் யாவை?
3. கிறிஸ்தவர் கொண்டுள்ள இருபரிமாணக் குடியுரிமை என்ன? மற்றும் அவரது முன்னுரிமை எதுவாயிருக்க வேண்டும்? எந்தக் குடியுரிமை அதிகம் முக்கியமானதாக உள்ளது?
4. தேவன் தம் மக்களுடனான தமது பிரமாணத்தை அல்லது உடன்படிக்கையை மாற்றியுள்ளாரா? உங்கள் பதிலை மெய்ப்பிக்கும் வேத வசனப் பகுதி ஒன்றைக் குறிப்பிடவும்.
5. இஸ்ரவேலுடன் தேவன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையினுள் ஒரு யூதர் எவ்விதம் பிரவேசித்தார்?
6. இன்றைய நாட்கள் தேவன் தம் மக்களுடன் ஏற்படுத்தியுள்ள உடன்படிக்கையில் கிறிஸ்தவர் எவ்வாறு பிரவேசிக்கின்றார்?
7. உங்கள் இருதயத்தில் எழுதப்பட்டுள்ள சட்டம் ஒன்றிற்கான (உங்கள்) தனிப்பட்ட விவரிப்பு ஒன்றைக் கொடுக்கவும்.
8. பழைய உடன்படிக்கையின் நாட்களில் தேவன் தம் மக்களுக்கு மன்னிப்பை எவ்விதம் வழங்கினார்?
9. இன்றைய நாட்களில் தேவன் அருளுகின்ற மன்னிப்பை, அவர் பழைய ஏற்பாட்டின் காலங்களில் அருளிய மன்னிப்புடன் ஒப்பிடவும்.
10. “நீதிமானாக்கப்படுதல்” என்ற வார்த்தையை பாவத்திலிருந்து

இரட்சிப்பு என்ற வகையில் புதிய ஏற்பாட்டின் சந்தர்ப்பப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளபடி விளக்கி யுரைக்கவும்.

11. பழைய ஏற்பாட்டுக் குடும்பம் ஒன்று, “கர்த்தரை அறிந்து கொள்” என்பதாக ஒருவர் மற்றவருக்குப் போதிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது ஏன்?
12. புதிய உடன்படிக்கையில் தேவனுடன் கிறிஸ்தவரின் உறவை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்?
13. புதிய உடன்படிக்கையானது உலகளாவிய பயன்பாட்டை நோக்கம் கொண்டது என்று காண்பிக்க புதிய ஏற்பாட்டின் வசனப் பகுதிகளைப் பயன்படுத்தவும்.
14. ஒருவர் தம் சிந்தையைக் கொண்டு பயன்படுத்தக் கூடிய மிக உயர்ந்த மற்றும் மேன்மையான பயன்பாடு என்ன?

6

“கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்”

“கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு ...” (ஏசா. 2:2).

தேவனுடைய ஆளுமைத் தன்மை, பண்பு மற்றும் சித்தம் ஆகியவை பற்றி அறியக் கூடியவற்றில் பெரும்பான்மையானவைகள் அவருடைய வசனமாகிய வேதாகமத்தில் இருந்தே கற்றுக் கொள்ளப்பட வேண்டும். இருப்பினும் இந்த சத்தியமானது, அவருடைய மற்றொரு புத்தகத்தை - அவரது உலகத்தை, இயற்கையின் புத்தகத்தை - படிப்பதில் இருந்தும் நாம் தேவனைப் பற்றி உய்த்துணரக் கூடிய இன்றியமையாத பொதுவான உண்மைகளை கண்டு கொள்ளாது விட்டு விடக் காரணமாகி விடக்கூடாது.

தேவன் அழகு மிக்க பொருட்களை விரும்புகின்றார் என்பது நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்து தேவனைப் பற்றி நமக்குக் கிடைக்கின்ற அவருடைய பண்புகளில் ஒன்றாக உள்ளது. இதனை நாம் வண்ணமிக்க மயில்களின் கெம்பீரத்திலும், வெண்பனி சூடிக் கொண்டுள்ள மலைகள் தங்கள் அடிவாரத்தில் பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற பசும் புல்வெளியையும் தங்கள் மேல்பகுதியின் பின்னணியில் நீலவானத்தையும் கொண்டு விளங்கும் அழகிலும் காண்கின்றோம். இருளாக்கப்பட்ட வான மண்டலத்தில் கருப்பு வெல்வெட் போர்வைக்கு மேலே வைரம் போல மின்னுகின்ற நட்சத்திரங்களினால் இது அறிவிக்கப்படுகின்றது. இது எல்லா வண்ணங்களிலும் மற்றும் எல்லா வடிவங்களிலும் பூமியின் மீதுள்ள பூக்களில் காணப்படுகின்றது. லைலக், ரோஜா, லில்லி, ஆர்ச்சிட் மற்றும் ஏராளமான வகையிலும் இப்பூக்கள் தோட்டங்களையும், மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் மற்றும் பசும்புல் வெளிகளையும் அலங்கரிக் கின்றன. நமது உலகின் இந்த தனிச்சிறப்பான அம்சங்களைக் கவனித்தறிந் தும், தேவன் வசீகரத்தையும், அழகு மிக்க தன்மையையும் மதிக்கின்றார் என்று யாரால் முடிவெடுக்காதிருக்கக் கூடும்?

இயல்பான உலகில் மட்டுமின்றி, ஆவிக்குரிய வட்டாரத்தில் கூட தேவனுடைய பண்பானது இன்னும் அதிகம் தெளிவாய்க் காணப் படுகின்றது. உற்று நோக்கலின் மூலமாகவும் மற்றும் வேத வசனங்களி லிருந்தும்கூட நாம், தேவனுடைய அன்றாட ஒழிந்து போகாத

கிருபையானது ஆத்தும ஆதாயத்தில் படைப்புச் செயல்புரிவதை அறிய முடியும். அவர் அழகு மிக்க பொருட்களை நேசிக்கிறார் என்பது உண்மையாகவே இருக்கின்றது, ஆனால் அவர் அழகுமிக்க மக்களை நேசிக்கிறார் என்பது இன்னும் பெரிய உண்மையாக இருக்கின்றது. தேவன் பாவியை நேசிக்கிறார், ஆனால் யாரோ ஒருவர் கூறியுள்ளபடி, "அவர் (பாவி) இருக்கும் நிலையில் அப்படியே விட்டுவிடுவது அவரால் (தேவனால்) இயலாத அளவுக்கு அவர் (தேவன்) அவரை (பாவியை) நேசிக்கிறார்." அவருடைய இரக்கத்தில், தேவன் இயேசுவின் மூலமாக பாவியிடம் இறங்கி வந்து சேர்ந்து, அவரை (பாவியை) வசீகரமான, கிறிஸ்துவைப் போன்ற நபராக மறுஉருவாக்குகின்றார்.

தேவனுடைய இந்த பண்பின் வெளிச்சத்தில், பரிசுத்த ஆவியானவர் எதிர்கால இஸ்ரவேலை-சபையை-ப்பற்றி, கர்த்தருடைய மகிமையுள்ள வீடாக, ஒப்பற்ற ஆவிக்குரிய அழகினாலும் மேன்மையினாலும் அலங்கரிக்கப்பட்டதாகத் தீர்க்கதரிசனத்தில் சித்தரித்தார் என்பது பற்றி நாம் திகைப்படையக் கூடாது (ஏசா. 2:2-4). அவரது உருவகத்தில், சபை என்பது ஒரு குளிர்ந்த கல்கட்டிடம் அல்ல, ஆனால் அது தன்னைப் பற்றியுள்ள திரளான இருதயங்களின் வசீகரத் தன்மையினால் (மற்றவர்களைக்) கவர்ந்து சேர்க்கும் உயிருள்ள மலையாக உள்ளது.

ஏசாயாவின் இந்த வசனப் பகுதியானது சபையைக் குறிக்கின்றதில்லை ஆனால் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு எருசலேம் மீண்டும் கட்டியெழுப்பப்பட இருந்ததைக் குறிக்கும் ஒரு முன்னுரைத்தல் என்று வாதிடப்படலாம். ஒருவேளை இந்தத் தீர்க்கதரிசனமானது இரட்டை அர்த்தம் கொண்டுள்ளதாயிருக்கலாம். ஒன்று *அந்த நாளுக்கு* - நாடு கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இயல்பான எருசலேம் கட்டியெழுப்பப்பட்டது - மற்றும் ஒரு *தொலைதூர நாளுக்கு* - பெந்தெகொஸ்தே நாளன்று சபை ஸ்தாபிக்கப்பட்டது. இருப்பினும், இந்தத் தீர்க்கதரிசனத்தின் 2ம் வசனத்தில் உள்ள "கடைசி நாட்களில்" என்ற சொற்றொடரை சபையின் நிலைநாட்டம் தவிர வேறு எதற்கும் பயன்படுத்துவதற்கு முடிவான ஆதாரம் எதுவும் ஏசாயாவின் புத்தகத்தில் காணப்படுவதில்லை. இதை செரூபாபேல், எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் காலத்தில் இயல்பான எருசலேம் கட்டியெழுப்பப் பட்டதற்கு மாத்திரம் பயன்படுத்துதல் என்பது, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் சபையைப் பற்றிய பொதுவான போதனைகளின் வெளிச்சத்தில் காண்கையில் ஆதாரமற்றதாக உள்ளது. "கடைசி நாட்களில்" என்ற சொற்றொடரானது, இது கிறிஸ்துவின் யுகத்தின் தொடக்கத்தில் அமைவு பெறும் ஒரு நிகழ்ச்சியின் தீர்க்கதரிசனம் என்று சைகை காட்டுகின்றது. இந்த முன்னுரைத்தலானது, சபை தொடங்குதல் என்ற அடைவதற்கு அரிய நிகழ்ச்சியின் காரணத்தினால் அது நடக்குமிடமாகிய எருசலேமை எதிர்காலச் சந்ததிகள் யாவும் ஒரு நாளில் பின் நோக்கிக் காணும் என்று கூறுகின்றது. உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு, "கடைசி நாட்கள்" என்ற கிறிஸ்துவின் யுகமானது பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதுடனும், சபை ஸ்தாபிக்கப்பட்டதுடனும் தொடங்கியதாக விளக்கப்படுத்தினார் - (அப். 2:16-21).

ஏசாயாவிலிருந்து வரும் இவ்வசனப்பகுதியை (மீகா 4:1-3லும் கூட எடுத்துரைக்கப்பட்ட கூற்றினை) சபையின் மாண்பையும் மேன்மையும் காண்பதற்கான தீர்க்கதரிசன உருப் பெருக்கியாக இருக்கும்படி நாம் அனு மதிப்போம். இந்த வசனப்பகுதியை நாம், வரப் போவதாயிருந்த இராஜ்யமாகிய சபையின் மேன்மையைக் குறிக்கும் தீர்க்கதரிசனமாய் மதிப்போம், ஆனால் சபையின் ஒவ்வொரு பண்பும் புதிய ஏற்பாட்டின் தெளிவான போதனையுடன் இந்த தீர்க்கதரிசனத்தில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளதையும் நாம் மதிப்போம்.

சபையின் அழகை ஏசாயா எவ்விதத்தில் விவரித்தார்?

அதன் பரவலான மதிப்பின் மூலம்

முதலாவதாக, ஏசாயா சபையின் விரும்பத்தக்க தன்மையை அது அறியப்படும் பரவலான மதிப்பின் மூலம் சித்தரித்தார். அவர், "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடி யில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்" (ஏசா. 2:2) என்று எழுதினார். சபையின் மேன்மை மிக்க பண்புகளை பூமியின் எல்லா மக்களும் உணர்ந்தறிவார்கள் மற்றும் அதை நோக்கி அவர்கள் இழுக்கப்படுவார்கள்.

சபையானது எருசலேமில் உள்ள மலையின் மீது அமைந்துள்ள கர்த்தருடைய ஆலயம் என்று உருவக முறையில் சித்தரிக்கப்படுகின்றது. அந்த ஆலயத்தின் ஒளி வீசுதலானது எல்லா இனத்தவரின் பாராட்டையும் பெற்று, அவர்கள் அந்த மலைக்கு வந்து அதன் மீது ஏறுவார்கள். ஏசாயா, அந்த மலையானது தேவனுடைய நோக்கங்களுடன் அதற்குள்ள தொடர் பினால் உலகத்தின் மற்ற எல்லா மலைகளுக்கும் மேலாக உயர்த்தப்படும் என்று கூறினார்.

சபையின் உலகளாவிய ஈர்ப்புத் தன்மையை புதிய ஏற்பாடு வெளிப் படுத்துகின்றது. இயேசு, "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" (மத். 8:11) என்று கூறிய பொழுது, அதன் உலகளாவிய தன்மையை முன்னுரைத்தார்.

எருசலேமின் வீழ்ச்சியைப் பற்றியவற்றை மையப்படுத்தியிருந்த ஒலிவ மலை உரையாடலில் இயேசு, சுவிசேஷம் மிகவும் பரவலாகப் பிரசங்கிக்கப் படுதலைக் குறித்து வாக்களித்தார். "இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும் ..." (மத். 24:14). இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்ததைத் தொடர்ந்து, சுவிசேஷத்தின் உலகளாவிய ஊழிய அறிவித்தல் குறித்து அவர் கட்டளையிட்டார்: "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15). பெந்தெகொஸ்தே நாளன்று முதன் முதலாகச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்ட பொழுது, "வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள்" (அப். 2:5, 9-11) அதைக் கேள்விப்பட்டு மற்றும்

அதற்குக் கீழ்ப்படிந்தனர் என்பது உறுதியானது. ஒருவேளை, "எல்லா மக்களுக்கும்" (சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்ற) கட்டளை கொடுக்கப்பட்டு சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு (அல்லது) அதற்குள்ளாகவே, பவுல் கொலோசெயருக்கு, "நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ. 1:22, 23) என்று எழுத முடிந்தது.

வெளி. 5:9, 10ல் தேவனுடைய அரியணைக்கருகில் கேட்கப்பட்ட/ பாடப்பட்ட புதுப்பாட்டு என்பது ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தின் மூலம் ஒவ்வொரு இனத்திலும் கோத்திரத்திலுமிருந்து இரட்சிப்பினால் களிகூர்ந்த மக்களால் பாடப்பட்ட துதிப் பாடலாக உள்ளது. வானத்தின் சேனைகள், "தேவரீர் புத்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத் தினாலே மீட்டுக் கொண்டு ..." என்று பாடுகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், முழு உலகிலும் உள்ள மக்கள் கிறிஸ்துவின் யுகத்தின் போது சுவிசேஷத்தினாலும் மற்றும் சபையினாலும் இணக்கம் கொள்ளச் செய்யப்படுவார்கள்.

சபையானது எருசலேமில் உள்ள மலையின் மீது அமைந்துள்ள
கர்த்தருடைய ஆலயம் என்று உருவக முறையில்
சித்தரிக்கப்படுகின்றது. அந்த ஆலயத்தின் ஒளி வீசுதலானது
எல்லா இனத்தவரின் பாராட்டையும் பெற்று,
அவர்கள் அந்த மலைக்கு வந்து அதன் மீது ஏறுவார்கள்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ஹார்டிங் பல்கலைக் கழகத்தின் ஹோவர்டு ஹார்ட்டன் அவர்களை எங்கள் (தற்காலிக/வந்து போகும்) ஊழியராக மகிழ்வுடன் பெற்றிருந்தோம். அவர் ஒரு மறைவான விவரிப்பைப் பயன்படுத்தியதை நான் கேள்வியுற்றேன்: இவர் பல நாடுகளில் ஊழியராகப் பணியாற்றி, அவர் சென்றிருந்த இடங்கள் எல்லாவற்றிலும் தேவன்மேல் உள்ள விசுவாசமானது மக்களுக்கு நியாய மானதாக இருப்பதாகக் கண்டறிந்தவராவார். இதை அவர் கணக்குப் பாடத்தைப் போதிப்பதுடன் ஒப்பிட்டார். உலகம் எங்கிலும் உள்ள பிள்ளைகளுக்கு இரண்டும் இரண்டும் நான்கு என்று போதிக்கப்படும் பொழுது, ஏதோ ஒன்று அவர்கள் சிந்தைகளில் பளிச்சிட்டு, அவர்கள், "அது சரியானது. அது உண்மையானது" என்று கூறுகின்றனர். அது போலவே, சர்வ வல்லமையுள்ள தேவன் உலகத்தையும் மனிதனையும் உண்டாக்கினார்,

அவர் மனிதன் மேல் அன்புகூருகின்றார், மற்றும் அவர் மனிதனை இரட்சிக்க விரும்புகின்றார் என்று மக்களுக்குப் போதிக்கப்படும் பொழுது, அவர்களின் சிந்தைகளில் ஏதோ ஒன்று அந்த நம்பிக்கையை ஏற்றுக் கொள்கின்றது, மற்றும் அவர்கள். "அது சரியானது. அது நிச்சயமாகவே உண்மையாக உள்ளது" என்று கூறுகின்றனர்.

இந்தக் கோட்பாடானது சபையைப் பொறுத்தமட்டில் உண்மை யானதாக உள்ளது. சபையின் வசீகரிக்கும் பண்புக்குச் சாட்சியம் தரும் தேவனுடைய வசனத்துடன் கூடுதலாக நமது சொந்த இருதயங்களில் அதே போன்ற தீர்ப்பையும் நாம் கொண்டிருக்கின்றோம். உலகத்தின் எப்பகுதி யிலாவது புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிப் போதிக்கப்படும் மக்கள் "அது சரியானதாக இருக்க வேண்டியுள்ளது" என்று பதில் அளிக்கின்ற ஏதோ ஒன்றை தங்கள் சிந்தைகளில் பெற்றுள்ளனர். சபையை நோக்கி இழுக்கின்ற தாக மக்கள் பெற்றுள்ள இந்த ஈர்ப்பு ஈடு இணையற்றதாக உள்ளது; இது உற்று நோக்க மிகவும் அற்புதமானதாக உள்ளது. சபை என்றால் என்ன என்று மக்கள் புரிந்து கொள்ளும் பொழுது, அவர்கள் விளக்கு நோக்கி வந்து சேரும் விட்டில்களைப் போல் ஆகின்றனர். உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் புதிய ஏற்பாட்டின் சபையைப் பாராட்டுகின்றனர்.

சபையின் பொதுப் புகழ்வை கொஞ்சம் சிந்தையுடனேயே புரிந்து கொள்வது சுலபமாக உள்ளது. மக்கள் இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டு, நித்திய வாழ்வைப் பெறும்பொழுது, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக ஒன்றுகூடி தேவனுக்கென்று வாழ்ந்து, ஊழியம் செய்து அவரை ஆராதிக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் பெயரைச் சூடிக் கொண்டு பரலோகத்தில் நித்தியமான மகிமையை எதிர்பார்க்கின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து, இரட்சகரை அறிந்திராதவர்களுக்கு இரட்சிப்பின் செய்தியைக் கொடுக்க நாடுகின்றனர். அவருடைய சபையாராக இருப்பது என்பது அற்புதமானதாக உள்ளது! பூமியில் உள்ள எல்லா இனங்களும், நாடுகளும், குலங்களும் மற்றும் குடும்பங்களும் சபையின் மதிப்பைக் கண்டு, அதற்குள் ஓடி வருதலில் வியப்பெதுவும் இல்லை.

அதன் பிரசங்கித்தலின் மூலம்

இரண்டாவதாக ஏசாயா, சபையின் மகிமையானது அதன் பிரசங்கித்தலில் காணப்படுகிறது என்று கூறினார். அவர் பின்வருமாறு எழுதினார்:

> திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் (ஏசா. 2:3).

கர்த்தருடைய வசனமாகிய சுவிசேஷமானது எருசலேமில் கர்த்தருடைய

இல்லத்திலிருந்து புறப்படும் நாளானது தேவனுடைய ஆவியானவரால் தரிசனமாய்த் தரப்பட்டது.

கர்த்தருடைய பிரமாணத்தைப் பெறுவதற்காக மக்கள் எருசலேமில் உள்ள கர்த்தருடைய இல்லத்திற்கு வருவதாயிருந்தனர். அவர்கள் பிரமாணத்தின்படி வாழ வேண்டும் என்பதை அறிந்தவர்களாய், கர்த்தருடைய பாதைகளில் நடப்பதற்காக எருசலேமில் இருந்து புறப்பட்டுச் செல்லுவார்கள். எருசலேமின் மீதுள்ள வலியுறுத்தமானது "கடைசி நாட்கள்" தொடங்கிய பொழுது புதிய யுகத்தின் தொடக்க இடமான எருசலேமே ஒவ்வொருவரும் நோக்கியதைச் சுட்டிக் காண்பித்தது: "... ஏனெனில் சீயோனிலிருந்து, வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் புறப்படும்."

புதிய ஏற்பாட்டில், இயேசு, சபை (அல்லது கிறிஸ்தவ) யுகத்தின் தொடக்கத்தினுடைய இடமாக எருசலேமைக் குறித்திருந்தார். அப்போஸ்தலர்களுக்கான அவருடைய கட்டளையில் அவர் பின்வருமாறு கூறினார்:

> எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக். 24:46-49).

அதே போன்று, இயேசு தாம் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பாக, தமது அப்போஸ்தலர்களுக்கு, பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும் என்று புத்தி கூறினார். லூக்கா, "அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது ... நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் ... பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" (அப். 1:4, 5) என்று எழுதினார். பத்து நாட்களுக்குப் பிறகு, அப்போஸ்தலர்கள்மீது பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்டு, அவர்களைப் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானப் படுத்தி, இவ்விதமாக "கடைசி நாட்கள்" தொடங்கிற்று (அப். 2:1-4, 16-21). இந்தப் பொழிந்தருளலின் இந்த நாளில், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பேதுரு பிரசங்கித்த பொழுது, ரோம உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து (அங்கு வந்து கூடியிருந்தவர்களில்) மூவாயிரம் பேர் அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் (அப். 2:41, 47). கர்த்தருடைய வசனமானது அப்போஸ்தலருடைய பிரசங்கித்தலின் மூலமாக எருசலேமிலிருந்து புறப்பட்டது, மற்றும் ரோமப் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த மக்கள் கர்த்தருடைய பாதையில் நடக்கத்

தொடங்கினார்கள்.

இந்த உலகில் உண்மையிலேயே மதிப்புடையது எது? பணம் குவித்துச் சேர்ப்பதா? அறிவை அதிகமாய் ஆதாயப்படுத்திக் கொள்வதா? உலகளாவிய தராதரத்தை அடைவதா? அநேகமாக, நம்மில் எவரும் இவற்றில் எதையும் வாழ்வின் மிக உயர்ந்த இலக்காகச் சுட்டிக்காட்ட மாட்டோம். இன்றில் இருந்து ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நம்மில் எவரும், மேற்சொன்ன எதையாவது பெற்றிருப்பதால் பயனடையப் போவதில்லை என்ற எளிய காரணத்தினாலேயே இது உண்மையாக இருக்கின்றது. இவைகள் வரையறுக்கப்பட்ட மதிப்புடையவைகளாக மட்டுமே உள்ளன, ஏனெனில் இவற்றின் மதிப்பு என்பது காலத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தேவனுடைய வசனத்திற்கு நமது கீழ்ப்படிதலானது, காலம் கடந்ததாகச் சென்றடைகின்றது, மற்றும் நம்மை நமது கர்த்தரின், ‘‘நன்று செய்தாய்’’ என்ற பாராட்டையும் மற்றும் நித்தியமான வரவேற்பையும் பெறுவதற்கு நித்தியத்திற்குச் சுமந்து செல்லுகின்றது (1 யோவா. 2:16). தேவனுடைய வசனத்தைப் போதிக்கின்ற வர்கள், தங்களால் போதிக்கப்படுகின்றவர்களுக்கு மிக உயர்ந்த தயையைத் தரவழைத்துள்ளனர், ஏனெனில் அவர்களுக்கு நித்திய ஜீவனுக்கான ஒரு வாய்ப்பை இவர்கள் உவந்தளித்துள்ளனர்.

தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தல் என்பது எப்பொழுதுமே சபையின் ஊழியமாக இருந்துள்ளது. கிறிஸ்தவர்கள் உபகார சிந்தையுள்ள வர்களாக, பரிவிரக்கம் உள்ளவர்களாக, மற்றும் நமது கர்த்தரைப் போல் கவனிக்கும் அக்கறையுணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஆனால் அவர் செய்தது போலவே நாமும், நம் மூலமாக மற்றும் - நம்மிலிருந்து சுவிசேஷமானது பூமியெங்கும் செல்லும்படி காண்பதில் கவனம் செலுத்த வேண்டும். சபை என்பது “சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக உள்ளது” (1 தீமோ. 3:15) என்று பவுல் கூறினார். அந்தகாரத்திலிருந்து நம்மை அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் ‘‘வரவழைத்தவருடைய புண்ணியங்களை’’ அறிவிக்கும்படியாக மீட்கப்பட்டவர்களைப் பேதுரு வற்புறுத்தினார் (1 பேது. 2:9). மனித இனம் என்ற கடலினுள் சுவிசேஷம் என்ற தேடும் ஒளியை அனுப்புகின்ற கலங்கரை விளக்காக சபை உள்ளது என்று சபையை ஒப்பிடலாம். நமது பிரசங்கித்தல், தனிப்பட்ட போதனை, அச்சிட்ட செய்திகள், மற்றும் கிறிஸ்துவுக்காக நமது அன்றாட வாழ்வு ஆகியவையே சுவிசேஷமாக, நாம் அனுப்புகின்ற வெளிச்சமாக உள்ளது, இது ஒன்று மட்டுமே அவர்களின் ஆத்துமாக்களை இரட்சிக்க முடியும் (ரோமர் 1:16).

சபையானது அதன் ஊழியத்தினால் மகிமையுள்ளதாக இருக்கின்ற தென்று ஏசாயா கூறினார். எல்லா மக்களுக்கும் என்றென்றைக்குமான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும், தெய்வீகப் பணிப் பொறுப்பில் தன்னை அர்ப்பணித்துள்ளதாக இந்த பூமியில் உள்ள ஒரே ஒரு அமைப்பு இதுவேயாகும். பிரசங்கித்தலின் மேன்மையான மற்றும் ஒப்புரவாக்குதலின் செயல்வலிவின் காரணத்தினால் பவுல் ஏசாயாவின் கூற்றை மேற்கோள் காண்பித்து, ‘‘சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய்

அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" (ரோமர் 10:15; ஏசா. 52:7) என்று கூற முடிந்தது. நாம் அவருடைய வார்த்தைகளைத் தழுவி, "கர்த்தருடைய வசனத்தைப் பூமியெங்கும் அனுப்புதல் என்ற மிக உயர்ந்த நோக்கத்தினால் சபை எவ்வளவு அழகானதாக உள்ளது!" என்று கூறலாம். சபையின் இந்த மிக உயர்ந்த பண்பை யார் தவற விட முடியும்?

அதன் சமாதான வளர்ச்சிப் பணியின் மூலமாக

மூன்றாவதாக, சபையானது அதன் சமாதான வளர்ச்சிப் பணியின் காரணத்தினால் வனப்புள்ளதாக இருக்கின்றது. ஏசாயா பின்வருமாறு கூறினார்:

> அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசா. 2:4).

வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இந்த பூமியின் மீது சபையில் சமாதானம் தங்கியிருக்கும்.

எல்லா நாடுகளிலும்/இனங்களிலும் உள்ள மக்களின் வாழ்வின் மீது தேவனுடைய செல்வாக்கின் மூலம் அவர்கள் மென்மையான சமாதானத்துடன் ஒன்றுகூடி வாழ்வார்கள் என்பதாக வரும் ஒரு யுகம் பற்றி தீர்க்க தரிசனத்தில் ஏசாயா கண்டார். அவர்கள் பிரவேசிக்கும் சபை என்கிற தேவனுடைய இராஜ்யமானது மோதல்கள் மற்றும் முரண்பாடுகளின் இடமாயிராமல், இசைவு மற்றும் அமைதியின் இடமாய் இருக்கும். அவர்கள் விரோதம் மற்றும் பிரிவினையின் யுத்தக் குழுக்களாகப் பிரிய மாட்டார்கள், ஆனால் ஆவியானவரின் மூலமாக ஒரு பொதுத் தன்மைக்குள் ஒன்றாகப் பிணைக்கப்படுவார்கள். யுத்தக் கருவிகள், அமைதியான சமுதாயத்தின் உற்பத்திக் கருவிகளாக மாற்றப்பட்டு இருக்கும்.

ஒருவர் புதிய ஏற்பாட்டை வாசிக்கையில், அதில் "சமாதானம்" என்ற வார்த்தை மேலோங்கி இருப்பதைக் காணத் தவற முடியாது. தேவன், "சமாதானத்தின் தேவனாக" (ரோமர் 15:33) இருக்கின்றார். சமாதானத்தைக் கொண்டு வரவே இயேசு வந்தார். அவருடைய பிறப்பின் போது, தூதர்கள் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக். 2:14) என்று பாடினார்கள். சுவிசேஷமானது, "சமாதானத்தின் சுவிசேஷமாக" (எபே. 6:15) உள்ளது. "சமாதானம் பண்ணுகின்றவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத். 5:9) என்ற மறக்க இயலாத பேறுடன் கிறிஸ்து தம் சீஷர்களை, சமாதானம் பண்ணுகின்றவர்களாக அனுப்பி வைத்தார். அவருடைய அப்போஸ்தலர்களுக்கான அவரது இறுதி வார்த்தைகள் சமாதானத்தின் உயில் உடமைகளாகவே இருந்தன:

“சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக” (யோவா. 14:27).

ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் உள்ளூர் அமைப்பு என்ற வகையில், சபையைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் தரும் முதல் சித்தரிப்பானது, பல நாடுகளில்/இனங்களில் இருந்து வந்தவர்களாக, ஆனால் கிறிஸ்துவின்மூலம் ஒரே சிந்தையாய் ஒன்றுகூடி வாழ்ந்தவர் களாகிய மக்களின் அமைப்பொன்று தரப்படுகின்றது: “விசுவாசி களெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்” (அப். 2:44). அவர்கள் “ஒருமனப்பட்டவர்களாய்” அநுதினமும் தொடர்ந்து நிலைத்திருந்தார்கள் (அப். 2:46).

நமது சிந்தைகள் புரிந்து கொள்ளக் கூடிய மிக வனப்புள்ள பண்புகளில் ஒன்றாக இருப்பது - தேவன் மனிதன் ஆகியோருக்கிடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில், மற்றும் நமது சொந்த இருதயங்களுக்குள்ளாக - உண்மையான சமாதானம் என்பதாகும். ஏதொன்றும் இதற்குப் பதிலாக வைக்கப்பட முடியாது. நமது உலகமானது இடர்ப்பாடு நிறைந்த இடமாக உள்ளது - பயம், தப்பெண்ணம், மற்றும் விரோதம், பொறாமையினால் வேட்டையாடப்படுதல், மற்றும் இருதயத்தின் பாரம் ஆகியவற்றினால் தொந்தரவு படுத்தப்படுகின்றது. இப்படிப்பட்ட உலகத்தில் சமாதானத்தின் இடம் ஒன்று நிலவ முடியுமா? ஆம். சபையே அந்த இடமாக உள்ளதென்று புதிய ஏற்பாடு கூறுகின்றது.

கண்டு பிடிப்பாளர் ஒருவர், ஒரு விசேஷித்த கப்பலைக் கட்ட விரும்பினார் என்று நான் வாசித்துள்ளேன். கடலின் சீற்றத்தினால் அந்தக் கப்பலே அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்பட்டாலும், அதற்குள் எப்பொழுதும் அமைதி நிலையில் இருக்கக் கூடிய உள் அறை ஒன்றுடன் அவர் அக்கப்பலைக் கட்ட விரும்பினார். அலைக்கழிப்புக்களின் மத்தியில், விசேஷமாய் வடிவமைக்கப்பட்ட அந்த அறையில் அமைதியின் இடமொன்று காணப்படும். அவரது பேராவலின் விளைவை நான் அறிவதில்லை, ஆனால் தொடர்ந்த அமைதியான அறை என்ற அவரது சிந்தனையானது சபையின் முழு நிறைவான சித்தரிப்பாக உள்ளது. சபை என்பது, யுத்தத்தினால் நொறுக்கப்பட்ட, விரோதத்தில் பயணம் செய்கின்ற மற்றும் கோபத்தினால் இயக்கப்படுகின்ற உலகில் சமாதானத்தின் இடமாக உள்ளது.

கிறிஸ்துவின் சரீரத்தில் மட்டுமே ஒருவர் உண்மையான சமாதானத்தைக் கண்டறிய முடியும். நாம் உண்மையான சமாதானத்தைக் கொண்டிருப்பதற்கு பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு தேவனுடன் முதலில் சமாதானமாக வேண்டும் (ரோமர் 5:1); அடுத்ததாக நாம் மற்றவர்களுடன் சமாதானத்தை நாட வேண்டும் (ரோமர் 12:18; மத். 5:23-25); பிறகு, இதன் விளைவாக நாம் நமது இடர்ப்பாடுகளைத் தேவனிடத்திற்குக் கொண்டு வருகையில் நமது ஆவியில் நமக்குச் சமாதானம் அளிக்கப்படுகின்றது (பிலி. 4:6, 7). இந்த வகையிலான

சமாதானம் கிறிஸ்துவின் மூலம் மட்டுமே வருகின்றது. சமாதானம் என்பது ஆவிக்குரியதாகவும் கிறிஸ்துவின் மூலம் மீட்படைவதாகவும் உள்ளது - இது வெறுமனே உளவியல் சார்ந்ததாகவோ, உடலியல் சார்ந்ததாகவோ அல்லது சமூகவியல் சார்ந்ததாகவோ இருப்பதில்லை. எனவே சபையை ஏசாயா சமாதானத்திற்குரிய வகைகளில் சித்தரித்துள்ளதைப் பற்றி நாம் திகைப் படையக் கூடாது.

முடிவுரை

சபை என்பது இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட சரீரமாக, தேவனுடைய மகிமை மற்றும் ஞானம் ஆகியவற்றினால் பிரகாசிப்பிக்கப் பட்டதாக உள்ளது. இது முதன்மையான மலையாக மற்ற எல்லா மலைகளுக்கும் மேலாக உயர்ந்துள்ளது. எல்லா இனங்களும் இதன் மாபெரும் தன்மையைக் கண்டு, இதற்குள் ஓடி வந்துள்ளன. இதன் அழகுத்தன்மை இது கொண்டுள்ள பொதுப் புகழ்ச்சியினால், இதன் போதனையினால் மற்றும் இது வளர்விக்கின்ற சமாதானத்தினால் காணப்படுகின்றது, இது இந்த பூமியின் மீது மிகவும் அர்த்தம் நிறைந்த ஊழியத்தைக் கொண்டுள்ளது: இது உலகம் முழுவதற்கும் கர்த்தருடைய பிரமாணத்தை அனுப்புகின்றது. தேவன் தமது சமாதானத்தை இதற்குள்ளாக வைத்து, அதன் மூலம் இதை உலகின் மற்ற எல்லா நிறுவனங்களைக் காட்டிலும் உயர்த்தியுள்ளார்.

நீங்கள் சபையின் உண்மை மதிப்பைக் கண்டு அதை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கின்றீர்களா? நீங்கள் அதற்குள் பிரவேசிக்கத் தயாராக இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் இருதயத்தில், ‘‘நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம்’’ என்று கூறியிருக்கின்றீர்களா? இப்பொழுது நீங்கள் தொடங்கினாலும் அது தாமதமானதாக இருப்பதில்லை. நீங்கள் கர்த்தருடைய பிரமாணத்தை அறிந்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசித்து, அவருடைய வழிகளில் நடந்து, அவர் அருளுகின்ற சமாதானத்தை அறிய முடியும்.

வாழ்க்கை என்ற நாட்காட்டியில் மூன்று நாட்கள் மட்டுமே உள்ளன: நேற்று, இன்று, நாளை. நேற்று என்பது செலவிடப்பட்டு விட்டது, அது கிழிந்து போன ஒரு சட்டையைப் போலவோ அல்லது பழைய தேதியிட்ட ஒரு செய்திப் பத்திரிகையைப் போலவோ ஒழிக்கப்பட வேண்டும். நாளை என்பது ஒரு வாக்குறுதியாக மட்டும், வரப் போகிறதாக உள்ள சாத்திய முள்ளவைகளின் கனவாக மட்டும், என்னவாயிருக்கலாம் என்பது பற்றிய மினுக்கிடும் ஒரு உருவமாக மட்டுமே உள்ளது. இன்று என்பது மட்டுமே நீங்கள் செயல்படக் கூடியதாக உங்கள் நாட்காட்டியில் உள்ள ஒரே ஒரு நாளாகும். நேற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும், மற்றும் நாம் நாளைய தினத்தை எதிர்பார்க்கலாம், ஆனால் நாம் செயல்படக் கூடியதாய் உள்ளது நிகழ்காலத்தில் உள்ள இந்தத் தருணம் மாத்திரமே ஆகும். பவுல்

எழுதியபடி, “இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்” (2 கொரி. 6:2). விசுவாசம் (யோவா. 8:24), மனந்திரும்புதல் (அப். 17:30, 31), இயேசுவை அறிக்கையிடுதல் (ரோமர் 10:10) மற்றும் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் (ரோமர் 6:3) ஆகியவற்றின் மூலம் கர்த்தருடைய வீட்டில் (1 தீமோ. 3:15) இன்றே நீங்கள் பிரவேசியுங்கள். சபையை ஒரு மகிமையுள்ள சரீரம் என்ற வகையில் நாம் அறிந்து உணருகின்றோமா?

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. தேவன் நமக்குக் கொடுத்துள்ள இரண்டு புத்தகங்கள் யாவை? அவை ஒவ்வொன்றிலும் இருந்து நாம் எவ்விதம் கற்றுக் கொள்ளுகின்றோம் என்பதை விவரிக்கவும்.
2. தேவன் பாவியை நேசித்திருந்தும் அவரை (பாவியை) மாறும்படி கேட்டுக் கொள்ள முடிவது எவ்வாறு?
3. ஏசாயா 2:2-4 வசனப் பகுதியானது ஒரு இரட்டைத் தீர்க்கதரிசனம் என்று கூறப்படும் பொழுது அர்த்தப்படுவது என்ன?
4. சபையானது எல்லா மக்களையும் வசீகரிக்கும் தன்மையுடையது என்பதை விவரிக்கவும்.
5. சபையானது உலகளாவிய வசீகரிப்பைக் கொண்டுள்ளது என்ற சிந்தைனையை நிலைநிறுத்த நீங்கள் பயன்படுத்தக் கூடிய வேத வசனப் பகுதிகள் யாவை?
6. சபையின் தொடக்க இடமாக இயேசு எருசலேமைச் சுட்டிக் காட்டினார் என்று குறிப்பிடும் வேத வசனப் பகுதியை கூறவும்.
7. இன்றைய நாட்களில் ஒருவர் எவ்வாறு கர்த்தருடைய பாதைகளில் நடக்க முடியும்?
8. உலகில் உண்மையான மதிப்புடையது எது?
9. இயேசு தம்முடைய சபைக்குக் கொடுத்துள்ள உண்மையான ஊழியம் பற்றிக் கலந்துரையாடவும்.
10. உண்மைச் சமாதானம் எவ்வாறு கொண்டு வரப்படுகின்றது?
11. சபையை சமாதானத்தின் இராஜ்யம் என்று ஏசாயா சித்தரிப்பது ஏன்?
12. உண்மையான சமாதானம் எங்கு காணப்படுகின்றது?
13. இன்றைய நாட்களில் ஒருவர் “சபையை”க் கண்டறிய எங்கு செல்ல முடியும்?

7

“பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது”

“அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்” (மத். 4:17).

நான் முன்பு ஒருபோதும் சென்றிராத இடங்களுக்குச் சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் பிரசங்கிக்கும்படி சில வேளைகளில் கேட்டுக் கொள்ளப் படுவது உண்டு. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் நான் இணைந்து ஊழியம் செய்யும் சகோதரர்கள் எனக்குத் தனிப்பட்ட வகையில் பழக்கமற்றவர் களாய் இருப்பார்கள், எனவே நான் ஒரு புதிய அனுபவத்தையும் உறவுகளையும் பெறுவேன். தொலைபேசி மூலமாக அங்குள்ள சபையின் உறுப்பினர் யாரிடமாவது பேசுகையில் அல்லது நிகழ்ச்சி பற்றிய தபாலை வாசிக்கையில், நான் கண்டு மகிழ்வுடன் அனுபவிக்கவிருக்கும் விஷயம் பற்றிய உருவகமொன்று என் சிந்தையில் வடிவமைக்கப்படும். ஊழியத்திற்கான வேளை வந்து சேர்ந்து, நான் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்ததும், நான் எதிர்பார்த்திருந்ததை நான் கண்டறிந்துள்ள வற்றுடன் ஒப்பிடுதல் என்பது மிகவும் ஆர்வத்திற்குரியதாய் இருக்கும். ஒரு சகோதரர் வந்து என்னுடன் கரம் குலுக்குகையில், நான் எனக்குள்ளாகவே, “இந்த மனிதர்தான் என்னுடன் தொலைபேசியில் உரையாடினாரோ” என்று கூறிக்கொள்வேன். அல்லது பேச வேண்டிய நேரத்திற்காக நான் காத்திருக்கையில், நான் சுற்றிலும் பார்த்து, கவனித்து, “இதுதான் நீங்கள் அறிந்து கொள்வதற்கு ஆவலுடன் இருந்த பிராந்திய சபை” என்று எனக்குள்ளே கூறிக் கொள்வேன்.

இதுபோன்ற சில விஷயங்கள் சபையைக் குறித்து வேத வசனங்களில் நடைபெறுகின்றன. தேவனுடைய இராஜ்யமானது வாழ்வில் சித்தரிக்கப் படுவதற்கு முன்பு, தீர்க்கதரிசனத்தில் முன்கண்ணோட்டமிடப்படுகின்றது; இது முதலில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் தீர்க்கதரிசனத்தில் பாடப் பொருளாய் இருந்து அதன் பிறகு நடபடிகளின் புத்தகத்தில் இது வாழ்கின்ற, இயங்குகின்ற ஆவிக்குரிய சரீரமாக ஆயிற்று.

இவ்விதமாக, இவ்வுலகத்திற்கு சபையின் வருகையானது ஒரு தவறான பிற்சிந்தனையாயிராமல், தெய்வீகமான முன் சிந்தனையாக இருந்தது என்று

நாம் கூற முடியும். இது நித்தியத்தின் கடந்த காலத்தில் அடைய இயலாத் தொலைவில் இருந்து தேவனுடைய முன் தரிசனத் திட்டத்தின் நிறைவேற்றமாக இருந்தது.

வேதாகமம் முழுவதிலும் மூன்று வகையான தீர்க்கதரிசனங்கள் விரவியுள்ளன: பெயர்த் தீர்க்கதரிசனம், இரட்டைத் தீர்க்கதரிசனம் மற்றும் சிறப்பு வகைத் தீர்க்கதரிசனம்.

பெயர்த் தீர்க்கதரிசனம் அல்லது விவரிக்கப்பட்ட முன்னுரைத்தல் என்பது எதிர்கால நிகழ்ச்சியுடன் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது இடம் தனிப்படுத்தப்பட்டு முன்னுரைக்கப்படும் தீர்க்கதரிசனமாக உள்ளது. உதாரணமாக, பலிபீடத்தில் தூபம் காட்ட ஆயத்தம் செய்து கொண்டிருந்த யெரோபெயாம் அரசனிடத்தில் அவன் பெத்தேலில் அமைந்திருந்த பலிபீடத்தின் அருகில் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமை பற்றிப் பெயர் குறிப்பிடப்படாத தீர்க்கதரிசி ஒருவர் பேசினார். யெரோபெயாமைக் கடிந்து கொள்ளுகையில் அந்தத் தீர்க்கதரிசி, பின்னொரு நாளில் யோசியா என்ற அரசர் வந்து மனித எலும்புகளை அப்பலிபீடத்தின் மீது எரித்து அதன் மூலம் யெரோபெயாமின் பலி பீடத்தைக் கனவீனப்படுத்துவார் என்று கூறினார். இந்தத் தீர்க்க தரிசனமானது, முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தெற்கு இராஜ்யத்தின் நல்ல அரசர்களில் ஒருவரான யோசியாவின் சீர்திருத்தக் காலத்தின் போது நிறைவேற்றப்பட்டது (2 இரா. 23:20).

பெயர்த் தீர்க்கதரிசனத்தின் இன்னொரு உதாரணமாக இருப்பது ஏசாயா 44:28ல் பெர்சிய அரசனான கோரேஸ், என்பவனைப் பற்றியதாகும். இவன் - வாழ்வதற்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயாவினால் பெயர் குறிப்பிடப்பட்டு, பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து யூதர்களை விடுவித்து, அவர்களின் தாய் நாட்டுக்கு அனுப்புவித்து எருசலேமைத் திரும்பக் கட்ட உதவுவான் என்று முன்னு ரைக்கப்பட்டார் (ஏசா. 44:28; இ. வ. எஸ்றா 1:1-3). பெயர்த் தீர்க்கதரிசனங்கள் வழக்கமாக வெளிப்படையானவைகளாகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளப்படக் கூடியவைகளாகவும் உள்ளன.

இரண்டாம் வகைத் தீர்க்கதரிசனமான இரட்டைத் தீர்க்கதரிசனம் என்பது, அது உரைக்கப்பட்ட அந்த நாளில் ஒரு பயன்பாட்டைக் கொண்டிருந்ததாகவும், மற்றும் எதிர்காலத்தில் இன்னொரு நாளில் இரண்டாவது பயன்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இந்தத் தீர்க்கதரிசனம் இரு அர்த்தங் களைக் கொண்டிருந்தது, அவற்றில் ஒன்று நிகழ்காலத்திற்கானதாகவும், இன்னொன்று எதிர்காலத்திற்கானதாகவும் இருந்தது. இயேசு கன்னியிடம் இருந்து பிறப்பார் என்பது பற்றிய புகழ் மிக்க வசனப் பகுதியாகிய ஏசாயா 7:14 ஒரு இரட்டைத் தீர்க்கதரிசனம் என்று சிந்திக்கப்பட வேண்டியதாகும். அது ஆகாசுக்கு அவனது எதிரிகளான ரேத்சீன் மற்றும் பெக்கா என்பவர்கள் ஒரு குறுகிய காலத்திலேயே காட்சியிலிருந்து மறைவார்கள் என்ற உற்சாகமூட்டும் செய்தியை வெளிப்படுத்தியது; மேலும் அது, எதிர் காலத்தில் கன்னியிடம் இருந்து இயேசு பிறக்கும் அற்புதமான நிகழ்வைப்

பற்றியும் முன்னுரைத்தது. கன்னியிடம் இருந்து பிறத்தலின் நிகழ்வு பற்றி விவரித்த தீர்க்கதரிசனத்தின் இப்பகுதியைப் பற்றி மத்தேயு ஏவுதல் பெற்ற விளக்கம் ஒன்றைக் கொடுக்கின்றார் (மத். 1:23).

மூன்றாவது வகைத் தீர்க்கதரிசனமாக உள்ளது சிறப்பு வகை/ குறிப்பிடத்தக்க வகையான தீர்க்கதரிசனம் ஆகும், இது ஒரு எதிர்கால நிகழ்ச்சி அல்லது சூழ்நிலையை ஏதாவது ஒரு வழியில் முன் சித்தரிப்புச் செய்கின்றது. உதாரணமாக, யோசேப்பு மரியாளையும் குழந்தையாய் இருந்த இயேசுவையும் அழைத்துக்கொண்டு, ஏரோதின் கோபத்திலிருந்து தப்பிக்கும்படியாக எகிப்துக்குத் தப்பிச் சென்றார், மற்றும் ஏரோதின் மரணம் வரையிலும் அவர் அங்கேயே (அவர்களுடன்) தங்கியிருந்தார். அவர்கள் எகிப்திலிருந்து நாசரேத்தூருக்குத் திரும்பியது என்பது ஒரு சிறப்பு வகைத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்க்கதரிசனத்தின் அர்த்தம் பற்றி நாம் உறுதியான கருத்துக் கொண்டிருக்க முடியும், ஏனென்றால் அவர்கள் எகிப்திலிருந்து திரும்புதல் பற்றி, "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத். 2:15) என்று மத்தேயு கூறினார். இதற்கு மத்தேயு குறிப்பிட்ட பழைய ஏற்பாட்டு வசனப் பகுதியான ஓசியா 11:1 என்பது, யெகோவா தம் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வெளியேற்றிக் கொண்டு வந்த நிகழ்வின் மறைவான வரலாற்றுக் குறிப்பாக உள்ளது. இவ்விதமாக, இஸ்ரவேலர் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து வெளிவருதல் என்பது, கிறிஸ்து குழந்தையாய் இருந்த வேளையில் எகிப்திலிருந்து வெளியே வந்த மிகவும் மாபெரும் நிகழ்ச்சியின் சிறப்பு வகையாக அல்லது முன் சித்தரிப்பாக உள்ளது - இதை நாம் எதிர் வகை என்று கூறுவோம். சிறப்பு வகைத் தீர்க்கதரிசனங்கள் என்பவை தெளிவற்றவையாக உள்ளன, மற்றும் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் விளக்கப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஏவுதல் பெற்ற விளக்கங்களின் மீது பெருமளவு சார்ந்திருக்க வேண்டும்.

இராஜ்யம் அல்லது சபை என்பது பற்றி இயேசு கூறிய தீர்க்க தரிசனங்களை நாம் குறிப்பாகக் கவனிப்போம் - இவற்றில் பெரும்பாலானவை திட்டவட்டமானவைகளாக உள்ளன. இயேசு நமது அரசராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கின்றார், ஆனால் அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக வும் இருந்தார். மோசே, "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா. 18:15) என்று கூறினார். மோசேயின் இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவைக் குறித்தது என்று அப். 3:18-23ல் பேதுரு விளக்கப்படுத்தினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் கூட இயேசுவைப் பற்றி, "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார் ..." (எபி. 1:1, 2) என்று கூறினார்.

தேவனுடைய தீர்க்கதரிசி என்ற வகையில் இயேசு, சபை அல்லது வர இருந்த இராஜ்யம் என்பது பற்றி பல முன்னுரைத்தல்களை ஏற்படுத்தி

யிருந்தார். பழைய ஏற்பாட்டு யுகத்தின் தீர்க்கதரிசனங்களைப் போலவே, இவருடைய வெளிப்படுத்துதல்களும் நிறைவேற்றப்பட்டன என்பதை, புதிய ஏற்பாடு மற்றும் வரலாறு ஆகியவற்றைப் பயிலும் எந்த ஒரு மாணவரும் உற்று நோக்க முடியும். சபையைப் பற்றி இயேசு ஏற்படுத்திய முன்னுரைத்தல்களைச் சிந்தித்துப் பார்த்தல் என்பது இராஜ்யத்தின் தொடக்க வேளை மற்றும் இயல்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் விசேஷித்த அறிவுறுத்தல் தருவதாக உள்ளது.

விரைவில் வருவதாயிருந்தது

இராஜ்யம் விரைவில் வர இருந்ததாக இயேசு முன்னுரைத்தார். அது அருகில் அல்லது "சமீபமாய்" இருந்தது. அது "இருந்ததாக" அல்லது நிகழ்காலத்தியதாக இருந்ததில்லை. ஆனால் அது "சமீபமாய்" அல்லது நெருங்கிக் கொண்டிருந்ததாக இருந்தது. நாம் சில வேளைகளில் கூறுகின்றபடி, இது ஸ்தாபிக்கப்பட்ட வேளை என்பது "அருகாமையில்" அல்லது "மிகத் தொலைவில் இல்லாத நிலையில்" இருந்தது.

இராஜ்யம் "சமீபித்திருந்ததால்" மக்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்ததன் மூலம் யோவான் ஸ்நானன் இயேசுவின் ஊழியத்திற்கு வழியை ஆயத்தம் பண்ணினார். யோவானைப் பற்றி, "அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்" (மத். 3:1, 2) என்று மத்தேயு கூறினார்.

இயேசு தம் ஞானஸ்நானம் மற்றும் தாம் சோதிக்கப்படுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, யோவான் பிரசங்கித்திருந்த இராஜ்யத்தின் அருகாமை பற்றிய அதே செய்தியைப் பிரசங்கித்தலினால் தம் பூமிக்குரிய ஊழியத்தைத் தொடங்கினார். அவரைப் பற்றி, "அது முதல் இயேசு: மனந் திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத். 4:17) என்று மத்தேயு எழுதினார். வரையரைக்குட் பட்ட கட்டளையை நிறைவேற்றப் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை இயேசு அனுப்புகையில், அவர்களிடத்தில் அவர், "போகையில், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்" (மத். 10:7) என்று உரைத்தார்.

"பரலோக இராஜ்யமானது இயேசுவின் ஊழியத்தின் போது இருந்தது என்பதாக இயேசு இராஜ்யத்தைப் பற்றிய தம்முடைய மற்ற விளக்கங்களில் சுட்டிக்காட்டியதாகக் காணப்படுவதில்லையா? இந்தக் குறிப்புகள் 'சமீபமாயிருக்கிறது' என்ற முன்னுரைத்தல்களுக்கு முரண்படுவ தில்லையா?" என்று சிலர் கேட்கலாம். அது ஒரு நல்ல கேள்வியாக உள்ளது. அவருடைய எடுத்துரைப்புக்களில் இவ்விதமாய் விளக்கப்படக் கூடிய இரண்டு கூற்றுக்கள் மத்தேயு 11:12 மற்றும் மத்தேயு 12:28 ஆகியவைகளாக உள்ளன: "யோவான் ஸ்நானன் கால முதல் இது வரைக்கும் பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்" (11:12); "நான் தேவனுடைய

ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (12:28).

காலத்தின் முடிவில் இராஜ்யம் வரும் என்று இயேசு போதிக்கவில்லை, ஆனால் அவருடைய ஊழியத்திற்கு அப்புறம் வரும் காலத்தில் அது வெகு விரைவில் வருவதாயிருந்தது.

11:12 வசனமானது அதிகம் நெருங்கி வாசிக்கப்படும் பொழுது, வரவிருந்த இராஜ்யம் பற்றிக் கேள்விப்பட்டிருந்து, தேவனுடைய கால அட்டவணையின்படியின்றி, அவர்களுடைய கால அட்டவணையின்படி "அதை உடனடியாக வரச் செய்ய வேண்டும்" என்று விரும்பிய மக்களைப் பற்றி இயேசு பேசியதாகக் காணப்படுகின்றது. இராஜ்யம் வந்திருந்ததாக இயேசு கூறவில்லை, ஆனால் தவறாக வழிநடத்தப்பட்ட, வைராக்கியமான அந்த மக்கள், தேவன் அதைக் கொண்டு வரும் முன்னதாக, பக்குவம் அற்ற நிலையில் அதற்குள் அவசரமாய்ச் செல்ல முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். பட்டுப் பூச்சி ஒன்று தன்காலம் வரும் முன்னே அதன் கூட்டிலிருந்து வெளிப்பட வேண்டும் என்று அதன் புழுக்கூட்டை உடைக்கின்ற சிறு பிள்ளைகளுடன் இவர்களை ஒப்பிட முடியும்.

*12:28*ல் இயேசு, தாம் பெயல்செபூலின் வல்லமையினால் குணப்படுத்துவதாகக் குற்றம் சாட்டப்பட ஏதுவானதாயிருந்த, அசுத்த ஆவியைத் துரத்திய ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். இந்த அற்புதத்தைத் தேவனுடைய வல்லமையினால் செய்ததாகச் சுட்டிக்காட்டியதன் மூலம் இக்குற்றச் சாட்டிற்குப் பதில் அளித்த அவர், இவ்விதமாக தாம் தெய்வீகமானவர் என்று நிரூபித்தார். அவர்களின் மத்தியில் தேவகுமாரனுடைய பிரசன்னம் இருத்தல் என்பதே, தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகில் "உண்டாகத்" தொடங்கி விட்டது என்று அர்த்தப்படுத்திற்று. இராஜ்யம் இன்னும் வந்திருந்ததில்லை, ஆனால் அவர்கள் மத்தியில், வரவிருந்த இராஜ்யத்தின் இராஜாவான தேவனுடைய குமாரனின் பிரசன்னம் இருந்ததன் மூலம், இது வந்து கொண்டிருந்த செயல்முறையில் இருந்தது.

தெளிவான வசனப்பகுதிகள் தெளிவற்ற வசனப்பகுதிகளை விளக்க அனுமதிக்க வேண்டும் என்பது வேதாகம விவரிப்புகளின் இன்றியமையாத விதியாக உள்ளது. ஆகையால், யோவான் மற்றும் நமது கர்த்தர் ஆகியோருடைய பிரசங்கித்தல்களில் உள்ள "சமீபித்திருக்கிறது" என்ற சொற்றொடரானது இராஜ்யம் வருகின்ற காலம் பற்றிக் கொடுக்கப்படும் குறிப்பான சைகையாகக் காணப்படுகின்றது. இது, தேவனுடைய காலக் கோட்பாடு பற்றி இரண்டு சத்தியங்களை உறுதியாக நிலைநாட்டுகின்றது: முதலாவது, அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில் இராஜ்யம் வந்திருந்ததில்லை, ஆனால் எதிர்காலத்தில் இனி வரவேண்டியதாக இருந்தது; இரண்டாவது, இராஜ்யமானது விரைவில் வரவேண்டியதாயிருந்தது - இதன் வருகையானது உடனடியானதாயிருந்தது. இந்த சத்தியங்கள்

முக்கியமற்ற விபரங்களாகவோ, நமது ஆழ்ந்த சிந்தனையைப் பெறத் தகுதியற்றவைகளாகவோ இருப்பதில்லை. இவைகள் மிக முக்கியமான பாடமாக, காலத்தின் முடிவில் இராஜ்யம் வரும் என்று இயேசு போதிக்காமல், தம் ஊழியத்திற்குப் பின் காலத்தில் வெகுவிரைவில் வருவதாக நமக்குப் போதிக்கின்றன. இந்தச் சொற்றொடரானது இராஜ்யம் இப்பொழுது இங்குள்ளது மற்றும் நமக்கு இது ஒரு எதிர்கால எதிர்பார்ப்பாக இருப்பதில்லை என்பதையும் இந்தச் சொற்றொடர் மறைமுகமாய் உணர்த்துவதால் நாம் மகிழ்வடையலாம்!

எங்களுடைய பிள்ளைகள் சிறு வயதினர்களாய் இருந்த பொழுது, அவர்கள் பெற விரும்பும் ஒரு பொம்மை அல்லது வேறு ஏதாவது பொருட்களை வாங்கித் தருவதற்கு அவர்களைக் கடைக்கு அழைத்துச் செல்வதாக நாங்கள் சிலவேளைகளில் ஒப்புக் கொள்வது உண்டு. ஒருவேளை அவர்கள் தங்களின் பிறந்த நாளின் போதோ அல்லது வேறு சில நிகழ்ச்சிகளின் போதோ பரிசொன்றை வாங்கிக் கொள்வதற்குப் பணம் பெறுவது உண்டு. நாங்கள், “சிறிது நேரம் கழித்து நீங்கள் விரும்புவதை வாங்க நாம் கடைக்குச் செல்வோம்” என்று வாக்களிப்பது உண்டு. எதிர்பார்ப்பின் வழியே கடந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு நேரம் மெதுவாக நகருவதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒருமுறை, அவர்கள், “செல்வதற்கான நேரம் வந்ததா? இப்பொழுது நாம் செல்லப்போகிறோமா?” என்று அவர்கள் கேட்பார்கள். நாங்கள், “இல்லை, இப்பொழுதே அல்ல. ஒரு சில நிமிடங்களில் நாம் செல்வோம். செல்வதற்கு ஏறக்குறைய நேரமாகி விட்டது” என்று கூறுவோம். “சற்று நேரத்தில்” என்ற சொற்றொடரை அவர்கள் புரிந்து கொள்வது என்பது கடினமாய் இருக்கும். அவர்களால் காத்திருக்க முடியாது - ஏனெனில் அவர்களைப் பொறுத்த மட்டில், வாழ்க்கை என்பது இப்பொழுதே வாழப்படுவதாக உள்ளது. சிலவேளைகளில் நாங்கள், “எப்பொழுது, செல்வோம் என்று இனியும் கேட்காதீர்கள். செல்லும் நேரம் வரும் பொழுது நான் உங்களிடம் கூறுவேன்” என்று மட்டும் சொல்ல வேண்டியிருக்கும்.

“சமீபித்துள்ளது” மற்றும் “அருகாமை” என்ற சொற்றொடரானது யோவானாலும் இயேசுவாலும் பயன்படுத்தப்பட்ட வகையில், இராஜ்யம் வருவதாயிருந்த எதிர்காலத்தைக் குறித்தது மற்றும் இராஜ்யம் நிகழ் காலத்தில் இருந்ததில்லை என்பதையும் மறைவாக உணர்த்திற்று. அவற்றின் அடிப்படையில், பரலோக இராஜ்யம் விரைவில் வரும் என்று யோவானும் இயேசுவும் போதித்த நாட்களின் போது இராஜ்யம் இருந்தது என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது, ஆனால் அதற்கு மாறாக, இராஜ்யமானது இயேசுவின் ஊழிய முடிவின் போதோ அல்லது அதற்குச் சற்றுப் பின்னதாகவோ வந்தது என்று நாம் நியாயமாக எதிர்பார்க்க முடியும்.

பெலத்தோடே வருதல்

இராஜ்யமானது தெய்வீக பலத்துடன், மாபெரும் வல்லமையுடன் வரும் என்று இயேசு அறிவித்தார். மாற்கு 9:1ல், “... இங்கு நிற்கிறவர்களில்

சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" என்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த வசனப் பகுதியில் இயேசு, தாம் இதைப் பேசிய பொழுது இருந்த சிலருடைய வாழ்நாள் காலத்திலேயே இராஜ்யம் பலத்தோடே வரும் என்று வெளிப்படுத்தினார். நமது கர்த்தருடைய (இந்த) தீர்க்கதரிசனமானது மூன்று முடிவுகளை (நாம்) பெறும்படி கேட்டுக் கொள்கின்றது: (1) அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய வாழ்நாள் காலத்திலேயே இராஜ்யம் வரும். (2) அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவரும், இராஜ்யம் வரும் வேளை வரையிலும் உயிருடன் இருக்க மாட்டார்கள். (3) வருவதாயிருந்த இராஜ்யத்துடன் தெய்வீக வல்லமை இணைந்திருக்கும் என்பது அதன் அடையாளப்படுத்தும் குறிகளில் ஒன்றாயிருக்கும்.

அன்றாட வாழ்வில் நாம் அனைவருமே அடையாளப்படுத்தும் குறிகளைப் பயன்படுத்துகின்றோம். உதாரணமாக, இவைகள் ஒரு நபர் இன்னொருவருக்குச் செய்தியொன்றை அனுப்பும் போது கையாளச் சுலபமாக உள்ளன. எனது மனைவி, என்னிடத்தில் எந்த ரொட்டியை வாங்க வேண்டும் என்று குறிப்பிடாமல் என்னை மளிகைக் கடைக்கு ரொட்டி வாங்கி வரும்படி அனுப்புவது அபாயமானது என்று அறிந்துள்ளார்கள். நான் மளிகைக் கடைக்குச் செல்ல முயற்சிக்கையில், வழக்கமாக எனது சிந்தையில் பிரசங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருப்பேன் என்பதை அறிந்துள்ள என் மனைவி, ரொட்டியின் அடையாளப் பெயரைக் கூறுவதுடன், எந்த வகையான ரொட்டியை வாங்க வேண்டும் என்றும் கூறுவார்கள். அவர்கள், "கலோனியல் கோதுமை ரொட்டி ஒன்று வாங்கி வாருங்கள்" என்று கூறலாம். தனிப்படுத்தும் பண்புகள் இல்லாத பொழுது நான் தவறான ரொட்டியை வாங்கி வந்து விடுவேன் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இராஜ்யத்தின் ஸ்தாபித்தலுக்கான அடையாளப்படுத்தும் குறிகள் சுவிசேஷங்களில் தோன்றத் தொடங்கின. யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் போதனையிலிருந்து, வருவதாயிருந்த இராஜ்யம் "சமீபித் திருந்தது" என்று நாம் அறிகின்றோம். இது, நாம் இந்த இராஜ்யத்தின் வருகையானது இயேசுவின் ஊழியத்தின் முடிவிலோ, அல்லது அதைத் தொடர்ந்து விரைவிலோ இருந்தது என்று காண வேண்டும் என்பதாக அர்த்தப்படுத்துகின்றது. மேலும் நாம், மாற்கு 9:1ல் இயேசு உரைத்த வற்றைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய வாழ்நாள் காலத்தின் போதே இராஜ்யம் பலத்தோடு வர வேண்டியதாயிருந்தது என்றும் அறிகின்றோம். அது விரைவில் வர வேண்டியதாயிருந்தது, மற்றும் அதன் வருகையானது தெய்வீக பலம் கொண்டு குறிப்பிடப்படுவதாயிருந்தது.

ஆவியுடன் வருதல்

ஆவியானவர் வந்த பொழுது இராஜ்யம் வரும் என்று இயேசு தம்

போதனைகளில் உரைத்திருந்தார். அவர் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்னர், தம் அப்போஸ்தலர்களிடம், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து ..." (அப். 1:8) என்று உரைத்தார். இதை இன்னொரு வழியில் கூறுவதென்றால், இராஜ்யத்தின் வருகையானது பரிசுத்த ஆவியானவரை அற்புதமாய்ப் பொழிந்தருளும் நிகழ்ச்சியினால் பண்புபடுத்தப்படும்.

இதற்கு முன்பே இயேசு (மாற்கு 9:1ல்) தம்முடன் நின்று கொண்டிருந் தவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பெலத்தோடே வருவதைக் காண்பார்கள் என்று உரைத்திருந்தார். அப். 1:8ல், அவர் அப்போஸ்தலர் களிடத்தில், ஆவியானவர் அவர்கள் மீது இறங்கி வரும் பொழுது, அவர்கள் பெலன் அடைவார்கள் என்று உரைத்தார். மற்றும் இயேசு, அப்போஸ்தலர் களின் மீது பரிசுத்த ஆவி இறங்கும் இந்த நிகழ்ச்சியை, பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுதல் என்றும் அடையாளப் படுத்தினார். இயேசு தம் அப்போஸ்தலர்களுடன் செலவிட்ட கடைசி நாட்களைப் பற்றி லூக்கா பின்வருமாறு எழுதினார்:

> அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று கட்டளையிட்டார்.
>
> அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்: "பிதாவான வர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார் (அப். 1:4-8).

இன்னும் மற்றொரு வேளையில் இயேசு அவர்களிடம், "நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக். 24:48, 49) என்று உரைத்ததாக லூக்கா பதிவு செய்தார்.

கல்வியாளர்கள், "மீண்டும் செய்தல் என்பது கற்றலின் விதியாக உள்ளது" என்று பரிந்துரைக்கின்றனர். "ஒரு விஷயத்தின் உண்மைகளைச் சரிபார்த்துப் பகுத்துணர்தல் என்பது மிக நுண்மையான தன்மையின் விதியாக உள்ளது" என்றும் கூறப்பட முடியும். இராஜ்யத்தின் வருகை பற்றி நாம் கண்டுள்ள உண்மைகளைக் கவனமாக எடை போடுங்கள்: (1) இயேசுவின் ஊழியத்தினுடைய முன்பகுதியில் இராஜ்யம் "சமீபித்திருந்தது." (2) இயேசுவின் ஊழியத்தினுடைய பின்பகுதியில் அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய

வாழ்நாளிலேயே இராஜ்யம் வருவதாயிருந்தது. (3) இராஜ்யம் பெலத்தோடே வருவ தாயிருந்தது. (4) அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கும் பொழுது அவர்களுக்குப் பெலம் வருவதாயிருந்தது. (5) ஒருவேளை, கடைசி முறையாக இயேசு தம் அப்போஸ்தலர்களிடம் பேசிய பொழுது, சில நாட்களுக்குள் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று கூறினார். (6) பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக அல்லது பெலத்தின் வருகைக்காக அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த எல்லா உண்மைகளிலும், இயேசு தம் சீஷர்களுக்கு, இராஜ்யம் வரும் பொழுது அதை அவர்கள் அறிவார்கள் என்று கூறினார், ஏனெனில் அதன் வருகையானது தனிப்பட்ட இந்த எல்லாப் பண்புகளாலும் அடையாளப் படுத்தப்படும்.

இது, “காலத்தின் முடிவு எப்பொழுது ஏற்படும்?” என்று கேட்கின்ற யாருக்காவது நாம் அளிக்கக் கூடிய பதிலைப் போன்றுள்ளது. இயேசுவின் மறுவருகையுடன் முடிவு வரும் என்று புதிய ஏற்பாடு கூறுவதாக நாம் அவர்களிடம் கூறுவோம். இது மேலும், கிறிஸ்தவ யுகத்தின் முடிவில் இயேசுவின் வருகைத் தோற்றமானது ஜுவாலித்து எரிகிற அக்கினி மேகங்கள் (2 தெச. 1:7-9; வெளி. 1:7), சகல பரிசுத்த தூதர்கள் (மத். 25:31) மற்றும் கண்கள் யாவும் அவரைக் காணுதல் (வெளி. 1:7) ஆகியவற்றுடன் இருக்கும் என்றும் கூறுகின்றது. எனவே இதை நிச்சயமாக அறிந்துகொள்ள, அவர் வருகின்ற போது இதை நீங்கள் அறிவீர்கள். முடிவு வருகின்ற பொழுது என்ன நடக்கின்றது என்று யாரும் உங்களிடத்தில் கூறத் தேவையிருக்காது! அது போலவே, பரிசுத்த ஆவியானவருடைய வருகை மற்றும் பெலத்தின் வருகை ஆகியவற்றுடன் இராஜ்யம் அல்லது சபை விரைவில் வரும் மற்றும் அது ஸ்தாபிக்கப்படும் என்று இயேசு தம் சீஷர்களுக்குக் கூறினார். அது வரும் பொழுது, அதை அவர்கள் சுலபமாய் அடையாளம் கண்டு கொள்ளுவார்கள் மற்றும் அதைப் பற்றி முழுமையாய் அறிந்து கொள்ளுவார்கள்.

முடிவுரை

இயேசுவின் இந்த முன்னுரைத்தல் எப்பொழுது நிறைவேற்றப் பட்டன? இராஜ்யம் எப்பொழுது வந்தது?

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத்தொடர்ந்து வந்த முதல் பெந்தெ கொஸ்தே நாளன்று இந்தத் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேற்றப் படவில்லையா? பெந்தெகொஸ்தே நாள் வந்த பொழுது, அப்போஸ்தலர் கள்மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார் (அப். 2:1-4). இந்த ஊற்றப்படுதலுடன் அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு ரோம உலகம் முழுவதிலும் சாட்சியாயிருப்பதற்காக உன்னதத்திலிருந்து வந்த வல்லமையால் தரிப்பிக்கப்பட்டனர். அங்கு கூடியிருந்த கூட்டத் தாருக்குப் பேதுரு தம் முதன்மை உரையை நிகழ்த்திய பொழுது, பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளலை அவர் யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமாக அடையாளப்படுத்தினார் (யோவே. 2:28-32; அப். 2:16),

இது பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளலை "கடைசி நாட்களின்" துவக்கத்துடன் சமமாக்கிற்று. அந்த வேளையில் கிறிஸ்து உயிர்த்து மேன்மைப் படுத்தப்பட்டவராக, தேவனுடைய வலது புறத்தில் அமர்ந்து ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் ஆளுகை செய்தாரென்றும் பேதுரு பிரசங்கித்தார். "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:33) என்று அவர் கூறினார். பேதுருவின் பிரசங்கத்திற்குப் பதில்செயலாக, மூவாயிரம் பேர் விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாகக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப். 2:41). பரிசுத்த ஆவியானவரின் இவ்வருகையானது நமது கர்த்தர் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்ற பத்தாம் நாளிலே நடைபெற்றது (அப். 1:3; 2:1) மற்றும் இவ்விதமாக இது, அவர் பரத்துக்கேறிய சில நாட்களில் (அப். 1:5) அப்போஸ்தலர்களைப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப் படுத்துவதாக அவர் அளித்த வாக்குத்தத்தத்துடன் இசைந்துள்ளது. மேலும், பரிசுத்த ஆவியானவரின் வருகையானது யோவானும் இயேசுவும் இராஜ்யம் அண்மித்துள்ளது அல்லது சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்த நாட்கணக்கின் கால அளவுடன் பொருந்தி வருகின்றது (மத். 3:1; 4:17).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த இந்த பெந்தெகொஸ்தே நாளான்று இராஜ்யத்தின் வருகை நாள் என்ற கருத்தானது கேள்விக்கு அப்பாற்பட்டதாக நிலைநிற்கின்றது. இது கர்த்தர் தமது சபையை நிலை நாட்டிய நாளாக மனித குல வரலாற்றில் நிலைநின்றுள்ளது. கிறிஸ்துவின் தற்கால ஆளுகையின் கண்ணோக்கில் "சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற சொற்பதங்கள் மாறுபட்ட கண்ணோட்டக் கருத்துக்களைக் குறித்தாலும், அவை இரண்டுமே தேவன் மற்றும் கிறிஸ்து ஆகியோருடன் ஒரே விதமான அடிப்படை உறவுமுறையையே குறிக்கின்றன. சபை என்பது கர்த்தருடைய நித்திய இராஜ்யமாக உள்ளது.

கிறிஸ்துவின் யுகத்தில் வாழ்தல் என்பது எவ்வளவு சிலாக்கியமானதாக உள்ளது! இந்த யுகமானது, "இராஜ்யம் - வருகின்ற" யுகமாக, கிறிஸ்துவின் ஊழியம் செய்யப்பட்ட நாட்களின் போது வாழ்ந்த தீர்க்கதரிசிகளும் மக்களும் ஒரு நாளில் இராஜ்யம் வருமென்று எதிர்பார்த்தது போன்ற யுகமாக இல்லாமல் உள்ளது; இது "இராஜ்யம் - வந்திருக்கின்ற" யுகமாக உள்ளது. இராஜ்யம் இங்குள்ளது, நாம் அதன் குடிமக்களாக வாழ முடியும், கிறிஸ்துவின் மரணமும் அந்த இராஜ்யத்தின் ஸ்தாபனமும் அளிக்கின்ற எல்லா தெய்வீக ஆசீர்வாதங்களில் பங்கேற்கவும் முடியும்.

புறக்கணிக்கப்பட்ட வாய்ப்பு என்பதின் துன்பமானது மனித குலத்தின் மாபெரும் துன்பம் என்பதை நாம் யாவருமே ஒப்புக் கொள்வோம். இது பெரும்பான்மையானவர்களின் தவறாக உள்ளது, ஏனென்றால் இது சுலபமாகச் செய்யப்பட்டிருக்கக் கூடியது. ஆனால் கைவிடப்பட்டதால் நடக்காதது என்ன என்பதை விவரிக்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் யுகமாகிய இந்த யுகத்தில் வாழ்ந்து, தேவனுடைய இராஜ்யத்தில்

பிரவேசிக்கவும், அதன் குடிமகனாக வாழவும் மறுத்தல் என்பது ஒரு நபரிடத்தில் அறியப்பட்டதிலேயே மாபெரும் பிழையாக இருக்கின்றது, இதைக் காட்டிலும் பெரிய பிழையொன்றை அவரிடம் அறிய முடியாது என்பது நிச்சயம்.

தென்னாப்பிரிக்காவில் ஒரு சிறுவர்கள் குழுவினர், சிறிய, உருண்டையான, வண்ணக் கற்களால் ஆன குண்டுகளை வைத்து கோலி விளையாடிக் கொண்டிருந்தனர். ஆராய்ந்து பார்த்ததில், யாரோ ஒருவர் அந்தக் கற்கள் வெட்டப்படாத வைரங்களாய் இருந்தன என்று கண்டறிந்தார். அதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்! அவர்கள் வைரங்களைக் கோலிகளாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர் - ஒரு பெரிய விலையுயர்ந்த உடமையைக் கொண்டு பிள்ளைகள் விளையாட்டை விளையாடி கொண்டிருந்தனர்!

நாம் நெருங்கிப் பார்த்தால், இந்தச் சித்தரிப்பில் நம்மையே நாம் காணலாம். கோலி விளையாட்டில் ஆழ்ந்து ஈடுபட்டுள்ள பையன்களைப் போலவே நாமும் எல்லா வகையான செயல்களினாலும், முழு வேலை அட்டவணைகளினாலும், வற்புறுத்தும் கடமைகளினாலும் சூழப்பட்டுள்ளோம். நம் மத்தியில், கிறிஸ்துவின் பலியினால் தேவன் பரலோகத்திலிருந்து அனுப்பிய விலைமதிப்புள்ள/அருமையான வைரமான, தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்தல் என்ற வாய்ப்பு இருப்பதை நாம் முற்றிலும் அறியாமல் இருப்பவர்களாய்க் காணப்படுகின்றோம். தேவனுடைய வைரமானது நாம் அடையக் கூடிய வகையிலேயே உள்ளது, ஆனால் கோலி விளையாட்டிற்கு நாம் நமது முழுக்கவனத்தையும் கொடுத்து விட்டு நாம் அதைக் கண்டும் காணாது விடுகின்றோம்.

உங்களைப் பொருத்தமட்டில் விஷயம் எவ்வாறுள்ளது? வாழ்க்கையை கோலிகளின் சிறு விளையாட்டாக்குவதுடன் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா? அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதினால் தேவனுடைய விலைமதிப்பான/அருமையான வைரத்தை அடைந்து, அதை எடுத்துக் கொள்வீர்களா?

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. சபையைப் பற்றி இயேசு உரைத்த மாறுபட்ட வகையான சில தீர்க்கதரிசனங்கள் யாவை?
2. இயேசு நமது தீர்க்கதரிசியாய் இருக்கின்றாரா? உங்கள் பதிலுக்கு நிரூபணம் கொடுக்கவும்.
3. ''சமீபித்திருக்கிறது'' என்ற சொற்றொடரின் மறை கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.
4. மாற்கு 9:1 வசனப் பகுதியானது இராஜ்யத்தின் வருகையினுடைய காலத்துடன் எவ்விதம் தொடர்புபடுகின்றது?

5. இராஜ்யத்தின் வருகை பற்றி மாற்கு 9:1 மறைவாய் உணர்த்துவது என்ன?
6. இராஜ்யத்தின் வருகையானது ஆவியானவரின் வருகையினால் பண்பு படுத்தப்பட வேண்டும் என்று காண்பிக்கின்ற வசனங்கள் யாவை?
7. “பெலத்தோடே வருதல்” என்பதும் “ஆவியானவருடன் வருதல்” என்பதும் ஒன்றே என்று நீங்கள் கூறுவீர்களா?
8. மிக நுண்ணிய தன்மையின் விதி என்ன?
9. இயேசுவின் முன்னுரைத்தல்கள் அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளில் எவ்வாறு நிறைவேறின என்று கலந்துரையாடவும்.
10. “சபை” மற்றும் “இராஜ்யம்” என்ற இரு வார்த்தைகளும் ஒரே உயிர்ப் பொருளைக் குறிக்கின்றனவா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
11. இது “இராஜ்யம் வருகின்ற” யுகமாய் உள்ளதா?
12. இன்றைய நாட்களில் ஒருவர் இராஜ்யத்திற்குள் எவ்வாறு பிரவேசிக்கின்றார்?

8

இயேசு பூமிக்கு வந்தது எதற்காக?

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" (யோவா. 17:4).

நீங்கள் உங்கள் நகரில் நடந்து கொண்டிருக்கையில், ஒரு செய்தி நிருபர் வந்து உங்களிடத்தில், "உலகின் தொடக்கத்திலிருந்து இதுவரை நடை பெற்றுள்ளவற்றில் மாபெரும் ஒரு நிகழ்ச்சியாக நீங்கள் எதனை நம்புகின்றீர் கள்?" என்று கேட்டால், நீங்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் அவருக்கு எவ்வாறு பதில் அளிப்பீர்கள்? மனித வரலாற்றின் மற்ற நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விட மேலோங்கியிருக்கும் அப்படிப்பட்ட நினைவுக் குரிய நிகழ்ச்சி எது? அதைப் பற்றி நீங்கள் நினைத்த பிறகு, இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு இரட்சகராக வருகை தந்த நிகழ்ச்சி என்பதே உங்கள் பதிலாயிருக்கும் என்பது நிச்சயம். நம்மில் ஒவ்வொருவரும் மாறுபட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவோம், ஆனால் நமது பதில்கள் யாவும், நம் பாவங்களுக்காக இயேசு மரித்த அந்த நிகழ்வையே மையம் கொண்டிருக்கும்.

தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்வு, திரு அவதாரம், மாம்சமாகுதல் என்பதே உலக வரலாற்றில் மிகவும் எட்டத் தொலைவான நிகழ்ச்சியாக இருக்க வேண்டியதாகும். இயேசு தேவனுடைய சொரூப மாயிருந்தும் கூட, அவர் தாம் தேவனுக்குச் சமமாயிருப்பதை எவ்விலை கொடுத்தும் பற்றிக் கொண்டிருக்கும்படிக் கருதியதில்லை என்று பவுல் எழுதினார். அவர் "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி. 2:6, 7). யோவானின் கூற்றுப்படியாக, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14).

கிறிஸ்து, தாம் தெய்வீகமானவரே அல்ல என்பது போல் அவ்வளவு அதிகம் மனிதத் தன்மையுள்ளவர் ஆனார், மற்றும் அவர் மனித் தன்மை உள்ளவரே அல்ல என்பது போல் அவ்வளவு அதிகம் தெய்வீகமானவரானார்

என்று நாம் கூற முடியும். மற்ற எல்லா மனிதர்களும் பிறக்கின்றது போலவே அவரும் மனிதரானதில் (லூக். 2:6), எல்லா மனிதர்களையும் போலவே வளர்ந்ததில் (லூக். 2:40), எல்லா மனிதர்களும் சுதந்தரவாளிகளாய் இருந்து அனுபவிக்கும் பாடுகளுக்குக் கீழ்ப்பட்டதில் (எபி. 5:8, 9), மற்றும் வியாதி, அழிவு மற்றும் மரணம் ஆகியவற்றினால் பாதிக்கப்படக் கூடிய - மனிதர்கள் ஒரு சிலுவையில் கூட அறைய முடிந்ததான - ஒரு உடலில் வாழ்ந்ததில் (பிலி. 2:8, 9), இயேசு மனித இனத்துடன் தம்மை அவ்வளவு முழுமையாக அடையாளப்படுத்திக் கொண்டார். அவர் முற்றிலுமாக மனிதனானார், இவ்விதமாக அவர் மனித குமாரனாய் இருந்தார்; இருப்பினும் அவர் முற்றிலுமாகத் தெய்வீகமானவரானார், இவ்விதமாக அவர் தேவ குமாரனாய் இருந்தார் (எபி. 2:14, 17, 18). அவர், மனிதத்துவமும் தெய்வீகத்துவமும் ஒரே ஆள் தன்மையில் பரிபூரணமாய் இணையப் பெற்றவராக இருந்தார். அவர் தம் தெய்வீகத்தைத் தியாகம் செய்யாம லேயே மனிதரானார்; அவர் நம்மைப் போன்றவராகியும் கூட தெய்வீகமானவராகவே நிலைத்திருந்தார்.

பூமிக்கு இயேசு வந்ததின் இயல்பானது குறிப்பிடத்தக்க பெரிய கேள்விகளை எழுப்புகின்றது: இயேசு தாம் செய்த வகையில் பூமிக்கு எதற்காக வந்தார்? அவர் மனித இனத்திற்குள் பிரவேசித்து, நம் மத்தியில் வாழ்ந்து, சிலுவையில் மரித்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய தெய்வீக குமாரன் முற்றிலும் மனிதராகுமளவுக்குத் தம்மைச் சுருக்கிக் கொண்டது ஏன்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பின்வரும் ஒரே வாக்கியத்தில் தொகுத்துரைக்க முடியும்: *"அவர் - தம் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றினால் - தம் நாமத்திற்கு ஒரு மக்களை அழைக்க, தாம் தம் சபை என்று அழைக்கும் ஒரு மக்கட் கூட்டத்தை அழைக்கவே வந்தார்."*

வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், சபை என்பதே அவர் இப்பூமிக்கு வந்ததின் விளைவாய் உள்ளது. இயேசு ஒரு புத்தகத்தை எழுதவில்லை, ஒரு கல்லூரியை நிறுவவில்லை, சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தை நிலைநாட்டவில்லை அல்லது ஒரு உடமையின் கொடை யிலிருந்து வைப்பு நிதியொன்றை ஏற்படுத்தவில்லை. சபை என்பதுதான் அவரது பூமிக்குரிய ஊழியத்தினால் உண்டாக்கப்பட்ட தெளிவாய் அறியக் கூடிய ஒரே உண்மை நிலையாய் உள்ளது. இயேசு தாம் கட்டியெழுப்பு வதாகக் கூறிய ஒரே சரீரம் என்பது அவர் "சபை" என்று குறிப்பிட்ட (மத். 16:18) அவருடைய ஆவிக்குரிய சரீரமாகவே இருந்தது. இயேசு தம் ஊழியக் காலத்தின் போது இட்ட ஒரே அஸ்திபாரம் என்பது சபைக்குரிய அஸ்திபாரமாக இருந்தது. ஆகையால் சபையானது கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையில் நிலைநாட்டப்பட்ட ஒரே படைப்பு என்று கூறப்பட முடியும்.

சுவிசேஷங்களினால் உறுதிப்படுத்தப்பட்டது

இந்த சத்தியமானது சுவிசேஷங்களினால் வலிவாக உறுதிப்படுத்தப் படுகின்றது. சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் இயேசு தமது மரணம்,

உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தேயன்று ஸ்தாபிக்கப்பட இருந்த பரலோக இராஜ்யமாகிய சபையைச் சுட்டிக் காண்பித்து, அதற்குள் வழிநடத்துகின்றது.

சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் வாழ்வைப் படிக்கின்ற ஒருவர், இயேசுவின் ஊழியம் பற்றிய பின்வரும் மூன்று தலைப்புகள் எழுகின்ற தினால் உணர்த்துவிக்கப்படுகின்றார்: (1) நிறைவேற்றுவதற்கு அவர் அமைத்த ஊழியம், (2) அவரது ஊழியத்தின் தயாரிப்பு இயல்பு, மற்றும் (3) அவரது ஊழியத்தின் நிறைவுறாத பண்பு.

முதலாவது, இயேசு தம் சொந்த ஊழியத்தின் போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிப்பதை ஏற்படுத்தாமல் இருந்தார். அவர் தம் அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு, அவர்களின் பிரசங்கித்தலுக்கு உலகளாவிய சிறப்புக் கட்டளையொன்றை அவர்களுக்குக் கொடுக்கா திருந்தார்; மாறாக, "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற் போன ஆடு களாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத். 10:5, 6) என்று கூறியதன் மூலம் அவர்களின் வைராக்கியத்தை அமைதிப்படுத்தினார். நாம் திகைப்படையும் வகையில், இயேசு தம் ஊழியத்தின் போது, தம்மைப் பலஸ்தீனத்திற்குள் வரையறைப்படுத்திக் கொண்டார். அவர் ரோம உலகத்தின் மற்ற நாடுகளுக்கு ஒருக்காலும் சென்றதில்லை. உலகின் மிகச் சிறிய பகுதியொன்றில் அவரது பிரசங்கித்தல் மற்றும் போதனை ஆகியவற்றினால் அவருடைய ஊழியம் நிறைவேற்றப்பட்டது. இயேசு தமது சொந்த ஊழியத்தின் போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றிருந்தால், அவர் தம் ஊழியத்தை மாறுபட்ட வழியில், பல்வேறு பரவலான யுக்திகளையும் முறைகளையும் கையாண்டு நிறை வேற்றியிருப்பார்.

இரண்டாவது, இயேசுவின் வாழ்வு, ஊழியங்கள் மற்றும் மரணம் ஆகியவை வரவிருந்த ஏதோ ஒன்றுக்கு தயாரிப்பாக இருந்தன என்பதைச் சுவிசேஷங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இயேசு, "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது'' (மத். 4:17) என்று பிரசங்கித்தார். மலைப்பிரசங்கத்தில் அவர், "உம்முடைய இராஜ்யம் வருவதாக" (மத். 6:10) என்று ஜெபிக்குமாறு தம் சீஷர்களுக்குக் கற்பித்தார். இயேசு தம்முடைய அற்புதங்களினால் கூட்டங்கள் மேற்கொள்ளப்படுவதை, அதன் மறுசெயலாக அவரை அவர்கள் தங்கள் பூமிக்குரிய அரசராக்கும்படியான கருத்துடன் சுற்றி வந்ததை எச்சரிக்கையுடன் தவிர்த்து வந்தார். அவர் தமது பணி அட்டவணை அல்லது ஊழிய அட்டவணையை மக்கள் கூட்டமானது தமக்குக் கட்டளையிடுவதை அனுமதிக்காதிருந்தார். இயேசு ஒரு அற்புதத்தைச் செய்த பொழுது, அவர் சில வேளைகளில் அவ்வற்புதத்தைப் பெற்றுக் கொண்டவர்களிடம், "ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்" (மத். 8:4)[1] என்று கேட்டுக் கொண்டார். அவர் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தனிப்பட்ட வகையில் பயிற்சியளித்தார், ஆனால் அவர்களை விட்டுத் தாம் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கென்று அவர்களைப் பயிற்றுவித்தார் என்பது உறுதி (யோவா. 14:19).

மூன்றாவது, இயேசுவின் ஊழியமானது நிறைவுறாத் தன்மை கொண்டிருந்ததாகச் சுவிசேஷங்கள் சித்தரிக்கின்றன. பிதாவானவர் என்ன செய்யும்படியாக இயேசுவை அனுப்பினாரோ, அதை அவர் செய்தார், ஆனால் தம் வாழ்வின் முடிவில், அவர் தம் பரத்துக்கேறுதலைத் தொடர்ந்து மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்பாடுகளை எதிர்பார்க்கும்படிப் பன்னிருவரைத் தயார் செய்தார். இயேசு அப்போஸ்தலர்களிடம், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' (யோவா. 14:26) என்று உரைத்தார். மேலும் அவர்களிடம் அவர், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13) என்றும் உரைத்தார். இயேசு உயிர்த்த பின், பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பாக, தம் அப்போஸ்தலர் களை உன்னதத்திலிருந்து வரும் பெலனைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளையிட்டார். வல்லமை பெறுவதைத் தொடர்ந்து, அவர்கள் எருசலேம் தொடங்கி (சகல நாடுகளுக்கும்) மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பிரசங்கிக்க வேண்டியிருந்தது (லூக். 24:46-49).

நமது கர்த்தருடைய மரணத்திற்கு முன்னும் பின்னும் அவருடைய ஊழியத்தின் இந்தப் பண்புகள், பூமியில் அவருடைய ஊழியமானது சபை என்ற அவருடைய இராஜ்யத்தை நிலைநாட்ட இன்றியமையாத கூறுகளை ஒன்றாக்கிக் கொண்டு வரச் செய்யப்பட்டது என்று இணங்கத் தக்க வகையில் கூறுகின்றன. மத்தேயு 16:18ல் இயேசு தம் பூமிக்குரிய ஊழியத்தின் பாரத்தைத் தம் சீஷர்களுக்கு அறிவித்தார்: "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை." இவ்விதமாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்க ஒரு சுவிசேஷம் இருக்கும்படியாக அவர் வந்தார்.

தெற்கு டகோட்டாவில் ருஷ்மோர் என்ற குறிப்பிடத்தக்க மலையில் சிற்பங்கள் செதுக்கியவரும், வாஷிங்டன் D.C.யின், தலைநகரில் ஆபிரகாம் லிங்கன் அவர்களின் தலையை வடிவமைத்துச் (கல்லில்) செதுக்கிய வருமானவர் புகழ் பெற்ற சிற்பி கட்சன் போர்க்ளம் என்பவராவார். அவர் இச்சிலையைத் தனது பணி அரங்கில் ஒரு கரும் சலவைக் கல்லில் இருந்து செதுக்கியெடுத்தார். ஒவ்வொரு நாள் காலை வேளையிலும் அவருடைய பணி அரங்கைச் சுத்தம் செய்ய வந்த பெண்மணி, உயிருள்ளது போன்ற சிற்பத்தை முதன்முறையாகக் கண்ட பொழுது, ஒரு கணம் திகைப்புற்று, பின்பு "அந்தக் கருங் கல்லினுள் லிங்கன் பூட்டப்பட்டிருந்தார் என்பதை இவர் எவ்விதம் அறிந்தார்?" என்று கேட்டதாகக் கூறப்படுவது உண்டு. மற்றவர்கள் காண முடியாதிருந்ததை போர்க்ளம் காண முடிந்தது என்பதே அதற்குப் பதில் உரையாய் இருந்தது. அவர் கலைஞனுக்குரிய கண்ணும், சிற்பிக்குரிய உள்ளுணர்வும் கொண்டிருந்தார். அவரது திறன் மிக்க

கைகளும் தொலை நோக்குடைய சிந்தையும் அதை வெளிக்கொண்டு வரும் முன்பாகவே அம்முகத்தை அவரால் அந்தக் கல்லில் காண முடிந்திருந்தது.

இயேசு தம் பூமிக்குரிய ஊழியத்தின் போது கண்டதை நாம் சுவிசேஷங் களின் உதவியுடன் காண முடியும். வர இருந்த இராஜ்யத்திற்குரிய ஒரு தரிசனமும் மற்றும் அதற்கான தயாரிப்பும் அவருடைய ஊழியத்தில் அடைபட்டு இருந்தன. அவர், அதைப் பற்றிப் பிரசங்கித்து, அதற்காகத் தயார் செய்து, அதைத் தம் இரத்தத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கினார்.

நடபடிகளினால் உறுதியாக்கப்பட்டது

இயேசுவின் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை தங்களுக்குப் பின்னால் சபையை உருவாக்குதல், இராஜ்யத்தைக் கொண்டு வருதல் என்ற கட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தன என்பதை நடபடிகள் உறுதிப்படுத்துகின்றது. சுவிசேஷங்கள் இந்த சத்தியத்தைத் தெளிவாக அறிவிக்கின்றன, மற்றும் வண்ண மிகு உயிருள்ள விவரிப்பினால் நடபடிகள் இதை உறுதிப்படுத்துகின்றது.

நமது கர்த்தர் பரத்திற்கேறி பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெ கொஸ்தே அன்று பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது அற்புத மாய்ப் பொழியப்பட்டார் (அப். 2:1-4); இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சுவிசேஷமானது முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது; விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் ஆகியவற்றினால் இந்த சுவிசேஷத்திற்குப் பதில் செயல் செய்யும்படி மக்கள் அழைக்கப்பட்டார்கள் (அப். 2:38; லூக். 24:46, 47); மற்றும், பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை ஏற்றுக் கொள்ளுதல், ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றினால் மூவாயிரம் பேர் அந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டார்கள் (அப். 2:41). ஆகையால், இரவைத் தொடர்ந்து பகல் வருவதுபோல, இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து நமது கர்த்தருடைய சபை பிறந்தது.

நடபடிகளில் எஞ்சியுள்ள வரலாறு என்பது பரிசுத்த அன்பின் சுடராக சபையானது எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா மற்றும் அதற்கப்பால் ரோமப் பேரரசின் மற்ற பகுதிகளுக்குப் பரவியதின் வரலாறாகவே உள்ளது. நடபடிகளில் ஏவுதல் பெற்ற பிரசங்கித்தல் நடைபெற்ற போதெல்லாம், கேள்விப்பட்டவர்கள், பிரசங்கிக்கப்பட்ட வசனத்திற்குக் கீழ்ப்படிவதினால் சபைக்குள் வந்தனர். நடபடிகளில் சுவிசேஷப் பயணம் ஒன்று நடைபெற்ற பொழுதில் எல்லாம், உலகின் புதிய பகுதிகளில் சபைகள் உதயமான நிலையில் விட்டுச் செல்லப்பட்டன. நடபடிகளில் பவுலின் மூன்று ஊழியப் பயணங்கள், எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரையிலும் உலகம் முழுவதிலும் சபைகளை நிலைநாட்டின (ரோமர் 15:19). நடபடிகளை வாசிக்கின்ற எவரும் கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையின் விளைவாக உண்டானது சபையே என்ற வெகுவான முடிவை உற்று நோக்காமல் எவரொருவரும் இருக்க முடியாது.

‘‘உலக சுவிசேஷ ஊழியத்தில் நாம், நமது பணிகளில் இயேசு பயன்படுத்திய அதே செயல்முறைகளையே பயன்படுத்த வேண்டும்.’’ எதிர்கால ஊழியத்திற்கென்று நாம் பன்னிரு மனிதர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்க வேண்டும். இயேசு தாம் பயன்படுத்திய செயல்முறையில், “உலக ஊழியம் செய்வது எவ்வாறு என்று நமக்குக் காண்பித்துள்ளார்’’ என்று ஒரு பிரசங்கியார் கூறியதை ஒருமுறை நான் கேட்டேன். இயேசு தாம் செய்த ஒவ்வொன்றிலும் நிச்சயமாகவே முழுநிறைவான வராயிருந்தார். இருப்பினும் அவருடைய ஊழியம் பற்றிய முழு நிறைவானதொரு படிப்பானது, அவரது ஊழிய நாட்களின் போது அவருடைய ஊழியம் உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்கும் படியாகச் செய்யப்பட்டதில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அது சபைக்கு அஸ்திபாரம் போடுதலாக (மட்டுமே) இருந்தது; அது உலக ஊழியத்திற்கான திட்ட வரைபடத்தில் பணிகளை ஒன்றுகூட்டி இடுதலாக மட்டுமே இருந்தது. அவருடைய ஊழியத்திற்கான அவரின் அணுகுமுறையில், அவர் தமது தனிச் சிறப்பான ஊழியத்திற்கு, அவர் நமக்குக் கொடுத்துள்ள உலகளாவிய ஊழியத்தினின்று மாறுபட்டிருந்த ஒரு ஊழியத்திற்கு அதை நிறைவேற்றப் பொருத்தமான வழிகளையும் முறைகளையும் பயன்படுத்தினார்.

இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்க ஒரு சுவிசேஷம் இருக்கும்படியாக அவர் வந்தார்.

அது போலவே, நடபடிகளில் அப்போஸ்தலர்களும் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் நமது கர்த்தர் பயன்படுத்திய அதே அணுகுமுறைகளைப் பயன்படுத்தியிருப்பதாக நாம் காண்பதில்லை. அவர்கள் நமது கர்த்தர் செய்தது போலப் பயிற்றுவிக்கப் பன்னிருவரைத் தங்களைச் சுற்றி வைத்துக் கொண்டு, அவருடைய செயல்முறைமையை விரிவான வகையில் போலச் செய்து கொண்டிருக்கவில்லை. அப்போஸ்தலர்களும் ஏவப்பட்ட மற்றவர்களும் தங்களின் பிரசங்கித்தல் மற்றும் போதித்தலின் மூலமாக மக்களை சபைக்குள் கொண்டு வந்தார்கள்; பிறகு இந்தப் புதுக் கிறிஸ்த வர்கள் சபையின் ஒரு பாகம் என்ற வகையில் சபையினால் ஊழியம் மற்றும் சுவிசேஷத்துவம் ஆகியவற்றில் வளமூட்டப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, ஊக்கமூட்டப்பட்டு மற்றும் போதிக்கப்பட்டார்கள். இயேசுவின் பூமிக் குரிய ஊழியத்தின் விளைவாக சபையின் வாழ்வு உண்டாயிற்று என்பதை நடபடிகள் நமக்குக் காண்பிக்கின்றது. புதிய ஏற்பாட்டில் 48 சதவிகிதம் கிறிஸ்துவின் வாழ்வைக் கொண்டுள்ளது; எஞ்சியுள்ள 52 சதவிகிதமானது கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உண்டாக்கிய சபையைப் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளது.

நிருபங்களினால் மறுஉறுதிப்படுத்தப்பட்டது

புதிய ஏற்பாட்டு நிருபங்கள், சபை என்பது கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் இயற்கையான கனியாக உள்ளது என்ற சத்தியத்தின் பயன்பாட்டை வலியுறுத்துகின்றன. இந்த சத்தியத்தைச் சுவிசேஷ புத்தகங்கள் உறுதிப்படுத்துகின்றன, இதை நடபடிகள் பெருக்குகின்றன, மற்றும் இதை நிருபங்கள் பயன்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருப்பதினால் கிறிஸ்துவின் வாழ்வுக்குப் பதில்செயல் செய்வது எப்படி என்று நிருபங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் கிறிஸ்துவிடம் வரத் தேர்ந்து கொண்ட மக்களுக்கு நிருபங்கள் எழுதப்பட்டன. கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் செயல்விளைவு புதிய கவனம் பெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். கிறிஸ்து கர்த்தராகக் கனப்படுத்தப்பட்டுள்ளார் என்பதும், நாம் அவருடைய சபையாராகி அதில் நிலைத்திருத்தலே அவருடைய பூமிக்குரிய சஞ்சரிப்பை நாம் தக்க வகையில் ஏற்றுக்கொள்ளுதலாகும் என்பதும் ஏவப்பட்ட மனிதர்கள் மூலமாக (வானத்திலிருந்த) தரப்பட்ட செய்தியாக இருந்தது.

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக வாழ்ந்து ஊழியம் செய்யும்படியாக ஒவ்வொரு நிருபத்திலும் வற்புறுத்தப் படுகின்றனர். நிருபங்களை ஒன்றுகூட்டிக் காணும் போது, அவைகள் உண்மையிலேயே, எல்லா வகையான சூழ்நிலைகளிலும், மாறுபட்ட இடங்களிலும் கிறிஸ்துவின் சபையாக இருந்து வாழ்வது எப்படி என்பதற்கு "வழிகாட்டிக் குறிப்பு நூல்" ஒன்றையே அளிக்கின்றன. அவைகள் நமக்கு கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நமது வாழ்வுக்குப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் போதிக்கின்றன.

நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூலம் அவருடைய சரீரத்தில் பிரவேசிப்பதினால் ஆண்டவர் என்ற வகையில் இயேசுவுக்கு நம்மை ஒப்புவிக்கின்றோம். விசுவாசப் பதில்செயலின் இந்த நிறைவுப்படியைப் பவுல், கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதல் அல்லது கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் (கலா. 3:27) என்பதுடன் ஒப்பிட்டார். நிருபங்களின்படி, எவரொருவரும், விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல் ஆகியவற்றை முன்னதாகச் செய்து, இரட்சிப்புக்காக ஞானஸ்நானத்தின் மூலம் அவருடைய சரீரத்தில் பிரவேசித்திராத வரையிலும் இயேசுவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தவராய் இருப்பதில்லை.

நாம் தேவனுடைய ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் தேவனுடைய குடும்பம் என்ற வகையில் ஒன்றுகூடி வாழ்ந்து ஆராதிப்பதினால், இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கனப்படுத்துகின்றோம். பவுல் பின்வருமாறு கூறினார்:

> யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம் (ரோமர் 12:4, 5).

சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, ... ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).

வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... அவர்களுடனே சம்பாஷித்து ... (அப். 20:7).

நாம் தேவனுடைய குடும்பம் என்ற வகையில் கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்திருக்க மற்றும் ஆராதிக்கத் தவறுகின்ற பொழுது, கிறிஸ்து எதை நிறைவேற்ற வந்தாரோ அதிலிருந்து நாம் விலகிச் செல்பவர்களாகவும், அவர் எதை நிலைநாட்ட மரித்தாரோ, அதை அழிப்பவர்களாகவும் இருக்கின்றோம்.

இயேசு நம்மை, அவருடைய சரீரமாக, அவருடைய சபையாக இருப்பதற்கென்றே அழைத்துள்ளார், அதிகமான வேறொன்றிற்கும் அல்ல. அவருடைய மக்கள் கிறிஸ்துவின் சரீரம் என்பதைக் காட்டிலும் வேறு எதுவாகவாவது இருந்தார்கள் என்று நிருபங்கள் ஒருக்காலும் விவரிப்பதில்லை. நிருபங்களின் கூற்றுப்படி, இயேசு தம்மைப் பின்பற்ற ஒரே வழியை, தம்மைச் சேவிக்க ஒரே வழியை, தாம் ஏற்படுத்திய இரட்சிப்பையும் தம் இரத்தத்தையும் பெற்றுக் கொள்ள ஒரே வழியை மட்டுமே உண்டாக்கினார். அவருடைய ஆவிக்குரிய சரீரமாக இவ்வுலகில் விசுவாசத்துடன் வாழ்வதே அந்தத் துடிப்புள்ள வழியாக உள்ளது.

ஒரு வீட்டு மூலையொன்றில் ஒரு சிறுமி, வேதாகமம் ஒன்றைக் கண்டாள். அதை எடுத்துக் கொண்ட அச்சிறுமி, தன் தாயிடம், "இது என்ன புத்தகம் அம்மா?" என்று கேட்டாள். அவளுடைய தாய், "அது தேவனுடைய புத்தகமாகிய வேதாகமம்" என்று கூறினாள். அந்தச் சிறுமி தன்னை உறுத்திய உள்ளுணர்வுடன், "இதை நாம் ஒருக்காலும் பயன்படுத்தியிருக்க வில்லை, எனவே நாம், இதனை அவருக்கே திருப்பி ஏன் அனுப்பக் கூடாது?" என்று அறிவுறுத்தினாள்.

அதை நாம் வாசித்தும் கூட இன்னமும் உண்மையிலேயே பயன் படுத்தாமல் இருக்கக் கூடும் என்பது உண்மையாக உள்ளது. ஒவ்வொரு உரையாடலிலும் நாம் வேதாகமத்தை மேற்கோள் காட்டக் கூடும், அன்றாடம் நாம் அதை வாசிக்கக் கூடும், ஆனாலும் அதை நடைமுறைப் படுத்தத் தவறுகின்றோம். வேதாகமத்தை அங்கீகரிக்கப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்துதல் என்பது, நாம் கிறிஸ்துவின் சபையாராய் இருந்து அதை நடைமுறையில் பின்பற்றும்படியாக நம்மிடத்தில் கேட்கின்றது.

வேதாகமம் போதிக்கின்றபடியாக நாம் ஆகும் பொழுது மட்டுமே நாம் அதன் சரியான மற்றும் தக்க பயன்பாட்டைக் கைக்கொள்ளுகிறவர்கள் ஆகின்றோம்.

முடிவுரை

ஆகையால், புதிய ஏற்பாடு முழுவதும் ஒன்றிணைந்து, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபை என்பது, மனிதரானதில் கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய படைப்பு என்பதாகப் போதிக்கின்றது. இதனை வாக்குறுதி செய்வதினால் சுவிசேஷங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன, இதனைச் சித்தரிப்பதினால் நடபடிகள் இதனை உறுதிப்படுத்துகின்றது, மற்றும் இதனை வாழ்வுக்கு நடைமுறையில் பயன்படுத்துவதினால் நிருபங்கள் இதனை மறுஉறுதிப் படுத்துகின்றன.

நம் இரட்சிப்புக்காக வாழ்ந்து, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்த ஒருவருக்கு நாம் பதில்செயல் செய்யக் கூடிய ஒரே வழியாக இருப்பது நாம் அவருடைய சபையில் பிரவேசித்து அதன் உண்மையுள்ள உறுப்பினர்களாய் வாழ்வது என்பதே என்று புதிய ஏற்பாடு கூறுவதால், பின்வரும் கேள்வி தொடருகின்றது: ‘‘நீங்கள் அவருடைய சரீரமாக வாழ்கின்றீர்களா?’’ வாழ்வின் முடிவுப் பகுதிக்கு வந்து, நீங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்தைத் தவற விட்டுள்ளதாகக் காண்பது எவ்வளவு தவறானதா யிருக்கும்! ஒருவேளை அதை விட இன்னும் கவலைக்கிடமானதாக - தேவகுமாரன் இந்த பூமிக்கு வந்த நோக்கத்தைத் - தவற விட்டுள்ளதாகக் காண்பது எவ்வளவு பரிதாபமாயிருக்கும். இரட்சிப்பிற்கான தேவனுடைய செய்தியைப் புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கின்றது என்ற நிச்சயத்தைப் போலவே, கிறிஸ்து இந்த பூமிக்கு மானிட வடிவில் வந்தார் என்ற நிச்சயத்தைப் போலவே, அவருடைய சரீரத்தில் பிரவேசிக்காத எவரொருவரும், தம் வாழ்வுப் பயணத்தின் முடிவில், கிறிஸ்து இந்த பூமிக்கு ஏன் வந்தார் என்ற காரணத்தைத் தாம் தவற விட்டிருப்பதை அறிந்து கொள்வார் என்பது நிச்சயமானதாக உள்ளது. இந்த முடிவே புதிய ஏற்பாடு முழுவதிலும் அடிப்படைப் போதனையாக உள்ளது!

இயேசு இங்கு வாழ்ந்த தம் சுருக்கமான வாழ்வின் முடிவிடத்திற்கு வந்த பொழுது, அவரால், ‘‘பிதாவே, நீர் செய்யும்படி கேட்டுக் கொண்டவற்றை நான் செய்திருக்கிறேன். எனக்கென்று நீர் நியமித்த ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறேன்’’ என்று கூற முடிந்தது. அரண்மனை ஒன்றில் நீண்ட வாழ்வு வாழ்ந்து, சுயநல நோக்கங்களுக்காக அரசாளுவதைக் காட்டிலும், தேவனுடைய சித்தம் என்ற வட்டத்திற்குள், அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே இந்தப் பூமியில் வாழ்வது என்பது மேன்மையானது. வாழ்வின் முடிவில் பல மக்களால், “தேவனே, இந்த பூமியில் நீர் எனக்குக் கொடுத்த ஆண்டுகளை வாழ்ந்து முடித்துள்ளேன், மற்றும் நான் செய்ய விரும்பியவற்றை மட்டுமே நான் செய்துள்ளேன். நான் எனக்காகத் தேர்ந்து கொண்ட ஊழியத்தை நான் நாடியுள்ளேன்’’ என்று மட்டுமே கூறக் கூடும்.

நாம் நமது வாழ்வின் முடிவை வந்தடையும் பொழுது, ஆச்சரியப்படத்

தக்க அளவில், “ஆண்டவரே, நான் என்னவாக இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய உம் விருப்பத்தை நான் வேத வசனங்களிலிருந்து கண்டறிந்தேன், மற்றும் அந்த ஊழியத்திற்காக என்னை நான் ஒப்புக் கொடுத்துள்ளேன். இந்த பூமியில் உம்மை மகிமைப்படுத்த நான் உண்மையாய் முயன்றுள்ளேன், மற்றும் நீர் எனக்களித்த திட்டத்தின்படி வாழ நான் நாடியுள்ளேன். நான் கிறிஸ்துவின் சபையாக வாழ்ந்துள்ளேன்” என்று கூற முடியும் பொழுது அப்படியே ஆகட்டும்.

குறிப்பு

[1]*மத். 9:30; 12:16; 17:9; மாற். 1:44; 3:12; 5:43; 7:36; 8:30; 9:9; லூக். 4:41; 8:56; 9:21 ஆகியவற்றையும் காணவும். “ஒருவரிடத்திலும் சொல்ல வேண்டாம்” என்ற வினோதமான கட்டளையைப் பற்றி* J.W. *மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு எழுதினார்: “படை அதிகாரிகளிடமிருந்து இடையூறைத் தூண்டி விடும் வகையில் மக்கள் மத்தியில் உணர்வெழுச்சி அனாவசியமாக ஏற்படுவதற்கெதிராகக் காத்துக் கொள்ள இவ்வாறு கூறப்பட்டது என்று எண்ணப்படுகின்றது, மற்றும் இப்படிப் பட்ட உணர்வெழுச்சி இடையூறானது இயேசுவின் போதனைகளை மக்கள் அமைதியாய்க் கவனிக்க முடியாமல் ஆக்கி விடும். (மாற். 1:45ஐ ஒப்பிடுக.) சிலவேளைகளில், சந்தர்ப்பத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் தம் போக்கைத் திருப்பிப்போட்டு, மனிதர்களுக்குத் தாம் செய்தவற்றை எல்லாரிடமும் கூறும்படி உரைத்தார்”* (J.W. McGarvey, *The New Testament Commentary: Matthew and Mark* [N.p. 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 75).

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *உலக வரலாற்றில் நடந்துள்ளவற்றிலேயே மாபெரும் நிகழ்ச்சி எது? உங்கள் பதிலுக்கான காரணத்தைக் கொடுக்கவும்.*
2. *இயேசு முற்றிலும் மனிதராயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் மனிதராய் இருந்தாரா?*
3. *இயேசு முற்றிலும் தெய்வீகமாயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் தெய்வீகமாய் இருந்தாரா?*
4. *இயேசு ஏன் இந்த பூமிக்கு வந்தார்? அவர் நிறைவேற்ற வந்த ஒரே நோக்கம் என்ன?*
5. *இயேசுவின் ஊழியமானது தன்னுள் நிறைவுறாப் பண்பைக் கொண்டுள்ளதென்று நீங்கள் கூறுவீர்களா?*
6. *இயேசு தம் ஊழியத்தின்போது உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்க முயற்சி செய்தாரா?*
7. *இயேசுவின் ஊழியமானது வரவிருந்த ஒன்றிற்கான*

தயாரிப்பாயிருந்தது எவ்வாறு என்று காண்பிக்கவும்.

8. *அன்று நமது கர்த்தர் பயன்படுத்திய அதே செயல்முறைகளை இன்று நாம் பயன்படுத்த வேண்டுமா? ஆம் அல்லது இல்லை என்பதற்குக் காரணங்கள் தரவும்.*
9. *புதிய ஏற்பாட்டில் நிருபங்களின் பணிகள் யாவை?*
10. *இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு நாம் இன்றைய நாட்களில் எவ்விதம் பதில் அளிக்க வேண்டும்?*
11. *நாம் இயேசுவின் சபையாராய் இராமல், அவருடைய வாழ்வுக்குத் தக்க வகையில் பதில்செயல் செய்ய முடியுமா?*
12. *நாம் இயேசுவின் சபையாராய் வாழாமல், நமக்கென்று அவர் வைத்துள்ள ஊழியத்தை நிறைவேற்ற முடியுமா?*

9

“இதுவே அதுவாக உள்ளது!”

“அப்பொழுது பேதுரு ... அவர்களை நோக்கி ... தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது ... (என்று கூறினார்)” (அப். 2:14-16).

நீங்களும் நானும் பத்து மனிதர்களை வழக்கத்திற்கு மாறான ஒரு அனுபவம் பெறும்படி ஒன்றுகூட்டி இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இந்த மனிதர்கள் நள்ளிரவு வேளையில் நம்முடன் ஒரு பெரிய நிலப்பகுதியில் நின்று கொண்டுள்ளனர். அந்த மனிதர்களிடத்தில், “நீங்கள் நின்றிருக்கும் இடத்திலிருந்து நூறு கெஜம் (நூற்று ஐம்பது அடிகள்) தொலைவில் இரண்டு இன்ச்சுகள் (ஐந்து சென்டி மீட்டர்கள்) விட்டமுள்ள ஒரு திடமான கறுப்பு வட்டம் ஒன்றை மையமாகக் கொண்ட இலக்கு ஒன்றுள்ளது. அந்த இலக்கானது உங்கள் வலது புறத்திலோ அல்லது இடது புறத்திலோ இருக்கக் கூடும்; அது உங்களுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ இருக்கக் கூடும். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வில்லும் பத்து அம்புகளும் தரப்படும். நீங்கள் யாரும் அந்த இலக்கு இருக்குமிடத்தை அறியாதிருப்பினும், இருளின் காரணமாக அதை நீங்கள் காண முடியாதிருப்பினும், உங்களில் யாராவது ஒருவர் அந்த இலக்கின் மையப் பகுதியில் உங்கள் அம்புகளில் ஒன்றை எய்வதை நாங்கள் காண விரும்புகின்றோம்” என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொருவராக அந்தப் பத்து மனிதர்களும் எழுந்து நின்று தங்கள் அம்புகளை எய்கின்றனர், உண்மையில் அவர்கள் இரண்டு இன்ச்சுகள் அளவிலான கறுப்பு வட்டத்திற்காக இருளில் ஊடுருவுகின்றனர். சிலர் வலது புறமும், சிலர் இடது புறமும் (அம்பை) எய்கின்றனர். சிலர் தங்களுக்கு முன்னால் அம்பை எய்கின்றனர்; சிலர் திரும்பி, தங்களுக்குப் பின்னால் எய்கின்றனர். நிறைவாக, நூறு அம்புகள் காணப்படாத மின்னல் வரிகள் போல் இரவின் இருளுக்குள் எய்யப்படுகின்றன. பிறகு, நம்முடைய ஒளி தரும் விளக்குகளுடன் நாம் நடந்து இலக்கைக் கண்டறியத் தேடுகின்றோம்.

எத்தனை அம்புகள் இலக்கை நோக்கிச் சரியாகப் பாய்ந்திருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? நீங்கள் முழு நம்பிக்கையுடன் “ஒன்றும் இல்லை. ஒரு அம்பு கூட இலக்கைச் சென்றடைந்திராது” என்று கூறலாம். மேலும் நீங்கள், “உதவி பெறாத மனிதர்கள் தாங்கள் காண முடியாத இலக்கின் மீது

அம்பெய்ய முடியாது" என்றும் கூறலாம். நிச்சயமாகவே, நீங்கள் சொல்வது சரியானதே. இருப்பினும், இந்த உண்மையைச் சிந்தித்துப் பாருங்கள்: மனிதர்கள் செய்ய முடியாதவற்றை, தேவன் ஏவுதல் பெற்ற மனிதர்களைச் செய்ய வைத்தார்!

பழைய ஏற்பாட்டுக் காலங்கள் மற்றும் இயேசுவின் ஊழியத்தின் நாட்கள் ஆகியவற்றின் பொழுது, பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக வில்லில் இருந்து தீர்க்கதரிசன அம்புகள் எதிர்காலத்தை நோக்கி வேகமாய்ப் பாய்ந்தன. பிற்பாடு, காலத்தின் கரத்தினால் எதிர்காலத்தின் திரையானது தள்ளப்படுகையில், ஒவ்வொரு அம்பும் தனது இலக்கை மிகச் சரியாகவும் முழுமையாகவும் தாக்கிற்று.

எதிர்கால நிகழ்ச்சிகளில் மக்களையும் இடங்களையும் அடையாளப் படுத்தும் பெயர்த் தீர்க்கதரிசனங்கள் சில இருந்தன; மற்றவைகள் அத்தீர்க்கதரிசியின் நாளையும் மற்றும் மேசியாவின் நாளையும் பற்றிய செய்திகளைக் கொண்ட இரட்டைத் தீர்க்கதரிசனங்களாய் இருந்தன. இன்னும் மற்றவை, அவற்றிற்கிணையிலுள்ள மாறுதலைகளை வெளிப் படுத்தும் மாதிரித் தீர்க்கதரிசனங்களாய் இருந்தன. தீர்க்கதரிசன வகை எதுவாயிருப்பினும், ஒவ்வொரு தீர்க்கதரிசன அம்பும் அதன் இலக்கினு டைய மிகச் சரியான மையத்தைத் தாக்கின.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் சபையானது, "சபை" என்ற சொற்றொடரினால் ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லையென்றாலும், அது மறைகருத்துக்களினால் அடிக்கடி அடையாளப்படுத்தப்பட்டது (ஆமோ. 9:11) மற்றும் அது சில வேளைகளில் "நித்திய இராஜ்யம்" (தானி. 2:44) என்ற திட்டவட்டமான சொற்றொடரினாலோ அல்லது "புதிய உடன்படிக்கை" (எரே. 31:31) அல்லது "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" (ஏசா. 2:2) என்பது போன்ற அதே வகையான சொற்றொடர்களினாலோ அடையாளப் படுத்தப்பட்டது. வருவதாயிருந்த இராஜ்யமானது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தில் தனிச்சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தது.

அணுகிக் கொண்டிருந்த ''இராஜ்யம்'' ஒன்றின் சித்தரிப்புடன் இம்மூன்று வகையான தீர்க்கதரிசனங்களும் சபையின் வருகையைப் பற்றி முன்னுரைப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்டன. நாம், சபையைப் பற்றிய மிகவும் பழக்கமான ஒரு இரட்டைத் தீர்க்க தரிசனத்தைக் கருத்தாய் ஆராய்ந்து, அது சபையின் அற்புத விதமான தொடக்கத்தை எவ்வாறு குறிப்பிடுகின்றது என்பதை உற்று நோக்குவோம்.

பொருள் விளக்கம்:
வசனப்பகுதி கூறுவது என்ன?

பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு தம் பிரசங்கத்தில், யோவேலின் புகழ் பெற்ற தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார் (அப். 2:16-21; யோவே. 2:28-32). அந்தத் தீர்க்கதரிசனமானது, "கடைசி நாட்களின் யுகம்" என்பது பரிசுத்த ஆவியானவருடைய அற்புதமான இறங்குதலுடன் தொடங்கும் என்று சுட்டிக் காண்பித்தது.

நிறைவேற்றத்தின் இயல்பு

யோவேலின் வெளிப்படுத்துதல் ஒரு இரட்டை அல்லது இருகூற்றுத் தீர்க்கதரிசனமாய் உள்ளது: அது, யோவேலின் நாட்களில், தேவனுடைய மக்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்பினால் அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொண்டிருந்தது. அது, எதிர்காலப் பயன்பாட்டில், ஒரு புதிய யுகத்தை அல்லது சகாப்தத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் பரிசுத்த ஆவியானவர் விசேஷமாய்ப் பொழிந்தருளப் படும் ஒரு நாளைச் சுட்டிக்காண்பித்தது.

பரிசுத்த ஆவியானவரின் இந்த ஞானஸ்நானம் பற்றி அப்போஸ்தலர் கள், யோவான் ஸ்நானகனாலும் இயேசுவாலும் முன்னதாகவே உணர்த்தப்பட்டிருந்தார்கள். யோவான், தம் குறுகிய காலப் பிரசங்க ஊழியத்தின் மத்தியில், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11) என்று கூறியிருந்தார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அளித்த தம் செய்திகளில், தமது அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை மீண்டும் வாக்களித்தார், அதை அவர் "பிதாவின் வாக்குத்தத்தம்" என்று குறிப்பிட்டார். அப். 1:4, 5 வசனப்பகுதியானது, "... யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" என்று கூறுகின்றது. இன்னும் மற்றொரு வேளையில் அவர்களிடத்தில் அவர், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24:49) என்று கூறினார். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைத் தம்முடைய அப்போஸ்தலர்களே பெற்றுக் கொள்வார்கள் என்று குறிப்பிட்டதன் மூலம் அந்த ஞானஸ்நானத்தைப் பெறுபவர்களைப் பற்றி இயேசு யோவான் ஸ்நானனைக் காட்டிலும் அதிக திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

நிறைவேற்றத்தின் அர்த்தம்

அப். 2ன் தொடக்கத்தில், பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மீது பொழியப்படுகையில், அவர்கள் யோவேலின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேற்றத்தை அனுபவித்தார்கள். லூக்கா, "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,

ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப். 2:3, 4) என்று எழுதினார். இந்தப் பொழிந்தருளலானது "பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போன்ற" (அப். 2:2) சத்தத்துடன் கூட வந்தது. பெந்தெகொஸ்தே நாளைக் கடைப்பிடிப்பதற்காக எருசலேமில் கூடியிருந்த மக்கள் கூட்டமானது இந்த சத்தத்தைக்கேட்டு, ஒன்றாய்க் கூடி, என்ன நடந்து கொண்டிருந்தது என்று விசாரித்தார்கள். அவர்கள் ஒன்றுகூடி வருகையில், அக்கூட்டத்தாரின் பல்வேறுபட்ட வட்டார மொழிகளிலும்கூட அப்போஸ்தலர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்டு திகைப்படைந்தார்கள்.

கூட்டத்தார் தாங்கள் கண்டவை மற்றும் கேட்டவை ஆகியவற்றினால் பெரிதும் கலக்கமுற்றார்கள், கூட்டத்தில் சிலர், ஒருவேளை தங்கள் பயம் மற்றும் அறியாமையினால், அப்போஸ்தலர்கள் மதுபானம் அருந்தியிருந்ததாகக் குற்றம் சாட்டினார்கள். பேதுரு அந்த நாட்களில் உலகளாவிய மொழியாய் இருந்த கிரேக்க மொழியில் பேசி, அவர்களின் கவனத்தை ஈர்த்து, இயேசுவே கிறிஸ்து என்பதற்கான சான்றை அவர்களுக்கு முன் வைத்தார். அவர் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் அந்தப் பொழிந்தருளலானது யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்ததாக விளக்கினார். அவரது வார்த்தைகள் யோவேலின் தீர்க்கதரிசனத்தில் எல்லாக் காலத்திற்குமான முக்கிய அர்த்தத்தைத் தெளிவாக்குகின்றன: "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது'' (அப். 2:16). முந்திய தலைமுறை ஒன்றில் நன்கு அறியப்பட்ட பிரசங்கியாரான ஃபோய் L. வாலஸ் அவர்கள், "பேதுரு, 'சங்கதி இதுவே!' என்று கூறினார்" என்பதாகச் சொன்னார். ஒரு புது யுகம், சபையின் யுகம் தொடங்கிக் கொண்டிருந்தது. ஏவப்பட்ட அப்போஸ்தலரான பேதுரு, நமக்காக யோவேலின் தீர்க்கதரிசனத்தின் அர்த்தத்தைப் பொருள்விளக்கப்படுத்தியுள்ளார். அவருடைய மிகவும் தெளிவான விளக்கமானது தீர்க்கதரிசனத்திற்குப் பரிசுத்த ஆவியானவரின் சுயபொருள் விளக்கத்தை நமக்குத் தருகின்றது.

மனித குல வரலாறானது படைப்பின் அற்புதங்களுடன் தொடங்கியது - அதில் தேவனுடைய கரத்தினால் ஆணும் பெண்ணும் வடிவமைக்கப்பட்டார்கள். அப். 2ல், இப்பூமியின் மீது தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் தொடக்கத்தில், பரிசுத்த ஆவியானவரால் சபை வடிவமைக்கப்பட்ட பொழுது, அற்புத நிகழ்வானது மீண்டும் காணப்படுகின்றது.

நிறைவேற்றத்தின் முழுமைத் தன்மை

பெந்தெகொஸ்தேயன்று யோவேலின் தீர்க்கதரிசனம் யாவும் நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையாக உள்ளது, ஏனெனில் குமாரர்கள், குமாரத்திகள், மூப்பர்கள், இளைஞர்கள் மற்றும் ஊழியக்காரர்கள் ஆகியோர் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவார்கள் என்று யோவேல் கூறினார் மற்றும் தரிசனங்களைக் காணுதல், கனவுகளைக் காணுதல் ஆகியவை பற்றியும் முன்னுரைத்தார். அந்த நாளில் ஆவியானவர் இவ்விதமாய் ஊற்றப்பட்ட பதிவு எதுவும் நமக்கு இல்லை. கூடுதலாக,

யோவேல் வெளிப்படுத்தும் மொழிநடையில் ஒருவேளை, தம் தீர்க்க தரிசனத்தின் பிற்பகுதியில் நியாயத்தீர்ப்பிற்கு வரும் நாளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். யோவேலின் தீர்க்கதரிசனத்தில் சில நிகழ்ச்சிகளே பெந்தெகொஸ்தே நாளன்று நடைபெற்றிருக்க வேண்டும். என்றால் பிறகு, "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" என்ற பேதுருவின் வார்த்தைகளை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்?

"கடைசி நாட்களின்" அற்புத விதமான தொடக்கம் பற்றிய யோவேலின் தீர்க்கதரிசனத்தின் *இருதயம்* போன்ற மையப் பகுதியானது அந்த நாளில் நிறைவேறியது என்று பேதுரு அறிவித்தார். இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். இந்த ஞானஸ்நானம் அவர்களைத் தேவனுடைய வெளிப்படுத்துதலை மனிதர்களுக்குக் கொடுக்க (அப். 2:22-36), பரிசுத்த ஆவியானவரை மற்றவர்களுக்குக் கொடுக்க (அப். 8:14, 15) மற்றும் தாங்கள் பேசிய செய்திகளை அற்புதங்களினால் உறுதிப்படுத்த(எபி. 2:2-4)ப் பெலம் அளித்தது. ஆகையால், பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ்தலர்களின் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த இந்த நிகழ்ச்சியானது கிறிஸ்தவ யுகத்தின் தொடக்க காலத்தில் *அற்புதத்தின் நீரோடையை உண்டாக்கும் தாய் நீரூற்றாய்* இருந்தது. தொடர்ந்து வந்த நாட்களில் அப்போஸ்தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களின் மீது கரங்களை வைத்து, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைத் தருபவர்களாய் இருந்தனர். இந்த வரம் தருதலானது குமாரர்களையும், குமாரத்திகளையும், மூப்பர்களையும், இளைஞர்களையும், ஊழியக்காரர்களையும், ஊழியக்காரிகளையும் தீர்க்கதரிசனம் உரைக்கச் செய்வதாயிருந்தது.

தேவன் தம்முடைய ஆவியானவரை "யாவர் மேலும்" (அப். 2:17; யோவே. 2:28) ஊற்றுவார் என்று யோவேல் கூறியிருந்தார். அவருடைய தீர்க்கதரிசனத்தின் இந்தப் பகுதியானது பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உறுதியாகவே நிறைவேற்றப்பட்டது. பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ தலர்கள் யூதர்களின் இனத்திற்குச் சார்பாக நின்றிருந்தனர் (அப். 2), மற்றும் கொர்நேலியுவின் வீட்டாருக்குப் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதலைத் தேவன், புறஜாதியாரும் தேவனுடைய இராஜ்யத்தைப் பெறுவார்கள் என்பதை வெளிப்படுத்தப் பயன்படுத்தினார் (அப். 10). ஆகையால், பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ்தலர்களிடத்திலும், பிற்பாடு கொர் நேலியுவின் வீட்டார் மற்றும் நண்பர்கள் ஆகியோரிடத்திலும் தேவன் தம்முடைய ஆவியானவரை ஊற்றியது "யாவர் மீதும்" ஊற்றப்படுதலின் பிரதிநிதித்துவங்களாய் இருந்தன.

நிறைவேற்றத்தின் தெளிவு

இந்த ஊற்றப்படுதலைக் குறித்து, இதன் அர்த்தத்தைக் குறித்து எவரொருவரும் குழப்பமடையத் தேவையில்லை. இது யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமாய் இருந்தது என்று தவற்ற வகையில்,

ஏவப்பட்ட அப்போஸ்தலர் விளக்கப்படுத்தினார். அந்த நிகழ்ச்சி பற்றிய பேதுருவின் ஏவுதல் பெற்ற விளக்கத்தினால் நாம் அந்த நிகழ்ச்சியானது "கடைசி நாட்களின்" தொடக்கமாய் இருந்தது என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது தீர்க்கதரிசிகள் யாவரும் தாங்கள் தீர்க்கதரிசனம் கூறியிருந்ததும், ஆவலுடன் எதிர்நோக்கியிருந்ததுமான ஒரு சிறப்பான யுகத்தின் தொடக்கமாய் இருந்தது.

அப்போஸ்தலர்களின் மீது அற்புத விதமாகப் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தருளுவதாலும் மற்றும் இவ்விதமாக மனித வரலாற்றின் கடைசிப் பிரிவைத் தொடங்குவதாலும் தேவன் புதிய உடன்படிக்கையை அதனிடத்தில் அமைத்து வைக்கத் தேர்ந்து கொண்டார். அவருடைய சித்தமானது எழுதப்பட்ட அவருடைய வெளிப்படுத்துதலானது மனிதனுக்கு முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டவுடன் மற்றும் சபையின் யுகமானது முழுமையாய்த் தொடங்கியவுடன், அற்புதங்கள் ஒழிந்து போயின, ஏனெனில் அவைகளின் மூலம் உறுதிப்படுத்துதல் என்பது இனியும் தேவையற்றதாகி விட்டது (1 கொரி. 13:8-10). அற்புதங்களின் யுகம் முடிந்துள்ளது, ஆனால் சபையின் யுகமானது "பூமியின் வரலாற்றினுடைய" கடைசி யுகமான காலங்களின் முடிவு வரையிலும் தொடரும்.

விவரிப்பு:
வசனப் பகுதி அர்த்தப்படுத்துவது என்ன?

ஒருவேளை ஒரு மனிதர், வர இருந்த தேவனுடைய இராஜ்யம் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களைப் படித்திருந்து, ஆனால் அந்தத் தீர்க்கதரிசனங்களைப் பற்றிப் பிரமிப்பு அடைந்துள்ளார் என்று வைத்துக் கொள்வோம். அவர் வரவிருந்த இராஜ்யம் எது போலக் காணப்படும் என்பதில் நிச்சயமற்றவராய் இருக்கின்றார். தீர்க்கதரிசனத்தின் இந்தத் தலைப்பைப் புரிந்து கொள்ள, மற்றும் தெளிவாக்கிக்கொள்ள அவர் எங்கு திரும்ப முடியும்?

இம்மனிதர் அப். 2ன் பக்கம் திரும்ப முடியும். சக்கர அச்சின் மையம் போன்ற இந்த அதிகாரமானது இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றின் நிறைவேறுதலின் தொடக்கத்தை அவருக்குக் காண்பிக்கும். வருவதாயிருந்த இராஜ்யமானது எதைப் போன்று காணப்படும் என்பதில் அவர் குழப்பம் அடைந்தவராய் இருந்தால், அப். 2வது அதிகாரமானது, வருவதாயிருந்த அந்த இராஜ்யத்தைத் தேவனுடைய சித்தரிப்பானது அதன் "வந்திருந்த நிலையில்" காண்பிக்கும். இராஜ்யம் எதைப் போன்றதாயிருக்கும் என்பதில் அவர் நிச்சயமற்றவராயிருந்தால், மக்கள் எவ்வாறு வருவதாயிருந்த இராஜ்யத்தின் தீர்க்கதரிசனங்களின் தெய்வீக நிறைவேறுதலின் சபையாக வாழ்ந்தனர் என்பதை அவருக்கு அப். 2 காண்பிக்கும்.

1975ல் ஒரு பிரசங்க முகாமிற்காக நான் சிங்கப்பூருக்கு அழைக்கப் பட்டிருந்தேன். அழகிய நாடான சிங்கப்பூர் பற்றி நாங்கள் கேள்விப் பட்டிருந்தோம், ஆனால் அதை ஒருக்காலும் (இதற்கு முன்) பார்த்ததில்லை.

சிங்கப்பூரில் நீண்ட காலம் ஊழியம் செய்துள்ள கார்டன் ஹோகன் அவர்கள் அங்குள்ள சபையுடன் இருந்தார், அவர் நாங்கள் முகாமிற்காகத் தயார் செய்து கொள்வதற்கு, அதைப் பற்றிய விபரங்களை எங்களுக்கு அனுப்பினார். ஆராதனைக் கூட்டங்கள், மக்கள் மற்றும் சூழ்நிலைகளை மனக்கண்ணால் காண்பதற்கு நான் முயற்சி செய்தேன். நான் பிரசங்கிக்க விருந்த (அந்த) நாடு மற்றும் மக்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தேன். அந்த முகாமிற்கு முன்னதாக ஆறு மாத காலங்களின் போது, கடிதங் களையும், பயன்படுத்தப்பட்ட விளம்பரத் துணுக்குகளையும் மற்றும் வரவேற்புக் குறிப்புகளையும் நாங்கள் வரவேற்கப் பெற்றோம். இவை

பெந்கொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரின்
ஞானஸ்நானம் என்பது தீர்க்கதரிசிகள் யாவரும் தாங்கள்
தீர்க்கதரிசனம் கூறியிருந்ததும், ஆவலுடன்
எதிர்நோக்கியிருந்ததுமான ஒரு சிறப்பான யுகத்தின்
தொடக்கமாய் இருந்தது.

எல்லாவற்றையும் ஒன்று கூட்டி வைத்து, முகாமானது எதைப் போன்று இருக்கும் என்று சித்தரிக்க நாங்கள் முயற்சி செய்தோம். கடைசியாக, அமெரிக்காவில் இருந்து நாங்கள் புறப்பட வேண்டிய நாள் வந்தது. இருபத்து நான்கு மணி நேரங்கள் (விமானத்தில்) பறந்த பிறகு, நாங்கள் சிங்கப்பூர் சென்றடைந்தோம். அங்கு நடைபெற்ற முதல் ஆராதனைக் கூட்டத்தின் போது, "இப்பொழுது நான் இது எதைப் போன்றுள்ளது என்று காண்கின்றேன். இப்பொழுது நான் புரிந்து கொள்ளுகின்றேன்" என்று கூற முடிந்தது.

ஒருவர் பழைய ஏற்பாட்டைப் படித்து, வருவதாயிருந்த இராஜ்யத்தைப்பற்றி பல தீர்க்கதரிசனங்களை ஆழ்ந்து சிந்திக்கையில், அந்த இராஜ்யம் வரும்போது எவ்வாறு இருக்கும் என்பதை மனக்கண் முன் கொண்டு வர அவர் முயற்சி செய்யலாம். சபையின் தொடக்கம் பற்றிய வடிவில் இராஜ்யத்தின் தொடக்கத்தினுடைய அடையாளப்படுத்துதலைப் பேதுருவின் ஏவுதல் பெற்ற மொழிநடையில் அவர் அப். 2ல் காண்கையில், அவர், "தேவன் தம்முடைய தீர்க்கதரிசனங்களில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் இப்பொழுது காண்கின்றேன். இப்பொழுது நான் புரிந்து கொள்ளுகிறேன்" என்று கூற முடியும். இராஜ்யத்தின் சித்தரிப்பைத் தேவன் அதன் உண்மை வடிவத்தில் அப். 2ல் நமக்குக் கொடுத்திருப்பதற்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட இராஜ்யம் இன்னும் வரவில்லை என்று யாராவது தர்க்கம் செய்வாரானால், அவரால் தவறாக வழி நடத்தப்பட வேண்டாம். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை எடுத்து, இந்தத் தீர்க்கதரிசனங்களின் அற்புதமான நிறைவேறுதல்களைப் பற்றி அதில் வாசியுங்கள். அப். 2 ஆனது, இராஜ்யம் வந்திருக்கிறது என்பதை

நிரூபிப்பது மாத்திரமல்லாது, தேவன் தம்முடைய இராஜ்யம் எப்படியிருக்க வேண்டும் என்று விரும்பினார் என்பதையும் அது கூறுகிறது.

உள்ளாக்கம்: வசனப் பகுதி நம்மிடம் கேட்டுக் கொள்வது என்ன?

இவ்வசனப் பகுதிக்கு நாம் எவ்விதத்தில் பதில்செயல் செய்ய வேண்டும்? இது வாழ்வில் எவ்விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்?

முதலாவதாக பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தினுடைய இந்த நிறைவை நமக்குள் *அலைபாய்வற்ற உறுதிப்பாட்டினை* நிலைநிறுத்தும் படியாக அனுமதிக்க வேண்டும். சபையின் தொடக்கம் பற்றிய நமது விசுவாசமானது உறுதியானதாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்க வேண்டும். தேவன் தம் ஆவியானவரை அற்புதமாகப் பொழிந்த நிகழ்வினால் அதன் (சபையின்) தொடக்கத்தை அறிவித்துள்ளார். தேவன் தம்முடைய சபையின் தொடக்கத்தை வெளிப்படுத்த இதைக்காட்டிலும் மேன்மையான வேறெந்த வழியைப் பயன்படுத்தியிருக்க முடியும்? தேவன் தம் இராஜ்யத்தின் வருகை பற்றி இதை விட வலிவாக வேறெந்த முறையில் வெளிப்படுத்தியிருக்க முடியும்?

இரண்டாவதாக, பெந்தெகொஸ்தேயன்று, யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமானது *குடியுரிமை பற்றிய அசைக்க முடியாத* ஒரு கருத்துணர்வை நமக்குள் உண்டாக்க வேண்டும். தேவனுடைய இராஜ்யம் வந்துள்ளது மற்றும் நாம் அதனுள் இருக்க முடியும் என்ற உறுதிப்பட்ட அறிவுடன் இப்பொழுது நாம் வாழ முடியும். தேவனுடைய ஆவியானவர் பொழியப்பட்ட நிகழ்ச்சியில் பொதிந்துள்ள தேவனுடைய சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொண்டால், நாம் தேவனுடைய இராஜ்யத்தின் குடி மக்களாகி, அவ்விதமாகவே வாழ முடியும் என்ற மகிழ் நிறைவான உணர்ந்தறிதலுடன் நாம் வாழ முடியும். இந்தத் தீர்க்கதரிசனமும் மற்றும் இதன் நிறைவேற்றமும் நமக்கு, இராஜ்யத்தின் அடையாளம், தனிச்சிறப்பு மற்றும் தோற்றம் ஆகியவை பற்றிய உறுதிப்பாட்டை அளிக்கின்றன.

மூன்றாவதாக, நாம் *களைப்பற்ற உறுதிப்பாட்டுடன்* பதில் அளிக்கக் கடவோம். நாம் தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்வதற்கும், தேவனுடைய இராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிப்பதற்கும் நம்மையே அர்ப்பணிப்பவர் களாய் இருக்க வேண்டும். இயேசுவின் மூலமாக நாம் அவருடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம் (கொலோ. 1:13). யாரோ ஒருவர் கூறியபடி, “நாம் பரலோகம் செல்ல முயற்சிக்கின்ற இவ்வுலகக் குடிமக்களாயிருப்பதில்லை; நாம் இவ்வுலகத்தினூடாகக் கடந்து செல்ல முயற்சிக்கின்ற பரலோகத்தின் குடிமக்களாய் இருக்கின்றோம்.” நாம் பரலோக இராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்றோம், மற்றும் நாம்

மற்ற மக்களுக்கு இராஜ்யத்தை விரிவாக்கும் ஊழியத்தில் ஈடுபட்டவர்களாய் இருக்க வேண்டும்.

முடிவுரை

பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழிந்தருளப்பட்ட நிகழ்ச்சியானது, சபையின் அர்த்தத்தை எல்லா மக்களுக்கும் உறுதிப்படுத்துகிறது. வசனங்களின் போதனைக்கு உண்மையுடன் இருத்தல் என்பது, நாம் அப். 2ஐ யோவேல் தீர்க்கதரிசன நிறைவேற்றம் என்ற வகையில் காண வேண்டும் என்பதாக நம்மைக் கேட்டுக் கொள்ளுகின்றது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் இராஜ்யம் பற்றிய கருத்து வலியுறுத்தப்படுவதன் காரணமாக, நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த இராஜ்யத்தின் வருகையுடன், பெந்தெகொஸ்தே நாளன்று "கடைசி நாட்கள்" தொடங்கின.

வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த பெந்தெகொஸ்தே நாளன்று மக்கள், சபையாகிய இராஜ்யத்திற்குள் பிரவேசித்த அதே வழிமுறையிலேயே நாம் இன்றைக்கும், அதற்குள் பிரவேசிக்கின்றோம். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டிருந்த மக்கள், விசுவாசத்துடன், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (அப். 2:37). அவர் (பேதுரு) பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்பட்டவராய், ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2:38) என்று பதில் அளித்தார். அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்ட மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றனர். தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்திருந்த அவர்கள், அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் செய்வதிலும் உறுதியாய்த் தரித்திருந்தனர் (அப். 2:42).

ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் எனது மாணவர்களிடத்தில் நான் அடிக்கடி, அவர்களின் இடங்களை, மற்ற இளைஞர்கள் பெற்றுக் கொள்ள முடிந்தால் மகிழ்வடைவார்கள் என்று கூறுவதுண்டு. ஒவ்வொரு ஆண்டிலும் மாணவர்கள் போதிய நிதி வசதியில்லாத காரணத்தினால் ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் சேர முடியாமல் போய் விடுகின்றது. அவர்களுக்கு யாரேனும் பணம் கொடுத்து, அவர்கள் வந்து சேர முடிந்ததென்றால், அந்த வாய்ப்பை அவர்கள் எவ்வளவாய் அனுகூலப்படுத்திக் கொள்வார்கள்! பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தகுதியுள்ளவர்களாய் இருந்தவர்கள் தாங்கள் காண ஏங்கிய வரப்போகிற இராஜ்யம் பற்றிப் போதுமான அளவு அறிந்திருந்தனர். அதில் ஒரு அங்கமாய் இருக்க வேண்டுமென்று அவர்கள் மிகவும் விரும்பினர், ஆனால் அவர்களுக்கு அந்த சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. அது நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாம் ''கடைசி நாட்களின்'' யுகத்தில் வாழ்ந்து கொண்டுள்ளோம், இது இராஜ்யம் இருக்கின்ற நிலையில், உயர்வான மற்றும் வழக்கத்திற்கு மாறான சலுகையை உடையதாக இருக்கின்றது. நாம் காண்பதைக் காண விரும்பிய மற்றும் நாம் பெற்றுள்ள வாய்ப்புக்களைப்

பெற விரும்பிய பழைய ஏற்பாட்டுக் காலத்திய மக்களைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குப் புறம்பே இருந்தால், அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவும் உங்கள்மீது பொழியப்பட்ட கிருபையை இருதய நடுக்கத்துடனும் நன்றியுணர்வுடனும் பெற்றுக் கொள்ளவும் விரையுங்கள். நீங்கள் அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்திருந்தால், "உலகம் எப்படியாகி விட்டது, எந்த நிலைக்கு வந்து விட்டது பாருங்கள்!" என்று வருத்தமாய்க் கூறிக் கொண்டு நில்லாமல், "உலகத்திற்கு என்ன வந்துள்ளது என்று பாருங்கள்!" என்று அகமகிழ்வுடன் ஆச்சரியப்படுங்கள்.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் விவாதிக்கப்பட்ட மூன்று வகைத் தீர்க்கதரிசனங்களை அடையாளப்படுத்தவும். அவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தரவும்.
2. "கடைசி நாட்கள்" என்பதை விவரிக்கவும்.
3. யோவேலின் தீர்க்கதரிசனம் எவ்விதத்தில் ஒரு இரட்டைத் தீர்க்கதரிசனமாய் இருக்கலாம் என்பதை கலந்துரையாடவும்.
4. அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டும் வேத வசனங்களை அட்டவணைப்படுத்தவும்.
5. பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதை விவரிக்கவும்.
6. யோவேலின் தீர்க்கதரிசனம் எல்லாம் பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேற்றப்பட்டதா?
7. "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" என்று பேதுரு கூறிய பொழுது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன?
8. யோவேல் தீர்க்கதரிசனத்தில் உள்ள, "யாவர் மேலும்" என்ற வார்த்தைகளை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்ளுகின்றீர்கள்?
9. அற்புதங்களின் யுகம் எப்பொழுது ஒழிந்து போயிற்று?
10. அப். 2வது அதிகாரம் சக்கர அச்சின் மையம் போன்ற அதிகாரமாக உள்ளது ஏன்?
11. யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்திற்கு நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும்?
12. தேவனுடைய இராஜ்யத்தினுள் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்?
13. தேவனுடைய சபையினுள் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்?

10

"தேவனுடைய சபை"

"தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்த வான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது " (1 கொரி. 1:1, 2).

இரு மனிதர்களிடையே தக்க வகையிலான புரிந்து கொள்ளுதல் என்பது திட்டவட்டமான தன்மை மற்றும் பெயர் குறிப்பிடுதல் ஆகியவற்றைக் கேட்டுக் கொள்ளுகின்றது. காலத்தின் தொடக்கத்தில் மனிதனுக்குத் தேவன் அளித்த மொழிக்கட்டமைப்பானது வேறுபடுத்தும் மற்றும் அடையாளம் இடும் துறையாக இருந்தது. படைக்கப்பட்ட உலகில் இருந்த விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பெயரிடுதல் என்பதே தேவன் ஆதாமுக்குக் கொடுத்த முதல் பணிப் பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது: "தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவை களுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று" (ஆதி. 2:19). மனிதன் தன் மொழித்திறனைத் தானே உண்டாக்கவில்லை; மாறாக, படைக்கப்பட்ட போது மனிதனுக்கு மொழித்திறனும், தனக்கு முன் கொண்டு வரப்பட்ட விலங்குகளுக்குப் பெயரிடும் திறனும் கொடையாக அளிக்கப்பட்டது.

நமது அடையாளப்படுத்துதல்களில் நாம் குறைபாடுள்ளவர்களாய் இருக்கையில், ஒருவர் மற்றொருவருடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பது அதிகக் கடினமாகிறது என்பது பொதுவான விதியாக உள்ளது. இதற்கு நேர் எதிரில், நமது குறிப்பிடுதல்களில் நாம் அதிகம் சரியாகவும் நம்பத் தக்க வகையிலும் இருக்கையில், மற்றவர்களுடன் செயல்திறன்மிக்க வகையிலும், வெற்றிமிக்க வகையிலும் செய்தித் தொடர்பு கொள்ள முடிகின்றது.

வகைப்படுத்துதலும், குறிப்பிடுதலும் நமது உரையாடல்களின்

தலைப்புகளைச் சுட்டிக் காட்டுவதில் உதவி செய்வது மட்டுமின்றி, விவாதிக்கப்படும் பொருள், இடம் அல்லது நபரின் உட்கண்ணோட்டத் திற்கான பலகணிகளாகவும் செயல்படுகின்றன. நாம், "இது செல்வத்தின் பையன்" என்று கூறினால், அந்தக் குறிப்பானது பையனுக்கும் அவனது தந்தைக்கும் இடையில் உள்ள உறவுமுறையை விளக்குகின்றது, மற்றும் அது அவ்விருவரின் தோராயமான வயதுகளையும் தெரிவிக்கின்றது. மகன் பையனாக இருக்கையில், செல்வம் என்பவர் ஒரு வயது ஆன மனிதராய் இருக்கின்றார்.

தேவன் தம்முடைய சித்தத்தை நமக்கு அளிப்பதற்குத் தனிச் சிறப்பான பல விளக்கப்படுத்துதல்களைத் தம்முடைய வசனத்தில் பயன்படுத்தி யுள்ளார். ஏவுதல் பெற்ற அவருடைய வெளிப்பாடுகளின் பகுதியாக உள்ள அவருடைய விவரிப்புச் சொற்றொடர்கள் எப்பொழுதும் ஏற்புடைய தாகவும் மிகச் சரியானதாகவும் உள்ளன. ஆகையால், அவை ஒவ்வொன்றும் கவனமாகச் சிந்திக்கத் தக்கவைகளாக உள்ளன.

சபைக்குப் பரிசுத்த ஆவியானவர் தேர்ந்து கொண்ட சொற்றொடர்கள் நமக்குச் சிறப்பான ஆர்வமுடையவைகளாய் உள்ளன. அவைகள் சபையின் கருத்து மற்றும் இயல்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வழிகளாய் உள்ளன. சபையின் பண்பு பற்றி தேவனுடைய வசனத்திலிருந்து ஒவ்வொரு சத்தியத்தையும் பிடித்துக் கொள்வதற்காக, தேவன் பயன்படுத்தியுள்ள ஒவ்வொரு குறிப்பையும் நாம் முற்றிலுமாகப் படித்து உணர வேண்டும்.

"தேவனுடைய சபை" என்ற ஆலோசனைச் சொற்றொடரானது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற குறிப்பாக உள்ளது. இது மிக முக்கியமான பண்பாக உள்ளது, ஏனெனில் இது பரிசுத்த ஆவியானவரால் பன்னிரண்டு முறை - "தேவனுடைய சபை" என்று எட்டு முறைகளும், "தேவனுடைய சபைகள்" என்று மூன்று முறைகளும்,"ஜீவனுள்ள தேவனுடைய சபை" என்று ஒரு முறையும் - பயன்படுத்தப்படுகின்றது.[1]

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைக் கிறிஸ்தவர்கள் உண்ணுதல் பற்றிப் பவுல் விவாதிக்கையில், அவர், "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" (1 கொரி. 10:33) என்று புத்தி கூறினார். மற்றும் அவர், கர்த்தருடைய பந்தியைக் கொரிந்தியர்கள் தவறாகப் பயன்படுத்துவதைக் குறித்து, "புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனு டைய சபையை அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்து கிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனா? புகழேன்" (1 கொரி. 11:22) என்றும் எழுதினார். "நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப் படுத்தி, அதைப் பாழாக்கி ..." (கலா. 1:13) என்று கூறியதன் மூலம் பவுல் தம் மனமாற்றத்திற்கு முன்பு தாம் வாழ்ந்திருந்த வாழ்க்கையைப் பற்றிப் புலம்பினார். மூப்பர்களைப் பற்றிப் பவுல். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1 தீமோ. 3:5) என்று கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் தமது தெய்வீக வெளிப்படுத்துதலில் இந்தச் சொற்றொடரானது ஒளி வீசும் சொற்றொடராய் இருக்க வேண்டும் என்று நோக்கங் கொண்டார் என்பது தெளிவு. "தேவனுடைய சபை" என்ற சொற்றொடரானது அதன் மேம்போக்கான கருத்து மற்றும் உட்கருத்து ஆகியவற்றில் சபையானது தேவனுடன் நிலைநிறுத்தும் வலிவார்ந்த உறவைச் சுட்டிக்காட்டுகின்றது.

இதன் தொடக்கத்திற்குள்ளாக

முதலாவது, இது நமக்கு சபையின் தொடக்கம் பற்றிய உட்கருத்தைத் தருகின்றது. சபையை இருக்கும் நிலைக்குக் கொண்டு வர, தேவன் சிலவற்றைச் செய்யவேண்டியிருந்தது என்ற சத்தியத்தை இது நமக்கு நினைவூட்டுகின்றது.

தேவன் பாவிகளுக்குச் சிலுவை மற்றும் சபையின் மூலமாக இரட்சிப்பு என்பதை உலகத் தோற்றத்திற்கு முன்பே திட்டமிட்டார். எனவே, தனிச் சிறப்பான அந்தக் கருத்தில், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது. பவுல், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ. 3:15) என்று எழுதினார்.

படைப்பிற்கு முன்பாகவே தேவன், ஆவிக்குரிய வீடாகிய சபையின் பிரதான மூலைக் கல்லாக - தேர்ந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாகிய கல்லாக - இருக்கும்படிக் கிறிஸ்துவைத் தேர்ந்து கொண்டார் (1 பேது. 2:6). பேதுரு, "அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து" (1 பேது. 1:20) என்று எழுதினார். காலத்திற்கு முன்பே, தேவன் தம் செய்தியாளர்களாயிருக்கும்படியும் தம் நாமத்தை மகிமைப்படுத்தும்படியும் தூதர்களைக் கூடத் தேர்ந்து கொண்டார் (1 தீமோ. 5:21).

நித்தியத்தில், தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு நம்பிக்கை அளிக்க ஒரு வழியை இயற்றினார், மற்றும் அவர் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக வாக்குறுதியும் அளித்தார். தீத்துவுக்குப் பவுல், "பொய்யுரையாத தேவன் ஆதி கால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி ..." (தீத்து 1:3) என்று எழுதினார். இவ்வசனத்தின் இரண்டாம் சொற்றொடரானது "ஆதி கால முதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மனிதர் அறிந்துள்ள வற்றிலேயே மிகப் பழைய வாக்குத்தத்தமாக உள்ளது. இயேசு நிறைவேற்றிய ஒப்புரவாக்கும் பலி, மற்றும் அந்தப் பலியை எவ்வாறு பெறுவது போன்ற இரட்சிப்பின் திட்டத்தினுடைய விபரங்கள், முதல் புல்லிதழை, முதல் கல்லை, வெளிச்சத்தின் முதல் கதிரை அல்லது பனியின் முதல் துளியைத் தேவன் படைக்கும் முன்பாகவே அவருடைய சிந்தையில் திட்டமிடப்பட்டன. தேவன், "நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதி கால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த

அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ. 1:9) என்று பவுல் கூறினார்.

சபையை வடிவமைப்பதற்குச் சிலுவையில் கிறிஸ்து அடைந்த மரணத்திற்கு மனிதனின் பதில்செயல் என்பதே தேவனுடைய மீட்பின் அளிப்பிற்கு மைய சத்தியமாக உள்ளது (அப். 20:28; எபே. 5:25). கிறிஸ்துவின் மூலம் தேவன் செயல்படுவதாயிருந்த அவரது நித்திய நோக்கத்தின் பாகமாக சபை என்பது அவருடைய சிந்தையில் இருந்தது என்று பவுல் கூறியதில் வியப்பெதுவும் இல்லை: "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கு அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ..." (எபே. 3:9, 10).

வேதாகம சரித்திர இடங்களில் சுற்றுப்பயணிகளைக் கவருவதாக யாக்கோபின் கிணறு நன்கு அறியப்பட்டுள்ளது. இயேசு சமாரியாவின் வழியாகக் கடந்து சென்ற பொழுது, யாக்கோபின் கிணற்றண்டையில் ஓய்வெடுத்தார் என்று யோவான் கூறினார் (யோவா. 4:6). யாக்கோபு, பதான் அராமில் இருந்து சீகேமுக்குத் திரும்பி வந்த வேளையில், அவர் சீகேமின் கிழக்குப் பகுதியில் முகாமிட்டு, தாம் முகாமிட்ட நிலத்தை விலைக்கு வாங்கினார் (ஆதி. 33:18, 19). அங்கு யாக்கோபு ஒரு கிணற்றை வெட்டினார் என்று பழைய ஏற்பாடு எவ்விடத்திலும் நமக்குக் கூறவில்லையென்றாலும், அவர் அவ்வாறு செய்தார் என்பது புதிய ஏற்பாட்டின் காலம் வரையிலும் நீடித்து நிலைத்து நின்ற, ஏவப்படாத பாரம்பரிய வரலாறாக உள்ளது (யோவா. 4:12). இவ்விடத்திற்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கில் பயணிகள் வந்து, மிகப் பழைய கடந்த காலத்தைத் தியானிப்பதுடன், அக்கிணற்றின் முனையில் தேவகுமாரனாகிய இயேசு, சமாரியாவிலிருந்து வந்த பெண்ணுடன் நடத்திய உரையாடலைப் பற்றியும் தியானிக்கின்றனர். பயணிகள் இந்தக் கிணற்றண்டையில் நின்று கொண்டு, யோவான் 4ஆம் அதிகாரத்தை வாசிக்க விரும்புகின்றனர். மற்றும் அவர்கள், அக்கிணற்றுக்கு அப்பால் மூவாயிரம் அடிகள் தூரத்தில் உயர்ந்து நிற்கும் கெரிசீம் மலையை நோக்கிப் பார்த்து, அந்தச் சமாரியப் பெண்ணின் வார்த்தைகளையும் நமது இரட்சகரின் பதிலையும் நினைத்துப் பார்க்க விரும்புகின்றனர். அவள், "எங்கள் பிதாக்கள் இந்த மலையில் தொழுது கொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்தில் தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள்" (யோவா. 4:20). இதற்குப் பதிலுரையாக இயேசு, "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங் காலம் வருகிறது" (யோவா. 4:21) என்று உரைத்தார்.

புகழ் பெற்ற இக்கிணற்றின் பட்டப் பெயரான "யாக்கோபின் கிணறு" என்பது இதைப் பற்றி என்ன கூறுகின்றது? இதன் தொடக்கம் பற்றிய உறுதியான குறிப்பொன்று இதன் பட்டப் பெயரினால் ஏற்படுத்தப் படுவதாக உள்ளது. அந்தக் கிணறு எப்படி உண்டாயிற்று அல்லது தொடக்கத்தில் யார் அதைப் பயன்படுத்தினார் என்பது பற்றிய சில விபரங்களை இந்தப் பட்டப்பெயர் நமக்குக் கூறுகின்றது. இது, இஸ்ரவேல்

என்று பெயர் மாற்றப்பட்ட முற்பிதாவும், இஸ்ரவேலர்களின் முற்பிதாவுமான யாக்கோபு என்பவர் அக்கிணற்றைத் தோண்டச் செய்திருந்தார் அல்லது தோண்டினார் என்ற பழங்காலப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்றது. அவர் தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் ஆட்டு மந்தைகளுக்கும் மற்றும் மாட்டு மந்தைகளுக்கும் அக்கிணற்றிலிருந்து தண்ணீர் இரைத்தெடுத்திருந்தார். இவ்விதமாக, பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும், இக்கிணறானது மாபெரும் முற்பிதாவான யாக்கோபின் வாழ்க்கைக்குச் சாட்சியாக இன்னும் நிலைநிற்கின்றது.

சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது. இது தேவனுடைய ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றின் படைப்பாக உள்ளதே தவிர, மனித சிந்தனை அல்லது வடிவமைப்பின் கண்டுபிடிப்பாக இருப்பதில்லை. "தேவனுடைய சபை" என்ற சொற்றொடரைப் பரிசுத்த ஆவியானவர் பிழையற்ற, சரியான தன்மையுடன் பயன்படுத்தினார் என்றும், அது புதிய ஏற்பாட்டை வாசிப்பவர்களால் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டிருந்தார் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். இது கருத்தற்ற சொற்றொடராயிருப்பதில்லை; இது ஒரு இடம் நிரப்பியாக இருப்பதில்லை; இது சபையைப் பற்றிய சத்தியமாக உள்ளது. சபையானது தனக்குப் பின்னும், தன்னுள்ளும் தேவனைக் கொண்டுள்ளது. தேவன் இந்த உலகத்திற்குச் செய்துள்ளவற்றினுள் ஒருவர் அங்கமாய் இருக்க விரும்பினால், அவர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாகத் தம்மை தேவன் அவருடைய தெய்வீகமான சபையில் இணைத்துக் கொள்ளும்படி அவரை (தேவனை) அனுமதிப்பார்.

இதன் உரிமைத்துவத்திற்குள்ளாக

இரண்டாவது, "தேவனுடைய சபை" என்ற இயற்பெயரானது சபையின் உரிமைத்துவம் பற்றிய உட்கருத்தை அளிக்கின்றது. இது - சபை தேவனுக்குரியது என்ற - உரிமைத்துவத்தின் கருத்தைத் தெரிவிக்கின்றது.

எபேசுவில் இருந்த மூப்பர்களுக்குப் பவுல், "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28) என்று புத்தி கூறினார். மேலும் அவர் கொரிந்துவில் இருந்த சபையாருக்கு, அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபை ..."யாக இருந்தனர் (1 கொரி. 1:2) என்றும் எழுதினார். ஆம், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது.

இருப்பினும், இயேசுவும் கூட, "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18) என்று உரைத்தார். கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை விலையாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்ற வகையில், சபையானது உண்மையில் கிறிஸ்துவுக்கு உரியதாக இருக்கின்றது (அப். 20:28). ஆகையால் பவுல்,

சபையை கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிட்டார் (ரோமர் 16:16).

ஆகையால், ''தேவனுடைய சபை'' என்ற சொற்றொடரானது தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் உள்ள சபையின் உடன் உரிமைத்துவத்தின் வகையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இயேசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவா. 10:30) என்று உரைத்தார்; "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்" (யோவா. 6:65); மற்றும், "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (யோவா. 14:20) என்றார். பரலோகத்தில் இருக்கிற பிதாவானவர் உலகத்தின் இரட்சிப்புக் குத் திட்டமிட்டார்; குமாரனாகிய இயேசு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு பூமிக்கு வந்தார். ஆகையால் ஒரு கருத்தில், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது; இன்னொரு கருத்தில் சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. சபையைப் பற்றிய முழு சத்தியத்தைப் புரிந்து கொள்ள இவ்விரு உண்மைகளும் தேவைப்படுகின்றன.

''தேவனுடைய சபை'' என்ற சொற்றொடரில் வெளிப்படுத்தப் பட்டுள்ள உரிமைத்துவத்தின் உண்மையானது ஆதி. 32:24-32ல் உள்ள நன்கறியப்பட்ட பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சியொன்றினால் விவரிக்கப் படுகின்றது. "யாக்கோபு" என்றால் "எத்தன்" என்று அர்த்தப்படுகின்றது, அது அப்பெயர் கொண்டவரின் வாழ்வின் முதல் பகுதிக்குப் பொருத்தமான தாகவே இருந்தது. யாக்கோபு பழைய ஏற்பாட்டில் முதன் முதலாகத் தோன்றுகையில், தன் வாழ்வில் பின்வரும் அறிவிப்பைக் கொண்டவராய் இருந்திருக்க முடியும்: "நான் இப்பொழுது இருக்கும் நிலையைக் கொண்டு என்னைப் பற்றி முடிவு செய்து விடாதீர்கள், ஏனெனில் தேவன் இன்னும் முழுமையாய் எனக்குள் செயல்படவில்லை!" தேவன் யாக்கோபை மாற்றி, அந்த மாற்றத்தின் தொடக்கமாக அவருக்கு "இஸ்ரவேல்" என்ற பெயரைக் கொடுத்தார்.

யாக்கோபுக்கு யாப்போக்கு ஆற்றின் கரையில் தூதனுடன் அவர் இரவு முழுவதும் யுத்தம் செய்த நிகழ்ச்சியானது அவரது மாற்றத்திற்குப் பங்களித்தது. யாக்கோபு தனிமையில் இருந்த வேளையில், ஒரு மனிதன் (போலக் காணப்பட்ட தூதன்) அவரிடம் தோன்றி, அவருடன் யுத்தம் செய்யத் தொடங்கினார். அவரை அழிந்து போகும் மனிதன் என்று எண்ணிய யாக்கோபு தீர்மானத்துடன் கடின யுத்தம் செய்தார். பொழுது விடிகின்ற நேரத்தில், அடையாளம் காணப்படாத அம்மனிதர் யாக்கோபின் தொடைச் சந்து நரம்பைத் தொட்டு அதைச் சுளுக்கிப் போகச் செய்தார். யாக்கோபிடம் அந்த அந்நியர், "நான் போகட்டும், பொழுது விடிகிறது" என்றார். யாக்கோபு, ஒருவேளை இப்பொழுது தன்னுடன் போராடியவர் தெய்வீகமானவர் என்பதை உணர்ந்ததால் "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றார்." தூதன் அவரிடம் "உன் பேர் என்ன?" என்று கேட்டார். யாக்கோபு பதில் அளித்த பொழுது, அவருக்கு, "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" என்று கூறப்பட்டது (ஆதி. 32:28).

பரலோகத்திலிருந்து வந்தவர், நினைவுகூரத்தக்க அந்த இரவில் யாக்கோபை ஆசீர்வதித்த பிறகு, மறைந்து போனார். இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பானது யாக்கோபுக்குச் சாட்சியமாக அமைந்ததால், அவர் அந்த இடத்திற்கு "தேவனுடைய முக (தரிசனம்)" என்று அர்த்தப்படும் பெனியேல் என்று பெயரிட்டார். அவ்விடத்திற்கு அவர் இப்பெயரைத் தேர்ந்து கொண்டார், ஏனென்றால் அவர், "தேவனை முகமுகமாய்த் தரிசித்து" இருந்தார், இன்னமும் அவரது வாழ்வு பாதுகாக்கப்பட்டிருந்தது (ஆதி. 32:30).

இதே போன்றதொரு தரிசனமானது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வர வேண்டும். சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது; இது தேவனுக்கு உரியதாகும். நாம் சபைக்குள் பிரவேசிக்கும் பொழுது, தேவனால் உரிமை கொள்ளப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு இடத்தினுள் இருக்கின்றோம். உருவக நடையில் கூறுவதென்றால், சபையில் நாம் தேவனை முகமுகமாய்த் தரிசிக்கின்றோம்.

தேவன் சபையின் பிதா, தோற்றுவித்தவர்,
ஜீவனுள்ள வல்லமை, பாதுகாப்பாளர், ஆறுதல் அளிப்பவர்
மற்றும் ஆளுபவர் என்று கூறப்படலாம்.

கிறிஸ்துவின் சபை என்ற வகையில், நாம் தேவன் இருக்கும் இடத்தில் இருக்கின்றோம். தேவன் நமக்குள் வாசம் பண்ணி நம்மை வழிநடத்து கின்றார். சபையானது தன்மேல், தேவனுடைய உரிமைத்துவத்தின் முத்திரையைக் கொண்டுள்ளது. அவரது கையெழுத்து அழிக்கப்பட்டு, மனிதரின் உரிமைத்துவத்தினுடைய முத்திரை அதனிடத்தில் இடப்பட்டால், மாபெரும் துன்பம் நிகழும் - சபையானது தேவனுடைய சபை என்ற ஆவிக்குரிய வாசஸ்தலமாக இல்லாமல், மனிதருடைய உயிரற்ற சபையாகின்றது.

இதன் தொடர்ந்த வாழ்விற்குள்ளாக

மூன்றாவதாக, "தேவனுடைய சபை" என்பது, சபை தொடர்ந்து இருக்கப் போகின்ற உட்கருத்தை நமக்குக் கொடுக்கின்றது. தேவன் தம்முடைய சபையைப் பெலப்படுத்துகிறார். சபையை அவர் படைத்தது, மற்றும் அதன் மீதான அவருடைய உரிமைத்துவம் ஆகியவற்றின் காரணத்தினால், தேவன் சபையின் வாழ்விற்குப் பொறுப்புள்ளவராக இருக்கின்றார்.

கொரிந்துவில் இருந்த சபையாருக்குப் பவுல் தம் வாழ்த்துதலில், தேவனை கிருபை மற்றும் சமாதானத்தின் ஆதார மூலமாகச் சித்தரிக்கின்றார்: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (1 கொரி. 1:3). மற்றும் அவர், கிறிஸ்தவர்கள் தேவனால், "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு" (1 கொரி. 1:9) அழைக்கப்பட்டுள்ளனர் என்றும்

கூறினார். நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்பட்ட வகையில் நம்மைத் தேவன் தம்முடைய பிள்ளைகளாகச் சுவிகரித்துக் கொண்டார் (எபே. 1:5). இதன் விளைவாக, சபை என்பது புதிய ஏற்பாட்டில் தேவனுடைய குடும்பமாக அறியப்பட்டுள்ளது (1 தீமோ. 3:15). இதனால், கிறிஸ்தவர்கள் தேவனுடனான தங்கள் அன்றாட நடையில், "தேவனுடைய ஜீவனில்" பங்கேற்கின்றனர். புறஜாதியார் தங்கள் சிந்தை மற்றும் வாழ்வின் அக்கிர மங்களினாலே "தேவனுடைய ஜீவனிலிருந்து" தங்களை அந்நியப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று பவுல் எபேசியருக்குக் கூறினார் (எபே. 4:18). தேவன் சபையின் பிதா, தோற்றுவித்தவர், ஜீவனுள்ள வல்லமை, பாது காப்பாளர், ஆறுதல் அளிப்பவர் மற்றும் ஆளுபவர் என்று கூறப்படலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, எனது இல்லத்திற்கு அருகில் இருந்த ஒரு நகரில் நான் ஒரு வார காலம் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். சபையின் உறுப்பினர்கள் சிலரை நான் சந்திக்கையில், ஒரு மனிதர் சில ஆண்டுகளுக்கு முன்பு தம் வேலையின் தொடர்பாகத் தாம் பெற்றிருந்த அனுபவத்தைப் பற்றி என்னிடம் கூறினார்.

அவர் ஒரு சேவை நிலையத்தின் மேலாளராயிருந்தார். அவரிடத்தில் ஒருநாள், அந்த சேவை நிலையத்தின் உரிமையாளர் வந்து, ஞாயிற்றுக் கிழமைகளிலும் சேவை நிலையத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அந்த உரிமையாளரிடத்தில் இவர், ''நான் ஒரு வேலையாள் என்ற வகையில் உங்களுக்காக ஆறு நாட்கள் வேலை செய்வேன் மற்றும் என்னால் முடிந்த அளவு சிறப்பாக உங்களுக்காகப் பணியாற்றுவேன், ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் உங்களுக்காக நான் பணியாற்ற இயலாது. ஞாயிறுகாலை மற்றும் மாலை வேளைகளில் ஆராதிப்பதென்று நான் உறுதி கொடுத்துள்ளேன். அந்த உறுதியில் இருந்து நான் பின்வாங்க இயலாது'' என்று கூறினார். அந்த உரிமையாளார், "அப்படியானால் நான் ஒரு புதிய மேலாளரைப் பணியமர்த்த வேண்டி யிருக்கும். இன்னும் ஓரிரண்டு நாட்களில் உங்களுக்கு எனது முடிவைத் தெரிவிப்பேன்" என்று கூறினார்.

கிறிஸ்துவுக்குள்ளான இந்த சகோதரர், தனது வேலையை இழந்து விட்டால், தான் என்ன செய்வது என்று அறியாதிருந்தார். அது ஒன்றும் உயர்ந்த ஊதியம் அளிக்கும் வேலையல்ல, ஆனால் அவ்வேலை மட்டும் தான் அவரது குடும்பத்திற்கான வருமானத்தின் ஆதார மூலமாக இருந்தது. தேவனிடத்தில் ஜெபித்து, அவர் சிறந்ததென்று விரும்புவதைச் செய்யும்படி அவரிடத்தில் கேட்பது என்பதை மட்டுமே தாம் அறிந்திருந்ததாக இந்த சகோதரர் கூறினார். இரண்டு நாட்களுக்குப் பின் அவரிடம் வந்த உரிமையாளர், "இந்த சேவை நிலையமானது ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்; ஆனால் அவ்வாறு செய்தால், இனியும் உங்களை எனது மேலாளராகப் பயன்படுத்த இயலாது. நான் பெற்றிருந்துள்ள பணியாளர்களிலேயே மிகச் சிறந்தவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கின்றீர்கள், (எனவே) நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சேவை நிலையத்தைத் திறந்து வைப்பது என்ற கருத்தை மறந்து விட முடிவு செய்துள்ளேன், இதனால் நான் உங்களை எனது மேலாளராகத் தொடர்ந்து

வைத்துக் கொள்ள முடியும்" என்று அவரிடம் கூறினார். "ஊக்கப்படுத்தும் இச்செய்தியை நான் கேட்ட பின்பு, அமைதியாக என் இருதயத்தில் மத்தேயு 6:33ஐக் கூறிக் கொண்டேன்: 'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' " என்று இந்த சகோதரர் கூறினார்.

விசுவாசத்தின் இம்மனிதர், "தேவனுடைய சபை" என்ற வார்த்தைகளில் உள்ள பிடிப்புறுதியான சத்தியத்தை நடைமுறையில் உணர்ந்து அறிந்திருந்தார். தேவன் தமக்குச் சொந்தமானவற்றைக் கவனித்துக் கொள்ளுகின்றார். அவர் தமது குடும்பமாகிய சபையைப் பாதுகாத்து, ஆசீர்வதித்து, அன்புகூர்ந்து மற்றும் பாதுகாக்கின்றார்.

சபையானது தெய்வீகமானதாக உள்ளது மற்றும் இது இயல்பாகவே, தேவனுடைய மகிமைக்கென்றே எல்லாவற்றையும் செய்யும்படியாகக் கட்டுவிக்கப்படுகின்றது. இது தேவனுடைய அன்பினாலும் கிருபையினாலும் பாதுகாக்கப்படுகின்றது. இது தேவனுடைய வல்லமைமிக்க கரத்தினால் பாதுகாக்கப்படுகின்றது, மற்றும் தனது அன்றாட ஆவிக்குரிய நிலைத்திருத்தலுக்கும் தனது நித்தியமான எதிர்காலத்திற்கும் இது தேவனையே சார்ந்துள்ளது.

முடிவுரை

எனவே, தேவன் புதிய ஏற்பாட்டின் சபையுடன் ஒரு விசேஷித்த உறவைக் கொண்டுள்ளார் என்பது தெளிவு. இதன் வருகையைக் காலத்திற்கு முன்பே அவர் திட்டமிட்டார், இதை அவர் உரிமை கொண்டுள்ளார், மற்றும் இதற்குள்ளாக அவரே ஜீவனைப் பாய்ச்சுகின்றார். அவர் சபைக்கு அன்பையும், தலைமைத்துவத்தையும் மற்றும் ஜீவனையும் அளிக்கின்றார். அவருடைய கிருபை மற்றும் மகிமையின் ஒளி வெள்ளமானது சபையிலிருந்து கதிர் வீசுகின்றது. அவருடைய சபையின் உறுப்பினர்கள் அவரது வசனத்தின் வழிநடத்துதல் மூலமாக அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்கேற்கின்றனர் (2 பேது. 1:3). சபை என்பது அவருடைய குடும்பமாய் உள்ளது மற்றும் இது நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய அவருடைய திட்டத்துடன், நித்திய திருமணம் போன்றதொரு பந்தத்தில் பிணைக்கப்பட்டுள்ளது.

ஒரு கருத்தில், தேவனுடைய சபைக்குப் புறம்பே இருக்கின்ற எவரொருவரும் தேவனை விட்டுப் புறம்பேயும் தொலைவிலேயும் உள்ளனர். சபையானது தேவனுடைய அரியணையுள்ள நித்திய வாசஸ்தலத்திற்குக் கொண்டு சேர்க்கப்படும் வரையிலும் அவர் தம் பாதுகாக்கும் கரத்தினால் எல்லாத் துன்பங்களில் இருந்தும் சபையைக் காத்து நிற்கின்றார். தேவன் தமது தெய்வீக அருளிரக்கத்தினால் தேவன் தாம் விரும்புகின்ற வரையிலும், அவர் நம்மிடம் செய்யும்படி கேட்டுக் கொண்டவைகளைச் செய்வதற்குத் தேவையானவற்றைத் தம்முடைய சபைக்கு அன்புடன் வழங்குகின்றார்.

1 சாமுவேல் 17ல் தாவீதைப் போல, சபையானது எதிர்கால எதிரிகள் யாவரையும் தேவனுடைய பலத்தால் எதிர்கொள்ளுகின்றது. இஸ்ர

வேலரும் பெலிஸ்தரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இருபுறப் படைகளும் தங்களின் மிகச் சிறந்த மனிதன் ஒருவனை அனுப்பி, அவ்விருவரும் கை கலப்பு யுத்தத்தில் போட்டியிட்டு, யுத்தத்தில் ஜெயிப்பவரின் இனமானது யுத்தத்தில் வெற்றியைப் பெற்றதென்று கருதப்பட வேண்டியதாய் இருந்தது. பெலிஸ்தருக்குள் அவர்களின் மனிதன் - ஒன்பதரை அடி உயரமும், அவ்வுயரம் கண்டு இஸ்ரவேலரில் எவரும் அனுப்பப்படுவதற்கு மிகவும் அஞ்சப்படத்தக்க அரக்கன் - ஒருவன் இருந்தான். பயத்தில் மூழ்கியிருந்த இஸ்ரவேலர்கள் என்ன செய்வது என்று அறியாமல் இருந்தார்கள். இது, வாழ்வின் மாபெரும் யுத்தத்தின் பதுங்கு குழிகளில் தேவனுடைய மக்கள் தேவனுடைய வல்லமையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் மக்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்பதைத் தாவீதுக்கு நினைவூட்டியது.

தாவீது இஸ்ரவேலின் படைமுகாமிற்கு வந்து, கர்த்தருடைய வல்லமையுடன் கோலியாத்தை எதிர்கொள்வதற்கு தாமே முன் வந்தார். அவர் தேவனுடைய மனிதனாய் இருந்தார், மற்றும் அதை அவர் அறிந் திருந்தார். அவர் தேவனுடைய ஐக்கியத்தில் நடந்து தேவனுடைய வாக்குத் தத்தத்தில் பங்கேற்றார். தேவன் தம்முடைய படைக்குப் பொறுப்பாளியாய் இருப்பதையும், தேவனுடைய படைவீரர்கள் தேவனுடைய பலத்துடன் யுத்தத்திற்கு அணி வகுத்துச் செல்ல வேண்டியதையும் அவர் அறிந்தார். தாவீது கோலியாத்தை அணுகிய வேளையில், அவர் (தாவீது) தம்மைப் பற்றிய ஆபாசமான அவமானங்களை ஜீவனுள்ள தேவன் மேல் கொண்ட விசுவாசத்தின் உறுதிப்பாட்டுடன் சந்தித்தார். அவர், "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனை களுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1 சாமு. 17:45, 46a) என்று கூறினார். அந்த நாளில் கர்த்தர் தாவீதுடன் இருந்தார், மற்றும் கோலியாத் தாவீதின் கவணினாலும் கர்த்தருடைய பலத்த புயத்தினாலும் கோலியாத்தை மரணமடையச் செய்தார்!

இஸ்ரவேலுக்கும் தாவீதுக்கும் தேவன் என்னவாக இருந்தாரோ, அவ்வாறே தேவன் சபைக்கும் இருக்கின்றார்! சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது, அது அவருடைய வல்லமை, கனம், ஞானம் மற்றும் ஜீவன் ஆகியவற்றால் நிரப்பப்பட்டுள்ளது!

ஒருவர் புதிய ஏற்பாட்டின் சபைக்குள்ளாக வரும் பொழுது, அவர் தேவனுடைய தெய்வீக வாழ்வின் வட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கின்றார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குரியவர்களாய் இருப்பதோடு மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் மூலம் அவர்கள் தேவனுக்குரியவர் களாகின்றனர். தேவனுக்குள் அவர்கள் வெற்றிக் கொள்ள முடியாத, மறுக்கப்பட முடியாத, ஒப்பிடப்பட முடியாத ஜீவனுள்ள தேவனுடைய சபையாக இருக்கின்றனர்!

குறிப்பு

[1]அப். 20:28; 1 கொரி. 1:2; 10:32; 11:22; 15:9; 2 கொரி. 1:1; கலா. 1:13; 1 தீமோ. 3:5. ‘‘தேவனுடைய சபைகள்’’ என்பது புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் வருகின்றன: 1 கொரி. 11:16; 1 தெச. 2:14; 2 தெச. 1:4; “ஜீவனுள்ள தேவனுடைய சபை” என்பது ஒருமுறை வருகின்றது: 1 தீமோ. 3:15.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. எந்த ஒரு பொருளையும், இடத்தையும் அல்லது நபரையும் நீங்கள் குறிப்பிட முடியாத ஒரு உரையாடலை ஒன்று படுத்தவும்.
2. தேவன் எப்பொழுது மனிதனுக்கு மொழியைக் கொடுத்தார்?
3. குறிப்பிடுவதற்கான திறமையானது செயல்வலிவான செய்தித் தொடர்புக்குப் பங்களிக்கின்றதா?
4. புதிய ஏற்பாட்டில் ‘‘தேவனுடைய சபை’’ என்ற சொற்றொடரானது எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றது?
5. சபையைத் தேவன் எப்பொழுது திட்டமிட்டார்?
6. சபையின் மீது தேவன் உரிமையுள்ளவராய் இருக்கிறார் என்று நீங்கள் எந்தக் கருத்தில் கூற முடியும்?
7. கிறிஸ்துவும் சபையின் மீது உரிமையுள்ளவராய் இருக்கின்றாரா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
8. சபையை மாற்றியமைக்க எந்த மனிதருக்கும் உரிமை உள்ளதா?
9. சபையின் ஜீவனுக்கான வல்லமையைத் தேவன் எவ்வாறு தருகின்றார்?
10. அரக்கனை அழிக்கத் தாவீது எந்த வல்லமையைப் பயன்படுத்தினார்?
11. சபைக்குப் புறம்பே உள்ள மக்கள் பெற்றிராத வல்லமைக்கான வழியை சபையில் உள்ள மக்கள் பெற்றிருக்கின்றார்களா?

11

“கிறிஸ்துவின் சபையார்”

“ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்; கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்” (ரோமர் 16:16).

நியாயாதிபதிகள் 11ல் யெப்தா அவரது படையினரை, அம்மோனியர்களுக்கு எதிராக ஒரு தீர்மானமான யுத்தத்தில் வழிநடத்தினார், ஆனால் அவருடைய வெற்றியானது கசப்பும் இனிப்பும் கலந்ததாக, மகிழ்வின் ஆர்ப்பரிப்பும், துயரின் கண்ணீரும் கலந்ததாக ஆயிற்று. யுத்தத்திற்கு முன்பு அவர் தேவனிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்த பொருத்தனையின் நிறைவேற்றத்திற்காகத் தன் மகளை அவர் பலியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவரது கொண்டாட்டம் இடை நிறுத்தப்பட்டது. அவர் தம் துக்கத்துடன் இருக்கையில், எப்பிராயீமருடன் ஒரு விவாதம் செய்யும்படி வலிந்து தள்ளப்பட்டார், இந்த விவாதமானது அவரது உறவினர்களுடன் ஒரு தீவிரமான முரண்பாடாக வெடித்தது (நியா. 12:1-7), இது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இஸ்ரவேலர்களின் முதல் உள்நாட்டுப் போராக ஆயிற்று.

எப்பிராயீமர்கள் யெப்தாவின் (யுத்தத்தினால் கடினப்பட்ட) மனிதர்களுக்குப் பொருத்தமானவர்களாய் இருந்தது இல்லை. அவருடைய மனிதர்கள் அவர்களைத் திறமையுடன் வெற்றி கொண்டு, எப்பிராயீமரின் எல்லைகளின் அருகிலிருந்த யோர்தான் நதியின் துறைகளைப் பிடித்தனர். எப்பிராயீமரில் தேடப்படுகிறவர்கள் யுத்தகளத்தில் இருந்து திரும்புகையில் அவர்களைக் கைது செய்வதற்காக, கடக்கும் துறைகள் தற்காலிகச் சாலைத் தடைகளாக்கப்பட்டன.

அந்தத் தடை நிலையங்களில் நிறுத்தப்படும் எந்த எப்பிராயீமரும் கண்டுபிடிக்கப்படுதலில் இருந்து தப்பிப்பதற்காகத் தங்கள் இனத் தொடர்பை மறுப்பார்கள் என்று அறிந்திருந்த யெப்தா, உண்மையான எப்பிராயீமர் எவரும் வெற்றிகரமாய்த் தேற முடியாத ஒரு சோதனையைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார். தடைநிலைகளினூடே வரும் ஒவ்வொருவரையும் “ஷிபொலேத்” என்று கூறும்படிக் கேட்குமாறு அவர் தம் மனிதர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். எப்பிராயீமர்கள் தங்கள் பின்னணி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றினால், “ஷி” என்ற ஒலியை “சி” என்பதாக உச்சரித்தார்கள். அவர்கள் சிந்தனை எதுவுமின்றி “ஷிபொலேத்” என்பதற்குப் பதிலாக “சிபொலேத்” என்று கூறினார்கள். துறைகளில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த எப்பிராமீயர்கள் யெப்தாவின் இந்தச் சிறு சூழ்ச்சி

யினால் சுலபமாய்க் கண்டறியப்பட்டார்கள், மற்றும் அந்த நதியோரத்தில் நாற்பத்தியிரண்டாயிரம் எப்பிராமீயர்கள் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரவேலரின் வரலாற்றில் உள்ள வழக்கத்திற்கு மாறான இந்த நிகழ்ச்சியானது, ஒரு வார்த்தை - ஒரு சிறு ஒலி - என்பது வாழ்வா மரணமா என்ற விளைவைக் கூட ஏற்படுத்தும் வகையில், மிகத் தொலைவில் சென்றடையும் மறைகருத்துள்ளதாகும் என்று விவரிக்கின்றது. சில வேளைகளில், சிறு வார்த்தைகள் பெரிய அர்த்தம் கொண்டவையாய் உள்ளன!

"சிறியவற்றின் தனிச் சிறப்பு" என்பதன் இவ்வுண்மையை நாம் நமது கர்த்தருக்கும் மற்றும் புதிய ஏற்பாட்டின் செய்திக்கும் பயன்படுத்துவோம். வேத வசனங்களின் சொற்களும் சொற்றொடர்களும் முற்றான உண்மையைத் தெரிவிப்பதினால், அர்ப்பணிப்புள்ள ஒவ்வொரு சீஷரும் வேத வசனங்கள் கூறுவது என்ன என்பதையும் அவை அவற்றை எவ்விதம் கூறுகின்றன என்பதையும் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வேத வசனங்களில் ஒரு வார்த்தையானது முதலில், கவனத்தைக் கவரும் தன்மை இல்லாதது போலத் தோற்றம் அளிக்கலாம்; ஆனால் நாம் நேர்மை யான உன்னிப்புடன் காண்கையில், அவ்வார்த்தையானது அசாதாரண மான அர்த்தம் கொண்டிருப்பது நமக்குப் புலப்படும். உதாரணமாக, ரோமர் 16:16ல் உள்ள ''கிறிஸ்துவின் சபையார்'' என்ற சொற்றொடரானது சந்தர்ப்பப் பொருளில் காட்சியினுடைய பாகமாக மட்டும் தோன்றி, வாசிப்பவருக்கு அது அவ்வசனத்தில் விசேஷித்த பணிப் பொறுப்பு எதையும் பெற்றிராதது போலவும், உண்மைச் செய்தி எதையும் கொண்டிராதது போலவும் தோற்றம் அளிக்கின்றது. இருப்பினும் இச்சொற்றொடரை ஆராய்ந்து பார்க்கையில், இது முக்கியத்துவத்தினால் சக்தியூட்டப் பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

யாரேனும் ஒருவர், "நாம் சபையை எவ்வாறு குறிப்பிடுகின்றோம் என்பது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. பெயர்களும் பட்டப் பெயர்களும் எதையும் அர்த்தப்படுத்துவதில்லை. நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானதே தவிர, நீங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறீர்கள் என்பது முக்கியமானதல்ல" என்று கூறலாம். இது உண்மையிலேயே நிஜமாய் உள்ளதா? யெப்தா இவ்விதமான விவாதத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டார் என்பது உறுதியானது. ஒருவர் பேசுகின்ற வழிமுறையானது அவரை அடையாளப்படுத்துகின்றது என்பதை அவர் அறிந்தார். அடையாளத்தினாலும் வாழ்வினாலும் நாம் தனிச் சிறப்பானவர் களாய் இருக்க வேண்டும் என்று தேவன் நமக்கு அர்த்தப்படுத்தியுள்ளார். இவ்விதமாக, ஒரு கிறிஸ்தவர் தம்மை ஒரு "நாத்திகர்" என்றோ அல்லது ''விக்கிரகாராதனைக்காரர்'' என்றோ அழைத்துக் கொள்ள மாட்டார் அல்லது சரியில்லாததான வேறு எவ்வழியிலாவது தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ள மாட்டார். நாம் ஒவ்வொரு பகுதியும் - நமக்கு நாம் பயன்படுத்திக் கொள்ளும் பெயர்களும் கூட - நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்க வேண்டியதாக உள்ளது.

சபையாரை பரிசுத்த ஆவியானவர், "கிறிஸ்துவின் சபையார்" என்று

ஏன் குறிப்பிட்டார்? ஏதேனும் சந்தேகம் உள்ளதா? சபையானது கிறிஸ்துவின் சபையாக உள்ளது! உண்மையில், விவரிப்பான இந்தச் சொற்றொடரானது புதிய ஏற்பாட்டின் சபையினுடைய இயல்பின் மீது இன்னும் சற்று வெளிச்சத்தை வீசுகின்றது. இதை நாம் கவனத்துடன் சிந்தித்து, இதில் காணப்படும் சத்தியங்களைக் கண்டறிவோம்.

ஆவிக்குரிய உண்மை நிலை

முதலாவது, சபையானது வாழ்கின்ற ஒரு உண்மை நிலை, இருக்கின்ற ஒரு உயிருள்ள ஜீவி என்பதை (வசனக்) குறிப்பானது தெரிவிக்கின்றது. சபையானது இனியும், வருவதாயிருக்கும் ஒரு வாக்குத்தத்தமாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு நிகழ் கால உண்மையாக, வந்திருந்த ஒன்றாக இருந்தது என்று இது முன்கூட்டி உரைக்கின்றது. பவுலினால் ரோமர் 16:16 எழுதப்பட்ட வேளையில், சபையானது ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் பரவியிருந்தது. பவுல் இதை எழுதும் பொழுது இந்த (நிலப்) பகுதியில் இருந்த கிறிஸ்துவின் சபையார், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்துவின் சபையாருக்குத் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பினார்கள்.

மோசேயின் யுகத்தினுடைய நீண்ட ஆண்டுகள் முழுவதிலுமாக, தீர்க்கதரிசிகள் தங்கள் தீர்க்கதரிசன அடையாளக் குறிப்புகள் மூலம், “கடைசி நாட்களின்” வருகையைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள், இந்தக் கடைசி நாட்களின் தொடக்கத்தில்தான் கர்த்தருடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படுவதாக இருந்தது (தானி. 2:44). இயேசு தமது ஊழியத்தின் தொடக்க காலத்தில், காலம் நிறைவேறிற்று என்பதாகப் பிரசங்கித்தார்: “யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்” (மாற். 1:14, 15). வர இருந்த இந்தப் பரலோக இராஜ்யத்தை இயேசு, தம் “சபை” என்று அழைத்தார், மற்றும் தாமே இதைக் கட்டுவதாக வாக்களித்திருந்தார் (மத். 16:18).

இயேசு பரத்துக்கேறிய நாளில் அப்போஸ்தலர்கள் ஒரு புதிய தொடக்க மானது அருகாமையில் இருந்தது என்று அறிந்தவர்களாய், தங்களிடம் அவர் கூறியதில் நம்பிக்கை கொண்டிருந்தனர் (அப். 1:4, 5). அவர்கள், “ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?” (அப். 1:6) என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், “பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் பொழுது நீங்கள் பெலன(டைவீர்கள்)” (அப். 1:7, 8) என்று மறு உறுதியளித்தார். கிறிஸ்து பரத்துக்கேறி, பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தேயன்று கர்த்தரால் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது பொழியப்பட்டார் (அப். 2:1-4). பேதுருவின் பிரசங்கத்திற்குப் பின், பிற்பாடு அந்த நாளில் மூவாயிரம் பேர் கிறிஸ்துவுக் குள் ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் அவருடைய சபைக்குள் சேர்த்துக்

கொள்ளப்பட்டார்கள் (அப். 2:41, 47). ஏவுதல் பெற்ற தீர்க்கதரிசனம் மற்றும் இயேசுவின் முன்னுரைத்தல்கள் ஆகியவற்றின் நிறைவேற்றமாக இப்பொழுது சபையானது இருக்கத் தொடங்கியது. புதிய ஏற்பாட்டில் அப். 2ல் இருந்து, சபையானது நிகழ் காலத்தில் இருப்பதாகப் பேசப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் இதன் பிறகு சபையானது இனிவரும் உயிர்ப் பொருள் என்ற வகையில் தீர்க்கதரிசனமாகச் சித்தரிக்கப்பட்டதில்லை.

பவுல் கி.பி. 56 அல்லது 57ல், கொரிந்து நகரிலிருந்து, ரோமருக்கான தமது நிருபத்தை எழுதி முடித்தார் என்று எண்ணப்படுகின்றது. நடபடிகளில் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றின்படியாக, அந்த வேளையில் அகாயா, கிரேக்கு மற்றும் மெக்கதோனியா ஆகிய நாடுகளில் கிறிஸ்துவின் சபைகள் நிலைநாட்டப்பட்டிருந்தன. ரோமாபுரியில் கிறிஸ்துவின் சபையானது பல இடங்களில் நிலைநாட்டப்பட்டிருந்தது என்று ரோமருக்கு எழுதின நிருபமானது சுட்டிக்காட்டுகின்றது. இந்த உண்மை களின் கண்ணோக்கில், பவுல் ‘‘கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்’’ (ரோமர் 16:16) என்ற வாழ்த்துடன் தம் நிருபத்தை முடித்திருப்பது ஏற்புடையதாகவே இருந்தது.

பண்ணையில் நான் ஒரு சிறு பையனாக வளர்ந்து கொண்டிருந்த பொழுது, எனது சொந்தக் குதிரை என்று நான் அழைக்கக் கூடிய ஒரு சவாரிக் குதிரையைக் கொண்டிருத்தல் என்பது எனக்கு மிகவும் விருப்பமான கனவாக இருந்தது. எனது நண்பர்கள் குதிரைகளைக் கொண்டிருந்தனர், மற்றும் நான் கூட ஒரு குதிரை வைத்திருக்க விரும்பினேன். நானும் எனது நண்பர்களும் ஒன்றாக குதிரை சவாரி செய்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்ற சிந்தனை எனக்குள் எழும்போது, ஒரு குதிரையைச் சொந்தமாய்க் கொண்டிருக்க வேண்டும் என்ற எனது ஆவலானது மிகவும் தீவிரமாகியது. இந்த ஏக்கமானது விரைவிலேயே எனது மிகப் பெரும் பேராவலானது. அது மிகச் சரியற்ற தாயிருந்ததாக இப்பொழுது நான் உணர்ந்தாலும், அப்பொழுது நான் குதிரையைக் கொண்டிராவிட்டால், எனது வாழ்வு நிறைவுற்றதாயிராது என்றே உண்மையில் நான் நம்பினேன்.

பணம் பற்றாக் குறைவு இருந்த காரணத்தினால், எனது பதிமூன்றாம் வயது வரையிலும் எனது ஆவல் பூர்த்தியடையவில்லை. எங்களிடம் உழுவதற்கும் மற்ற எல்லா வேலைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு ஓய்வு பெற்ற வயதான ஒரு குதிரை இருந்தது. எங்களுடைய இந்த வயதான குதிரையுடன் இன்னும் சில தொகையை சேர்த்துக் கொடுத்தால் எனது அயலகத்தார் தாங்கள் வைத்திருந்த இரண்டு வயதேயான குதிரை ஒன்றை எங்களுக்குத் தருவதாகக் கூறினார். நாங்கள் அவ்வாறே வர்த்தகப் பரிமாற்றம் செய்தோம், நான் மிக மகிழ்ச்சியான இளைஞனானேன் - எனது கனவு நனவான மகிழ்ச்சியில் நான் திளைத்தேன்.

எனது வாழ்வின் இந்த மகிழ்வான தருணத்தில் நான் ஒருக்காலும் எனது குதிரைக்குப் பெயரிடவில்லை என்பதுதான் ஆர்வம் தரும் ஒரு நிகழ்வாய் இருந்தது. இது வினோதமானதாக உள்ளது அல்லவா? நாங்கள் அந்தக் குதிரையை ரெக்ஸ் என்றோ டார்ச் என்றோ அல்லது வேறு எந்தப்

பெயரினாலுமோ அழைத்ததே இல்லை; அதை நாங்கள் “எடியின் குதிரை” என்று மட்டுமே குறிப்பிட்டோம். அந்தக் குதிரை எனக்கு மிகவும் விசேஷமானதாயிருந்தது, ஆனால் ஏதோ காரணத்தினால் நான் அதற்கு ஒருக்காலும் பெயரிடாதிருந்தேன். நான் அக்குதிரை மீதேறி எங்கள் பண்ணையில் இருந்த மலைகளின் மீது சவாரி செய்தேன் மற்றும் குதிரை அணி வகுப்பில் கூட ஓராண்டில் கலந்து கொண்டேன், ஆனால் நான் ஒருக்காலும் அதற்குப் பெயரிடவில்லை; அது எப்பொழுதும் “எடியின் குதிரையாகவே” இருந்தது.

‘‘எடியின் குதிரை’’ என்ற சொற்றொடரானது மிகவும் எளிமை யானதாகவும், கவர்ச்சியாக இல்லாததாக இருந்தாலும், இது சில உண்மை களை வெளிப்படுத்துகின்றது. ஒரு விஷயம் என்னவென்றால் இது இந்தக் குதிரையின் உரிமையாளர் யாரென்று கூறிற்று.

இது போலவே, புதிய ஏற்பாட்டின் சபை ஒரு பெயரைக் கொண்டிருப் பதில்லை. இது “கிறிஸ்துவின் சபைகள்,” “தேவனுடைய சபைகள்” அல்லது “சபை” என்ற விவரிப்புச் சொற்றொடர்களினால் அடையாளப்படுத்தப் படுகின்றது. உண்மையில், சபைக்குப் பெயரைக் கொடுக்கப் புதிய ஏற்பாட்டின்படியான அதிகாரம் எதுவுமே இல்லை. சபை எங்கு கூடுகின்றது என்று நாம் அடையாளப்படுத்த முடியும், சபை யாருக்கு உரிமையான தென்று நாம் விவரிக்க முடியும் அல்லது சபையில் இருப்பவர்கள் யாரென்று நாம் கூற முடியும் - ஆனால் சபைக்கு ஒரு குறிப்பிட்ட பெயரைக் கொடுக்க நமக்கு அதிகாரம் இல்லை. இயேசு தம் சபைக்குப் பெயரிடுவதைப் பொருத்தமானதாகக் காணவில்லை; அவர் அதனை “என் சபை” (மத். 16:18) என்று மட்டுமே அழைத்தார்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், “எடியின் குதிரை” என்பது நான் எனது விருப்பத்தின்படியானதைப் பெற்றேன், அதாவது உண்மையிலேயே நான் ஒரு குதிரையைப் பெற்றுக் கொண்டேன் என்பதைச் சுட்டிக் காண்பித்தது. அது போலவே, “கிறிஸ்துவின் சபையார்” என்ற சொற்பொருள் விளக்கமானது கிறிஸ்துவின் சபை இங்கு உள்ளது, அதாவது கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறியுள்ளது என்பதைக் குறிக்கின்றது. இது நாம் இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபையாக வாழ முடியும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. சபையானது முதல் நூற்றாண்டில் இருந்தது என்றால், அது இன்றைய நாட்களிலும் இருக்க முடியும், அவ்வாறே இருக்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் முன்னர் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக தாம் காத்திருக்கத் தேவையில்லை. தேவனுடைய நேர்மைத் தன்மையின் மீது முன்னுரைக்கப்பட்டதொரு உறுதிப்பாட்டுடன் நாம், இப்பொழுது இரட்சிப்பிற்கான கர்த்தருடைய வழியின் மூலமாக அவருடைய இராஜ்யத்தினுள் பிரவேசிக்கவும், அவரது இராஜ்யத்தின் குடிமக்களாக வாழவும் முடியும்.

கிறிஸ்துவின் சபையினுடைய பிரசன்னத்தில் நாம் இன்றைய நாளில் அகம் மகிழ்வோமாக. கிறிஸ்துவின் சபையானது உண்மை நிலையாக உள்ளது மற்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் எவராயிருப்பினும் - நாடு, இனம்

அல்லது கலாச்சார வேறுபாடு போன்றவை எதுவுமின்றி - ஒவ்வொருவராலும் அது மகிழ்வுடன் அனுபவிக்கப்பட முடியும் என்ற அற்புதம் நிறைந்த செய்தியை உலகுக்கு அறிவிப்பதில் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள்.

பரிசுத்தமான உறவு

இரண்டாவது, ''கிறிஸ்துவின் சபையார்'' என்பது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் நிலவுகின்ற விசேஷித்த ஒரு உறவைத் தெரிவிக்கின்றது. சபையானது கிறிஸ்துவால் தனிச் சிறந்த ஒரு வகையில் உரிமை கொள்ளப்பட்டுள்ளது.

சபையானது இயேசுவால் உண்டாக்கப்பட்டது மற்றும் இது அவருக்கே உரியது என்பது புதிய ஏற்பாட்டில் சபையைப் பற்றிய திறவுகோல் சிந்தனையாக உள்ளது. அவர் சபையைத் தோற்றுவித்தவராகச் சித்தரிக்கப்படுகின்றார். அவர், "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' (மத். 16:18) என்றுரைத்தார். இயேசு சபையை மனிதருடையதாக அல்ல, ஆனால் தம்முடையதாகவே நினைத்தார். அவர் அதைத் தம் இரத்தத்தை விலை கொடுத்து வாங்கியதாகவும் சித்தரித்தார். எபேசுவின் மூப்பர்களுக்குப் பவுல், "தேவன் [இயேசு] தம் சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபையை மேய்ப்பதற்கு" (அப். 20:28) என்று கூறினார். இயேசு சிலுவையின் மீது தாம் பெற்ற தியாகமான மரணத்தினால் சபையை உண்டாக்கினார். அத்துடன், சபையானது இப்பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக முன்னிறுத்தப்படுகின்றது. பவுல், "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரி. 12:12) என்று எழுதினார்; "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1 கொரி. 12:27) என்றும் அவர் எழுதினார். அந்த சரீரத்துக்கு கிறிஸ்து தலையாக இருக்கிறார். பவுல், "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவர் ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ. 1:18) என்று கூறினார். சபை என்பது கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் நிறைவேற்றமாக, அவரது மீட்பின் பலியிலிருந்து இயல்பாக விளைந்ததாக உள்ளது.

சபையுடன் கிறிஸ்து நிலைநிறுத்துகின்ற மாறுபட்ட எல்லா உறவுகளையும் நாம் மனதில் காத்துக் கொள்ளுகின்ற பொழுது, சபையைப் பவுல் "கிறிஸ்துவின் சபை" என்று கூறியது பற்றி நாம் திகைப்படைவதில்லை. சாத்தியமான ஆழமிக்க கருத்தில், சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது, மற்றும் ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்காமல் உண்மையான சபையைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது. கிறிஸ்துவை உண்மையாகச் சார்ந்துள்ள எவரொருவரும்

அவருடைய சபையாக அவருக்கு ஊழியம் செய்வார். சரியான கிறிஸ்துவின் சபை என்பது தனது அடையாளத்தையும் பண்பையும் கிறிஸ்துவிடமிருந்து பெறுகின்றது, மற்றும் கிறிஸ்துவின் உண்மையான ஊழியர் கிறிஸ்துவின் சபையாய் இருப்பது தவிர வேறு எதுவாக இருப்பதையும் மறுத்து விடுவார். சபை என்பது கிறிஸ்துவால் உரிமை கொள்ளப்பட்டு, வழி நடத்தப் படுவதுடன் கூட, அது அவருடைய ஆவிக்குரிய சரீரமாக இப்பூமியில் நிலவுகின்றது.

செயல் வலிவும் விசுவாச நிறைவுமுள்ள சுவிசேஷ ஊழியரான காலஞ் சென்ற ஃபாய் L. ஸ்மித் அவர்கள், சபையின்மீது கிறிஸ்து கொண்டுள்ள உரிமைத்துவம் பற்றி தெளிவான விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார். அவர், ஒருவேளை நீங்கள் ஒரு நாள் காலையில் உங்கள் வீட்டின் மேற்கூரையைச் சுத்தியால் உடைக்கும் சத்தம் கேட்டு விழித்தெழுகின்றீர் கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் படுக்கையை விட்டுத் தடுமாறி எழுந்து, உங்கள் காதுகளையே நம்ப முடியாத நிலையில் இருப்பீர்கள். நீங்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறீர்களா அல்லவா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நீங்கள் உங்கள் தலையை அசைப்பீர்கள். நீங்கள் உறங்கவில்லை என்பதைக் கண்டு பிடிப்பீர்கள். நீங்கள் உங்களுக்குள்ளே, “யாரோ ஒருவர் என் வீட்டு மேற்கூரையில் வேலை செய்வது போல சத்தம் கேட்கின்றதே, ஆனால் நான் யாரையும் அவ்வாறு வேலை செய்யும்படி கேட்டுக் கொள்ளவில்லையே! என் வீட்டு மேற்கூரையில் யாரேனும் ஒருவர் ஏன் இருக்க வேண்டும்?” என்று கூறிக் கொள்கின்றீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் மாம்சத்தில்தான் இருக்கின்றீர்களா என்று உறுதியாய்க் காண நீங்கள் உங்களையே கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றீர்கள். நீங்கள் பார்ப்பதினால் பயமுறுத்தப்பட்டாலும், நீங்கள் இப்பொழுது இன்னும் உங்கள் உடலில்தான் இருப்பதாக நிச்சயப்படுத்திக் கொள்கின்றீர்கள். வேக வேகமாக உடைகளை அணிந்து கொண்டு, என்ன நடக்கிறதென்று பார்க்க நீங்கள் வெளியே போகின்றீர்கள். நீங்கள் வெளியே சென்று, மேற்கூரையைப் பார்க்கின்றீர்கள். நீங்கள் முற்றிலும் திகைப்படையும்படி, உங்கள் மேற்கூரையின் மீது ஒரு மனிதர் உட்கார்ந்து கொண்டு, ஓடுகளைப் பிரித்து எறிந்து கொண்டுள்ளார். அவர் ஏற்கனவே உங்கள் கூரையின் ஒரு பகுதியைப் பிய்த்து எறிந்து விட்டார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த நீங்கள், “ஏய்! நீ என்ன செய்கிறாய்? எனது கூரையைப் பழுது பார்க்க நான் உன்னைக் கூலிக்கு அமர்த்தவில்லையே!” என்கிறீர்கள். அந்த மனிதரோ தைரியமாக, “ஐயா, நான் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் உங்கள் வீட்டின் வழியே கடந்து சென்றுள்ளேன். ஒவ்வொரு நாளும் அவ்வாறு செல்லுகையில், உங்கள் வீட்டைப் பார்த்து விட்டு, ‘இந்த வீடு கட்டப்பட்டுள்ள விதம் எனக்குப் பிடிக்கவில்லையே’ என்று சொல்லிக் கொள்வேன். வாரக் கடைசியான இன்று எனக்குச் சற்று ஓய்வு நேரம் இருந்தபடியால், இங்கு வந்து உங்கள் வீட்டை எனது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்வதற்கு முடிவு செய்தேன். எனது உழைப்பு, பொருட்கள் அல்லது எனது புத்திசாலித் தனமான வடிவமைப்பு ஆகியவற்றிற்காக உங்களிடம் நான் கட்டணம் எதையும் வசூலிக்க மாட்டேன்” என்று பதில் அளிக்கின்றார்.

இந்த மனிதருக்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் அம்மனிதரைத் திருப்திப்படுத்துவதற்காக இவ்வீட்டைக் கட்டவில்லையென்றே கூறுவீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தின் தேவைகளைச் சந்திக்கவே இந்த வீட்டைக் கட்டினீர்கள் என்றும், அந்த மனிதர் உங்கள் வீட்டை விரும்பவில்லையென்றால் குறைந்தபட்சம் அவர் அதை அப்படியே விட்டு விடுவதுதான் அவர் செய்யக்கூடிய செயல் என்று நீங்கள் அவரிடம் கூறுவீர்கள். அதை மாற்றும் உரிமை அவருக்கில்லை, ஏனெனில் மாற்றுவதற்கு அது ஒன்றும் அவருடைய வீடல்ல என்பதை நீங்கள் அவருக்குத் தெளிவு படுத்துவீர்கள்.

ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவைப் பற்றியும் பிரசங்கிக்க முடியாது, மற்றும் ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்காமல் உண்மையான சபையைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது.

கர்த்தர் தம்முடைய சபையைப் பொறுத்தமட்டில் இதே போன்றதொரு பதில்செயலை மனிதரிடமிருந்து பெற்றிருக்கவில்லையா? மனிதர், "கர்த்தரே நீர் சபையை அமைத்துள்ள விதம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் அதை மாற்றப் போகின்றேன்" என்று கூறியுள்ளார்கள். முரட்டாட்டமான மதவியலாளர்கள் கர்த்தருடைய சபையை மனிதரால் உண்டாக்கப்பட்ட நிறுவனமாக மாற்றுவதைத் தங்கள் பணியாக ஏற்படுத்திக் கொண்டார்கள். இருப்பினும், பின்வருவது உண்மையாக இருக்கின்றது: நமது தனிப்பட்ட வீடு நமக்குச் சொந்தமாயிருப்பது போலவே, சபை கிறிஸ்துவுக்கு உரியதாக இருக்கின்றது. அதைக் குறித்து ஏதொன்றையும் மாற்றும் உரிமை எந்த மனிதருக்கும் அல்லது குழுவுக்கும் இருப்பதில்லை. இது கிறிஸ்துவின் சபையாக இருக்கின்றது.

கர்த்தருடைய சபையைக் குறித்து எவரொவரும் கொண்டுள்ள எந்த ஒரு விவாதமும் கிறிஸ்துவிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும், ஏனெனில் சபையானது அவருடைய உரிமைத்துவத்தின் கீழும், அதிகாரத்தின் கீழும் இருக்கின்றது. அவர் இதன் தலையாக இருக்கின்றார், மற்றும் இது அவரது வடிவமைப்பின்படியாகவும் அவர் தேர்ந்து கொள்ளும் இயக்கத்தின் படியாகவும் இருக்கின்றது.

கிறிஸ்துவின் சபை என்ற வகையில் நாம் கிறிஸ்துவுடன் நமக்குள்ள விசேஷித்த உறவை ஒப்புக் கொள்வோமாக. அவருடைய சரீரம் என்ற வகையில், நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்காக வாழ்கின்றோம். நமக்குப் பவுலின் பின்வரும் வார்த்தைகள் எப்பொழுதும் ஏற்புடையவைகளாகவே உள்ளன: "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா. 1:10).

வேத வசனக் குறிப்பு

மூன்றாவது, “கிறிஸ்துவின் சபையார்” என்ற சொல் விளக்கமானது வேத வசனங்களில் சபையை அடையாளப்படுத்தும் ஒரு வழிமுறையை வெளிப்படுத்துகின்றது. பவுல் ஆவியானவரால் இயக்கப்பட்டு, சபையைக் கிறிஸ்துவின் சபை என்று விவரித்தார்.

உலகிற்கு இயேசுவின் சபை வந்த நிகழ்வானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக இருந்தது, இது பழைய ஏற்பாடும் மற்றும் புதிய ஏற்பாட்டின் முற்பகுதியும் (நான்கு சுவிசேஷங்கள்) எதிர்நோக்கியிருந்த நிகழ்ச்சியாக இருந்தது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் முற்பகுதி ஆகியவற்றின் மூலம் மடல் விரியும் தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுகின்ற எவரொருவரும் இந்த நிகழ்வின் மீது வைக்கப்படும் வலியுறுத்தத்தினால் மட்டுமே (கூட) தூண்டப்பட்டவராக, “சபை வந்த பொழுது, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அதை எவ்வாறு குறிப்பிட்டார்கள்? அதற்குப் பயன்படுத்தப்படும் பெயர்கள் யாவை?” என்று கேட்பார்கள்.

ஒருவர் தொடர்ந்து படிக்கையில், பல குறிப்புகளும் விவரிப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டு பிடிப்பார். இது “தேவனுடைய சபை”யாக (1 கொரி. 1:2) அல்லது “தேவனுடைய சபைகளாக” (1 தெச. 2:14) உள்ளது; இது “முதற்பேறானவர்களின் சபையாக” உள்ளது (எபி. 12:23); இது “பரிசுத்தவான்களுடைய சபைகளாக” உள்ளது (1 கொரி. 14:33). இது மிகவும் அடிக்கடி, “சபை” (எபே. 1:22) என்று மட்டும் குறிப்பிடப்படுகின்றது அல்லது “ஆசியாவில் உள்ள சபைகள்” (1 கொரி. 16:19) என்பது போல ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள சபை என்ற வகையில் குறிப்பிடப்படுகின்றது.[1]

புதிய ஏற்பாட்டின் சபைக்குப் பரிசுத்த ஆவியானவரால் பெயர் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. நீங்கள் வேத வசனங்களில் கல்வாரி மலை சபை, சீயோன் கிருபையினால் மீட்கும் சபை, பரிசுத்த கல்லறையின் சபை முதலிய வகையில் இதைக் குறிப்பிடுவதை எங்கும் காண மாட்டீர்கள். இது தன் உரிமையாளரைக் குறிக்கும், தனக்குள் இருப்பவர்களைக் குறிக்கும், தான் இருக்கும் இடத்தைக் குறிக்கும் அல்லது தான் என்னவாக உள்ளது என்பதைக் குறிக்கும் சொற்றொடர்களால் குறிப்பிடப்படுகின்றது, ஆனால் இது ஒருக்காலும் பெயரிடப்படவில்லை.

வேத வசனங்களில் “சபை” முன்னிறுத்தப்படும் வழியின் வனப்பு மிக்க எளிமைத் தன்மை நம்மை உறைய வைக்கின்றது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட நாட்களில் ஒருவர் அதனுள் இருந்தார் அல்லது அதனுள் இராதிருந்தார்; ஒருவர் சபையில் இருந்தார் அல்லது உலகில் இருந்தார். இன்றைய நாட்களில் நாமகரணத்துவத்தின் சரிவின் காரணமாக, அதன் மனித சட்டங்கள் மற்றும் மனிதப் பெயர்களின் காரணமாக, மத உலகத்தினால் அவிசுவாசிக்குச் சித்தரிக்கப்படும் சித்திரமானது மிகுந்த அறிவொளியும் புத்திக் கூர்மையும் உள்ள மக்களைக் கூட குழப்பித் திகைக்கச் செய்யக் கூடிய பேரளவிலான கூக்குரலாகவே உள்ளது. உலக முழுவதிலும் உள்ள நாமகரணத்துவத்தின் விழுங்கும் செல்வாக்கு மற்றும் பிரசன்னம் என்பதைக் காட்டிலும் அதிகமாக, இயேசு கட்டிய சபையை -

புதிய ஏற்பாட்டு சபையை - அதன் நேர்மை, எளிமை, மற்றும் வனப்பு ஆகியவற்றை மூடி மறைக்க வேறு ஏதொன்றும் செய்யப்படவில்லை. புதிய ஏற்பாட்டின் அழைப்பானது நாம் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாக, புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினர்களாக இருந்து, கிறிஸ்துவுக்கும் புதிய ஏற்பாடாகிய அவருடைய வசனத்திற்கும் மட்டுமே சார்புள்ளவர்களாய் இருக்கும்படி தவறற்ற வகையில் உள்ளது.

சபைக்கான புதிய ஏற்பாட்டு அடையாளங்களில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, நம்மை நாமகரணப் படுத்திக்கொண்டு, ஒரு குழுவாக்கிக் கொண்டு, புதிய ஏற்பாடு பயன்படுத்துகின்ற மற்ற எல்லா அடையாளங்களையும் புறம்பே ஒதுக்கி விடுவதோ அல்லது தவிர்த்து விடுவதோ தவறானதாக இருக்கும். புதிய ஏற்பாட்டின்படியான உண்மைச் சபையானது அதற்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா இயற்பெயர்கள் மற்றும் விவரிப்புகளினாலும் அறியப்பட வேண்டியதாக உள்ளது. சபை என்றால் என்ன, யார் அதை உரிமை கொண்டுள்ளார், அல்லது யார் அதில் இருக்கிறார் என்பது பற்றிய முக்கியமான உட் கண்ணோட்டத்தை ஒவ்வொரு சொல் விளக்கமும் நமக்கு அளிக்கின்றது. ஒவ்வொரு குறிப்பும் மதிப்பு மிக்கது மற்றும் அது சபைக்குப் பயன் படுத்தப்பட வேண்டும், ஆனால் இவைகள் புதிய ஏற்பாட்டில் பயன் படுத்தப்பட்டுள்ள அதே வழிமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாக உள்ளது. மதத்தில் சபையைப் பற்றிய பெரும் குழப்பத்திற்கு இரு காரணங்கள் உள்ளன. அவை, புதிய ஏற்பாட்டில் அறியப்படாத பெயர்களைச் சபைக்குப் பயன்படுத்துவதும் மற்றும் சபைக்கான புதிய ஏற்பாட்டுப் பெயர்களைத் தவறாகப் பயன்படுத்துவதும் ஆகும்.

புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுவதாக உரிமைகோரியும் அதற்கான உண்மையான ஆதாரமும் எதையும் காண்பிக்காத நாமகரணக் கூட்டம் ஒன்றைப் பற்றிக் கதையொன்று கூறப்படுகின்றது. அவர்கள் தங்கள் கட்டிடத்தின் முன்பாக ஒரு புதிய பெயர்ப் பலகையொன்றை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உறுப்பினர் ஒருவரிடத்தில் பேசிய புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர் ஒருவர், "உங்கள் குழுவானது உங்கள் கட்டிடத்தின் முன்பாகப் புதிய பெயர்ப் பலகையொன்றை வைப்பதை நான் பார்க்கின்றேனே" என்றார். அதற்கு அந்த உறுப்பினர், "ஆம், அதைக் குறித்து நாங்கள் பெருமைப்படுவோம்" என்று சொன்னார். அதற்குக் கிறிஸ்தவர், "அந்தப் பெயர்ப் பலகையில் உங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயருக்குப் பதிலாக 'இது கிறிஸ்துவின் சபை' என்ற வார்த்தைகளை மட்டும் எழுதினால் உங்கள் பெயர்ப் பலகையை வைக்கும் செலவுக்கு நான் 2500 ரூபாய் நன்கொடை அளிப்பேன்" என்று கூறினார். அந்த உறுப்பினர், "ஓஹோ, இல்லை! நாங்கள் அதைச் செய்ய முடியாது; நாங்கள் எங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயரை அந்தப் பெயர்ப் பலகையில் எழுதியாக வேண்டும்" என்றார். அதன் பிறகு அந்தக் கிறிஸ்தவர், "சரி. நீங்கள் உங்கள் பெயர் பலகையில், 'இது கிறிஸ்துவின் சபை அல்ல' என்று எழுதினால் நான் அந்தப் பெயர்ப் பலகையை வைக்கும் செலவுக்கு 2,500 ரூபாய் நன்கொடை

அளிப்பேன்" என்று கூறினார். அதற்கு அந்த உறுப்பினர், "நாங்கள் அதைச் செய்ய முடியாது; நாங்கள் கிறிஸ்துவின் ஒரு சபையாராய் இருக்கிறோம்" என்று கூறினார்!

இந்தச் சிறு கதையானது உண்மையாய் இருக்கும் உட்கருத்தைக் கொண்டுள்ளது. ஒரு குழுவானது தான் கிறிஸ்துவின் சபையாக இருப்பதாக உரிமைகோரிக் கொண்டு, அதே வேளையில் தங்கள் பெயர்ப் பலகையில் அதைக் குறிப்பிட விரும்பாமல் அதற்குப் பதிலாகத் தங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயரை எழுத விரும்புவது வினோதமானதாக இல்லையா? நமது பற்றுறுதியானது நாம் சூடிக் கொள்ளத் தேர்ந்து கொள்ளும் இயற் பெயரை அல்லது பெயரைத் தீர்மானிக்கின்றது.

ஆபிரகாம் லிங்கன் அவர்கள், ஒருமுறை ஒரு மனிதரிடம், "கன்றுக் குட்டியின் வாலை(யும்) கால் என்று நாம் அழைப்போமென்றால், கன்றுக் குட்டிக்கு எத்தனை கால்கள் இருக்கும்?" என்று கேட்டார். அம்மனிதர் விரைவாக, "அதற்கு ஐந்து கால்கள் இருக்கும்!" என்றார். திருவாளர் லிங்கன், "இல்லை. கன்றுக்குட்டிக்கு நான்கு கால்கள் தான் இருக்கும். வாலைக் கால் என்று சொல்வதினால் வால் காலாகி விடாது" என்று பதில் கூறினார். அவரது கூற்றின் உண்மையானது தவறற்றதாக உள்ளது. ஒரு குழுவானது தன்னைத்தானே கிறிஸ்துவின் சபை என்று அழைத்துக் கொள்ளுதல் என்பது, அவர்கள் கிறிஸ்துவின் சபையாராக உள்ளனர் என்று நிரூபித்து விடுவதில்லை. இருப்பினும், வேறொரு சிந்தனையும் ஆழ்ந்து கவனிக்கப் பட வேண்டும்: நாம் கிறிஸ்துவின் சபையாராக இருக்க வேண்டும் என்று உண்மையிலேயே நாட்டம் கொண்டிருந்தால், நாம் அப்படிப்பட்டவர் களாயிருக்கிறோம் என்று குறிப்பிடுவோம் என்பது நிச்சயம். நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம் என்று நம்மையே அழைத்துக் கொள்ள மறுப்பதைப் போலவோ, நாம் எவ்வாறு இல்லையோ அவ்வாறு நம்மை அழைத்துக்கொள்ளுவதும் சரியற்றதாகவே உள்ளது.

இன்றைய நாட்களில் மத உலகின் உண்மைத் தேவையானது (முன்) ஒருக்காலும் இதை விட அதிகம் தெளிவானதாக இருந்ததில்லை: நாம் வேதாகமத்திற்குத் திரும்பி, புதிய ஏற்பாட்டு சபை என்ற வகையில் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்களாயிருந்து கிறிஸ்துவுக்கும் அவரது வசனத்திற்கும் மட்டுமே பற்றுறுதியைக் காண்பிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். நமது மத உலகில் உள்ள சபைகள் "சபை" என்பதாக மட்டும், மற்றும் கிறிஸ்தவர் கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்தால், மதக் குழப்பங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல, ஒளியைக் கொண்ட இருள் போல ஓடி ஒளிந்து விடும். எந்த வகையான ஒதுக்கீடும் வளப்படுத்தப்பட முடியாது; நாம் நமது இருதயங்களையும் ஊழியத்தையும் கிறிஸ்துவுக்கும் அவரது வசனத்திற்கும் மட்டுமே - அது என்ன அர்த்தப்படுத்தினாலும், எங்கு வழி நடத்தினாலும், மற்றும் அது என்ன விலையானாலும் - கொடுக்க வேண்டும்.

முடிவுரை

"கிறிஸ்துவின் சபையார்" என்ற சொற்றொடரானது சிறியதாகவும்,

கவனிக்க முடியாததாகவும் இருப்பினும் கூட, கேட்டுக் கவனிக்கும் யாவருக்கும் இது ஒரு வல்லமையான செய்தியைக் கொண்டுள்ளது. இது சபையைப் பற்றிய தனிச் சிறப்பான சத்தியங்களை மறைமுகமாய் அறிவிக்கின்றது. முதலாவது, இது சபையின் உண்மை நிலையை வெளிப்படுத்துகின்றது. ரோமருக்குப் பவுல் எழுதிய பொழுது, உலக வரை படத்தில் கிறிஸ்துவின் சபைகள் பல குறிப்பிடப்பட்டிருந்தன. இரண்டாவது, இது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் உள்ள வலிவார்ந்த உறவைத் தெரிவிக்கின்றது. சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. இது அவருக்குரியது, மற்றும் இது அவருடைய ஆவிக்குரிய சரீரமாகப் பணியாற்றுகின்றது. மூன்றாவது, இந்தச் சொற்றொடரானது, பவுலின் நாளில் புதிய ஏற்பாட்டு சபை பெயர் குறிப்பிடப்பட்டிருந்த (ஒரே) ஒரு வழி முறையைக் காண்பிக்கின்றது.

நமது கர்த்தர் விசாரணை செய்யப்பட்ட இரவிலே, பேதுரு வெளிமுற்றத்தில் கூடியிருந்த கும்பல் ஒன்றுடன் காத்திருந்தார். அவர் வாசலருகில் சென்ற வேளையில், அங்கு நின்றிருந்த ஒருவன் அவரைக் கேள்வி கேட்டான். “மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது” (மத். 26:73). பேதுரு கும்பலுடன் காத்திருந்த வேளையில் அவர் மற்றவர்களுடன் அதிகமாய் ஒன்றும் பேசவில்லை என்று காணப்படுகின்றது; ஆனால் குறைந்தபட்சமாக, அருகில் நின்றிருந்தவர் களில் ஒருவனுடைய கூற்றினாலாவது, பேதுரு தம்மை இயேசுவின் சீஷர் என்று அடையாளப்படுத்தப் போதுமானவற்றைக் கூறியிருந்தார் என்பது தெளிவாகின்றது. இந்த நிகழ்ச்சியில், ஒரு சில வார்த்தைகளே அவரது அடையாளத்தை வெளிப்படுத்தின.

“கிறிஸ்துவின் சபையார்” என்ற இரு வார்த்தைகள், சபை என்றால் என்ன என்று நம் கண்களைத் திறக்கச் செய்வதாலும், மற்றும் நமது பற்று றுதிக்கும் அன்புக்கும் சரியான கவன ஈர்ப்பை நமக்குக் கொடுப்பதாலும் கிறிஸ்தவர்களின் உண்மை அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன. சபை என்பது கிறிஸ்துவின் உடமையாக, அவருடைய ஆவிக்குரிய சரீரமாக உள்ளது.

சபையை “கிறிஸ்துவின் சபை” என்று மிகச் சரியாக அழைப்பதைக் காட்டிலும் பெரிய பாராட்டினை சபைக்குக் கொடுக்க முடியாது. ஒரு குழுவானது தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்று கூறிக் கொள்வதில் பதிந்துள்ள பேரார்வத்தைக் காட்டிலும் வேறெந்த மாண்புமிக்க தீர்மானத்தையும் அவர்கள் மேற்கொள்ள முடியாது. வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்பவர், “ஒருவருக்குள் நல்லொழுக்கத்தை உண்டாக்குவதற்கு, அவர் நல்லொழுக்கம் உள்ளவர் என்று பண்புபடுத்துவதே மிகச் சிறந்த வழியாகும்” என்று கூறினார். நாம் நம்மைக் கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிட்டுக் கொள்ளும் பொழுது, நாம் அவ்வாறு இருப்பதாக அவ்வாறு ஆவதாகத்தேர்ந்து கொண்டுள்ளதை எல்லாரும் காணும்படி தெளிவாக்குகின்றோம்.

கிறிஸ்து யார் என்று அறிந்த நிலையில், நீங்கள், அவர் கட்டி யெழுப்பியதும் அவருக்கு உரிமையுள்ளதுமாகிய அவருடைய சபையில்

அங்கமாயிருக்க விரும்புவீர்கள். உங்கள் இருதயத்தில் "கிறிஸ்துவின் சபை" என்று எழுதப்பட்டுள்ள பெயர்ப் பலகையைக் கொண்டுள்ளீர்களா?

குறிப்பு

[1]*மற்ற இடங்களிலுள்ள ''சபைகள்'' பற்றிக் கூறப்பட்டிருப்பவைகள்: "கலாத்தியாவின் சபைகள்" (1 கொரி. 16:1; கலா. 1:2), "யூதேயாவிலுள்ள சபைகள்" (கலா. 1:22), "லவோதிக்கேயாவில் உள்ள சபைகள்" (கொலோ. 4:16) மற்றும் "தெசலோனிக்கேயில் உள்ள சபைகள்" (1 தெச. 1:1).*

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *"சிபொலேத்" என்பது எப்பிராயீமரை எவ்வாறு அடையாளப் படுத்திற்று?*
2. *சபை எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது?*
3. *யோவான் ஸ்நானன் சபையை எவ்வாறு குறிப்பிட்டார்?*
4. *கிறிஸ்து, சபையுடன் நிலைநிறுத்துகின்ற பல்வேறு உறவுமுறைகளை அட்டவணைப்படுத்துக. ஒவ்வொரு உறவுமுறைக்கும் வேத வசனங்களில் இருந்து ஆதாரம் தரவும்.*
5. *சபை கிறிஸ்துவுக்கு உரியது என்பதை மெய்ப்பிக்கவும்.*
6. *சபையானது புதிய ஏற்பாட்டில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?*
7. *புதிய ஏற்பாட்டில் எப்பொழுதாவது சபைக்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா?*
8. *புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இன்றைய நாளில் தேவையான உறுதிப்பாட்டினைத் தொகுத்துரைக்கவும்.*
9. *இன்றைய நாட்களில் ஒரு சபையானது பெற்றுக் கொள்ளக் கூடிய மிகப் பெரிய பாராட்டு என்ன?*
10. *இயேசு விசாரிக்கப்பட்ட இரவில் பேதுரு எவ்வாறு அடையாளம் காணப்பட்டார்?*

12

மிக உயர்ந்த கனமுள்ள சபை

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (எபி. 12:22-24).

நீங்கள் மிகவும் அருமையாய் நேசிக்கும் வகையில் உங்களுக்கு என்ன தனிச் சிறப்பு தரப்பட வேண்டும்? மற்றும் நீங்கள் மதிக்கின்ற மிகவும் தேர்ந்து கொள்ளப்பட்ட விருது என்ன? ஒரு கல்விச் சாதனையா? செல்வந்தர்களின் வட்டாரத்திற்குள் ஒரு திடீர்ப் பிரவேசமா? ஆச்சரியப்படத் தக்கதான ஒரு விளையாட்டுச் சாதனையா? மனிதரால் தரப்படும் ஒரு மதிப்பா? உங்கள் குடும்பத்தில் நிலையான வெற்றியா?

நான் ஒரு கல்லூரி மாணவனாய் இருக்கையில், நான் வாழ்ந்த விடுதியில், ஒரே தளத்தில் உள்ள பல இளைஞர்களும் ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதிலும் வேத வாசிப்பு மற்றும் ஜெபம் செய்வதற்காகக் கூடுவது உண்டு. அவ்வப்பொழுது நாங்கள், எங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்ப்பதுண்டு அல்லது ஒவ்வொரு இளைஞரும் தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுண்டு. ஒரு நாள் மாலை வேளையில், எங்களது ஜெப வழிபாட்டை முன்னின்று நடத்திய இளைஞர், "வேதாகமத்தில் உள்ள நபர்களில் யாரைப் போல் இருப்பதற்கு நீங்கள் மிகவும் விரும்புகின்றீர்கள்?" என்ற கேள்விக்கு நாங்கள் ஒவ்வொருவரும் பதில் அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஒருவர், "நான் ஆபிரகாமைப் போலிருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் விசுவாசத்தில் வல்லவராய் இருந்தார்" என்று கூறினார். இன்னொருவர், "நான் மோசேயைப் போலிருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் தேவனைக் கண்டார்" என்று கூறினார். இன்னொருவர், "நான்

அப்போஸ்தலர்களில் ஒருவராக இருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர்கள் இயேசுவோடு இருந்தார்கள்” என்றார். இன்னும் வேறொருவர், ‘‘நான் ஏனோக்காக இருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் தேவனோடே நடந்தார்’’ என்று கூறினார். ஒவ்வொரு இளைஞரும் வேதாகமத்தில், குறிப்பிடத்தக்க பண்பைக் காட்சிப்படுத்தியிருந்த அல்லது தனிப்பட்டதொரு கனத்தைப் பெற்றிருந்த யாரேனும் ஒருவரைத் தேர்ந்து கொண்டு, தான் அந்த மனிதரின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தால், அதை மாபெரும் சிலாக்கியமாய்க் கருதுவதாகக் கூறினர்.

இன்னொருவருடைய சாதகமான சூழ்நிலையை ஏக்கத்துடன் கண்ணோக்கிக் கொண்டிருந்து, நமக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷித்த வாய்ப்புக்களைக் கண்ணோக்காமல் விடுதல் என்பது எப்பொழுதுமே மிகவும் சுலபமானது என்றே நான் யூகிக்கின்றேன். கிறிஸ்தவர்களாகிய நாம் மேன்மையான நமது நிலையையும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற வளம் மிக்க பாரம்பரிய செல்வங்களையும் தொடர்ந்து நம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எபிரெயர் 12:22-24 வசனப் பகுதியானது புதிய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் நினைவூட்டும் குறிப்புகளில் ஒன்றாகும். இது, கிறிஸ்துவுக்குள் வருகையில் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கின்ற விலைமதிப்பற்ற செல்வங்கள் சிலவற்றைத் தொகுத்துரைக்கின்றது.

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப் பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்” (எபி. 12:22-24).*

இந்த எழுத்தாளர், கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவத்திற்கும் தன் வாசகர்கள் மனம் மாறியதன் மறைகருத்துடன் இவ்வசனப் பகுதியை முடித்து வைக்கிறார். “வந்து சேர்ந்தீர்கள்” என்பது அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட காலம் பற்றிய உருவக மொழிநடையாக உள்ளது. இதில் அவர், கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டுள்ள ஆவிக்குரிய தனிச் சிறப்பான பலன்கள் பன்னிரெண்டை அட்டவணைப்படுத்துகின்றார். இந்தப் பயன்களில் ஒன்றை அவர், ‘‘முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை’’ என்ற சொற்றொடரினால் விவரிக்கின்றார். ‘‘முதற்பேறானவர்களின்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கப் பெயர்ச் சொல்லானது பன்மை வடிவில் உள்ளது, மற்றும் இதனுடன் தொடர்புடையதாய்ப் பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வினைச் சொல்லும் கூட பன்மை வடிவிலேயே உள்ளது; இவ்விதமாக, அவர் கிறிஸ்தவர்களை “முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை’’ என்று உண்மையில் குறிப்பிட்டார். விவரிப்பான

இச்சொற்றொடரானது புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரே இடத்தில் மட்டுமே உள்ளதாகவும், கிறிஸ்தவர் அல்லது கிறிஸ்தவள் கிறிஸ்துவின் சபையாக வாழுகையில் அவருக்கு/அவளுக்கு அளிக்கப்படும் விசேஷித்த நிலைப்பாட்டை விளக்கி உரைப்பதாகவும் இருக்கின்றது.

சத்தியம்

எபிரெயருக்கு எழுதிய நிருபமானது உற்சாகம் இழக்கச் செய்யப்பட்ட மற்றும் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை விட்டுவிடும் விளிம்பில் இருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. துன்புறுத்தல்களும், அவர்களைச் சூழ்ந்துள்ள பல தெய்வ வணக்கக்காரர்களின் நெருக்கங்களும், அவர்களின் கிறிஸ்தவப் பயணத்தின் ஒவ்வொரு அடி வைப்பிலும் வேதனையுடன் குத்துகிற முட்களைப் போலிருந்தன. அவர்களில் பலர் தாங்கள் இந்த இடைவிடாத துன்புறுத்தலில் இருந்து விடுதலையைக் காண்பதற்காக, தாங்கள் மனமாறி விட்டு வந்திருந்த யூதமார்க்கத்திற்குத் திரும்பும்படியாக சலிப்பினால் சோதிக்கப்பட்டிருந்தார்கள்.

ஏவுதல் பெற்ற எழுத்தாளர் இந்த நிருபம் முழுவதிலும், தமது வாசகர்கள் கிறிஸ்தவத்தை மேன்மை மிக்க சிலாக்கியமாகவும், தேவன் மனிதருக்குக் கொடுத்தவற்றிலேயே மிக அழகிய ஆசீர்வாதமாகவும் மதிக்க வேண்டியது ஏன் என்பதற்கு அவர்களுக்குப் பல்வேறு காரணங்களைக் கொடுத்தார். கிறிஸ்துவிலிருந்து திரும்பி யூதத்துவத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்லுதல் என்பது தாழ்வானதற்காக உயர்வானதையும், நிழலுக்காக நிஜத்தையும் கொடுத்து வாங்குவது போலானது என்பதே இப்புத்தகத்தின் மேலோங்கிய முடிவாக உள்ளது. எபிரெயர் 12:22-24ல் அவர், கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற முதன்மையான பலன்களை ஒரு வாக்கியத்தில் பொதிந்து வைத்தார். ஒரு மொத்தமான கருத்தில் அவர், கிறிஸ்தவர் வேறு எந்த மதத்திற்காவது கிறிஸ்தவத்தை ஒருக்காலும் மாற்றாகக் கொடுத்து விடக் கூடாது என்ற கருத்தில் இணக்கம் கொள்வதற்குப் போதுமான சான்றைக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுடைய மக்கள் நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட இடமான சீனாய் மலையிடத்தில் வந்தார்கள். அதன் அக்கினி, புகை, இடி மற்றும் மின்னல் ஆகியவைகள் பாவத்தைக் குறித்து தேவனின் நீதியையும் நியாயத்தையும் வெளிப்படுத்தின. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்கள் சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் வருகின்றனர். அவர்கள் கிருபையின் யுகமாகிய கிறிஸ்துவின் யுகத்தின் போது தேவனிடம் வந்து, பரம எருசலேமில் ஆவிக்குரிய வகையில் பங்கேற்கின்றனர். அவர்கள் இவ்வாறு செய்கையில், தேவனுடைய பிரசன்னத்தில் அகம் மகிழ்ந்து துதி பாடும் தூதர்களின் சேனைகளுடனான ஐக்கியத்தில் பிரவேசிக்கின்றனர். அவர்கள் பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்களாகிய முதற்பேறான வர்களின் சர்வசங்கமாகிய சபையில் பிரவேசித்து, மற்றும் பழைய ஏற்பாட்டு யுகத்தில் இருந்தவர்களும் இப்பொழுது பூரணராக்கப்

பட்டுள்ளவர்களுமாகிய நீதிமான்களின் ஆவிகளுடன் சேர்ந்துள்ளனர். இயேசுவின் பலியினால் ஆன அவருடைய இரத்தத்தினால் அவர்கள் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய அவரிடத்தில் வந்துள்ளனர். சுருக்கமாகக் கூறுவதென்றால், இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்வதினால் அவர்கள் உலகத்தின் இரட்சிப்புக்கு தேவனுடைய திட்டத்தின் இறுதி நிறைவேற்றத்தில் பங்கேற்றுள்ளனர்.

ஆகையால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் யுகத்திற்கே உரிய தனிச் சிறப்புள்ள பரலோக ஈவுகளைப் பெற்றுள்ளனர். அவர்கள், கிருபைக்குப் பதிலாக சட்டத்தையும், இரக்கத்திற்குப் பதிலாக நீதியையும் வலியுறுத்திய மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்வதில்லை. அவர்கள் பரம உலகையும் நமது பூமிக்குரிய உலகையும் உள்ளடக்குகின்ற தேவனுடைய விதியாய் உள்ள பரம எருசலேமில் பங்கேற்கின்றனர். அவர்கள் தேவனுக்குத் தங்கள் ஊழியம், துதி மற்றும் அன்பு ஆகியவற்றில், ஆராதனையிலும் ஊழியத்திலும் தேவனுடைய சித்தத்தை இடைவிடாமல் செய்கின்ற ஆயிரம் பதினாயிரமான, எண்ணிக்கைக்கு அடங்காத தூதர்களுடன் இணைகின்றனர். கிறிஸ்தவர்கள், உயர்வான தயவு பெற்றுள்ள முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையிடம் வந்து அவர்களில் ஒரு பாகமாக வாழ்கின்றனர். அவர்கள் இப்பொழுது நித்தியத்திலுள்ள பழைய ஏற்பாட்டுக் காலத்தின் நீதிமான்களுடைய ஆவிகளுடன் சேர்ந்துள்ளனர். அவர்கள் இயேசுவின் மூலமாக, தேவனிடத்தில் வந்து, மற்றும் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக கிருபையினால் தரப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையினிடத்தில் வந்துள்ளார்கள்.

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்படுதல் என்பது, நாம் பெற்றிருக்கும் மற்ற எந்த மதிப்பைக் காட்டிலும் நமக்கு அதிகம் மகிழ்வளிக்கக் காரணமாயிருக்க வேண்டும்.

ஆசீர்வாதங்கள் பற்றிய இந்த விபரப்பட்டியலில், "முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" என்ற குறிப்பானது நமக்கு விசேஷித்த ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "முதற்பேறானவர்" என்ற வார்த்தையானது மிக உயர்ந்த மதிப்பை உணர்த்துவதால் வழக்கத்திற்கு மாறான தனிச் சிறப்புடையதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடரானது ஆவல் கொள்ளும் பெருமதிப்புடன் கையாளப்பட்டது. இது *முன்னுரிமை*யின் மதிப்பை அர்த்தப்படுத்தக் கூடியது, ஏனெனில் ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளில் முதல் பிறந்தவர் இருமடங்கு மதிப்பை பெற்றார். இவ்வார்த்தையானது *தகுதி நிலை*யின் மதிப்பையும் சுட்டிக்காட்டியது, ஏனெனில் இது ஒருவரின் மேன்மை அல்லது பண்பின் காரணமாகக் கொடுக்கப்பட்ட தனிச் சிறப்பையும் குறிப்பிட முடிந்தது.

இவ்விரு காரணங்களுக்காகவும் இயேசு வேத வசனங்களில், முதற்பேறானவர் என்று குறிப்பிடப்படுகின்றார். முதலாவது, அவர் *முன்னுரிமை*

யில் முதற்பேறானவராக இருக்கின்றார், ஏனெனில் அவர் மரித்தோரிலிருந்து தம்முடைய உயிர்த்தெழுதலில் நமக்கு முந்தினவராக உள்ளார். பவுல், ''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்'' (கொலோ. 1:18) என்று எழுதினார். இரண்டாவது, அவர் தகுதி நிலையில் முதற்பேறானவராக உள்ளார். தேவன் எல்லா வற்றிற்கும் மேலான முதலிடத்தை அவருக்குக் கொடுத்ததன் மூலம் அவரை மேன்மைப்படுத்தியுள்ளார். மேலும் பவுல், "அவர் அதரிசனமான தேவனு டைய தற்சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" (கொலோ. 1:15) என்றும் எழுதினார் (இ.வ. எபி. 1:6). இவ்வசனத்தில் அவர் முன்னு ரிமையில் முதற்பேறானவர் என்று குறிப்பிடப்படுவதில்லை, ஏனென்றால் அவர் படைக்கப்பட்டவரல்ல, ஏனெனில் அவர் பிதாவாகிய தேவனைப் போலவே முடிவற்ற வாழ்வுடையவராக, நித்தியத்திலிருந்து நித்தியம் வரைக்கும் இருப்பவராக உள்ளார். இதற்கு மாறாக இவ்வசனமானது, இவரை, உலகத்தைப் படைத்த கர்த்தராக, மேன்மையான தகுதி நிலையில் முதற்பேறானவராகக் காண்பிக்கின்றது.

''முதல் பேறானவர்'' என்ற வார்த்தையானது இயேசுவுடன் தொடர்புடைய வகையிலான அதன் பயன்பாட்டைப் போலவே தனிச் சிறப்புக்குரிய கருத்தமைவில் சபைக்கு உருவகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. சபை என்பது, முதற்பேறான மகனுக்குரிய இரட்டை மதிப்புப் போன்று தேவன் ஈவுகளை அருளிச் செய்துள்ள "முதற் பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையாக'' உள்ளது. மீட்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சபை என்ற வகையில் கொண்டுள்ள உயர் தயவுள்ள நிலைப்பாட்டிலிருந்து அவர் பொழிந்தருளும் இந்தக் கிருபை உதயமாகின்றது; இது முன்னுரி மையின் அடிப்படையில் அமைந்தது அல்ல; இது நாம் மற்றவர்களை விட மேன்மையானவர்கள் என்பதால் கொடுக்கப்பட்டது அல்ல; மாறாக, இது தேவனுடைய நீதியாக்குதலின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.

விஸ்தரிக்கப்பட்ட சத்தியம்

மகிமையுள்ள இந்த சத்தியமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி "தோலுரித்துக் காட்டப்பட்டு" விவரிக்கப்படுகின்றது.

முன்னோடியாக இருப்பதைக் காட்டிலும் மகாபெரியவர்

யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் யுகத்தில் வாழ்ந்திருந்ததில்லை. இதன் விளைவாக, அவர் ஒருக்காலும் சபையில் இருந்ததில்லை. அவர் தேவனுடைய மாபெரும் மனிதர்களில் ஒருவராயிருந்தார், ஆனால் அவர், கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை ஒருக்காலும் பெற்றிருந்தது இல்லை. இந்தக் காரணத்தினால் யோவானைப் பற்றி இயேசு, "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக

ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக் கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத். 11:11) என்று உரைத்தார். வருகிறவராயிருந்த மேசியாவுக்கு வழியை ஆயத்தப் படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதைக் காட்டிலும் வேறு எந்தப் பெரிய பாராட்டை ஒருவர் பெற்றுக் கொள்ள முடியும்? கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருந்த யோவானின் காலடிகளில் இருந்த பயன்களைக் காட்டிலும் இராஜ்யத்தில் உள்ளதின் பலன்கள் பெரியவைகளாய் உள்ளன என்று இயேசு மறைமுகமாய்க் குறிப்பிட்டார். இராஜ்யத்தில் வைக்கப் படுவதன் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவரும், கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தும் பேற்றைப் பெற்ற யோவானைக் காட்டிலும் பெரிய மதிப்பைப் பெறுகின்றார்.

அற்புதங்கள் செய்வதைக் காட்டிலும் பெரியது

இயேசுவின் ஊழியத்தினுடைய முற்பகுதியில் விவரிப்பான அறிவுறுத் தல்களுடன் கூடிய வரையறைக்குட்பட்ட கட்டளை கொடுக்கப்பட்டவர் களாய் எழுபது சீஷர்கள் அனுப்பப்பட்டனர். இயேசு அவர்களை இருவர் இருவராக "முற்பட்ட குழுக்களாக" தாம் சென்று பிரசங்கிக்க மற்றும் போதிக்கவிருந்த இடங்களுக்கு தமக்கு முன்னதாக அனுப்பினார் (லூக். 10:1). அவர், அற்புதங்கள் செய்யவும் அசுத்த ஆவிகளைத் துரத்தவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார். அசுத்த ஆவி பிடித்திருந்தவர்களிடத்தில் இயேசுவின் நாமத்தினாலே அவர்கள் கட்டளையிட்ட பொழுது, அவைகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்த படியால் அவர்கள் திரும்பி வந்த பொழுது வெற்றி முழக்கத்துடனும், அக்களிப்புடனும் இருந்தனர்.

அற்புதங்கள் செய்வது என்பது எது போன்று இருக்கும் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. சாவுக்கேதுவான வியாதி யுள்ளவரிடம் சென்று அவரை அற்புதவிதமாய்க் குணப்படுத்துதல் என்பதை (கற்பனையில்) சித்தரித்துக் கொள்ளுங்கள். உங்கள் மூலமாக தெய்வீக வல்லமை வெளிவந்து, அப்படிப்பட்ட குணத்தையளிக்கும்படி உங்களுக் குத் திறன் அளித்திருந்தால் நீங்கள் எவ்வாறு அகம் மகிழுவீர்கள்! முதல் நூற்றாண்டின் முடிவில் - வேதாகமம் என்ற - தேவனுடைய முழுமையான வெளிப்படுத்துதலுடன் அற்புதங்களின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இன்றைய நாட்களில் அற்புதங்கள் செய்யவும் வல்லமை என்பது ஒருவருக்கு(ம்) இல்லாதிருப்பினும், அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையின் மீது அக்களிப்புடன் சீஷர்கள் திரும்பி வந்தது ஏன் என்று இன்னமும் நாம் சுலபமாய்க் காண முடியும்!

இந்த சீஷர்கள் தங்கள் அகமகிழ்வை இயேசு அறியச் செய்த பொழுது, அவர்களிடத்தில் அவர் குறிப்பிடத்தக்க கூற்று ஒன்றை உரைத்தார்: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள்

நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்'' (லூக். 10:19, 20). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்களிடத்தில் நமது கர்த்தர், அற்புதங்கள் செய்தல் என்பதைக் காட்டிலும் பெரியதான ஒன்றின் மீது அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று உரைத்தார். ஜீவ புத்தகத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருத்தல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை அருளப்பட்டிருப்பதைக் காட்டிலும் பெரியதாக இருந்தது!

இந்த சீஷர்கள், மோசேயின் நியாயப்பிரமாணம் இன்னமும் அமுலில் இருந்த பொழுது வாழ்ந்தார்கள் (எபி. 9:15-17). மோசேயின் யுகத்தில், ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருத்தல் என்பது, அற்புதங்கள் செய்யும் வல்லமையுடைவராய் இருத்தலைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையதாயிருந்தால், கடைசிக் காலமும், தேவனுடைய மீட்பின் திட்டத்தினுடைய நிறைவேற்றத்தின் காலமுமான கிறிஸ்துவின் யுகத்தில், ஒருவருடைய பெயரானது ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருத்தல் என்பது இன்னும் எவ்வளவு அதிகம் மதிப்புடையதாக இருக்க வேண்டும்! எபிரெயருக்கு (நிருபம்) எழுதியவருடைய கூற்றின்படி, கிறிஸ்துவின் யுகத்தில், சபையில் உள்ளவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை என்று, மிக உயர்ந்த தயவு பெற்றவர்கள் என்று குறிப்பிடப்படுவதில் வியப்பெதுவும் இல்லை!

பூமியின் மதிப்பு மிக்க எந்த மதிப்பைக் காட்டிலும் பெரியது

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்படுதல் என்பது, நாம் பெற்றிருக்கும் மற்ற எந்த மதிப்பைக் காட்டிலும் நமக்கு அதிகம் மகிழ்வளிக்கக் காரணமாயிருக்க வேண்டும். பிலிப்பி நகரில் இருந்த உடன் வேலையாட்களின் (ஊழியர்களின்) "(பெயர்கள்) நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது'' (பிலி. 4:3) என்று பவுல் அவர்களுக்குக் குறிப்பிட்டார். சர்தை சபையில், இந்த உலகத்தின் கேடுபாடுகளினால் தீட்டுப்படாதபடிக்குத் தன் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும், "ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல்'' (வெளி. 3:5) என்று இயேசு உரைத்தார். ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் அக்கினிக் கடலிலே எறியப்படுவான் என்று யோவான் கூறினார் (வெளி. 20:15).

ஏகாதிபத்திய நகரான ரோமாபுரியில் இருந்த நிர்வாகிகள், ரோமக் குடிமக்கள் அனைவருடைய பெயர்களும் அடங்கியிருந்த ஒரு பெயர்ப் பட்டியலை வைத்திருந்தனர். முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுக்குப் பவுல், ரோமக்குடியுரிமைப் பட்டியலைக் காட்டிலும் மிக மிக முக்கியமான பட்டியல் ஒன்று பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்று கூறினார். அந்தப் பதிவேட்டில் ஒருவருடைய பெயர் காணப்படும் பொழுது, அவர் எல்லாவற்றிலும் மிக உயர்ந்த மதிப்பைக் கொண்டுள்ளார். இது தேவனால் இரட்சிக்கப்பட்டவர்களின் (பெயர்கள் அடங்கிய) பட்டியலாக உள்ளது. இந்த மதிப்பு சபைக்குரியதாகும் என்று எபிரெயருக்கு (நிருபம்) எழுதியவர் கூறினார்!

பழைய ஏற்பாட்டின் மதிப்பைக் காட்டிலும் பெரியது

எபிரெயர் 11ம் அதிகாரமானது "தேவன்மேல் விசுவாசம் கொண்டதற்காகப் புகழ்ச்சி பெற்றவர்களின் அறை வீடு" என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், சாராள், யாக்கோபு, யோசேப்பு மற்றும் மோசே உட்படப் பதினேழு பேர்களின் (ஆண் மற்றும் பெண்) வாழ்வுச் சுருக்கம் இந்த மேன்மையான அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. உலகில் உள்ள அனைவரும் நினைவுகூரும்படியாகப் பழைய ஏற்பாட்டின் இந்த நபர்கள் யாவரும் இந்த விசேஷித்த பகுதியில் வைக்கப்படும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். திகைப்புக்குரிய வகையில் இதன் எழுத்தாளர், இந்தக் கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள் ஆகியோரைப் பற்றி, "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும்; வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபி. 11:39, 40) என்று கூறினார். "விசேஷித்த நன்மையானது" என்பது கர்த்தருடைய வருகையையும் சபையையும் குறிக்கின்றது. முதற்பேறானவர்களின் சபை என்ற வகையில் நாம், எபிரெயர் 11ல் காணப்படும் மக்கள் எதிர்பார்ப்புடன் நோக்கியிருக்க மட்டுமே முடிந்ததான ஒரு மதிப்பினால் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். அவர்கள் இதன் உண்மை நிலையைக் கண்டதில்லை; இதை அவர்கள் ஒரு வாக்குத்தத்தம் என்ற வகையில் மட்டுமே சுவைத்திருந்தார்கள்.

உலகத்திற்குரிய நிலைப்பாடு எதைக்காட்டிலும் பெரியது

சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள் ஒரு காலத்தில், அமெரிக்காவின் கிறிஸ்துவின் சபைகளிலேயே பெரியவைகளில் ஒன்றான நாஷ்வில்லில் உள்ள மேடிஸன் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அங்கிருக்கை யில், அவர்களுடைய கட்டிடம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருந்தது மற்றும் அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்று காண்பதற்காக அவர் அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்து நடந்து கொண்டிருந்தார். ஒரு அறையில் முதிர் வயதான ஒரு பெண், தபாலில் அனுப்புவதற்காகக் கடிதங்களை மடித்துக் கொண்டிருந்ததை அவர் கண்டார். "நீங்கள் யார்?" என்று அவர் கேட்டார். அப்பெண்மணி உடனடியாக, "நான் இந்த சபையில் முக்கியத் துவம் வாய்ந்த ஒருத்தி" என்று பதில் அளித்தார். அவர், "அப்படியா? அது எவ்வாறு உங்களுக்குத் தெரியும்?" என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி, "ஏனென்றால் சகோதரர் நார்த் அவர்கள் அவ்வாறு கூறினார்" என்றார்கள். அவர்களின் மாபெரும் ஊழியரான ஐரா நார்த் அவர்கள், அப்பெண்மணியின் ஊழியமானது, மற்ற எவரொருவரின் ஊழியத்தைப் போலவே முக்கியமானது என்றும், அப்பெண்மணியானவர், மூப்பர்கள், உதவிக்காரர்கள் மற்றும் பிரசங்கியார்கள் போலவே முக்கியமானவர் என்றும் சரியாகவே அப்பெண்மணியிடம் கூறியிருந்தார்!

தேவன், "நீங்கள் எனது சபைக்குள் வரும் பொழுது, உங்கள் மீது நான் முதற்பேறானவர்களின் சபை என்ற பெயரை அளித்து, மதித்து அவ்வாறே

உங்களை அழைக்கின்றேன். நான் யோவான் ஸ்நானனுக்குக் கொடுத்திருந்த தைக் காட்டிலும் தனிச் சிறப்புள்ள நிலைப்பாட்டையும் ஊழியத்தையும் உங்களுக்குத் தருகிறேன். நான் இந்த மதிப்பை சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லாருக்கும் பொழிகின்றேன். நீங்கள் என் சபையில் இருந்தால், இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றீர்கள்" என்று கூறுகின்றார்.

நடைமுறைப்படுத்தப்பட்ட சத்தியம்

புதிய ஏற்பாட்டின் சபையான முதற்பேறானவர்களின் சபையானது முதற்பேறானவர்களின் சபையாக உள்ளது என்ற சத்தியமானது சபையின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ஆழ்ந்த சிறப்புள்ள தனிப்பட்ட பதில்செயல் ஒன்றை வெளிக் கொண்டு வர வேண்டும், இது நம்மை கிறிஸ்துவிடம் அடையும்படியும் மனிதரிடம் செல்லும்படியும் ஏவ வேண்டும். இந்த சத்தியத்தைக் குறிப்பாக வாழ்வில் நடைமுறைப் படுத்துவது எவ்வாறு?

முதலாவது, நாம் நிறைந்து வழிந்தோடும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். தேவன் நம்மை இரட்சித்தது மட்டுமின்றி, மிக உயர்வான மதிப்புள்ள இடம் ஒன்றையும் நமக்குக் கொடுத்துள்ளார். அவர் நம்மை அவருடைய சபையாக ஆக்கியது மட்டுமின்றி, முதற்பேறானவர்களின் சபையாக, இரட்டிப்பான மதிப்புக்கொண்ட சபையாக ஆக்கியும் உள்ளார்! இந்த வெளிச்சத்தில், "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் ..." (1 தெச. 5:18) என்ற பவுலின் அறிவுத்துதலுக்குக் கீழ்ப்படிதல் என்பது நமக்குக் கடினமானதாய் இருக்கக் கூடாது.

இரண்டாவது, நாம் மற்றவர்களுக்கு தேவனுடைய கிருபையின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். அவருடைய கிருபையானது இயேசுவின் நபர்த்துவத்தில் நமக்கு வெளியாயிற்று (தீத்து 2:11); மற்றும் ஒரு சிறிய ஆனால் மிக முக்கியமான கருத்தமைவில், நாம் நம் மூலமாகவும் நம்மைச் சுற்றிலும் அவருடைய கிருபையைத் தோன்றச் செய்ய இயலும். தேவன் நம் மீது ஊற்றியுள்ள இந்த ஆச்சரியமான மதிப்பை அதைப்பற்றி அறியாதவர்களுக்கு இதைப் பகிர்ந்து கொள்ள நாம் விரும்புகின்றோம்.

மூன்றாவது, நம்மை அந்தகாரத்தின்னின்று அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் வரவழைத்த தேவனுடைய புண்ணியங்களைப் பற்றி நாம் வியப்புற வேண்டும்; ஏனெனில் முன்னே நாம் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, ஆனால் இப்பொழுது நாம் தேவனுடைய ஜனங்களாக இருக்கின்றோம் (1 பேது. 2:9, 10). தேவனுடைய கிருபைக்காக அவரைத் துதித்தல் என்பது சுவாசித்தல் போல நமக்கு இயல்பானதாயிருக்க வேண்டும்.

நான்காவது, நாம் தேவனுக்குச் சொந்தமான ஜனங்கள் என்ற வகையில் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட வேண்டும். நாம் அசை வில்லாத இராஜ்யத்தைப் பெற்றுள்ளபடியால், பயத்தோடும் நடுக்கத் தோடும் தேவனுக்கு ஊழியம் செய்வதன் மூலம் (எபி. 12:28) நன்றியுணர்

வைக் காண்பிக்க வேண்டும். நாம் நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவனுள்ள மற்றும் பரிசுத்தமான பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1).

முடிவுரை

எபிரெயருக்கு நிருபம் எழுதியவரின் கூற்றுப்படி, புதிய ஏற்பாட்டின் சபையானது முதற்பேறானவர்களின் சபையாக உள்ளது. இந்த உலகத்தின் வீண்பெருமையானது பயனற்ற சாம்பலாகவும் காய்ந்துபோன களைகளாகவும் ஆவதற்குக் காரணமாகும் நித்தியமான பரலோக மகிமையைத் தேவன் தமது சபைக்கு அருளியுள்ளார்.

நாம் தேவனுடைய கிருபையை இழந்து போகக் கூடாது என்பதற்கு எழுத்தாளர், ஏசாவின் உதாரணத்தைக் கொண்டு நம்மை எச்சரித்தார் (எபி. 12:15, 16). உண்மையற்ற தன்மையினால், விசுவாசமின்மையினால் நாம் பெற்றுள்ள நித்திய ஆசீர்வாதங்களை நாம் இழந்து போக முடியும் (1 பேது. 1:10-13). ஏசா என்பவன் நித்தியத்திற்காக இன்றி அந்தக் கணப் பொழுதுக்காக மட்டுமே வாழ்ந்திருந்த தீட்டுள்ள மனிதனாக இருந்தான்.

"தீட்டு" என்ற வார்த்தையானது தோற்றத்தில் உலகத்துடன் தொடர்பு படுத்தப்பட்டது. இது profanus என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது. ஒவ்வொரு கோவிலின் (இலத்தீன்: fanum) வெளிப்புறத்திலும் ஒவ்வொருவரும் அனுமதிக்கப்படும் பகுதி ஒன்று இருந்தது. இந்தப் பகுதிக்கு நேர்மாறான வகையில் கோவிலின் பகுதியானது மூடப்பட்ட தாயிருந்தது. இது பரிசுத்தமான பகுதியாகக் கருதப்படுகையில், மக்கள் யாவரும் கூடும் திறந்த வெளியிடமானது தீட்டான பகுதியாகக் கருதப்பட்டது. ஏசா தீட்டுள்ள மனிதனாக இருந்தான்; அவனுடைய வாழ்வில் அவன் பரிசுத்தமான உறைவிடத்தைக் கொண்டிருக்கவில்லை, அவன் பரிசுத்தமான, மாறுபடக் கூடாத ஆத்துமாவைக் கொண்டிருந்த தில்லை. அவன் தனது பிறப்புரிமையை விற்றுப் போட்ட தனது செயலில் தனது பண்பையும், தனது உள்ளான மதிப்பீடுகளையும் வெளிப்படுத் தினான். அவன் நித்தியம் பற்றிய கண்ணோட்டமின்றி, ஒரு பொருள் போல வாழ்ந்தான், அவன் சரீரப் பிரகாரமானவைகள் மட்டுமே தனது நோக்கம் மற்றும் அடைவிடமாக உள்ளன என்ற வகையிலேயே வாழ்ந்தான். பிற்பாடு, ஏசா தனது ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பிய பொழுது, அது அவனுக்கு மிகவும் தாமதமாகியிருந்தது. அவன் விலைமதிப்பற்ற தனது தகுதிகளை விட்டுக் கொடுத்திருந்தான், மனந்திரும்புதலுக்கான நாளும் கடந்து விட்டிருந்தது.

ஏசாவின் வீணான மற்றும் தீட்டான வாழ்வு உங்களை, சபையார் என்ற வகையில் கிடைக்கும் நித்திய மதிப்பின் மீது கவனம் செலுத்தும் தேவை குறித்து எச்சரிக்கை செய்யட்டும். ஜீவனுள்ள தேவனுடைய சொந்த உடமையான முதற்பேறானவர்களின் சபையாராக இருப்பதிலிருந்து ஏதொன்றும் உங்களை விலக்கி விடாதிருக்கட்டும். இதற்கு முன்பு நீங்கள் ஒருபோதும் மதிப்பளிக்கப்படாத வகையில் தேவன் உங்களுக்கு மதிப்பளிக்கக் காத்திருக்கிறார். மனிதர்கள் உங்களை அழிந்துபோகும்

கிரீடங்களால் மட்டுமே கனப்படுத்த முடியும், ஆனால் தேவன் இப்பொழுது உங்களுக்கு உண்மையான வாழ்வையும் பிற்பாடு நித்திய ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க முடியும்.

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. கனம் என்றால் என்ன?
2. வேதாகமத்திலுள்ள ஏதாவது ஒரு நபரைப் போல வாழ நீங்கள் தேர்ந்து கொள்ள முடியுமென்றால், நீங்கள் யாரைத் தேர்ந்து கொள்வீர்கள்? ஏன் என்பதற்கு உங்கள் காரணத்தைக் கொடுக்கவும்.
3. எபிரெயர் 12:24ல் உள்ள ''வந்து சேர்ந்தீர்கள்'' என்ற வார்த்தைகள் எதைக் குறிப்பிடுகின்றன?
4. எபிரெய நிருபம் எழுதப்பட்ட கிறிஸ்தவர்களின் சூழ்நிலைகளை விவரிக்கவும்.
5. உண்மை நிறைந்த இஸ்ரவேலர்கள் பெற்றிராததும், கிறிஸ்தவர்கள் பெற்றுள்ளதுமான ஆசீர்வாதங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும்.
6. "முதற்பேறானவர்" என்ற சொற்றொடர் வேத வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகளை விவரிக்கவும்.
7. ''முதற்பேறானவர்'' என்பது இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது?
8. "முதற்பேறான" என்பது சபையைக் குறிக்க எவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளது?
9. சபையில் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள மாபெரும் கனத்தை ஒளியூட்டும் விவரிப்புகளைத் தரவும்.
10. பரலோகத்தில் ஒருவருடைய பெயர் எழுதப்பட்டிருத்தல் என்பதன் அர்த்தத்தை விளக்கவும்.
11. எபிரெயர் 11:39, 40ல் "விசேஷித்த நன்மையானது" என்பதை விளக்கப்படுத்தவும்.
12. கிறிஸ்துவுக்குள் நம் மீது பொழியப்பட்டுள்ள கனத்திற்கு நாம் எவ்விதத்தில் பதில் செய்ய வேண்டும்?

13

“பரிசுத்தவான்களுடைய சபைகள்”

“தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லா வற்றிலேயும் அப்படியே இருக்கிறது” (1 கொரி. 14:33).

சில வேளைகளில் நாம் ஒரு பொருளை அல்லது செயலை, தவறாகப் பெயரிட்டுவிடுகிறோம், மற்றும் அத்தவறானது ஏதோ சில காரணங் களினால் ஒருக்காலும் திருத்தப்படாமல் போகின்றது. நிலைத்த பயன் பாட்டின் மூலமாக, அந்தத் தவறானது ஒரு மொழி வழக்கமாகிவிடுகின்றது, மற்றும் நாம் ஒரு உண்மை நிலை அல்லது சிந்தனைக்கு மிகச் சரியற்ற சொல் விளக்கத்தைப் பயன்படுத்துவதில் அடைபட்டவர்களாகி விடுகின்றோம்.

எடுத்துக்காட்டாக, கார் விபத்து ஒன்றில் ஒரு மனிதர் அகப்பட்டுக் கொண்டார். அவர் காயம் அடையவில்லை, ஆனால் அவருடைய காரானது மிக மோசமாகச் சேதமடைந்து, அவ்விடத்திலிருந்து ஓட்டிச் செல்ல முடியாதபடியாகி விடுகின்றது. அவ்வழியே சென்றவர் ஒருவர் இத்துன்பத்தில் உதவுவதற்கு முயற்சி செய்யும் வகையில், விபத்தில் அகப்பட்டவரிடம், “நான் உங்களுக்காக ஒரு (wrecker) பழுதடைந்ததை இழுத்துச் செல்லும் வண்டியை அழைக்க நீங்கள் விரும்புவீர்களா?” என்று கேட்டார். வெறுப்பான அந்த மனிதர், “எனக்கு wrecker தேவையில்லை. Wreck ஏற்கனவே நடந்து விட்டது. எனது சேதமுற்ற காரை இங்கிருந்து வெளியே எடுப்பதற்கு எனக்கு இழுவை வண்டியொன்றுதான் இப்பொழுது தேவை!” என்று கூறினார். அவர் சரியாகவே கூறினார் அல்லவா? சேதங்களை நீக்கப் பயன்படுத்தும் வண்டியை நாம் “wrecker” என்று அழைக்கின்றோம்; ஆனால் அதே வண்டியானது நம்மை நோக்கி சாலையில் வரும் பொழுது, அந்தப் பெயரானது தவறான சொல் வழக்காய் உள்ளதாக நாம் நம்புகின்றோம்.

மொழியின் வளர்ச்சியில், ஒரு நல்ல வார்த்தையானது உண்மையில் அது கொண்டிராத அர்த்தத்தைக் கொண்டு பயன்படுத்தப்படுவது என்பது அடிக்கடி நடைபெறுகின்றது. இந்தக் கருதுகோளானது நமக்கு, மொழியை அறிந்திருத்தல் என்பது மட்டுமே செய்தித் தொடர்பை உத்தரவாதப்படுத்து வதில்லை என்பதை நினைவூட்டுகின்றது. சிந்தனைகளின் உண்மைப்

பரிமாற்றத்திற்கு முயற்சி தேவைப்படுகின்றது. குழப்பத்திற்குள்ள வலிவான வழியின் காரணத்தினால், பொருள்களைத் தவறாகக் குறிப்பிடுதல் மற்றும் வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்ற ''மொழி விபத்துக்கள்'' அல்லது ''பேச்சுச் சறுக்கல்கள்'' ஆகியவை குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், மற்றும் நாம், இந்த மொழியியல் பிறழ்வுகள் என்பவை ஒரு முக்கியமான பாடக்கருத்து அல்லது ஆய்வுப் பொருளை நாம் தவறாகப் புரிந்து கொள்ள வழிநடத்தாதவாறு நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும்.

குழப்பமூட்டும் வார்த்தைகள் பற்றிய இந்தச் சிந்தனைகளுடன் நாம் நமது மனதில், ''பரிசுத்தவான்'' என்ற வார்த்தையின்மீது கவனம் செலுத்துவோம். இது, 1 கொரிந்தியர் 14:33ல் கிறிஸ்துவின் சபைகள் பற்றிப் பவுல் எழுதிய பொதுக் குறிப்பில், பன்மை வடிவத்தில் காணப்படுகின்றது: ''தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது." "பரிசுத்தவான்களுடைய சபைகள்" என்ற சிறப்புப் பெயரானது ஆர்வத்திற்குரியதாகவும் மற்றும் தகவல் தருவதாகவும், ஒளியூட்டுவதாகவும் மற்றும் மறைவான கருத்துடையதாகவும், சபையில் உள்ள மக்கள் யார் என்று அடையாளப்படுத்த இன்னொரு குறிப்பை நமக்குத் தருவதாகவும் உள்ளது. இந்த வசனத்தின்படி, "பரிசுத்தவான்" என்ற சொற்றொடரின் வேதாகம ரீதியான அர்த்தத்தின் கருத்தை ஒருவர் புரிந்து ஏற்றுக் கொள்ளாத வரையில், சபையின் கருத்து பற்றி அவர் முழுமையான புரிந்து கொள்ளுதலை அடைய முடியாது.

சொற்றொடர் அடையாளப்படுத்தப்படுகின்றது

''பரிசுத்தவான்'' என்ற சொற்றொடரானது தேவபக்தியில் நன்கு அறியப்பட்டுள்ள ஒரு மனிதரைக் குறிப்பிட தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலர், "அந்த மனிதர் உண்மையிலேயே ஒரு பரிசுத்தவான்!'' என்று கூறுகின்றனர். இது, சுட்டிக்காட்டப்படும் அந்த மனிதர், பரிசுத்தவான் என்று அழைக்கப்படுவதை அவரே ஈட்டியுள்ளார் என்பது போன்று உள்ளது.

இந்தச் சொற்றொடரானது மேன்மையான விசுவாசம் நிறைந்த ஊழியத்தில் மரித்துள்ளவர்களுக்கு மட்டும் கூடப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வார்த்தையை அவ்வகையில் பயன்படுத்துகின்றவர்கள், எவரொருவரும் மரித்து, அலுவலக முறைப்படி பரிசுத்தவான் என்று ஏற்றுக் கொள்ளப்படும் வரையிலும் அவருக்கு இச்சொற்றொடரைப் பயன் படுத்துவதில்லை. "பரிசுத்தவான்'' என்ற வார்த்தைக்கான இவ்விரண்டு விளக்கங்கள் அல்லது பயன்பாடுகள் வேதாகம ரீதியான, வசனத்தின் ஏவுதல் பெற்ற பயன்பாட்டை ஏற்றுக் கொண்டிருப்பவை அல்ல.

இந்த வார்த்தையானது, ''கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களை'' (யாவரையும்) எளிமையில் அர்த்தப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் சீராகப் பயன்படுத்தப்படுகின்றது. பவுல் பிலிப்பியருக்கு

எழுதிய நிருபத்தில் இந்தப் பயன்பாட்டின் உதாரணம் ஒன்று காணப்படுகின்றது. கடிதத்தின் முன்னுரை அல்லது முகப்பில் அவர், "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது" (பிலி. 1:1) என்று எழுதினார். இந்த நிருபத்தை முடிக்கையில் அவர், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். பரிசுத்தவான்கள் அனைவரும், ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (பிலி. 4:21, 22) என்று கூறினார். பவுல் தாம் இதை எழுதிய பொழுது இருந்த பகுதியின் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வரையும் பரிசுத்தவானாகவே மதித்தார், மற்றும் அவர் எந்த நகருக்கு எழுதினாரோ, அங்கிருந்த ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பரிசுத்தவான் என்ற வகையிலேயே அவர் கண்ணோக்கினார்.

"பரிசுத்தவான்" என்ற வார்த்தைக்குள்ளாகவே, ஒருவர் "பரிசுத்த பயன்பாட்டிற்கென்று பிரித்து வைக்கப்படுதல்" அல்லது "தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுதல்" என்ற கருத்து மறைந்துள்ளது. கிறிஸ்தவர் என்பவர் தம் மனமாற்றத்தின்போது நிலைப்பாட்டில், கொள்கையில் ஒரு பரிசுத்தவானாகின்றார். சுவிசேஷத்தின் மூலம் அவர் தெய்வீக ஊழியத்திற் கென்று பிரித்து வைக்கப்படுகின்றார். மனமாற்றத்திற்கு முன்பு அவர், பிசாசுக்கும் உலகத்துக்கும் உரியவராக, மாம்சத்தின் இச்சையினால் ஆட்கொள்ளப்பட்டவராக இருந்தார்: ஆனால் மனமாற்றத்தில் அவர் தேவனுடைய உடமையாக அல்லது நபராக ஆகின்றார் (1 பேது. 2:9).

இந்த விதத்தில், எல்லாக் கிறிஸ்தவர்களும் புதிய ஏற்பாட்டில் பரிசுத்தவான்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். சவுல் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு நமது கர்த்தர் அனனியாவைச் சவுலிடம் செல்லும்படி அறிவுறுத்தினார். அந்தக் கட்டளைக்கு அனனியா பதில் உரை கொடுத்த வகையில் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களை இந்தச் சிறப்புப் பெயரினால் அழைத்தார்: "ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்" (அப். 9:13). பேதுருவின் சுவிசேஷப் பயணங்கள் பற்றிய அறிக்கையில் லூக்கா, லித்தாவில் இருந்த கிறிஸ்துவின் பின்பற்றாளர்களைப் பற்றி "பரிசுத்தவான்கள்" என்று பெயரிட்டு அழைத்தார்: "... அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்" (அப். 9:32). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் செயல்களைக் குறித்து எழுதினார், இதன் தொடர்பாக அவர் தேவனுடைய பிள்ளைகள் யாவரையும் பரிசுத்தவான்களாக விவரித்தார்: "ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்"

(ரோமர் 8:27). பரிசுத்தவான்கள் அதாவது, தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்காகவும் பரிசுத்த ஆவியானவர் வேண்டுதல் செய்கிறார் என்று அவர் கூறினார். இந்த வசனப்பகுதிகள், ''பரிசுத்தவான்'' என்பது "கிறிஸ்தவர்" அல்லது "கிறிஸ்துவுக்குள்ளானவர்களை" விவரிக்கும் வேறு எந்த விளக்கத்திற்கும் இணையான புதிய ஏற்பாட்டுச் சொற்றொடராக உள்ளது என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

"பரிசுத்தவான்" என்ற வார்த்தையானது "பரிசுத்தமான ஒருவர்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும், மற்றும் "பரிசுத்தமாக்க," "பரிசுத்தமாக்கப் பட்ட," "பரிசுத்தமாக்கப்படுதல்" என்பது போன்ற இதன் தரவழைப்புகள் ''பரிசுத்தவானாக்கப்படுதல்'' அல்லது ''பரிசுத்தமாக்கப்படுதல்'' என்று அர்த்தப்படுகின்றன. பவுல், "கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிற தினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்'' (2 தெச. 2:13, 14) என்று எழுதினார். விசுவாசிப்பவர், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவுக்குள் வருகின்றபொழுது, அவர் அல்லது அவள் ஆவியானவரால் சத்தியத்தின் மூலமாகப் பரிசுத்தமாக்கப் படுகின்றார் (யோவா. 17:17; 1 பேது. 1:1, 2).

1 கொரி. 14:33ல் உள்ள "பரிசுத்தவான்களின் சபை" என்ற சொற்றொடரின் சந்தர்ப்பப் பொருள் அமைப்பானது, ''பரிசுத்தவான்கள்'' என்ற வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதையும் தெளிவாக்குகின்றது. இச்சொற்றொடரானது, சபை கூடி ஆராதிக்கையில் பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் பயன்பாடு குறித்து, பவுல் கொரிந்தியருக்குக்கொடுத்த விவரமான அறிவுறுத்தல்களின் முடிவில் வருகின்றது. நமது வேதாகமங்கள் அதிகாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள வழிமுறையின்படி, அற்புத வரங்கள் பற்றிய அவரின் கலந்துரையாடலானது அதிகாரம் 12ல் தொடங்கி, அதிகாரம் 14ல் முடிவடைகின்றது. இது 1 கொரிந்தியரில் உள்ள அவருடைய மிகவும் நீளமான தலைப்பு விளக்கங்களில் ஒன்றாக உள்ளது. இந்தப் போதனைகள், முதல் நூற்றாண்டில் இருந்த சபைகளில் ஒழுங்குகள், அமைதி நிறைந்த ஆராதனை ஊழியங்கள் இருக்கும்படியாக அறிவுறுத்துவதற்கென்று விசேஷமாய்க் கொடுக்கப்பட்டன.[1] அவர்களுடைய சபை கூடிவருதல்கள் என்பவைகள் ஒழுங்கமைவின்மை மற்றும் குழப்பம் ஆகியவற்றினால் நிறைந்திருந்ததால்[2] தகுதியான ஆவிக்குரிய ஒழுங்கு முறைமை பற்றிய புத்திமதியைக் கொண்டு இந்தக் குழப்பமான சூழ்நிலையைத் திருத்தும்படியாகப் பவுல் நாடினார். அவருடைய வேண்டுகோளானது இதற்கு மிக பரவலான அமைவைக் கொண்டிருந்தது. பவுல் சாராம்சமாக, "தேவனுடைய சபைகள் எல்லாவற்றிலும் அவருடைய செல்வாக்கு செலுத்துதலானது சமாதானத்திற்குரியதாயிருக்குமேயன்றி குழப்பத்திற்குரியதாய் இராது" என்றே கூறினார்.

அவருடைய புத்தி கூறுதலானது "பரிசுத்தவான்களுடைய சபைகள்" அல்லது "தேவனால் பிரித்து எடுத்து வைக்கப்பட்ட மக்கள்" என்ற வகையில் தேவனுடைய சபைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகின்றது.

1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்கள் (1 கொரி. 1:2; 2 கொரி. 1:1), பிலேமோன் (வ. 5), எபேசியர் (1:1), பிலிப்பியர் (1:1) மற்றும் கொலோசெயர் (1:2) ஆகியவற்றின் தொடக்க வாழ்த்துக்களில் "பரிசுத்தவான்கள்" என்ற வார்த்தையும் "சபை" என்ற வார்த்தையும் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் பல்வேறு பிரச்சனைகள் மற்றும் தவறான போக்குகளினால் பாதிக்கப்பட்டிருந்தனர், இதைப் பவுல் இந்த நிருபங்களில் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்; இருந்த போதிலும் பவுல் அவர்களைப் பரிசுத்தவான்கள் என்றே அழைத்தார். அவருடைய தொடக்க வார்த்தைகள், அவர்களுக்குக் கிறிஸ்துவுக்குள் அவர்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலித்தன, "கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது" (1 கொரி. 1:2). எனவே, கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எவரொருவரும் பரிசுத்தவானாகவே இருக்கின்றார், மற்றும் உண்மையான கிறிஸ்துவின் சபை எதுவும், பரிசுத்தவான்களின் ஒரு குழுவாகவே உள்ளது என்ற கருத்து தொடருகின்றது.

சொற்றொடர் விவரிக்கப்படுகின்றது

"பரிசுத்தவான்" என்ற வார்த்தையில் பொதியப்பட்டுள்ள கருத்தானது, "ஜீவனுள்ள" உறுதிப்பாடு கொண்டுள்ளதாக அழைக்கப்படும் மக்கள் மீது வைக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது நமக்குக் கடமைப்பாட்டை உணர்த்துவது எப்படி என்பதைப் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் இரு சித்திரிப்புகள் நமக்குக் காண்பிக்கின்றன.

தேவனும் இஸ்ரவேல் இனமும்

இந்த வார்த்தையின் பின்னால், இஸ்ரவேல் இனத்துடன் தேவனுடைய உறவானது சிறப்பாய்க் காணப்படும் பழைய ஏற்பாட்டுக் கருத்து ஒன்று உள்ளது. தேவன் தமது மீட்பின் நோக்கத்தைச் செயல்படுத்த மக்களினம் ஒன்றைத் தமது சொந்த இனமாகத் தேர்ந்துகொண்ட விஷயம்தான் பழைய ஏற்பாட்டின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளது. அவர் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டு, அவரைத் திரளான கூட்டத்திற்குத் தகப்பனாக்குவதாக வாக்களித்தார் (ஆதி. 15:5). அவருடைய அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமானது ஈசாக்கு மற்றும் அவரது மகன் யாக்கோபு ஆகியோருக்கு விரித்துரைக்கப்பட்டது. யாக்கோபும் அவரது குடும்பமும் எழுபத்தி ஐந்து[3] பேர் கொண்ட ஒரு போதிய அளவிலான இனக்குழுவான போது, அவர்கள் எகிப்திற்குக் குடியேறினார்கள், அங்கு

அவர்கள் கடைசியில், கொடுங்கோலனான பார்வோன் ஒருவனால் அடிமைப்படுத்தப்பட்டார்கள். அடிமைத்தனத்தில் பல நூறு ஆண்டுகள் கடந்த பின்பு, யாத்திராகமம் புத்தகத்தின் துவக்க அதிகாரங்களில் பதிவு செய்துள்ளபடி, தொடக்கத்தில் இருந்த எழுபத்தி ஐந்து இஸ்ரவேலர்கள், எண்ணிக்கையில் 25 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு இனமாக வளர்ந்திருந்தார்கள். அடிமைத்தனத்தின் காலத்தில் அவர்கள் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்தார்கள் என்பது கல்வியாளர்களால் இன்னமும் திகைப்புக்குரியதாக அறியப்படும் நிகழ்வாக இருக்கையில், ஆபிரகாமின் இந்தச் சந்ததியார் எண்ணிக்கை யிலான வளர்ச்சியில் தேவனால் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவன் அவர்களை மோசேயின் மூலமாக உபத்திரவத்தின் அக்கினியி லிருந்து, தேவனுடைய பர்வதமாகிய சீனாய் மலைக்குக் கொண்டு வந்து, அங்கே தேவன் அவர்களிடத்தில், “இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்” (யாத். 19:5, 6) என்று கூறினார்.

இஸ்ரவேலர் எப்பொழுதுமே தேவனுடைய பரிசுத்த இனமாக வாழ்ந்திருந்ததில்லை என்பது நிச்சயமானது; இருப்பினும், நிலைப்பாட்டில் அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக ‘‘பிரித்து வைக்கப்பட்ட” மக்களாகவே இருந்தார்கள். அவர்கள் நடைமுறையில் தேவனுடைய மக்களாய் இருக்கத் தவறிய பொழுது தேவன் அவர் களுடைய பாவத்தையும் கலகத்தையும் மன்னிக்கவில்லை. அவர் ஒருக் காலும் இதைச் செய்கிறவரல்ல. அவர் தம்முடைய பிள்ளைகளிடத்திலோ அல்லது வேறு எவரிடத்திலுமோ உள்ள பாவத்தைக் கண்டும் காணாமல் இருந்து விடுவதில்லை. அவனோ அல்லது அவளோ தேவனுடைய உடன் படிக்கைக்கு உள்ளேயோ அல்லது அதற்கு வெளியேயோ இருந்தாலும் ஒவ்வொரு நபரும் தனது வாழ்வைக் குறித்துத் தேவனிடத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும் (2 கொரி. 5:10). இருந்த போதிலும், இஸ்ரவேலர்கள் தேவனுடைய மக்களாக இருக்கும்படியாகப் பூமியில் உள்ள மற்ற மக்களினங்கள் எல்லாவற்றிலும் இருந்து தெய்வீகமாக அழைக்கப்பட்டார்கள். ஒரு கருத்தில் அவர்கள் பரிசுத்தவான்களாக, ஒரு பரிசுத்த இனமாக இருந்தார்கள்.

தேவனும், லேவிய ஆசாரியத்துவமும்

“பரிசுத்தவான்” அல்லது “பரிசுத்தம்” என்ற சொல்லினால் தெரிவிக்கப் படும் சிந்தனையை, மோசேயின் யுகத்தின் ஆசாரியத்துவத்திலும் காண முடியும். பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவத்தின் அமைப்பானது மூன்று கால வேளைகளில் வந்ததாக இருந்தது. இவற்றில் முதலாவது நிலையானது *மீட்பு நிலை* என்று அழைக்கப்படலாம். எகிப்தில் இருந்து இஸ்ரவேலர் புறப்பட்ட இரவு வேளையில் தேவனால் “கடந்து போகப்”பட்ட முதற் பேறானவர்கள் யாவரும் அவருக்கு விசேஷித்த ஊழியக்காரர்களாகப்

பரிசுத்தப்படுத்தப்பட்டனர் (யாத். 13:11-15; எண். 3:13). அவர்கள் தேவனுக்குப் பரிசுத்தமானவர்களாய் இருந்தார்கள்.

பதிலீட்டு நிலை என்பது இரண்டாம் வளர்ச்சி நிலையாக உள்ளது. முதற்பேறானவர்களுக்குப் பதிலீடாக இருக்கும்படியும், பொற்கன்றுக் குட்டியை மக்கள் ஆராதித்த பொழுது, உண்மை நிறைந்த ஆராதனைக்கு வெகுமதியாக இருக்கும்படியும் லேவி கோத்திரத்தில் இருந்தவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள் (யாத். 32:25-29). இந்தக் கோத்திரமானது தொடக்கத்தில், எகிப்திலிருந்து வெளிவந்த முதற்பேறானவர்களுக்குப் பதிலீடாக்கப்பட்டது; ஆனால் அதற்கு பின்வரும் காலத்தில் பிறக்கும் முதற்பேறான எல்லா ஆண் பிள்ளைகளும், அவர்களின் பெற்றோர்களால் ஆலயப் பொருள் வைப்பறைக்கு ஐந்து வெள்ளிச் சேக்கல்கள் கொடுக்கப் பட்டும், ஏற்புடைய பலி ஒன்று அளிக்கப்பட்டும், மீட்டுக் கொள்ளப்பட வேண்டியவர்களாய் இருந்தார்கள்.[4]

பிறகு தேர்வு நிலை என்பது வந்தது. லேவிகோத்திரத்தைச் சேர்ந்த அம்ராம் என்பவரின் வீட்டார் உண்மையில் ஆசாரியத்துவ குடும்பமாய் இருக்கும்படி தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள். ஆரோன் என்பவர் முதலாவது பிரதான ஆசாரியரானார், மற்றும் அவருடைய மகன்கள் ஆசாரியர்களானார்கள். ஆரோனின் மகன்கள் உடன்படிக்கையின் கூடாரத்தில் தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கப் பட்டார்கள். இந்தக் குடும்பத்திலிருந்து வராத எந்த ஒரு லேவியனும் முறைப்படியான ஆசாரியராய் இருக்க முடியாது இருந்தது. மற்ற லேவியர்கள் பிரதான ஆசாரியருக்கும் மற்ற ஆசாரியர்களுக்கும் உதவியாளர்களாகச் செயல்பட வேண்டியிருந்தது.

ஒரு பரிசுத்தவான் என்பவர் பாவமற்ற தன்மை என்ற கருத்தில் முழுமை நிறைந்தவராக இருப்பதில்லை, ஆனால் முழுமையாக மன்னிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தில் அவர் முழுமை நிறைந்தவராக உள்ளார்.

இஸ்ரவேலர்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் பாளையமிறங்கியிருந்த வேளையில் ஆரோனும் அவருடைய மகன்களும் - நாதாப், அபியூ, எலெயெசார் மற்றும் இத்தாமர் - ஆசாரியர்களாகக் கர்த்தரால் நியமிக்கப் பட்டார்கள் (யாத். 28:1). அவர்கள் தங்கள் வலது காதுகளிலும், பெருவிரல்களிலும், காலின் பெருவிரல்களிலும் மோசேயினால் இரத்தம் தடவப்பட்டு அது தேவனுடைய ஊழியத்திற்கு அவர்களின் முழுமையான உறுதிப்பாட்டை அடையாளப்படுத்த, அந்த இரத்தத்தின் மூலம் இந்த ஊழியப்பணிக்கென்று பரிசுத்தப்படுத்தப்பட்டனர் (லேவி. 8:23, 24). ஆரோனும் கூட பிரதான ஆசாரியன் என்ற தம் பரிசுத்த நிலைப்பாட்டைக் குறிப்பதற்கென்று "பரிசுத்த தைலத்தினா"லும் அபிஷேகம் செய்யப்பட்டார் (லேவி. 4:3, 5; 8:12).

இந்த வழி முறைகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் பழைய

ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்கென்று தனியே பிரித்து வைக்கப்பட்டனர். அவர்கள் ஆசாரியர்கள் என்று அழைக்கப் பட்டனர் மற்றும் தேவனுக்கு முன்பாக ஊழியம் செய்ய அவர்களுக்குத் தனிச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது (யாத். 29:44). அவர்கள் சிலாக்கியத்தின்/அனுகூலத்தின் உறவுமுறையில் இருந்தார்கள், ஆனால் அவர்கள் தங்கள் அழைப்புக்கு இசைவான வகையில் தேவனுக்கு முன்பாக நடப்பதில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதாய் இருந்தது. அந்நிய அக்கினியை உபயோகப்படுத்தினதால் நாதாபும் அபியூவும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, அவர்கள் தேவனுக்கு முன்பாகப் பரிசுத்த மாக்கப்பட்ட ஆசாரியர்களாக நின்ற போதிலும் கொல்லப்பட்டனர் (லேவி. 10:1, 2).

பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இஸ்ரவேல் இனத்தைப் போலவும் தெய்வீகமாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆசாரியர்களைப் போலவும், சபையானது கிறிஸ்துவின் யுகத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களைக் கொண்டுள்ளது (1 பேது. 2:9). சபையானது கர்த்தருக்குப் பரிசுத்தமானதாக உள்ளது, இது அவருக்கென்று “பிரித்து வைக்கப்பட்ட” மக்களால் ஆனதாக உள்ளது. சபையைப் பற்றிப் பேதுரு, “ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்” (1 பேது. 2:5) என்று கூறினார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் சபையார் என்பவர்கள் ‘‘பரிசுத்தமானவர்களாக’’ அல்லது பரிசுத்தவான்களின் சபையாக உள்ளனர்.

எல்லாக் காலத்திலும் மிகக் கொடுமையான தொடர் கொலைகாரனாக வரலாற்றில் கருதப்படுபவனாக இருக்கக் கூடிய ஜெஃப்ரீ தாமர் என்பவர், பரிசுத்தவான் பற்றிய தேவனுடைய கண்ணோட்டத்தின் சமீபத்திய விவரிப்பாக இருப்பார். மனிதர்களும் பையன்களுமாகப் பதினேழு பேரைக் கொன்றதற்காகக் குற்றம் சாட்டப்பட்ட அவருக்கு பரோலில் (தப்பிக்க முயல மாட்டேன் என்ற வாக்குறுதியின் பேரில் சற்று காலம் விடுதலை செய்யப்படுதல்) வெளிச் செல்ல அனுமதியின்றி, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது, இருப்பினும் நாம் அறிந்துள்ள வரையில், அவர் ஒரு பரிசுத்தவானாக ஆகியுள்ளார்.

உலக வேதாகமப் பள்ளியின் ஆசிரியர்களில் இருவரான கர்ட்டிஸ் பூத் மற்றும் மேரி மோட் ஆகியோர் தொலைக் காட்சி மற்றும் செய்தித் தாள்களின் மூலம் ஜெஃப்ரியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவருக்கு உலக வேதாகமப்பள்ளியின் அஞ்சல் வழி வேதாகமப் பாடங்களை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பாடங்களைக் கவனமாகப் படித்த ஜெஃப்ரீ பதில் எழுதியதோடு, தாம் ஞானஸ்நானம் பெற விரும்பியதையும் அவர்கள் இருவருக்கும் எழுதினார். ஒரு சில வாரங்களுக்குள், மே 10, 1994ல் ஜெஃப்ரீ அடைபட்டிருந்த சிறைக்குச் சென்று அங்கிருந்த தொட்டி ஒன்றில் அவரை ஞானஸ்நானப்படுத்துவதற்கு சகோதரர் ராய் ராட்கிளிஃப் செல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஜெஃப்ரீ தமது ஞானஸ்நானத்தைத்

தொடர்ந்து, ஒவ்வொரு வாரமும் ராயுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படித்து, கிறிஸ்துவுக்குள் வளர்ந்து, அவருக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பை விரும்பிக் கொண்டிருந்தார். நவம்பர் 28, 1994ல் அந்தச் சிறையில் இருந்த குளியலறை ஒன்றில் ஜெஃப்ரீ அடித்துக் கொல்லப்பட்டார். அவருடைய மரணத்தைச் சுற்றிலும் நடந்தவற்றைப் பற்றிய எல்லா விபரங்களையும் நாம் அறிவதில்லை, ஆனால் ஜெஃப்ரீ தனது மரணம் வரைக்கும் கிறிஸ்துவுக்கான தமது உறுதிப்பாட்டில் உண்மையாய் நிலைத்திருந்தார் என்று ராய் நம்பினார்.

சுவிசேஷம் என்பது - மிக மோசமான, மிக நல்ல மற்றும் இவற்றிற்கு இடைப்பட்ட நிலையில் உள்ள ஒவ்வொருவர் ஆகிய - எல்லாருக்கு மானதாக உள்ளது. ஜெஃப்ரீ தாமர், கிறிஸ்துவுக்கான தமது மனமாற்றத்தில் ஒரு பரிசுத்தவானாகி தமது மரணம் வரையில் ஒரு பரிசுத்தவானாக நிலை நின்றார். இவர், நம்மில் பெரும்பாலோரால், அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான குற்றவாளிகளில் ஒருவராக நினைவுகூரப்படுவார் என்றாலும், தேவனுடைய ஆச்சரியமான கிருபையினிமித்தம் அவர் தமது வாழ்வின் கடைசி ஆறு மாதங்களில் ஒரு பரிசுத்தவானாக வாழ்ந்திருந்தார்!

தேவன் நம்மை நமது பாவங்களில் *இரட்சிப்பதில்லை* ஆனால் நமது பாவங்களில் இருந்து *இரட்சிக்கின்றார்* - ஏனெனில் அவர் தமது இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நம்மிடம் விசுவாசத்தையும் கீழ்ப்படி தலையும் கேட்கின்றார். அவர் நமது தவறுகளைப் பரிசுத்தப்படுத்து வதில்லை, ஆனால் அவைகளிலிருந்து அவர் நம்மை இரட்சிக்கின்றார். விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை அறிக்கையிடுதல் மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் ஒருவர் கிறிஸ்துவிடம் வருகையில், அந்த நபரின் பாவத்திலிருந்து அவரை இயேசு சுத்திகரித்து அந்த நபரை அவர் (இயேசு) தம்முடைய ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கின்றார். பரிசுத்தவான் என்பவர் *தவறற்றவராக* இருக்க முடியாது, ஆனால் தேவனுடைய கிருபையினால் அவர் *குற்றம் சுமத்தப்படாதவராய்* இருக்க முடியும். பரிசுத்தவான் என்பவர் பாவமற்ற தன்மை என்ற கருத்தில் முழுமை நிறைந்தவராக இருப்பதில்லை, ஆனால் முழுமையாக மன்னிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தில் அவர் முழுமை நிறைந்தவராக உள்ளார்.

சொற்றொடர் செயல்படுத்தப்படுகின்றது

''*பரிசுத்தவான்களுடைய சபைகள்*'' என்ற சொற்றொடரானது மதிப்புயர்ந்த ஒரு பட்டப் பெயராக உள்ளது, மற்றும் இது, சபையாரால் இருதயத்தில் பதியச் செய்யப்பட வேண்டும். தேவன் தம்முடைய மக்களை "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கின்றார்! இந்த இயற்பெயரானது நம்மீது என்னவொரு செயல்தாக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்!

நாம் இதை *ஏற்றுக்கொள்ள* வேண்டும். தேவன் தமது சபைக்குத் தாம் கொண்டுள்ள நோக்கத்தை நமக்கு நினைவூட்டுவதற்காகத் தம்முடைய சபைக்கு இந்த அடையாளத்தைக் கொடுத்தார். நாம் அவருடைய தனிப்பட்ட மக்களாக, அவருடைய சொந்த உடமையாக இருக்க

வேண்டும் என்று அவர் சித்தம் கொண்டுள்ளார். தேவனுடைய ஆராதனை மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கென்று பிரித்து வைக்கப்பட்ட மக்களாக நம்மை நாம் கண்ணோக்க வேண்டும்.

நாம் இதைப் *பாராட்ட* வேண்டும். தேவனுடைய தேர்ந்து கொள்ளப் பட்ட மக்களாய் இருப்பதின் மதிப்பைப்பற்றி நினைத்துப் பாருங்கள். இதைக் காட்டிலும் அதிகமாக உணர்வூட்டக் கூடியது எது? இதைக் காட்டிலும் அதிகமாக நம்மை உற்சாகமூட்டக் கூடிய வேறு சொற்றொடர் எது? நாம் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகச் சுவிகரித்துக் கொள்ளப் பட்டுள்ளோம் (எபே. 1:5). அவர் தம் அன்பை நம் இருதயங்களுக்குள் பாயச் செய்து நம்மை அவரது சுதந்திரர்களாக்கியுள்ளார்!

நாம் இதை *நடைமுறைப்படுத்த* நாட வேண்டும். கிறிஸ்தவரின் நடைமுறையானது அவரது தகுதி நிலையுடனும், அவரது நடக்கையானது அவரது நம்பிக்கையுடனும் பொருத்தமுடையதாயிருக்க வேண்டும்!

“பரிசுத்தவான்” என்ற வார்த்தையானது நமக்கென்று அமைத்துள்ள தராதரத்தின்படியாக வாழ்வதற்கு நாம் மிகவும் அடிக்கடி தவறி விடுகின்றோம். நாம் நமது எஜமானருக்குச் சீஷர்களாக அல்லது மாணவர்களாக இருக்கின்றோம் (அப். 11:26), ஆனால் நாம் எப்பொழுதுமே சீஷர்களைப்போல் செயல்படுவதில்லை. சில வேளைகளில் கிறிஸ்துவை சேர்ந்தவர்கள் கூடி வருகையில் மெத்தனமாக இருந்து விடுகிறார்கள், அவர் போதிக்கையில் கேட்பதற்கு மந்தமாக இருந்து விடுகிறோம், மற்றும் ஒழுங்கில் குறைவுபட்டு விடுகிறோம் (எபி. 5:11). நமது நடக்கையை நாம் நமது உறுதிப்பாட்டிற்கு இயைந்த வகையில் கொண்டு வருவதற்கு, நமது வாழ்வை நமது அன்பிற்கு இயைந்த வகையில் கொண்டு வருவதற்கு நாம் மிகவும் அதிக ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.[5]

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு பரிசுத்தவானாகவே இருக்கின்றார், மற்றும் அவர், தாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராக நடக்கும் வகையில் வாழ்வதற்கு நாட வேண்டும் (எபே. 4:1). நாட்டுப்புறத்து நண்பர் ஒருவர் இதை விவரிக்கின்றபடி, “முதலில் இதை நீங்கள் நம்ப வேண்டும். பின்பு நீங்கள் இதன்படி நடந்து கொள்ள வேண்டும்.”

நாம் தேவனுடைய “மிக உண்மையான” மக்களாக - “பரிசுத்தமுள்ளவர் களாக” அல்லது “பரிசுத்தவான்களாக” - அவர் நமக்குக் கொடுத்துள்ள விவரிப்பின்படி இருக்குமாறு அவர் நமக்கு அறைகூவல் விடுக்கின்றார்! தேவன் நம் ஒவ்வொருவருடைய பெயரையும் “பாவி” என்பதிலிருந்து “பரிசுத்தவான்” என்று மாற்றியுள்ளார், நமக்குள் தமது பரிசுத்த நோக்கத்தை நிரப்புவதற்காகவே அவர் இவ்வாறு செய்துள்ளார்!

முடிவுரை

தேவன் தமது சபையை எவ்வாறு காண்கின்றார்? பவுலின் கூற்றுப்படி, அவர் நம்மை நிகழ்காலத்தில், இப்பொழுதே பரிசுத்தவான்களாகக் காண்கின்றார். அவர், “எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாளில் எனது பிள்ளைகளில் இரண்டொருவர் பரிசுத்தவான்களாகலாம்” என்று

கூறுவதில்லை. அவர், "எனது சபை என்ற வகையில் நீங்கள் யாவரும் என்னுடைய பரிசுத்தவான்களாய் இருக்கின்றீர்கள்!" என்றுதான் கூறுகின்றார்.

பழைய கதை ஒன்றின்படியாக, ஒரு நாள் சலவைக் கல் பாளம் ஒன்று மைக்கேல் ஆஞ்சலோவின் பணிக்கூடத்திற்குள் அவரது மேற்பார்வையின் கீழாகவே கொண்டு வரப்பட்டது. கூலியாட்கள் அந்தக் கனத்த சுமையை முரட்டுத்தனமாக, கவனமின்றிக் கையாண்ட பொழுது மைக்கேல் ஆஞ்சலோ, "அந்தப் பாளத்தைக் கையாளுவதில் எச்சரிக்கையாய் இருங்கள்! அதற்குள் ஒரு (தேவ) தூதன் இருக்கின்றான்!" என்று அவர்களிடம் சத்தம் போட்டார். அதிகமான உடல் உழைப்பின் பளுவான அந்நாளின் வேலையை முடிப்பதில் மட்டுமே சிந்தை கொண்டிருந்த வேலையாட்கள் அவரது கடிந்து கொள்ளுதலைக் காணாது விட்டார்கள். கூலியாட்கள் விரைவில் சென்று விட, அமைதியான பணிக் கூடத்தில் தலை சிறந்த அந்தச் சிற்பி, சலவைக் கல் பாளத்துடன் தனிமையில் இருந்தார். பல காலமாகத் தமக்குப் பாராட்டுப் பெற்றுத் தந்திருந்த தம்முடைய திறமை மற்றும் கலை நுணுக்கத்துடன் மைக்கேல் ஆஞ்சலோ அந்தக் கற்பாறையை செதுக்கத் தொடங்கினார். அளவிடுதல், செதுக்குதல், உருவாக்குதல்/உருப்படுத்துதல் மற்றும் மெருகேற்றுதல் ஆகியவற்றில் நாட்கள் பல கடந்து சென்ற பிறகு, கூட்டுப் புழுவிலிருந்து வண்ணத்துப் பூச்சி வெளியேறுவது போல, அக்கற்பாளத்திலிருந்து ஒரு (தேவ) தூதன் வெளிப்பட்டான். அச்சிலையானது எந்த வேளையிலும் பேசவோ அல்லது பறக்கவோ கூடும் என்று ஒருவர் எதிர்பார்க்குமளவுக்கு அது உயிருள்ளது போன்ற வடிவமைப்புடையதாக இருந்தது. அந்த சலவைக் கல்லினுள் மைக்கேல் ஆஞ்சலோ தரிசனத்தின் கண்ணுடன் தாம் மட்டுமே கண்டிருந்த ஒன்றினை வெளிக் கொண்டு வந்தார்! அவர் ஒரு பெரிய கல்லை தூதன் என்று அழைத்து, பிறகு வேலை செய்து ஒரு தூதனை அதிலிருந்து வெளிக் கொண்டு வந்தார்!

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு பாவியாகவே தேவனிடத்திற்கு வந்தார். பயிற்சியற்ற ஆவிக்குரிய கண்களுக்கு நாம் மனிதக் கற்களாக உதவியற்ற, நம்பிக்கையற்ற, நோக்கற்ற மற்றும் பயனற்ற வகையில் இருப்பதாகக் காணப்பட்டோம். உண்மையான தலைமைச் சிற்பி நம்மை எடுத்து தமது தனிப்பட்ட திட்டத்தின்படி நம்மை உருவாக்கினார். நாம் என்னவாக இருந்தோம் அல்லது எவ்வாறு இருந்திருந்தோம் என்பதை அவர் நோக்காமல், நாம் என்னவாக முடியும் என்பதையே நோக்கினார். அவர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் "பரிசுத்தமான ஒருவரை" கண்டார்.

அவருக்கு நாம் மனமாறிய வேளையில், அவர் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நமது பாவங்களைக் கழுவி, நம்மைப் பரிசுத்தவான்களென்று அழைக்கத் தொடங்கினார். பரிசுத்தவான் என்பவர் இந்த வாழ்க்கையில் பணி தீர்ந்த ஒரு உற்பத்திப் பொருளாகத் தோற்றமளிக்க மாட்டார்; ஆனால் தேவன் நம்மை ஒவ்வொரு நாளும் செதுக்குகையில், அவர் விரும்பும் வகையில் இருப்பதற்கு அண்மையில் தம்மை நெருக்கமாய் கொண்டு வருகின்றார். மிக முக்கியமான சத்தியம் இதுதான்: நாம் அவருடைய சித்தத்திற்கு இணங்கி அன்றாடம் அவருடைய தெய்வீக உளியின் செதுக்குதலுக்கு நம்மைக் கீழ்ப்படுத்துகின்றோம். நாம் இப்பொழுது பரிசுத்தவான்களாய்

இருக்கின்றோம், நாம் இன்னும் அதிகம் அதிகமாய்ப் பரிசுத்தப்படுத்தப் பட்டு, இன்னும் அதிகம் முழுமையாய் அவருடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்து வைக்கப்படுவோம், இது நாம் அவருடைய பிரசன்னத்தில் வாழ்கையிலும், அவருடைய சாயலுக்கொப்ப அதிகம் முழுமையாக வடிவமைக்கப்படும் செயல்பாட்டில் தொடருகையிலும் ஆகும்.

பரிசுத்தவான் என்ற வார்த்தையின் நிறைவுப் பகுதியானது இரு பாகமான வினாவாக உள்ளது: முதலாவது, நான் ஒரு பரிசுத்த வானாகியிருக்கின்றேனா? இரண்டாவது, நான் ஒரு பரிசுத்தவானாக இருந்தால், எனது பெயருக்கேற்றபடி நான் வாழ்கின்றேனா?

குறிப்புகள்

[1]இந்தத் தொடக்க கால சபைகள், தங்களை வழிநடத்தப் புதிய ஏற்பாட்டைக் கொண்டிருந்ததில்லை, ஏனெனில் அது முழுமையாக்கப்பட்டிருந்ததில்லை; இவ்விதமாக தேவன் அவர்களுக்கு ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுத்ததினால் அவர்களின் தேவைகளை நிறைவேற்றியிருந்தார். வேத வசனங்களின் இப்பகுதியில் (1 கொரி. 12:8-11; 12:28-30) வரங்களின் இரு அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் இந்த வரங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன (அப். 8:14-17). புதிய ஏற்பாடு நிறைவு செய்யப்பட்டு, கடைசி அப்போஸ்தலர் மரித்து, அப்போஸ்தலர் தங்கள் கைகளை வைத்து ஜெபித்திருந்தவர்களில் கடைசியான வரும் மரித்த பொழுது, அற்புத வரங்கள் ஒழிந்து போயின. இன்றைய நாட்களில் நமது வழிகாட்டியாகவும் நிலைப்பாட்டின் ஆதார மூலமாகவும் புதிய ஏற்பாட்டை மட்டுமே நாம் பெற்றுள்ளோம். [2]அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் கொண்டிருந்தார்கள், ஆனால் தங்களுக்குத் தரப்பட்டிருந்த வெளிப்படுத்துதல்களை அவர்கள் ஒழுங்கான முறையில் அறிவிக்க வேண்டியிருந்தது, அவர்கள் ஒரே வேளையில் இருவர் பேசாமலும், ஒருவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில் இன்னொருவர் தமது வெளிப்படுத்துதலைக் கொண்டு இடைமறித்துப் பேசாமலும் இருக்க வேண்டியதாயிற்று (1 கொரி. 14:27, 29). சபையில் ஏதாவதொரு வகையில் பெண்கள் பேசிக் கொண்டிருந்து அதன் மூலம் அவர்கள் இந்தக் குழப்பத்தை அதிகமாக்கியிருக்க வேண்டும் (1 கொரி. 14:34-36). [3]எழுபத்தி ஐந்து பேர் சென்றதாக ஸ்தேவான் கூறினார் (அப். 7:14). எழுபது பேர்கள் சென்றதாகப் பழைய ஏற்பாடு கூறுகின்றது (ஆதி. 46:27; யாத். 1:5). LXX *என்று அழைக்கப்படுகின்ற எபிரெயப் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில், ஆதி. 46:27ல் எழுபத்தி ஐந்து பேர் என்றுதான் உள்ளது. இதில், மனாசேயின் இரண்டு மகன்களின் பெயர்களையும், எப்பிராயீமின் இரண்டு மகன்களின் பெயர்களையும், மற்றும் எப்பிராயீமின் பேரன் ஒருவனுடைய பெயரையும் கூட்டியதால் எழுபத்தி ஐந்து பேர்கள் ஆக்கப்பட்டுள்ளது. ஸ்தேவான் அநேகமாக* LXX *(செப்துவஜிந்த் அல்லது எழுபதின்மரின் மொழிபெயர்ப்பு) புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டியிருக்க வேண்டும். [4]இஸ்ரவேலர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்படுகையில் லேவியர்களின் கணக்கெடுப்பு நடைபெற்றது (எண். 3:11-51). லேவியர்களின் எண்ணிக்கை 22,000 என்றிருந்தது. எகிப்திலிருந்து வெளியேறிய தலைப்பேறான வர்கள் மொத்தம் 22,273 பேர் இருந்தனர். இவையிரண்டிற்கு மிடையே உள்ள வேறுபாடு 273 ஆகும். முதற்பேறானவர்களின் ஒவ்வொரு நபருக்கும் பதிலாக இந்த*

22,000 பேர் தேவனுடைய ஊழியத்திற்கென்று வைக்கப்பட்டனர்; எஞ்சியிருந்த 273 பேர் தலைக்கு ஐந்து சேக்கல் வீதம் கொடுத்து மீட்கப்பட்டனர். இந்த மொத்தத் தொகையான 1,365 சேக்கல்கள் ஆரோனுக்கும் அவருடைய குமாரர்களுக்கும் கையளிக்கப்பட்டது. [5]கிறிஸ்துவுக்கு உண்மையற்ற வராய் ஆகின்ற பரிசுத்தவான் நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதில்லை (1 கொரி. 9:27) ஆனால் அவர் இன்னமும் தேவனுடைய குடும்பத்தில் தவறு செய்கின்ற ஒரு உறுப்பினராய் இருப்பார். ஒருவர் கிறிஸ்துவினின்று விழுந்துபோய், தாம் அறிந்தவற்றிலேயே மிகவும் மோசமான நிலைக்குத் திரும்பக் கூடும் என்று பேதுரு சுட்டிக்காண்பித்தார் (2 பேது. 2:20-22).

படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. செய்தித் தொடர்பு என்பது உண்மையில் எவ்வளவு கடினமானதாக உள்ளது என்பதற்கு விவரிப்பு ஒன்றைக் கொடுக்கவும்.
2. புதிய ஏற்பாட்டில் "பரிசுத்தவான்" என்ற வார்த்தை எவ்வளவு சீராகப் பயன்படுத்தப்படுகின்றது?
3. முதல் நூற்றாண்டில் அற்புத வரங்களின் பயன்பாட்டைப் பற்றி விளக்கவும்.
4. பரிசுத்த ஆவியானவர் வழங்கிய அற்புத வரங்கள் எத்தனை?
5. தகுதி நிலையில் பரிசுத்தவானாக இருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?
6. ஒருவரிடம் பரிசுத்தவானுக்குரிய நடக்கையில்லையென்றால் அவர் இன்னும் பரிசுத்தவானாக இருக்கின்றாரா?
7. "பரிசுத்தவான்கள்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் "சபையார்" என்ற வார்த்தைக்குப் பதிலாகப் பயன்படுத்தப் படுகின்றதா? அப்படியானால் எங்கு?
8. பழைய ஏற்பாட்டு எழுத்தாளர் "பரிசுத்தம்" என்ற வார்த்தையை இஸ்ரவேலரைக் குறிப்பதற்கு எங்காவது பயன்படுத்தியுள்ளார்களா? அப்படியானால் எவ்வாறு?
9. ஆசாரியத்துவத்தின் உருவாக்கத்தினுடைய பல்வேறு படிகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.
10. 1 பேதுரு 2:9ஐ "பரிசுத்தவான்கள்" என்ற கருத்துடன் தொடர்பு படுத்தவும்.
11. இந்தச் சொற்றொடருக்கு நாம் செய்ய வேண்டிய பதில்செயல் என்ன?
12. நமது பெயருக்கேற்றபடியாக நாம் எவ்வாறு வாழ வேண்டும்?

பின்னுரை

எல்லா விஷயங்களின் தொகுப்புரை

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக் குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்" (எபே. 1:9, 10).

"ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத் தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2:9, 10).

ஒவ்வொரு பிரசங்கியாரும் அல்லது கூட்டத்தின் பேச்சாளரும், சில வேளைகளில் "மேடைப் பயம்" என்று பொதுவாக அழைக்கப்படுவதை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவருடைய கைகள் குளிர்ந்து, ஈரமாகி விடுகின்றன, அவருடைய வாய் உலர்ந்து பஞ்சு போலாகி விடுகின்றது, அவருடைய கால்கள் தடுமாறி நடுங்குகின்றன, மற்றும் அவர் தனது வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் சுற்றித் திரிவது போல உணருகின்றார்.

நான் பிரசங்கித்த இடம் ஒன்றில், பிரசங்க மேடைக்கு இரு புறத்திலும் கைப்பிடிகள் வைக்கப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். இந்தக் கைப்பிடிகளைப் பிரசங்கிப்பவர் சுலபமாகப் பற்றுமளவுக்குச் சரியான இடத்தில் அவைகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்தக் கைப்பிடிகள் வைக்கப்படுவதற்கான விருப்பார்ந்த நோக்கத்தைப் பற்றி நான் ஒரு பொழுதும் கேள்விப்பட்டதில்லை, ஆனால் பயப்படும் பிரசங்கியார் அவற்றைப் பற்றிக் கொண்டு தம்மைத்தாமே நிதானப்படுத்திக் கொள்ள அவை மிகச் சிறந்தவைகளாய் உள்ளன.

ஒரு பிரசங்கியார், தாம் பிரசங்கிக்கத் தொடங்கும் பொழுது சபையார் முன்னிலையில் பேசுவதற்குத் தமக்கு ஏற்படும் பயத்தினால் தமது

முழங்கால்கள் தட்டாமல் இருப்பதாக - அவைகள் தவறி விடுவதாகக் கூறினார்! அவருடைய முழங்கால்கள் கட்டுப்பாடின்றி நடுங்குவதால் அவை ஒன்றுடன் ஒன்று தொடாமலேயே வேகமாக நடுங்குவதாகக் கூறினார்!

ஒரு பிரசங்கம் அல்லது பொதுவான உரையொன்றை நிகழ்த்துவதற்கு முன்பு பயம் உண்டாவதற்கான அடிப்படைக் காரணமாயிருப்பது, அந்தப் பேச்சாளர் தாம் பெறப் போகும் அனுபவம் குறித்து நிச்சயமற்றவராக இருப்பதே ஆகும். முழுமையான தயாரிப்பு மற்றும் கர்த்தர்மேல் நம்பிக்கை ஆகியவற்றினால் பக்குவப்பட்ட பேச்சாளரிடம் இந்தப் பாதுகாப்பற்ற உணர்வானது ஆவிக்குரிய தைரியத்தைக் கொண்டு இடம் மாற்றப் படுகின்றது.

மேடைப் பேச்சாளரைப் போலவே நாமும் கூட, வாழ்வது எப்படி என்று குழப்பமடையும் பொழுது, வாழ்வைப் பற்றி கடினமாகவும் நிச்சயமற்றதாகவும் உணர்வு பெறுகின்றோம். சலிப்பூட்டும் ஏக்கம் என்பது நாம் மற்றவர்களிடமிருந்து மறைத்து வைத்துள்ள இரகசியமாய் இருக்கலாம்; ஆனால் அது மற்றவர்கள் அறிந்ததாக இருந்தாலும் அல்லது நாம் மட்டும் அறிந்ததாக இருந்தாலும், நாம் கொண்டிருக்கும்படி தேவன் விரும்புகின்ற உள்ளான அமைதியைத் திருடி விடுவதினால் இது நமது வாழ்வை ஊனமாக்கி விடுகின்றது.

மேடைப் பேச்சின் பயத்தைக் கையாளுவதற்கான அதே தீர்வுதான் இந்த "அமைதியான சலிப்பு" பற்றிய பிரச்சனைக்கும் தீர்வாக உள்ளது என்று வேதாகமம் கூறுவது திகைப்புக்குரியதாக உள்ளது. "மிகவும் ஆழமான" பாவத்தைப் பற்றிய பயம், மரணம் மற்றும் தேவன் பற்றிய புரிந்து கொள்ளுதல் என்பது சத்தியத்தின் மீது அஸ்திபாரம் இடப்பட்ட வாழ்வை வாழ்வதால் மட்டுமே வரக் கூடிய அமைவு பெற்ற நிச்சயத் தன்மையைக் கொண்டு நமது உறுதியற்ற தன்மைகளை மாற்றாத வரைக்கும் மறைந்து போகாது.

தேவன் நம்மை எங்கிருக்கும்படி விரும்புகின்றாரோ, அங்கு நாம் இருக்கிறோம் என்றும், தேவன் நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாரோ, அதை நாம் செய்வதும், தேவன் தவிர இவ்வுலகில் வேறு எவராலும் அல்லது எதனாலும் உண்டாக்கப்பட முடியாத அமைதியையும் தைரியத்தையும் நமது உள்ளான மனிதனுக்குள் கொண்டு வருகின்றது.

தனிப்பட்ட சமாதானம் பற்றிய இந்தச் சிந்தனையானது கொலோசெயர் 2:10ஆ-வுடன் பிணைந்துள்ளது, அங்கு பவுல் "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவன் தமது காலங் கடந்த செல்வங்கள் முழுவதையும் கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கின்றார். பவுல், "... பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவை களுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று" (எபே. 1:9ஆ) எனக் கூறியதில் வியப்பெதுவும் இல்லை. கிறிஸ்து நமக்குப் போதுமானவராக இருக்கின்றார், ஏனெனில் தெய்வீகமான அனைத்து ஆசீர்வாதங்களும், கிருபையின் சிலாக்கியங்களும் அவரது ஆவிக்குரிய சரீரத்தினுள் அமைந்துள்ளன.

"சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிரு(ப்பது)" (கொலோ. 1:19) தேவனுக்குப் பிரியமானதாக இருந்த காரணத்தினால் இது உண்மையாக இருக்கின்றது. இவ்விதமாகப் பவுல், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ. 2:9) என்றும் மற்றும் அவர் "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:23) என்றும் கூற முடிந்தது.

கிறிஸ்துவுக்குள் இருந்து, தேவ வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கின்றவர் இளைப்பாறுதலுடனும், பயத்திலிருந்து விடுதலையான நிலையுடனும் இருக்க முடியும் என்பதே இவை யாவற்றின் நற்செய்தியாக உள்ளது; ஏனெனில் அவர் தேவனுடைய இரட்சிப்பு மற்றும் ஜீவன் ஆகியவற்றின் இடத்தில் இருக்கின்றார். வல்லமை நிறைந்த இந்த சத்தியமானது, நமது சிந்தனையை உருமாற்றி, இன்றைய நாளில் தேவனுக்கு முன்பான நமது கண்ணோட்டத்தில் செயல்விளைவை ஏற்படுத்தி, அவருடனான நமது எதிர்கால நடக்கையைக் காண வழிமுறையை அமைப்பதாக இருக்க வேண்டும். இது நமது உள்ளாழமான சிந்தனைகளுக்கும் மற்றும் வளமூட்டப்பட்ட திட்டங்களுக்கும் வண்ணந் தீட்ட வேண்டும்.

சபைக்குள் நாம் தேவனுடைய பரிபூரணத் தன்மையைப் பெற்றுள்ளோம் என்ற சுவிசேஷ உண்மைத் தன்மையைப் பற்றிக் கவனமாய்ச் சிந்தித்துப் பாருங்கள். "கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருத்தல் என்றால் எதனை அர்த்தப்படுத்துகின்றது?" என்ற கேள்வியுடன் என்னோடே சேர்ந்து வேத வசனத்தை ஊடுருவித் துழாவுங்கள்.

மன்னிப்பில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருத்தல் என்பது, நாம் தேவனிடத்தில் இருந்து வந்த நமது மன்னிப்பில் பூரணப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்று அர்த்தப்படுகின்றது. புதிய ஏற்பாடானது - கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற - கிருபையின் ஒரே ஒரு வட்டாரத்தையே அறிந்துள்ளது! மீட்பு என்பது தேவனுடைய குமாரன் மூலமாக மட்டுமே அளிக்கப்படும்படியாகவே தேவன் தமது இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைத்தார் (யோவா. 14:6). ஆகையால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், நீங்கள் மீட்பின் வட்டாரத்திற்குள் இருக்கின்றீர்கள் (ரோமர் 8:1); நீங்கள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், நீங்கள் ஆக்கினைத் தீர்ப்பின் வட்டத்திற்குள் (எபே. 2:12), பிசாசின் இராஜ்யத்திற்குள் (கொலோ. 1:13) இருக்கின்றீர்கள்.

ஆவிக்குரிய இரு இடங்களில் ஏதாவதொன்றில் மட்டுமே ஒரு நபர் இருக்க முடியும். அவர் கிறிஸ்துவுக்குள் அல்லது கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்றார், இரட்சிப்பின் இடத்திற்குள் அல்லது தேவனிடமிருந்து பிரிந்துள்ள இடத்தில் இருக்கின்றார். நாம் இவ்விரண்டிலுமே இல்லாதவர்களாகவோ அல்லது இவ்விரண்டிலுமே இருப்பவர்களாகவோ இவ்வுலகில் இருக்க முடியாது.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் கிறிஸ்துவின் இரட்சிப்பைப்

பெறுவதற்கு ஒளியில் நடக்க வேண்டும் (1 யோவா. 1:7); இல்லையென்றால் அவர், இரட்சிப்பைப் பெறக் கூடிய இடத்தில் (கிறிஸ்துவுக்குள்) இருந்தும், சீமோனைப் போல் அதைப் பெற்றிருந்தும் அதை இழந்து போனவராய்க் காணப்படுவார் (அப். 8:20, 21). விசுவாசத்தினால் நடப்பது என்பது இரண்டு இன்றிமையாத பண்புகளைக் கொண்டுள்ளது: முதலாவது, இது இயேசு நம்மை இரட்சிக்க வல்லவர் என்று நம்புவதை அர்த்தப்படுத்துகின்றது (எபே. 2:8, 9), மற்றும் இரண்டாவது, இது கிறிஸ்துவின் சித்தத்திற்கு நேர்மையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகின்றது (எபி. 5:8, 9).

மீட்கப்பட்ட நபர், இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப் பட்டு, அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப் படுகின்றார். அவருக்குள் நமக்குப் பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டா யிருக்கிறது (கொலோ. 1:13, 14). புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர் களைப் பற்றிப் பவுல், ''முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்'' (எபே. 2:13). பேதுருவின் கூற்றுப்படி, கிறிஸ்துவுக்குள் இருந்து கிறிஸ்துவின் கிருபையில் வளருகின்ற யாவருக்கும் பரலோகத்தின் நித்திய இராஜ்யத் திற்கு உட்படும் பிரவேசம் பரிபூரணமாய் கொடுக்கப்படும்:

> *ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளு தலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேது. 1:10, 11).*

இந்த சத்தியத்தை இயேசு தமது உவமைகளில் ஒன்றுடன் (மத். 20:1-16) மறக்க முடியாத விதத்தில் விவரித்தார். திராட்சத் தோட்டக்காரர் ஒருவர் அதிகாலையில் வேலைக்குச் சில பேரை அமர்த்தினார், பிறகு அவர் 9.00 மணி, 12.00 மணி, 3.00 மணி மற்றும் 5.00 மணி ஆகிய நேரங்களில் கூடுதலான கூலியாட்களை அமர்த்தினார். அந்த வேளை நாளின் முடிவில், அவர் எல்லா வேலையாட்களுக்கும் சமமான கூலியையே கொடுத்தார்! அது நியாயமற்றதாகத் தொனிக்கின்றது இல்லையா? சாதாரணமாக எந்த ஒரு பண்ணைக்காரரும் தனது வேலையாட்கள் ஒரே அளவு வேலை செய்யா விட்டால் அவர்களுக்குச் சமமான கூலி கொடுக்க மாட்டார். இன்றைய நாட்களில் பண்ணையில் நாம் செய்கின்றதைப் பற்றியோ அல்லது முதல் நூற்றாண்டு உலகில், பண்ணையில் செய்யப்பட்டது பற்றியோ இயேசுவின் உவமையானது விவரிப்பதில்லை, ஆனால் அது, கிருபையின் இராஜ்யத்தில் தேவன் என்ன செய்கின்றார் என்பதையே விவரிக்கின்றது.

''சிலுவையின், அடிவாரத்தில் பூமி சமதரையாக உள்ளது.'' கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எவரொருவரும் மற்ற எவரொருவரைக் காட்டிலும் அதிகமாக இரட்சிக்கப்பட்டு விடுவதில்லை. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், மற்றும் இயேசு உங்களை இரட்சிக்க முடியும் என்று நம்பி, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதை நீங்கள்

உண்மையாகவே நாடினால், கிறிஸ்துவுக்குள் உள்ள மற்ற எவரையும் போலவே நீங்களும் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றீர்கள்.

தகுதியற்றவர்களுக்குத் தயவுடன் தரப்பட்டுள்ள சுவிசேஷம் என்ற ஒரே வழியின் மூலமாகத்தான் ஒவ்வொருவரும் தேவனிடத்திற்கு வர வேண்டும். கணக்கொப்புவிக்க வேண்டிய மக்கள் யாவரும் பாவிகளாய் இருக்கின்றார்கள், மற்றும் இவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். மற்றவர்கள் அதிகமாய் இரட்சிப்பு தேவையுள்ள நிலையில் இருக்கையில் தமக்கு ஒரு சிறிதளவு மட்டுமே இரட்சிப்பு தேவை என்று எவரொருவரும் பெருமை பாராட்ட முடியாது; அல்லது, மற்றவர்கள் முழுமையாக இழந்து போகப்பட்டிருக்க, தாம் ஒரு சிறிது மட்டுமே இழந்து போகப்பட்டிருப்பதாகவும் ஒருவர் கூற முடியாது. இது எல்லாருக்கும் ஒன்று போலவே உள்ளது - கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள யாவரும் முழுமையாக இழந்து போகப்படுகின்றனர், மற்றும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற யாவரும் முழுமையாக இரட்சிக்கப்படுகின்றனர். எவரொருவரும் ஏறக்குறைய கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது ஏறக்குறைய கிறிஸ்துவுக்குப் புறம்பாகவோ இருக்க முடியாது.

நாம் கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பதைக் காட்டிலும் மேலான நிலையில் நாம் இருக்க முடியாது; நாம் கிறிஸ்துவில் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் அதிகமான அளிப்புக்களை பிதாவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது; ஆவிக்குரிய வளர்ச்சிக்காக கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் சந்தர்ப்பத்தைக் காட்டிலும் அதிகமான சந்தர்ப்பம் நமக்கு இருக்க முடியாது.

ஒப்புவமை என்ற உருப் பெருக்கியின் மூலமாக இரட்சிப்பைப் பற்றிய இந்த சத்தியத்தை நோக்குங்கள். எட்டுப் பேர் மாத்திரமே நோவாவின் பேழைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இருப்பினும், பேழைக்குள் சென்ற, அந்த எட்டுப் பேரும் பாதுகாப்பான நிலையினுள் இருந்தார்கள். அவர்களில் எவரொருவரும் மற்ற ஏழு பேரைக் காட்டிலும் எவ்வகையிலும் அதிகம் பாதுகாப்பாக இருந்ததில்லை. நோவா அங்கிருந்த மற்றவர்களை விட ஆவிக்குரிய வகையில் அதிகம் பக்குவப்பட்டவராக இருந்திருக்கலாம், ஆனால் பேழைக்குள் இருந்த அனைவரும் துன்பத்திலிருந்து விடுதலையாய் இருந்தார்கள். பேழைக்குப் புறம்பே இந்தப் பூமியில் இருந்த மக்கள் திறள் கூட்டம் முழுவதும் தண்ணீர்க் கல்லறையில் அழிவை அடைந்தார்கள்.

வாழ்வின் முற்பகுதியில் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டிருந்த ஒரு மனிதருடன் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான் (வேதாகமத்தைப்) படித்துக் கொண்டிருந்தேன். அவர் தனது குற்றத்தினால் தண்டனை பெற்று தனது காலத்தைத் தண்டனைச் சாலையில் செலவிட்டிருந்தார். அவருடைய வாழ்க்கையின் முடிவு வேளையில், புற்று நோயினால் அழிக்கப்பட்டு, வாழ்வதற்கு ஒரு சில நாட்கள் மட்டுமே இருந்த வேளையில், நான்

அவரிடம் சென்று கிறிஸ்தவராவது எப்படி என்று கூற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மருத்துவமனையில் அவரது படுக்கையின் அருகே அமர்ந்த நான் இரட்சிப்பின் வழியை விளக்கப்படுத்தும் வேத வசனப் பகுதிகளை அவருக்காக வாசிக்கத் தொடங்கினேன். அவருடன் சுமார் இரண்டு மணி நேரம் படித்த பிறகு, அவர் தாம் ஒரு கிறிஸ்தவராகும்படி ஞானஸ்நானம் பெறுவதற்குத் தமக்குள்ள விருப்பத்தைக் கண்ணீருடன் தெரியப்படுத்தினார். நான் அவரிடத்தில், "நீங்கள் சுகமடைந்தால், அவருக்கு ஊழியம் செய்யத் திட்டமிட்டிருக்கின்றீர்களா?" என்று கேட்டேன். அவர் தம் வாழ்வின் எஞ்சிய பகுதியில், எப்படியிருப்பினும், எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்கென்றே தாம் வாழ விரும்புவதாகக் கூறினார். அந்த நாளின் பிற்பகுதியில், அருகில் உள்ள ஞானஸ்நானத் தொட்டிக்கு இழுவை வண்டியில் அவரை வைத்து எடுத்துச் சென்ற கிறிஸ்தவர்கள் சிலரால் அவர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார். அவருடைய ஞானஸ்நானத்திற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, அவர் வாழ்வின் மறுபக்கத்திற்குக் கடந்து சென்றார்.

அவர் தமது வாழ்வின் 99 சதவிகிதத்தை இருளின் இராஜ்யத்தினுள் வாழ்ந்திருந்தாலும், ஞானஸ்நானத்தில் - அவரது பதில்செயல் உண்மையாயிருந்தது என்றும், அவரது விசுவாசம் மேன்மையானதாயிருந்தது என்றும் யூகிக்கப்பட்ட நிலையில் - அவர் கிருபையின் இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். அவரது வாழ்வின் வாய்ப்புக்களின் நள்ளிரவு வேளையில் அவர் இவ்வாறு பிரவேசித்திருப்பினும், வாழ்வின் முற்பகுதியில் பிரவேசித்தவர்கள் பெறுகின்ற அதே நித்திய ஜீவன் என்ற கொடையையே இவரும் பெறுவார். அவரது வாழ்வின் கடைசி ஒரு வாரத்தில் அவர் மீட்பின் நிலையில், கிறிஸ்துவுக்குள் முழுமையாய் நின்றிருந்தார். அவர் பந்து விளையாட்டின் கடைசி ஆட்டத்தில் ஒரு பவனி வந்து வெற்றி பெற்றது போல வாழ்வின் விளையாட்டில் வெற்றி பெற்றார்.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசிப்பது எப்படி என்பதற்கு கலாத்தியர் 3:27 ஒரு வெளிப்படையான வசனப் பகுதியாக உள்ளது: "ஏனெனில், உங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே." பின்வருவதை மட்டும் நினைத்துப் பாருங்கள்: தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் விசுவாசத்துடன் வந்து, பாவம் யாவற்றிற்கும் மனம் வருந்தி, இயேசுவின் மீதுள்ள தம் விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்ற எவரொருவரும் தேவனிடம் இருந்து வரும் மன்னிப்பில் உடனடியாக முழுமையடைகின்றார். அவர் மீட்கப்பட்டவர்களின் வட்டாரத்தினுள் பிரவேசிக்கின்றார், அங்குள்ள குடிமக்கள் யாவரும் பாவமன்னிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுள்ளார்கள்.

அளிப்புகளில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் பரிபூரணபட்டிருத்தல் என்பது ஒரு கருத்தில், நாம்

ஆவிக்குரிய அளித்தல்களில் பரிபூரணப்பட்டிருக்கிறோம் என்றாகின்றது. நித்திய மகிமையின் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்கான நமது பயணத்திற்குத் தேவையான ஆவிக்குரிய அளிப்பு மற்றும் ஆதார மூலம் எதுவும் (யாவும்) நமக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

கொலோசெயில் இருந்த சபையானது, இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் கிறிஸ்துவின் இடத்தைக் குறிக்கின்றதான ஒரு வகையான தேவ தூஷணத்தினால் (தொடக்க கால கடவுள் நம்பிக்கையின்மை என்றிருக்கலாம்) பாதிக்கப்பட்டிருந்தது. (அந்தக்) கள்ள போதகத்தைத் தோல்வியுறச் செய்து, அழிப்பதற்காகப் பவுல் கிறிஸ்துவின் உயர் தன்மையை முற்றிலுமாகக் கொலோசெயருக்கு விளக்கியுரைத்தார். கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக உள்ளது என்று அவர் கூறினார் (கொலோ. 2:9). அதாவது, பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுவும் மற்றும் பரிசுத்த ஆவியானவரும் நமக்குக் கொடுக்க நாடுகின்ற யாவையும் கிறிஸ்துவுக்குள் முழுமையாக, சுயாதீனமாக மற்றும் இறுதியாக அளிக்கப்பட்டுள்ளன. தேவன் நமக்குக் கொடுக்க விழைகின்ற ஆவிக்குரிய செல்வங்கள் யாவற்றின் ஆதார மூலமாகவும், உருத் தோற்றமாகவும், முழுமையான உணர்ந்தறிதலாகவும் மற்றும் முழுமையான தொகுப்பாகவும் உள்ளவர் அவரே (கிறிஸ்துவே) ஆவார். எனவே இதைத் தொடர்ந்து, நாம் அவருக்குள் நிறைவடைகின்றோம் (கொலோ. 2:10), அதாவது வேறொன்றும் நமக்குத் தேவைப் படுவதில்லை என்ற கருத்து கிடைக்கின்றது.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் இந்தப் பரிபூரணத் தன்மைக்காகப் பவுல், எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்தில் தமது உபதேசத்தில் தேவனைப் பின்வருமாறு ஸ்தோத்தரித்தார்: “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்” (எபே. 1:3). பேதுரு தமது இரண்டாம் நிருபத்தின் தொடக்கத்தில் இதே போன்றதொரு அறிவிப்பை ஏற்படுத்தினார்: “தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது ...” (2 பேது. 1:2, 3). இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எங்குள்ளன என்று பவுல் நமக்குக் கூறுகையில், இவைகளை நாம் எவ்வாறு பெறுகிறோம் என்று பேதுரு நமக்குக் கூறினார். இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் உள்ளன என்று பவுல் நமக்குக் கூறினார்; மற்றும் இவைகள் இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் உண்டாகின்றன என்று பேதுரு நமக்குக் கூறினார். இருப்பினும், இவ்விரண்டு எழுத்தாளர்களுமே நமக்கு தேவனுடைய வரங்களின் போதுமான தன்மையின் முழுமையை வலியுறுத்தினார்கள்.

“தண்ணீரின் கீழ் செல்லும் கப்பல்களான” நீர் மூழ்கிக் கப்பல்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவைகள் மனிதர்களின் குழுக்களைப் பத்திரமாகவும் வசதி மிக்க வகையிலும் கடல்களின் ஆழங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவைகளாய் இருக்கின்றன. மேற்பரப்பின் கீழாக “வாழும்

சமூகங்கள்'' என்ற வகையில் அவைகள், உணவறைகள், படுக்கைகள், பொழுதுபோக்கு வசதிகள், எல்லா வகையான செய்தித் தொடர்பு அமைப்புகள் மற்றும் அவ்வப்போது எழுகின்ற எந்த வகையான தேவைகளையும் சந்திக்கக் கூடிய நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை முழுமையாகக் கொண்டுள்ளன.

கடலின் தரைப்பகுதியில் உள்ள பரந்த சமவெளிகள் மற்றும் உயர்ந்த மலைகள் ஆகியவற்றில் அபாயங்கள் மறைந்துள்ளன, இருப்பினும் இந்த அழிவுகளினூடே தீங்கற்ற வகையில் நீர் மூழ்கிக் கப்பலானது செல்லு கின்றது - இது தனது பயணிகளுக்குப் பாதுகாப்பை அளிப்பது மட்டுமின்றி, அவர்களுக்கு சாதாரணமான வாழ்வை அளித்து, பயணத்தையும் மேற் கொள்ள வைக்கின்றது! திகைப்புக்குரிய முரண்பாடு ஒன்றுள்ளது: பாதுகாப்பு, வாழ்வு மற்றும் மகிழ்ச்சி ஆகியவை, மரணம், பயங்கரம் மற்றும் இருள் ஆகியவற்றின் மத்தியில் கிடைக்கின்றன!

மிகவும் உயர்வான அளவையில், கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்வானது இதே வகையான சித்தரிப்பினால் விவரிக்கப்படக் கூடும். அவருக்குள் நாம் நித்திய மரணத்திலிருந்து விடுதலையாகுதலை மட்டு மின்றி, பாவத்தின் நித்திய விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படுதலையும் பெற்றுள்ளோம் (ரோமர் 8:1), நாம் வாழ்வின் புதிய தரத்திற்கான அளிப்புகளின் உடைமைத்துவத்தில் இருக்கின்றோம். பரலோகத்தின் ஆவிக்குரிய ஏராளமான ஆசீர்வாதங்களினால் சூழப்பட்டுள்ள நாம் (யோவா. 10:10) வரவிருக்கின்ற மகிமையின் முன் கதிர்களைச் சுவைக்கின்றோம்.

நீர்மூழ்கிக் கப்பலின் வெளியே ஒருவர் இருக்கையில், அவர் கடலின் அழிவுகளினால் விரைவில் அழிக்கப்படுவது போலவே, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருப்பார்கள் (எபே. 2:12). இரட்சிப்பின் நீர்மூழ்கிக் கப்பல் என்பது கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது. அவருக்குள் நாம் பாதுகாப்பாக உள்ளோம்; அவருக்குப் புறம்பே நாம் பாவத்தின் பெருங்கடலினால் சிதைக்கப்படுகின்றோம். கிறிஸ்து நமது பாதுகாப்பாகவும் அளிப்பாகவும், நமது பாதுகாவலாகவும் நிலைநிறுத்து தலாகவும் உள்ளார்.

நீங்கள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், நிச்சயமாகவே நீங்கள், “ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்வாறு பிரவேசிக்கின்றார்?” என்று கேட்பீர்கள். நாம் அவரது சரீரத்திற்குள்ளாக மாற்றப்படுவது எவ்வாறு என்பதற்குப் பவுல் அளிக்கின்ற விளக்கத்தை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்: “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” (ரோமர் 6:3). நமது விசுவாசமானது அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாக வளர்ச்சியின் உச்சத்தை அடையும் பொழுது நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக்கப்படுகின்றோம், மற்றும் நாம் அவருக்குள் வாசம் பண்ணி, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் அன்றாடம் வாழ்கின்றோம்.

சாத்தியமாகுதலில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் நிறைவடைதல் என்பது நாம் சாத்தியத்தில் பரிபூரணம் அடைகிறோம், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கும் அளிப்புகள் எல்லாவற்றையும் சேரும் வழியில் நிறைவடைகின்றோம் என்றும் அர்த்தமாகின்றது. ஆவிக்குரியவற்றிற்கான சம வாய்ப்புக்கும் கிறிஸ்துவைப் போன்றே வளருவதற்கும் கிறிஸ்துவுக்குள் இடம் உள்ளது.

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்ற ஒருவர் தமது பாவத்தினால் தேவனுடன் ஐக்கியம் கொள்ளுவதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார்; கிறிஸ்துவுக்குள் இவ்வித பிரிவினை எதுவும் நிலைநிற்பதில்லை, ஏனெனில் அவருடைய இரத்தத்தினால் நமது கடந்த காலப் பாவங்கள் எடுத்துப் போடப்பட்டன மற்றும் நம்முடைய நிகழ் காலப் பாவம் எடுத்துப்போடப் படுகின்றன. இவ்விதமாக, யூதர் அல்லது புறஜாதியாரான எவரொருவரும் கிறிஸ்துவுக்குள் "ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (எபே. 2:18). பிரவேசித்தலுக்கான இந்தச் சுயாதீனமானது ஒரு திறந்த கதவாக மட்டும் இருப்பதில்லை; இது வரவேற்புப் பலகையொன்று தொங்குகின்ற திறந்த கதவாக உள்ளது. நாம், "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டா யிருக்கிறது" (எபே. 3:12) என்று வாசிக்கின்றோம்.

''வந்து எங்களைக் காணுங்கள்!'' என்ற பிரியாவிடைச் சொல் விளக்கத்தை நீங்கள் அநேகமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது "போய் வருகிறோம்'' என்று கூறுவதன் வட்டார வழக்காக/கொச்சையான வழக்காக உள்ளது. இது, இவ்வார்த்தைகளைப் பேசுகின்ற ஒருவர் தனது வீட்டிற்கு வரும்படி நோக்கத்துடன் விடுக்கின்ற குறிப்பான அழைப்பாக இருப்பதில்லை. இது தீவிரமானதாக எடுத்துக் கொள்ளப்படத் தேவையற்ற அரைகுறையான, அரைமனதான வேண்டுகோளாக உள்ளது என்று நாம் கூறலாம். நம்மை வரவேற்பதற்குத் தேவனுடைய வசனங்கள் சாதாரண மானவைகளாகவோ அல்லது ஆழமான மேன்மையான அர்த்தமற்றவை களாகவோ இருப்பதில்லை. அவர் நம்மைத் தம்முடைய ஐக்கியத்தினுள் இருக்குமாறு உற்சாகப்படுத்துவது மட்டுமின்றி, விவரிப்புக்கு அப்பாற் பட்ட ஆர்வத்துடன் அவர் நம்முடன் ஐக்கியம் கொள்ள நாடுகின்றார். மரணத்தைக் காட்டிலும் பலம் மிகுந்த ஒரு அன்புடன் அவருடைய இருதயமானது நம்மை வந்தடைகிறது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் பரலோகத்தின் ஆவிக்குரிய பண்டக சாலைக்குச் சேரும் சுதந்திரமான நமது வழியின் காரணத்தினால், யோவானுடன் சேர்ந்து ஒவ்வொரு கிறிஸ்தவரும் பின்வருமாறு கூற முடியும்: ''நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவா. 3:1அ).

கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டுள்ள நபர், தேவனுடனும், கிறிஸ்து வுடனும் மற்றும் பரிசுத்த ஆவியுடனும் தாம் தேர்ந்து கொள்கின்ற

அளவுக்கு நெருக்கமாக நடக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார். ஐக்கியத்தில் அவரது வளர்ச்சியானது வாய்ப்புக் குறைவினாலோ அல்லது முழு அனுமதியின் குறைவினாலோ ஒருக்காலும் தடை செய்யப்படாது. தேவனிடம் நெருங்கிச் சேருவதில் ஏற்படும் எந்தத் தோல்வியும் நம் தோல்வியாய் இருக்கிறதேயன்றி தேவனுடைய தோல்வியாய் இருப்ப தில்லை. கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாம் அனைவரும் ஒரு நாளைக்கோ அல்லது பத்தாண்டுகளுக்கோ, ஒரு நிமிடமாகவோ அல்லது ஒரு மாதமாகவோ எவ்வளவு சிறிது காலம் கிறிஸ்துவுக்குள் இருப்பினும் நமது பிதாவிடம் சுதந்திரமாக வருவதற்கான திறனின் இந்த சிலாக்கியத்தில் சமமானவர்களாகவே இருக்கின்றோம். பவுல், "யூதனென்றும் கிரேக்க னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28) என்று எழுதினார். நாம் சத்தியத்தில், ஐக்கியத்தில், தேவனிடத்தில் நெருங்கக் கூடிய திறனில், மற்றும் இரட்சிப்பில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம்; ஆகையால், நாம் கிறிஸ்து வுக்குள் உண்மையிலேயே ஒன்றாயிருக்கின்றோம்.

சிலாக்கியமானது உடைமைத்துவத்தை அவசியமாய் அர்த்தப்படுத்த வேண்டியதில்லை என்பதையும், பிரவேசிக்கும் உரிமையானது நாம் பிரவேசித்துள்ளோம் என்று அர்த்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். ஒரு மனிதர், தமது நண்பர்களைக் காண்பதற்காக அட்லாண்ட்டிக் மாகடலைக் கடந்து செல்லத் திட்டமிட்டது பற்றி நான் வாசித்துள்ளேன். அவர் கடற்பயணச் சீட்டிற்குப் போதிய பணம் பெறுவதற்காகப் பெரிதும் போராடியிருந்தார், அப்பயணத்திற்குப் போதுமான பணம் பெறும் வரையிலும் பல ஆண்டுகளாகத் தனது உபரிப் பணத்தைச் சேமித்து வைத்தார். அவர் தனது பயணச் சீட்டைப் பெற்று, அந்த நீண்ட பயணத்தில் தம்மை நிலை நிறுத்தினார். பயணச் சீட்டின் கட்டணத்தில் உணவுக் கட்டணமும் அடங்கியுள்ளது என்று அறிந்திராத நிலையில் அவர் தமது பயணப் பைகளில் பாலாடைக் கட்டிகளையும் சில பிஸ்கட்டுகளையும் சேமித்திருந்தார். அந்தப் பயணத்தின் பொழுது, அவைகளைத் தின்று உயிர் வாழ அவர் திட்டமிட்டார். "எவரொருவரும் எதையாவது தின்று ஓரிருவாரங்கள் உயிர் வாழ முடியும்" என்று அவர் நினைத்தார். அட்லாண்டிக் கடலைக் கடக்கும் அந்தப் பயணத்தின் பாதி வழியில் யாரோ ஒருவர் தற்செயலாக அவரிடத்தில், பயணக் கட்டணத்தில், அங்குள்ள உணவறையில் கிடைக் கின்ற சூடான உணவும் உள்ளடங்குகிறது என்று தகவல் தெரிவித்தார்!

புரிந்து கொள்ளுதலில் உள்ள குறைவினால் இந்த மனிதர் தனது சிலாக்கியங்களுக்குக் கீழான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார். மற்ற எந்தப் பயணியையும் போலவே இவரும் உணவறைக்குச் செல்லக்கூடிய அதே உரிமையைப் பெற்றிருந்தார், ஆனால் இவர் தாம் விலை கொடுத்து வாங்கியிருந்த அந்த அனுகூலத்தைப் பயன்படுத்தாமல் இருந்தார். இவர் தமது உடமைகளை உடமையாக்கிக் கொள்ளாதிருந்தார்; இவர் தமது சாத்தியத்தைக் கைப்பற்றிக் கொள்ளாதிருந்தார்.

இஸ்ரவேலர்கள் கானான் நாட்டை நெருங்குவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே அவர்கள் "நான் அந்த நாட்டை உங்களுக்குக் கொடுப்பேன்" (யோசு. 1:2) என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றிருந்தார்கள். அவர்கள் யோர்தான் நதியைக் கடந்து தேவன் தங்களுக்கு அளித்திருந்த உடமையைப் பெற்றுக் கொண்ட பொழுது அந்த மகிழ்ச்சியான நாள் விரைவிலேயே வந்தது. தேவன் அவர்களிடத்தில், "நான் உங்களுக்கு (இந்த) நாட்டைக் கொடுத்துள்ளேன், ஆனால் நீங்கள் அதை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்" (யோசு. 1:11) என்று உரைத்தார்.

தேவன் கிறிஸ்துவுக்குள் இதே அறிவுறுத்தலை நமக்கும் கொடுத்திருக் கின்றார்: "எனது ஆசீர்வாதங்களிடம் வந்து சேரும் வழிகள் எல்லா வற்றையும் நான் உங்களுக்குக் கொடுத்துள்ளேன். கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு, ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் யாவையும், என்னுடன் மிக நெருக்கமான ஐக்கியமும், மற்றும் என் பெலத்தால் வெற்றிகளும் கிடைக்கின்றன; ஆனால் அவைகளைப் பெறுவதற்கு நீங்கள் வந்து அவற்றை அடைய வேண்டும். நான் உங்களுக்கு நாட்டைக் கொடுத் துள்ளேன், ஆனால் நீங்கள் அதை உடமையாக்கிக் கொள்ள வேண்டும்."

இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கின்றவர்கள் சாத்தியத்தில் பரிபூரணமானவர்களாய் இருக்கின்றனர். நாம், பவுல், பேதுரு மற்றும் யோவான் ஆகியோரைப் போன்றே தேவனுடன் நெருங்கி நடக்க வாய்ப்பை பெற்றிருக்கின்றோம். பாவம், சோம்பல், சுயநலம் மற்றும் கர்வம் போன்ற சுயவலிவான பாவங்களே நாம் தேவனுடன் ஐக்கியம் கொள்ளத் தடைகளாக உள்ளன. மனிதனுக்குத் தேவனுடைய முழுமையான வெளிப்பாடான வேதாகமம் நமது கரங்களில் உள்ளது. வேத வசனங் களுக்குத் தொடக்க நிலையில் கீழ்ப்படிந்து கிறிஸ்துவிடம் வந்துள்ள நிலையில் நாம், நமது வாழ்வின் எஞ்சிய பகுதியில் அவரது சித்தம் பற்றிய அறிவில் வளர முடியும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணு கின்றார், நாம் ஜெபிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம் (கலா. 4:6). தேவனிடமுள்ள நமது வரவேற்பில் நாம் ஒருபோதும் களைப்படை வதில்லை; நாம் அவரிடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களைக் கேட்கக் கூடாத அளவுக்கு அவர் ஒருக்காலும் தீவிரமான பணியில் ஈடுபட்டிருப்பதில்லை. அவர் நம்முடன் அன்றாடம் நடக்க விரும்புகின்றார், மற்றும் அவர் தம்முடனான ஐக்கியத்தின் மதிப்பையும் மகிழ்ச்சியையும் நாம் புரிந்துணர வேண்டுமென்று நமக்காகப் பொறுமையுடன் காத்திருக்கின்றார். அவருக்குப் பிரியமான மற்றும் ஏற்புடைய ஆராதனையை நாம் அன்றாடம் ஏறெடுக்க முடியும், அவரைப் பிரியப்படுத்துகின்ற ஆராதனையும் துதியும் அவருக்கு முன்பாக சுகந்த வாசனையாக வருகின்றது. கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனுடைய ஐசுவரியங்கள் யாவற்றையும் அடைவதற்கு நமக்கு சாத்தியக்கூறுகள் அளிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

கிறிஸ்துவுக்குள் நாம் முழுமையானவர்களாக - மன்னிப்பில், அளிப்பு

களில் மற்றும் சாத்தியத்தில் பரிபூரணமுள்ளவர்களாக - இருக்கின்றோம் என்பது நமக்கு எவ்வளவாய் விளக்கியுரைக்கப்பட முடியாத மகிழ்ச்சியைக் கொண்டு வர வேண்டும்! கிறிஸ்துவுக்குள் இருப்பதைக் காட்டிலும் மேலான நிலையில் நாம் இருக்க முடியாது; கிறிஸ்துவுக்குள் நாம் பெறுகின்றவைகளைக் காட்டிலும் அதிகமான அளப்புகளை (வேறு வழியில்) நாம் பிதாவிடமிருந்து பெற முடியாது; ஆவிக்குரிய வளர்ச்சிக் கென்று கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள வாய்ப்புகளைக் காட்டிலும் பெரிய வாய்ப்புக்களை நாம் கொண்டிருக்க முடியாது. நாம் பெரிய மலைச் சிகரத்தினிடத்தில், அனுகூலத்தின் மாபெருமிடத்தில் (Summum bonum), உயர்ந்த, மாபெரும் நன்மையினிடத்தில் வந்துள்ளோம். நாம் சகலமும் கூட்டப்பட்டதின் இடத்தை வந்தடைந்துள்ளோம். இந்தக் காரணத்தினால் பவுல், "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும், அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும், அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20) என்றெழுதினார்.

நீங்கள் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஒரு தங்க மெடலை வென்று, அந்தப் பந்தயத்தில் நீங்கள் உலகிலேயே மிகச் சிறந்தவர் என்று நீங்கள் அறிய நேர்ந்தால் எப்படியிருக்கும்? நீங்கள் இந்திய நாட்டின் ஜனாதிபதியாகி, இந்தியாவிலேயே மிகவும் உயர்ந்த பதவியை வகிக்க நேர்ந்துள்ளதை அறிந்தால் எப்படியிருக்கும்? நீங்கள் உலகிலேயே மிகப்பெரிய பணக்கார மனிதராகி, உங்களை விட அதிகமாகப் பணம் படைத்தவர் வேறெவரும் இல்லை என்று அறிய நேர்ந்தால் எப்படியிருக்கும்? வாழ்வின் உச்சியில் நீங்கள் என்னவாயிருப்பீர்கள்? அது உங்கள் வாழ்வை நிறைவுள்ளதாக்குமா? ஆக்காது என்றே நான் நம்புகின்றேன்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒவ்வொருவரும், அவருடைய அல்லது அவளுடைய வாழ்வின் நிலைகள் எவ்வளவு தாழ்மையானதாக இருப்பினும், மற்றும் அவரோ அல்லது அவளோ எஞ்சியுள்ள உலகத்த வரால் அறியப்படாது இருந்த போதிலும், அவர் அல்லது அவள், தேவனு டைய கண்ணோக்கத்தில் உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலேயே இருக்கின்றார். தங்கப் பதக்கத்தை வென்றவர், ஜனாதிபதி அல்லது பெரும் பணக்காரர் என்ற நிலைகள் கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதைக் காட்டிலும் தாழ்வானவைகளாகவே இருக்கின்றன. அவருடைய ஆவிக்குரிய சரீரத்தின் அவயவம் என்ற வகையில் நீங்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறீர்கள். கிறிஸ்துவின் யுகத்தில் தேவன் எவரொருவருக்கும் கிடைக்கச் செய்யும்படி நாடுகின்ற எல்லாவற்றையும் சென்றடைய உங்களுக்கு வழி வகை ஏற்பட்டுள்ளது.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், உங்களை விட எவரொருவரும் பெரும் வளங்களைப் பெற்றிருப்பதில்லை: "எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங் களாகிலும், எல்லாம் உங்களுடையது" (1 கொரி. 3:21ஆ, 22). நீங்கள்

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், உங்களைப் பார்க்கிலும் வேறொருவரும் ஏழ்மையினால் அதிகமாய்த் தாக்கப்பட்டிருப்பதில்லை: "... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய் ..." *(எபே. 2:12)* இருப்பீர்கள்.

முழு விஷயத்தின் முடிவையும் நாம் கேட்போமாக: கிறிஸ்து இல்லாமல் நாம் மதிப்புள்ள எதையும் கொண்டிருப்பதில்லை; அவருடன் இருக்கையில் நாம் உண்மையான மதிப்புள்ள ஒவ்வொன்றையும் கொண்டிருக்கின்றோம்!

பிற்சேர்க்கை

புதிய ஏற்பாட்டில் "சபையின்" உருவகங்களும் விவரிப்புகளும்

புதிய ஏற்பாட்டில் சபையானது ஏராளமான ஒப்புவமைகள், உவமானங்கள் மற்றும் உருவகங்களினால் சித்தரிக்கப்படுகின்றது.[1] அவைகளில் சில விவரிப்புகளாகக் காணப்படுகையில், மற்றவை உண்மையான இயற்பெயர்களாய்த் தோற்றம் அளிக்கின்றன. அவற்றில் ஏதொன்றும் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாய் வலியுறுத்தப்படக் கூடாது; மாறாக அவை ஒவ்வொன்றும் சபையைப் பற்றி நாம் எவ்விதமான முழுமையான சித்தரிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அந்தச் சித்தரிப்புக்குப் பங்களிப்பவைகளாகக் காணப்பட வேண்டும்.

ஒப்புவமை என்பது அது போலிருத்தல் அல்லது ஒற்றுமைத் தன்மையின் கூற்றாக ("போல" அல்லது "மாதிரி" என்ற பயன்பாடின்றி விளக்கப் படுவதாக) உள்ளது. உதாரணமாக, எபேசியர் 2:20-22ல் கிறிஸ்து ஒரு மூலைக்கல் என்றும் கிறிஸ்தவர்கள் கட்டிடம் அல்லது ஆலயம் என்றும் சித்தரிக்கப்படுகின்றனர்.

உவமானம் என்பது அதன் பிரதிநிதித்துவத்தில் "போல" அல்லது "மாதிரி" என்பதைப் பயன்படுத்தும் ஒரு எளிய ஒப்புவமையாக உள்ளது. மத்தேயு 13ல் இயேசு மீண்டும் மீண்டும் "பரலோக இராஜ்யமானது ... போன்றுள்ளது" என்று கூறிய பொழுது அவர் உவமானங்களைப் பயன்படுத்தினார்.

விவரிப்பு என்பது ஒரு ஒப்புவமையைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. ஒப்பீட்டின் இந்த வகையானது சபையின் பெயருக்கும் அதை விளக்கப் பயன்படும் கருத்து அல்லது உவமைக்கும் இடையில் ஒரு இணைத்தன்மையைக் கொண்டு வர வேத வசனங்களில் பயன் படுத்தப்படுகின்றது.[2] உதாரணமாக, மத்தேயு 13:24-30ல் இயேசு தம்முடைய இராஜ்யத்தின் இயல்பை விவரிப்பதற்கு தோட்டம் ஒன்றின் உவமையைப் பயன்படுத்தினார்.

தேவனுடன் தொடர்புடையவை (21)

1. **தேவனுடைய ஆசாரியத்துவம் என்ற வகையில்**

1 பேதுரு 2:9

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

1 பேதுரு 2:5

ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

2. **தேவனுடைய பரிசுத்த இனம் என்ற வகையில்**

1 பேதுரு 2:9

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

3. **தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற வகையில்**

1 பேதுரு 2:9

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

4. **தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி என்ற வகையில்**

1 பேதுரு 2:9

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

5. தேவனுடைய நகரத்தார் என்ற வகையில்

எபேசியர் 2:19

ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து.

6. தேவனுடைய மாளிகை என்ற வகையில்

எபேசியர் 2:20-22

அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

7. தேவனுடைய பண்ணை என்ற வகையில்

1 கொரிந்தியர் 3:9

நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமா யிருக்கிறீர்கள்.

8. தேவன் வாசம் பண்ணுமிடம் என்ற வகையில்

எபேசியர் 2:19-22

ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமா யிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

9. தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில்

1 யோவான் 3:1

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.

1 யோவான் 3:2

பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

10. தேவனுடைய வீட்டார் (குடும்பம்) என்ற வகையில்

1 தீமோத்தேயு 3:14, 15

நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக் கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

11. தேவனுடைய பரிபூரணத்துவம் என்ற வகையில்

கொலோசெயர் 1:19, 20

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

12. தேவனுடைய ஆலயம் என்ற வகையில்

1 கொரிந்தியர் 3:16, 17

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனு டைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமா யிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.

13. தேவனுடைய சுதந்திரர்கள் என்ற வகையில்

எபேசியர் 1:18

தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;

14. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில்

எபேசியர் 1:4

தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்ற மில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே.

15. தேவனுடைய சுவிகார புத்திரர் என்ற வகையில்

எபேசியர் 1:6

தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.

16. தேவனுடைய செய்கை என்ற வகையில்

எபேசியர் 2:10

ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

17. தேவனுடைய ஜனங்கள் என்ற வகையில்

1 பேதுரு 2:10

முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

18. தேவனால் நடப்பட்டவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 3:7, 8

அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற வனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும் நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.

19. தேவனுடைய இராஜ்யம் என்ற வகையில்

வெளிப்படுத்தின விசேஷம் 1:6

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்.

20. தேவனுடைய மகிமையில் பங்கேற்பவர்கள் என்ற வகையில்

1 தெசலோனிக்கேயர் 2:11

மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று.

21. தேவனுடைய தெய்வீக ஐக்கியத்தில் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்

1 யோவான் 1:3

நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.

2 கொரிந்தியர் 13:14

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.

கிறிஸ்துவுடன் தொடர்புடையவை (18)

22. கிறிஸ்துவின் நிறைவு என்ற வகையில்

எபேசியர் 1:22, 23

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

23. கிறிஸ்துவின் மந்தை என்ற வகையில்

யோவான் 10:11

நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

24. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற வகையில்

எபேசியர் 1:22, 23

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

25. "ஒரே சரீரம்" என்ற வகையில்

1 கொரிந்தியர் 12:13

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

எபேசியர் 4:4

உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.

எபேசியர் 2:14-16
எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இரு திறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

26. கிறிஸ்துவின் அவயவங்கள் என்ற வகையில்
1 கொரிந்தியர் 6:15
உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

27. தலையாகிய கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில்
எபேசியர் 5:23, 24
கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர் களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

கொலோசெயர் 1:18
அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

28. கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில்
2 கொரிந்தியர் 11:2
நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

எபேசியர் 5:23
கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

29. கிறிஸ்துவிடமிருந்து வந்த கடிதம் (நிருபம்) என்ற வகையில்
2 கொரிந்தியர் 3:2, 3
எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து

வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமா யிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.

30. கிறிஸ்துவின் சுகந்த வாசனை என்ற வகையில்

2 கொரிந்தியர் 2:14

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

31. இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிடுபவர்கள் என்ற வகையில்

ரோமர் 10:9, 10

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப் புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

32. கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில்

மாற்கு 9:41

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

33. கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற வகையில்

அப்போஸ்தலர் 11:26

அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

34. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 4:1

இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக் காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக் காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.

35. கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்ற வகையில்[3]

2 கொரிந்தியர் 5:20

ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதி களாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்து வினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

36. அவரில் நிலைத்திருத்தல் என்ற வகையில்

1 யோவான் 2:27

நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்த படியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

37. கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்கள் என்ற வகையில்

மாற்கு 16:15, 16

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

38. கிறிஸ்துவுக்குச் சாட்சிகள் என்ற வகையில்

3 யோவான் 3

சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

3 யோவான் 6

அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.

39. திராட்சச் செடியின் கொடிகள் என்ற வகையில்

யோவான் 15:5

நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.

பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடையவை (3)

40. ஆவியானவர் வாசம் பண்ணுகிறவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 3:16

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

41. ஆவியானவரால் பிறந்தவர்கள் என்ற வகையில்

யோவான் 3:5

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

42. பரிசுத்த ஆவியானவரின்படி நடந்து கொள்கின்றவர்கள் என்ற வகையில்

ரோமர் 8:3, 4

அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

கிறிஸ்தவர்களுடன் தொடர்புடையவை (61)

ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டின்படியானவை (33)

43. வழியென்ற வகையில்

அப்போஸ்தலர் 9:1, 2

சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

(அப். 19:9, 23; 22:4; 24:14, 22 ஆகியவற்றையும் காணவும்)

44. பூமிக்கு உப்பு என்ற வகையில்

மத்தேயு 5:13

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்

போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

45. தூணும் ஆதாரமும் என்ற வகையில்

1 தீமோத்தேயு 3:14, 15

நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பி யிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

46. சாத்தானுக்கெதிராகப் போராடுபவர்கள் என்ற வகையில்

எபேசியர் 6:12, 13

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ள வர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

47. சுடர் என்ற வகையில்

பிலிப்பியர் 2:14, 15

நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப் பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறு பாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர் களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு.

(மத். 5:14; அப். 13:47; எபே. 5:8; 1 தெச. 5:5; 1 பேது. 2:9 ஆகியவற்றையும் காணவும்.)

48. விசுவாசிகள் என்ற வகையில்

எபேசியர் 1:1

தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது.

49. நீதிக்கு அடிமைகள் என்ற வகையில்

ரோமர் 6:19

உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.

50. ஒரே விசுவாசத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

எபேசியர் 4:5

ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்.

அப்போஸ்தலர் 6:7

தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.

51. வளருகின்ற சரீரம் என்ற வகையில்

எபேசியர் 4:14-16

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களா யிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.

52. நிலத்திலிட்ட நல்ல விதை என்ற வகையில்

மத்தேயு 13:24-30

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத் தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி

உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.

53. கடுகு விதை என்ற வகையில்

மத்தேயு 13:31, 32

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத் தக்க மரமாகும் என்றார்.

54. மாவில் இடப்பட்ட புளித்த மா என்ற வகையில்

மத்தேயு 13:33

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்.

55. விலை உயர்ந்த முத்து என்ற வகையில்

மத்தேயு 13:45, 46

மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.

56. இரட்சகரால் விதைக்கப்பட்ட விதையைப் பெற்றவர்கள் என்ற வகையில்

மத்தேயு 13:19-23

ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப் பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்

கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருங்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

57. கர்த்தருடைய திராட்சத் தோட்டம் என்ற வகையில்

மத்தேயு 20:1-16

பரலோக ராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலிபேசி, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான். அவர்களும் போனார்கள். மறுபடியும், ஆறாம், ஒன்பதாம் மணி வேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணி வேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக்கண்டு; நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி கூலி பெற்றுக் கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில், திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான். அப்பொழுது பதினோராம் மணி வேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து, ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி: பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ

என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ, உனக்குக் கொடுத்தது போலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

58. கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்

மத்தேயு 22:2-14

பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச் சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும் போய் விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால் நீங்கள் வழிச் சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லோர் பொல்லார் யாவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே,

அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

வெளிப்படுத்தின விசேஷம் 22:17
ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

59. ஆயத்தமாயிருந்த கன்னியர்கள் என்ற வகையில்

மத்தேயு 25:1-13
அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப்புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

2 கொரிந்தியர் 11:2
நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே

புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

60. வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்

அப்போஸ்தலருடை நடபடிகள் 2:41

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

61. தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

1 பேதுரு 3:21, 22

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். தேவ தூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

எபேசியர் 5:26

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்.

தீத்து 3:5

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

எபிரேயர் 10:22

துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

62. புளிப்பில்லாத அப்பம் என்ற வகையில்

1 கொரிந்தியர் 5:7

ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.

63. கர்த்தருக்கு ஜீவபலிகள் என்ற வகையில்

ரோமர் 12:1

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

64. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுபவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 10:21

நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத் திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர் களாயிருக்கக்கூடாதே.

65. ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 10:16, 17

நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

66. கர்த்தருடைய பாத்திரத்தில் பங்கேற்பவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 10:16

நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

1 கொரிந்தியர் 10:21

நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத் திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களா யிருக்கக்கூடாதே.

1 கொரிந்தியர் 11:27

இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.

67. ஆவிக்குரிய வகையில் உடுத்துவிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

கலாத்தியர் 3:27

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

கொலோசெயர் 3:8-11

இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித் தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக் கிறீர்களே. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேசனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாத வனென்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்று மில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.

(ரோமர் 13:12-14; எபே. 4:22-24; 6:12-20; 1 தெச. 5:5-8ஐயும் காணவும்.)

68. தங்கள் உடைகளைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் என்ற வகையில்

வெளிப்படுத்தின விசேஷம் 3:4

ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தையாலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களான படியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.

69. இயேசுவைத் தங்கள் இதயங்களில் விருந்தாளியாய் ஏற்றுக் கொண்டு அவரை விருந்தளிப்பவராகும்படி அனுமதித்தவர்கள் என்ற வகையில்.

வெளிப்படுத்தின விசேஷம் 3:20

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

70. கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எல்லாருடனும் சமத்துவத்தில் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்

யாக்கோபு 2:1-5

என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக. ஏனெனில், பொன் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம்தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா? என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லயா?

கலாத்தியர் 3:28

யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

71. ஆவியின் ஒருமையைக் காக்க நாடுகின்றவர்கள் என்ற வகையில்

எபேசியர் 4:1-3

ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து; மிகுந்த மனத் தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள்.

72. கிறிஸ்துவிடம் வந்துள்ளவர்கள் என்ற வகையில்

மத்தேயு 11:28, 29

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

73. கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டிற்குள் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்

ரோமர் 6:3

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

ரோமர் 6:4

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

74. கிறிஸ்துவுடன் ஒருமைப்பாட்டிற்குள் வாழ்கின்றவர்கள் என்ற வகையில்

ரோமர் 6:8

ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.

ரோமர் 8:17

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்து வுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

கலாத்தியர் 2:20

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன்.

எபேசியர் 2:5

அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

கொலோசெயர் 3:3

ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

75. எந்நாளும் வளருகின்ற கட்டிடம் என்ற வகையில்

எபேசியர் 2:21, 22

அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் பற்றியவை (7)

76. மீட்கப்பட்டவர்கள் என்ற வகையில்

எபேசியர் 1:7, 8

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத் தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.

77. மன்னிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

எபேசியர் 1:7, 8

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத் தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.

78. நீதிமான்களாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

ரோமர் 3:23, 24

எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசு விலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

ரோமர் 5:1

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

79. ஒப்புரவாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

2 கொரிந்தியர் 5:18, 19

இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

80. இரத்தத்தில் கழுவப்பட்டவர்கள் என்ற வகையில்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.

81. ஜீவனைப் பெறுகிறவர்கள் என்ற வகையில்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:18

இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

1 யோவான் 5:13

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

82. பிதாவையும் குமாரனையும் பெறுகின்றவர்கள் என்ற வகையில்

1 யோவான் 2:24

ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

கொடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டைப் பற்றியவை (21)

83. பரதேசிகள் என்ற வகையில்

1 பேதுரு 1:1, 2

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில், பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

84. ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்ற வகையில்

கலாத்தியர் 6:16

இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ,

அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

85. புதுச் சிருஷ்டிகள் என்ற வகையில்

2 கொரிந்தியர் 5:17

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டி யாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

86. ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில்

1 பேதுரு 2:5

ஜீவனுள்ள கற்களைப்போல் ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

87. ஒலிவ மரம் என்ற வகையில்

ரோமர் 11:17-21

சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவ மரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியா யிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத் தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத் தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்ப விடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

88. பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில்

பிலிப்பியர் 3:20, 21

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

89. அந்நியர்கள் என்ற வகையில்

எபிரேயர் 11:13

இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.

1 பேதுரு 2:11

பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,

90. சிதறியிருக்கிறவர்கள் என்ற வகையில்

யாக்கோபு 1:1

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக் காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங் களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:

91. கல்லின் மீது கட்டப்பட்டவர்கள் என்ற வகையில்

மத்தேயு 16:18

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

92. ஆபிரகாமின் பிள்ளைகள் என்ற வகையில்

கலாத்தியர் 3:29

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததி யாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

93. பன்னிரண்டு கோத்திரங்கள் என்ற வகையில்

யாக்கோபு 1:1

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்கார னாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங் களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது.

94. உண்மையான விருத்தசேதனமுள்ளவர்கள் என்ற வகையில்

பிலிப்பியர் 3:3

ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.

95. முதற் பலன்கள் என்ற வகையில்

யாக்கோபு 1:18

அவர் சித்தங் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற் பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.

வெளிப்படுத்தின விசேஷம் 14:4

ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.

96. புதிய மனிதன் என்ற வகையில்

எபேசியர் 2:15

சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படிச் சமாதானம்பண்ணி.

97. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்

1 கொரிந்தியர் 1:1, 2

தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ் தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது.

98. சிநேகிதர்கள் என்ற வகையில்

3 யோவான் 14

சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன், அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்ளுவோம். உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக.

99. சகோதரத்துவம் என்ற வகையில்

1 பேதுரு 2:17

எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள்.

100. தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள் என்ற வகையில்

2 யோவான் 1-3

நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பது மாகிய சத்தியத்தினிமித்தம், நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளும், தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது: பிதா வாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங் கூட, உங்களோடிருப்பதாக.

101. மீன் பிடிக்கும் வலை என்ற வகையில்

மத்தேயு 13:47-50

அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவை களை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

102. நமது கர்த்தரால் நடப்பட்ட நாற்று என்ற வகையில்

மத்தேயு 15:13

அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

103. சமாதானக்கட்டினால் வாழ்கின்றவர்கள் என்ற வகையில்

எபேசியர் 4:1-3

ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மை யும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

குறிப்புகள்

[1]புதிய ஏற்பாட்டில் சபைக்குப் பயன்படுத்தப்படும் ஒப்புவமைகள் மற்றும் உருவகங்களின் இந்த அட்டவணையைத் தொகுத்த விஷயத்தில் நான், பவுல்

S. மினியர் அவர்களுக்கு மிகுந்த நன்றியுடையவனாய் இருக்கிறேன். அவரது தொகுப்பின் ஒவ்வொரு கருத்துக்களுடனும் எனக்கு உடன்பாடில்லை, ஆனாலும் இப்பாடத்தின் மீதான அவருடைய நூலானது மிகவும் உதவியான குறிப்புரையாக இருந்துள்ளது, மற்றும் இக்கண்ணோக்கிலிருந்து, இப்பாடத்தை மிகவும் ஆழமாய்ப் படிக்க விரும்பும் எவரொருவருக்கும் அவருடைய இந்நூலைப் பரிந்துரைக் கின்றேன். See Paul S. Minear, *Images of the Church in the New Testament* (Philadelphia: Westminster Press, 1960). [2]*பவுல் S. மினியர் அவர்கள் "புதிய ஏற்பாட்டில் சபையின் உருவங்கள்" என்ற தமது பட்டியலில் ஒரு படகு, முற்பிதாக்கள், வனாந்திர யாத்திரை, தாவீதின் வீடு, எஞ்சியுள்ளவர்கள், ஆள்கின்ற ஆட்டுக்குட்டியானவர், பரிசுத்த நகரம், பண்டிகைகள், பிந்தின ஆதாம், மனுஷகுமாரன், ஓய்வுநாள், வருகின்ற யுகம், ஜீவ விருட்சம் மற்றும் மேசியாவின் தாய் ஆகிய உருவகங் களை(யும்) உள்ளடக்கினார்; ஆனால் இந்த உருவகங்கள் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் சபைக்கு வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்பட்டுள்ளதை நான் காணவில்லை. மேலும் அவர் அட்டவணைப் படுத்தியுள்ள சில உருவகங்கள் மற்ற உருவகங்களின் பிரதிகளாய் இருப்பதையும் நான் கண்டறிந்துள்ளேன்; ஆகையால், அவைகளை நான் தனியாக அட்டவணைப் படுத்தவில்லை. பின்வருவனவற்றை நான் பிரதிகள் என்று ஆய்ந்தறிந்துள்ளேன்: "சரீரம் மற்றும் இரத்தம்" என்பது "பாத்திரத்தில் பங்கேற்பவர்கள்" என்பதன் பிரதியாக உள்ளது, "ஆவிக்குரிய உடல்" என்பது "கிறிஸ்துவின் ஆவிக்குரிய உடல்" என்பதன் பிரதியாக உள்ளது. அவர் அட்டவணைப்படுத்தியுள்ள சில உருவகங்கள் கிறிஸ்துவை விட அதிகமாக சபையைக் குறிக்கின்றன. அவருடைய குறிப்புகளை நான் இந்த அட்டவணையில், "சபையின் தலை" மற்றும் "வானமண்டல ஆவிகளின் தலை" என்பதின் கீழ் குறிப்பிடுவேன். [3]இந்தக் குறிப்பானது பொதுவாக சபையைக் காட்டிலும் அதிகமாக அப்போஸ்தலர்களைக் குறிப்பதாக உள்ளது. இன்றைய நாளில் சபையானது ஏவப்பட்ட அப்போஸ்தலர்களால் தரப்பட்ட செய்தியை இன்றைய உலகிற்குப் பிரதிநிதிப்படுத்துகின்ற வரையிலும் அது அன்றைய நாட்களில் அப்போஸ்தலர்கள் இருந்ததைப் போலவே இருக்கின்றது என்பதே இதன் மறைவான கருத்தாய் இருக்கும்.*

Bibliography

Bales, J. D. *The Cross and the Church*. Sheveport, La.: Lambert Book House, 1974.

Bell, R.C. *Studies in Ephesians*. Austin, Tex.: Firm Foundation Publishing Co., 1971.

Bright, John. *The Kingdom of God*. Nashville, Tenn.: Abingdon, 1953.

Campbell, Alexander. *The Christian System*. St. Louis, Mo.: Christian Board of Publication, 1839; reprint, Cincinnati, Ohio: Standard Publishing Co., n.d.

Cogdill, Roy E. *The New Testament Church*. Lufkin, Tex.: R. E. Cogdill Publishing Co., 1946.

Elkins, Garland and Thomas B. Warren, eds. *The Church*: *The Beautiful Bride of Christ*. Jonesboro, Ark.: National Christian Press, 1980.

Ferguson, Everett. *The New Testament Church*. The Way of Life Series. Abilene, Tex.: Biblical Research Press, 1968.

Flew, R. N. *Jesus and His Church*. London: Epworth, 1943.

Genner, E. E. *The Church in the New Testament*. London: Charles J. Kelly, 1914.

Graves, W. C. *Lessons on the Church of Christ*. Birmingham, Ala.: W.C. Graves, n.d.

Hort, Fennton John Anthony. *The Christian Ecclesia*. London: Macmillan and Co., 1900.

Ladd, George Eldon. *Crucial Questions About the Kingdom of God*. Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1952.

Milligan, Robert. *The Scheme of Redemption*. N.p., 1968; reprint, St. Louis, Mo.: Bethany Press, 1962

Minear, Paul. *Images of the Church in the New Testamnt*. Philadelphia: Westminster Press, 1960.

Phillips, Thomas W. *The Church of Christ*. Cincinnati, Ohio: Standard Publishing Co., 1943.

Schweizer, Eduard. *The Church as the Body of Christ*. Richmond, Va.: John Knox, 1964.

Stott, John R. W. *What Christ Thinks of the Church*. Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1958.

Thomas, J. D., ed. *God's Eternal Purpose*. Abilene Christian College Lectures. Abilene, Tex.: Abilene Christian College Book Store, 1969.

Wilson, L. R. *The New Testament Church*: *A Divine Institution*. Austin, Tex.: Firm Foundation Publishing Co., 1953.